ஆயக்காரரும், மீன் பிடிக்கிறவர்களும், வேலைக்காரர்களும், பெ
ண்டு பிள்ளைகளோடு வந்து நிறைந்திருந்தார்கள். ஒவ்வொரு
வரும் நாசரேத்தூராராகிய இயேசு என்னுமந்த ஒரே காரியத்தை
யே பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். இதோ அவர் வருகிறார்!
நான் அவரைப் பார்க்கிறேன்! அவருக்கு இடம் உண்டாகச் செய்
யுங்கள்! என்கிறதாக ஒருவருக்கொருவர் இந்த ஜனத்திரளிலிருந்
தெழும்பினது மல்லாமல் ஜெபாலயத்திற்காக மூன்று முனைப்பு
மூண்டாயிற்று.

தமக்கள் ஏண்டவர் வெளியிலிருந்து ஜெபாலயத்திற்குள்
பிரவேசிக்கும் அந்தக் கதவின் ஓரமாய் தன்னை மூடக்கிக்கொள்ள

இடமுண்டாக்கிக் கொண்டு இருந்தான். அந்தச் சமயம் அவர் தம்முடைய வேகரோடு படிகளேறி செல்லும்போது முரட்டுத் தனமாய் முன்னுக்கு சென்று "ரபீ நீர் எப்படி இங்கே வந்தீர்? உமக்கு கடலே கடந்து வருவதற்கேற்ற படகுமிருந்திலவே" என்றான்.

இயேசு அவனை உற்றுப்பார்த்து, பின்பு ஜனக்கூட்டத்தையும் பார்த்தார்.—பேராசையும், இழிவான வேஷத்தை விரோதமும், இழிவான சன்னையும், ரோமராசையும், கொடுமையும், பகையும், அவநம்பிக்கையுமாயிரு இலைகளெல்லாம் யாருக்குத் தெரியும்? இலைகளை கெல்லாம் உற்று நிதானிக்கக்கூடிய கூர்மையான பார்வையையுடைய கண்ணைருக்கே தானைப்படும். "நீ எப்படி மீனேத்திரு?" இருதயங்களை ஆறிபவர் தனத்தெளிவாய் பார்த்தார்.

அதன் பின்பு அவர் சீமோனாகவும் பொதுவாகவும் பேசத் தொடங்கி: நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல அப்பம் புசித்துத் திருப்தியடைந்ததினாலேயே என்னைத் தேடுகிறீர்கள். அழிந்துபோகிற அப்பத்திற்காக கிரியை செய்யாமல் நித்திய ஜீவகாலத்திற்கும் உங்களில் நிலைத்திருக்கும் அப்பத்திற்காகவே கிரியை செய்யுங்கள். அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார். அதற்காகவே பிதாவாகிய தேவன் அவனை முத்திரித்திருக்கிறார் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அதற்கப்பால் அந்த ஜனக்கூட்டத்திலிருந்து ஒரு சத்தம் கேட்கப்பட்டது. அந்தச் சத்தம் தெளிவானதும் இளமையானதுமானதாயிருந்தது. கேட்கப்பட்ட கேள்வியை அவன் மாறுதலாகத் தன் மனதிற் நெடுத்துக் கொண்டிருந்தான், அந்தக் கேள்வி என்னவென்றால், "தேவனுடைய கிரியைகளை நாம் செய்யும்படியாக நாம் என்ன செய்யவேண்டும்?" என்பதே.

அந்தக் கேள்வியைக் கேட்டவனுடைய முகம் அசிங்கமுகத்தையுடையவர்களால் அதிகமாய் சூழப்பட்டிருந்தும், ஆண்டவர் கண்டார். அது இரா இருட்டில் பிரகாசிக்கும் நட்சத்திரத்தைப்போலிருந்தது. அவர் அதைத் தமக்கு உரித்தானதாகவே கண்டார். அவர் தம்முடைய தெளிவுள்ள கண்களினால் கண்டு அவனை ஏறெடுத்துப் பார்த்து அவனுக்குச் சொன்னது: "அவர் அனுப்பினவரிடத்தில் நீங்கள் விசுவாசமாயிருப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்றார் என்பதே.

இதைக் கேட்டவர்களில் மூர்க்கத்தனமுள்ள ஜனக்கூட்டம் அவரைப் பார்த்து: நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர், நாங்கள் அதைப் பார்த்து விசுவாசிக்கும்படியாக நீர் எந்தக் கிரியை செய்கிறீர்? என்று கேட்டனர்.

அருகே நின்று தலைப்பாகை போட்டிருந்த ஒரு ரபீ தந்திரமாய் அவனுக்குச் சொன்னது என்னவென்றால், நமது முன்னோர்கள் வனாந்தரத்தில் மன்னாவை புசித்தார்கள் என்றெழுதியிருக்கிறபடியே, இவர் நாம் புசிக்கும்படி வானத்திலிருந்து அப்பம் அருளிச்செய்தார் என்பதே.

இதற்குப் பின்பு ஆண்டவர் தாமே தமது திருவாய் மலர்ந்தருளிச் சொன்னதாவது: மோசே உங்களுக்கு வானத்திலிருந்து வந்த அப்பத்தைத் கொடுக்கவில்லை; ஆனால் என் பிதா இப்போது உங்களுக்கு வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தைக் கொடுக்கிறார். தேவனுடைய அப்பம் என்றால், வானத்திலிருந்திறங்கி வந்து உலகத்திற்கு ஜீவனைக் கொடுக்கிற அவரே அந்த அப்பம் என்றார் என்பதேயாம்.

"ஆண்டவரே, இந்த அப்பத்தை எங்களுக்கு எப்போதைக்கும் அருளிச்செய்ய வேண்டும்!" என்று பேதுருவினுடைய தெளிவான குரலிலிருந்து திரும்ப, வெகு சமீபமான பிறகு ஆசீர்வாதம்போல சொரிந்தது.

இதெல்லாமான பிறகு ஆண்டவர் ஆலயத்திலுட் பிராகாரத்திட்சென்றபோது சந்தடியடங்கி அமைச்சலுண்டாயிற்று. அதிவிப்பின்படிக்கு ஆராதனை தாமதித்தது.

அதிகாரிகளுடைய கண்டிப்பான கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாய் கெருங்கி அடர்ந்திருந்த ஜனத்திரள் ஒருவாறு ஆலயத்தின் பிரவேச வாசலை விட்டகன்று ஜெபாலயத்தைச் சுற்றி

நெருங்கி நின்றுகொண்டிருந்தவர்களும் அப்படியே தான் போகையில் ஒரு பெருங்கூச்சலுண்டாயிற்று.

அந்தக் கூச்சலோ வென்றால், "அவன் தன்னை வாமதேவிருஷியென்று எப்படி சொல்லுகிறான்?" என்றொருவன் கேட்டான். வேறொருவன் அவன் யார் என்பது எல்லோருக்குந் தெரியும்; நாசகேதங்களில் வசிக்கிற யோகேப்பு என்பவனுடைய குமாரனுமே இயோ இவன் தான் அல்லவோ? என்றும், இன்னுமொருவன் அவன் வானத்திலிருந்து வந்ததாலே என்னவிட மேலானவனில்லை நான் நட்டான்; அதுதான் உண்மை என்றொருத்தன் தெரியும் என்றான் என்பதே.

அல்ல வென்றான்! நீங்கள் இப்போது புத்திசாலிகளாய் இருக்கின்றீர்கள்.* இந்த மனுஷன் தேவதூஷணம் சொல்லுவதை விட்டோய்ந்தபின்னே, அப்படிப் பேசுகிறதிலுள்ளே அவன் தன்னை தேவனுக்குச் சமமாக்கிக்கொள்ளுகிறான். அவன் உயர இருந்து தான் வந்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறான். அவன் பிசாசு பிடித்தவனும் பைத்தியங்கொண்டவனுமா இருக்கிறானென்று நான் சொன்ன சங்கதி நல்ல காவல்காரப் பெயருக்காரனாகிய சொன்னவன்.

நாங்கள் எதிர்பார்த்திருந்த பிரகாரமாக அவன் பைத்தியங்கொண்டவனல்லாமல், அவன் மேலான்மையிருக்கக்கூடாது அவனுடைய வழிதான் இராஜாவுக்குத் தந்த வழிகாட்டியில்லை என்று இன்னொருவன் சொன்னான்.

பின்னும் ஒரு பெரியவன், நீங்கள் நீர்க்கருவிலைக்களையும், பிராயப்பிரமாணங்களையும் வாசித்து; உம்மை விடப் புத்திசாலிகளானவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு அவமதிக்கிறதினிமித்தம் விட்டால், நம்முடைய முன்னடபேதசங்களுக்கு விரோதமாய் நியமஞ்செய்கிறவர்களாயிருப்பீர்கள். இந்த மலையின் மேலுள்ளதற்கு மோசத்தை வருவிக்கிறவனும், இப்பிரபஞ்சத்தின் அதிகாரப் பிரபுவை சேர்த்தவனுமாகிய அதியாயமாளவனை யெவரெவரும் இருக்கிறான் என்ற சொன்னான்.



நீர் நசரேயனைப்பற்றி இப்படிப்பட்டக் காரியங்களைச் சொல்லுவதினால், நீர் பொய்யரும், புத்தியீனருமாக இருக்கிறீர்; இதையான் ஒருபோதும் சகிக்கமாட்டேன் என்றொரு தெளிவுள்ள சத்தம் உண்டாயிற்று.

அங்கே இருந்தவர்களெல்லாரும் அப்படிச் சொன்னவன் பக்கத்தில் திரும்பி அவனைப் பார்த்து, வாலிபனே, நீ சொல்லுவதைச் சொல்லுவென்று ஆச்சரியத்தோடு இரண்டு மூன்று பேர் முழக்கமிட்டார்கள். அது அவர்களுக்கு ஒரு ஆனந்தமாயிருந்தது, மேலும் அவர்கள் அந்த யோக்கியனை ரபிக்கு உதிரவாக இங்கே நின்று அப்படி சொல்லு என்று எல்லாரும் அவனைப் பார்க்கவும் கேட்கவும் தகுதியாய் அவன் உயரமாய் இருக்கும்படி அருகேயிருந்த கற்களுமரின் உச்சிமேல் அவனை பன்னிரண்டு பேர்மட்டும் தாக்கி நிறுத்தினார்கள்.

அந்த வாலிபனுக்கு அது வெட்கமாயிருந்ததினால் கொஞ்ச நேரம் தாமதித்து, பின்பு அந்த ரபியினுடைய வார்த்தைகளை திரும்பவும் அவன் காதில் விழவே அவனுடைய பூலியத்திற்குரிய கோபத்தினால் அவனது முகமும் சரீரமும் சிவந்துபோயிற்று? அத்துடன் அந்த வாலிபன் அந்த ரபியைப் பார்த்து உரத்த சத்தமாய்ச் சொல்லுகிறான்: நீ அவனைப் பிசாசு பிடித்தவனென்று சொல்லுகிறாயே, அவர் செய்கிறவைகளைப் பிசாசு செய்யக்கூடுமோ? சகாயமில்லாதவர்களையும், வியாதிஸ்தர்களையும் சொஸ்தப்படுத்துகிறார்; குருடருடைய கண்களைத் திறக்கிறார்; குஷ்டரோகிகளைச் சுத்தமாக்கியிருக்கிறார்; மரித்துப்போனவர்களையுங்கூட உயிரடையச்செய்திருக்கிறார்! நம்மெல்லாருக்கும் அவர் நீதியுள்ள தண்மையையே செய்திருக்கிறார். இப்படியிருக்க நீ எப்படி அவரை அதியாயக்காரனென்று சொல்லிக்கொண்டிருக்கிறாய்? என்று கேட்கவே, அந்த ரபி மிகவும் கோபாவேசங்கொண்டான். ஆகவே அந்த ரபி அந்த வாலிபனைப் பார்த்து பின்வருமாறு சொல்லலாயினான்:—

அவன் தேவதூஷணஞ்சொல்லுகிறான்; அவன் தன்னை தேவனுடைய குமாரனென்றும் தான் வானத்திலிருந்திறங்கி

வந்தேன் என்னும் சொல்லுமிருன். அறிவுகெட்ட பையா, அஞ்
மட்டும் போதும். சும்மா உளராதே. நீ சமாதானத்தைக்
கெடித்தபடியினாலே முன் நான் கருத்திற்கொண்டபடி உன்னைச்
காவலில் போட்டெறிவேன்! என்ற ஞாபிபனுக்கு அந்தரபி
மறுமொழி சொன்னன். அப்போது, அங்கே நின்றவர்களில்
ஐந்தாறுபேர் ஒரே தொனியாக, கொஞ்சம் பொறுத்துக்கொள்
ளும் எங்கள் நல்ல எஜமானே! நீங்கள் அவனைப்பற்றிப் பேச
வேண்டியதை யெல்லாம் பேசினீர்கள், வாலிபனும் தான் அவரை
ப்பற்றிப் பேசவேண்டியதை பேசும்படியாக இடங்கொடும் நாங்
கள் அவனுக்கு உத்தரவாதிகள் என்று சொன்னார்கள்.

பின்னும் அந்த வாலிபன் நீங்கள் அவரைப்பற்றி அறிந்துக்
கொள்ளவேண்டியபடி அறிந்துக்கொள்ளவில்லை. அவர் வானத்
திலே இருந்திறங்கி வந்தவர்தான். உன்னதத்திலே வாசமாயி
ருக்கிற பிதாவினால் அவர் கற்பிக்கப்படுகிறது எப்படியோ அப்ப
டியே பிரியைசெய்கிறார் என்றான்.

அப்போது அந்தக் கூட்டத்திற்கு புறம்பே நின்ற ஒருவன்
அவர் நமமேல் இரக்கமாகும்படி அவர் நமக்கு ஒரு அடையா
ளத்தைக் காண்பித்தருளட்டும் என்றான்.

அதற்கு அந்த பால்யன் அவர் உங்களுக்கு ராஜமான அறி
புத அடையாளங்களை செய்தருளினதில்லையா? அப்படியான
அடையாளங்களுள் நான் ஒருவன்! இதோ பாருங்கள் நான் ஒரு
சப்பாணியாயிருந்தேன்; அவர் என்னைத் தம்முடைய ஒரே வர
த்தையினால் சொஸ்தமாக்கினார். நான் உங்களெல்லாரையும்
போல நான் ஒழுங்காயும் நேராயும் பெலனும் இருக்கும்படியாக
அவர் என்னைச் சொஸ்தமாக்கினார் என்றான்.

இந்த நேரத்தில் நீ யார்? என்ற ஒரு முரட்டு சத்தமுண்டா
யிற்று. தெய்வங்கள் சாட்சியாக, இவன் என் சொந்த மகன்
ஸ்தேவான் என்னும் நம்புகிறேன்! அவன் சொல்லுவதையெல்
லாம் அவனுக்கு நிச்சயப்படுத்தும்படி இதோ நான் இட்ட வரப
பிம் என்று தன் கையை மூடக்கிக்கொண்டு அந்தப் பால்யனுக்கு
நேராய் வந்தான்.



அந்தப் பால்யன் பிணத்தைப்போல வெளுப்பேறினவனாய்
மாறி; சற்றுநேரம் வெலவெலத்து நின்று சுவற்றின்மேலிருந்து
கீழே குதித்து ஜனக்கூட்டத்தினூடே ஓடினான். அவர்கள்
அவன் கடந்துபோகுமட்டும் வழிவிட்டார்கள்.

ஆயினும், ஸ்தேவான் நீ என்னுடைய மகன்! நீ நேராயும்
பெலனும் இருக்கிறாய்! இல்லே, இதையெல்லாம் நான் நம்புவது
மிகவரிது என்று பையனே தன் கையினைப் பற்றிப் பிடித்துக்கொ
ண்டு, "ஒலிம்பஸ்" என்னும் தெய்வங்கள் ஸ்தானமாயிய அவ்
விடத்திலுள்ள தெய்வங்கள் சக்தியினால் இப்போது உன்னை
சுகமாக்குவேன். எனென்றால் உன்னுடைய ஆவி எனக்குப் பிரிய
மாயிருக்கிறது! நீ என்னோடுகூட வா என்று தமக்கஸ் சொன்னான்.

பின்பு அவர்கள் மௌனமாய் சற்றுநேரம் வழியே நடந்து
போனார்கள். அதற்குள் தமக்கஸ் முரட்டுத்தனமான பிரமா
ணிக்கத்தோடு மிகச் சந்தமிட்டான். அவன் ஸ்தேவானைப் பார்
த்து: நீ என் பேசமாட்டேன் என்கிறாய்? நீ உன் தகப்பனைப்
பார்க்க உனக்குச் சந்தோஷமில்லையா? நீ உதவியற்ற சப்பாணி
யாய்க் கிடந்தபோது நான் உன்னைக் கவனிக்கவில்லையென்று, என்
னைப் பகைக்கும்படியாக உன் தாய் உனக்குப் போதித்தாள்போ
லிருக்கிறது. ஆனால் இப்போது நீ உனக்கொரு தகப்பனுண்டே
னாலும், அவனுக்கு நீ நேர்ப்படியாயிருக்கவேண்டுமென்றும் அறிந்து
கொள் என்றான்.

அப்போது ஸ்தேவான் மெல்லியக் குரலோடு உம்மைப்
பகைக்கும்படியாக என் தாய் எனக்குச் சந்தர்ப்பத்தைக்கொடுக்கவில்லை
என்று சொன்னான்.

இல்லே, நீ பெண்பிள்ளையைப்போல செய்கிறாய்! நேராய்
நின்று பேசு, கொஞ்சம் முன்னே நீ அந்தப் பணப்பெருமை
கொண்ட ரபியோடு நின்று தைரியமாய் உத்தரவுசொன்னது
போல்லும் செய்ததுபோலவும் இப்போது பேசு. அதற்காகவே,
நசரேயர் உன்னை சொஸ்தமாக்கினாரல்லவா? அது எப்படியென்று
நீ சொல்லு என்று தமக்கஸ் சொன்னான்.

ஆண்டவனைப்பற்றிப் பேசியவுடனே, ஸ்தேவானுடைய முகம் பலர்ந்து பிரகாசித்து திரும்ப மன்னிலிருந்தான் சொல்லுவதைக் கவனித்துக்கொண்டிருந்தோருக்கு தன்னை மறந்தவராய் தன்னுடைய வார்த்தமான்களோ மிக உற்சாகமாய் அவர்கள் முன் வைத்தினன்.

அதுதான் சரி, அப்படித்தான் பேசவேண்டும் என்று தன் காதுகளிலே தன் விரல்களையிட்டு மூடிக்கொண்டு, இப்போ, இந்த நசரேயர் உனக்கு அடைச் செய்திருக்கிறபோது, அதிலமதிசயமாய் அவர் செய்வார்; நீ அப்படி நினைக்கிறதில்லையா? என்று அமக்கஸ் சொல்லிக் கேட்டான்.

அப்போது ஸ்தேவான், ஞண்டவர் தெபோலியத்தின் படிகளின் மீதிருந்து உரைத்தது கொண்டபோது அவருடைய கண்களின் பார்வையை நினைவுகூர்ந்தவனாய் சந்தோஷத்தோடு நம்பிக்கையாகவே அவர் செய்வாரென்று சத்தமிட்டுச் சொன்னான்.

அப்படியானால், ஸ்தேவான் என்னும் நல்ல மகனே, பொன் வேண்டுமென்று நீ அவரைக் கேள்; அதிலால் நாம் நிறைந்த கோட்டமொன்றையும் அதோடுகூட ஒரு தோட்டத்தையும் வாங்கி மோமர்களைப்போல நாம் அதில் வாசம்பண்ணலாமென்று அமக்கஸ் சொல்ல, ஸ்தேவான் அந்த விஷயத்தில் அவர் மிகவும் ஏழை, தான் அவரிடத்தில் பொன் கேட்க எனக்குப் பிரியமில்லை யென்று தாழ்மையாய் உற்றினை சொன்னான்.

அவர் அப்படி செய்யக்கூடாது ஐயா; ஜுபாலிரம் பேர்க்குடைய வயிற்றை நிரப்பக்கூடிய அவ்வளவு ஆகாரத்தை யவர் இன்னிரவே அப்பக்கியையும் இரண்டு மீன்களையுங்கொண்டு உண்டாக்கினவரை நான் பார்க்கவில்லையா? அவர் எதோ ஒரு அற்புத பேய்த்தனத்தைக்கொடுத்த சக்தியைத் தனக்குள்ளடக்கிக் கொண்டிருக்கிறார், அதை அவரை இவைகளெல்லாவற்றையுஞ் செய்ய, இப்படிப்பட்ட அற்புதங்களை நடத்த உதவிசெய்கிறதென்று அமக்கஸ் உரைத்தனன்.

அதைகேட்டு ஸ்தேவான் தன்னுள் கோப மூழ்ந்திக்கொண்டவனாய் தன் கண்களை தன் நக்ப்பதற்கு நேராகத் தெரிந்து, நீ



இப்படிப்பட்டக் காரியங்களை அவர் பேரிற் சொல்லுகிறாயே நான் உம்மோடு பேசமாட்டேன் நகப்பனே யென்றான்.

அமக்கஸ் கேளிக்கையாக, நீ என்னோடு பேசாமாட்டாய், என் அருமை பையா, நீ எப்படி தப்பிப்போவாய்ப் பார்க்கிறேன் என்று சொல்லினான். ஆயினும் நீர் அவரை நான் எங்கே கண்டு பிடிக்கக் கூடுமென்று நீ எனக்கு இப்போது சொல்லவேண்டும் என்று சொல்ல அவன் முகம் குரூபித்தனத்தால் இருளடைந்தது. அவன் எங்கே இருக்கிறானென்றறைக்குத் தெரியுமா? உதிரவு சொல் என்று மருட்டினான்.

அதற்கு ஸ்தேவான், ஆம் அவன் எங்கே இருக்கிறானென்றெனக்குத் தெரியும், ஆனல் நான் அதை உமக்குத் தெரிய சொல்லமாட்டேன் என்க, அமக்கஸ் பிலேயாண்டோனுடைய தோளைக் கெட்டியாயப் பற்றிப் பிடித்துக் குலுக்கி; என்ன நீ என்னை எதிர்க்க அவ்வளவு தணிகரம் வந்துவிட்டதா? நான் உன் சொந்த நகப்பனல்லவா? என்றான்.

அப்போது ஸ்தேவான் தனது நேர்மையும் நேர்த்தியுமான நடத்தைகளை அந்த மனிதனுடைய முகத்திற்கு நேராய எதிர்த்து, நகப்பனே, நான் உமக்குப் பிள்ளைபோல இருக்கிறேன். ஆனல் உம்மோடும் உம்முடைய தோழர்களோடுமிருந்து நீங்கி திரும்பி வந்தபோது, அவனே நீங்கள் செய்த பயங்கரமான குற்றங்களுக்கு பங்காளியாகும் படி நீர் பலவந்தஞ்செய்ததாக அவன் எனக்குச் சொன்னான். அந்த விஷயத்தில் நீர் அவனுக்குப் பெரிய நகப்பிதஞ் செய்திருக்கிறீர். அவன் இப்போது மிகவும் பத்திரமாயிருக்கிறான். மரியாதையான உத்தியோகமுஞ் செய்கிறான் என்று சொல்ல, அமக்கஸ், ஒரு மரியாதையான உத்தியோகமா செய்கிறான்! என்று மூக்கினால் சிரித்துப் பின்பு திடீரென்று மூர்க்கமான திருஷ்டியோடு திரும்பி நாசரேத்தூர் பக்கங்களிலிருந்து வந்த மனிதனின் பேயத்தனத்தின் வித்தையினல், சப்பாணியாயிருந்த நீ சுகம் அடைந்திருக்கிறாய். ஆனல் கேள்! நீ அவரை எங்கே கண்டுபிடிக்கலாமென்று நீ எனக்கு உடனே சொல்லாவிட்டால், நீ திரும்ப

எகமடையக் கூடாதபடிக்கு நான் உனக்கு கேடென்டாக்குவேன்! ஆம் சரியாய் நின்றென்னைப் பார், எனக்குத் தப்பிக்கொள்ள உன் னாலாகாது என்றான்.

அதைகேட்டு ஸ்தேவான் மேற்பார்வையாய் சுற்றிலும் பார்த்து, சம்பாவித்துக்கொண்டிருக்கையில் அவன் தகப்பன் அவனோடிருந்தவர்களை அப்புறமேக விட்டதையும், தாங்கள் மாத்திரம் தனிமையாய் முகர எல்லைக்குப் புறம்பே இருப்பதையும் பயத்துடன் அறிந்துக்கொண்டான்.

அபொழுது தமக்கஸ், பயமுறுத்தும்படியான குரலை திடீரென்று மாற்றிக்கொண்டு, இப்பொழுது எனக்கு சொல்லுவாயா? சத்தியமாய் நான் உனக்குச் சொல்லுகிறேன்; நாம் நேயிதர்களாகவும் கூட்டாளிகளாகவும் இருப்போம். நீ ஒரு முழுக்கையையிட மேற்பட்டவனல்ல; ஆயினும் நீ என்னோடு வா அப்போது மறுஷனுயிருக்கக் கற்றுக்கொள்ளுவாய். இப்போது இதைப்பற்றி என்ன நினைக்கிறாய்? என்று தன் உள்ளங்கையினின்று அதி தேர்ந்தியாய் செய்யப்பட்டிருந்த ஒரு வொன்சங்கு விலையை இழுத்தபடியே உன்னுடையதாயிருக்கும்; இதைமாத்திரமல்ல இன்னும் அதே பொருட்களையும் தருவேன். எப்படியென்றால் என் கூட்டத்தாருக்கு நான் முதலாளியல்லவா? நீ என்னுடைய ஒரே மகனுமாயிருக்கிறாயல்லவா? என்றான்.

அதற்கு ஸ்தேவான் ஆச்சரியத்தோடு பிரதியொலியாக உம்முடைய ஒரே மகன்தான். ஆனால் நீத்து உம்முடைய மகன் அல்லவோ! என்றான்.

அது உன்னுடைய வேலையல்ல லபயனே, நீத்தலைப்பற்றி யெனக்காவதென்ன? அவன் உனக்கொன்றும் இல்லை. ஆனால் இந்தப் புத்தியீனமுள்ள பேச்சுக்கு நேரமில்லை. நீத்து எங்கே இருக்கிறான்? என்று தமக்கஸ் கேட்டான்.

ஸ்தேவான் தாமதித்திருந்து, அவனைப்பற்றி உமக்கென்ன காரியம்? என்று அறக்கனைக் கேட்டான்.



அதற்கு தமக்கஸ், என் காரியத்தைப்பற்றி யுனக்குக்கவை யொன்றுமில்லை. உனக்கதைப்பற்றி யொன்றுமில்லை. பின்னும் அவன் தன் கண்களை பையன்மேல்வைத்து, மெதுவாய் முரட்டுத் தனத்தோடு உனக்கு தண்டனைத் தேவையாயிருக்கிறது. இதையால் உன்னைத் தண்டிப்பேன். அப்போது தான் நீ உன் பிடிவாதமான புத்தியீனத்திலின்று திரும்புவாய். அப்படி நீ திரும்பாவிட்டால், நான உன் தேகத்தின் ஒவ்வொரு எலும்புகளையும் ஒடித்து, நாய்கள் உன்னைக் கவனிக்கும்படி இங்கேயே விட்டுவிடுவேன் என்றான்.

இதைக் கேட்டதும் ஸ்தேவான் மரித்தவன் போலானான். ஆகவே அவன் ஒருவார்த்தையும் ஆடவில்லை. அருகேயிருந்த விருக்ஷத்தின் அடியில் ஸ்தேவானை பிடித்துக் கட்டி விட்டு, ஒரு கனத்த கம்பை வெட்டி அதிலிருந்த இலைகளைக் கவனிகாமாய் பறித்தெறிந்து பையனை தமக்கஸ் அடிக்கவாரம்பித்தான்.

அந்தச் சமயத்தில், நீத்து தன்னை பெறுவெளி ஆடு கொடுக்கப்போகிய மேடான இடத்திலின்று திரும்பிவருகை கொண்டிருந்தான். விரைவாய் வரும்போது அங்காங்கு சந்தோஷத்தை யுண்டாக்கும் அழகிய மலர்களை சூழ்ந்திருக்கிற பொதுக்கிளைகளைச் சேர்த்துக் கொண்டே வந்தான். அவ்வாறாக அவன் வருகையில் தான் முன்னே பார்த்த காட்டு ரோஜாபூக்களை விடக்கூடாதென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டுபோய் அவைகளைப்பறித்துக் கொண்டிருக்கும் போது ஒரு சப்தமுண்டாயிருப்பதைக் கேட்டான். அந்த சப்தம் என்ன வென்று கேட்டறிய பின்வாங்குவான். அந்த சப்தமானது மெதுவாய் அழுகுரலாய் தனக்கருகேயுள்ள விருட்சங்களினின்று வருவதாக தோன்றிற்று. அவன் அதிக சமீபமாய் நெருங்கிவரவே அந்தச் சப்தம், ஓ தகப்பனே! இரக்கமாயிரும் என்கிறவார்த்தைகளுடன் சேர்ந்தும், மகாபாதத அடியின் சப்தத்தோடுகலந்தும் ஒலித்தது. அந்தத் தேம்பித் தேம்பி அழுஞ் சத்தம் நீத்து நன்றாய் அறிந்துக் கொள்ளுமாறு இருந்தது. ஆகவே அவன் கெட்டியாய் குச்சைப் பிடித்துக் கொண்டு முரட்டுத்தனமாய் மரப்பொந்துகளினூடே பாய்ந்தோடி அங்கே

இருந்த இரண்டொரு நிலைக்கண்ணி கள்ளரப்புவலின் வழியாய் இரு
ந்தம் கொடுத்து வருவித்து உதாரணமாக அவன் அப்படியே
டி அவனே எதிர்த்தும்படி யாயிருந்தது. முதல் அவன் பயப்பட்
டான். இராஜதானிப் போன்ற அந்த முட்டைக்கு முன் தன்
பயனடையான பெலன் எதிர்நிற்காது என்று அஞ்சினான்.
அப்போது அந்த முட்டைன் ஒரு அடியின்பேரில் இன்னொரு அடி
யாக ஸ்தேவானை யடித்த லையன் கையை பொதைத்த பெலத்த
ருப்க் கூலி சத்தமாயழுதான். அதுகேட்ட தீத்து சலிக்கமாட்
டாதவனாய் தீழே முளிந்து வட்டமும் பெரிதுமான தன் கா
லடியிலிருந்த கல்லொன்றை யெடுத்து, கல்லெறியதில் வெகுத்
குறிப்பாளியாயிய அவன் தன் முழுபலம் தியம் முவையும்
யெலாம்கூட்டி யந்த முட்டித்தனமுள்ள மனிதன்மேல் வீசி
னான். அது மிகவேகமின் காரின் பின்புறத்திற்பட்டு நெருங்சாய்
ங்கையாய் மடமடவென்ற தரையின்மேற் சாயச்சான். உடனே
ஒரு காண்டாகஸ்தேவானிடஞ் சென்று அவனைக் கட்டியிருந்த
கட்டுகளை ஒரு கொடுவாளில் அறுத்து அவனை விடுதலைசெய்து
அந்தக் கயிற்றினால் அவனைக்கட்டி பிடிமுரண்டுபண்ண முயற்ச
னைப் பார்க்கும் திருவிருந்தான்.

அப்போது ஸ்தேவான் ஐயோ, தீத்தாவே! நீ அவனைக்கொன்று
போட்டாயா? என்ற பயத்துடனே கூறினான். அவன் வெறுத்த
தக் கண்களிலின் வழியாய் வண்ணீர் பாய்ந்தோடிற்று.

அவனைக் கொன்று போட்டாய்! இல்லை, எனக்கு யனமுன்
டாயிருந்தால் அந்தக்காட்டி மிருகத்தையுள்ள மனிதனை அவ்வா
றே செய்திருப்பேன்! நாம் அவனுக்குப் பயந்தொளிந்து போரும்
வரைக்கும் அவனை இங்கேயே திருக்கவிடுவேன் என்ன தீத்து
திரும்ப ஸ்தேவானைக் கட்டியிருந்த தோல் கயிறுகளை எடுத்து
பலமாயும் தீவிரமாயும் அந்தக் கொடியனைக் கட்டிப்போட்டு
விட்டு ஸ்தேவானைப் பார்த்து கோபமாய் இப்போது என்னோடி
வா! இன்னமும் அவனுடைய இரத்தத்தின் தொடிப்பட்டுக்காதவ
ருப் கோபமாயிருக்கிறான். நீ எப்படி இந்தப் போரின் கைகளில்
வந்தகப்பட்டுக் கொண்டாய்? என்று தீத்து சொன்னான்.



உடனே ஸ்தேவான் அதெல்லாம் சம்பவிக்கவேண்டியபடி
யே வந்து சம்பவித்தது என்று அவசரத்தோடு சொல்லி முடித்
தானும், தீத்து அப்படியே அவன் உன்னைக் கொன்று போட்டிருக்
கிருப்பானே என்றான்.

அதற்கு ஸ்தேவான், இல்லை! இல்லை! அவன் என்னைக்
கொன்றிருந்திருக்கமாட்டான். அவன் நோக்கம் என்னைப் பய
முறுத்தும்படியாகத் தானே யல்லது கொன்றுபோடவல்ல என்
றான்.

தீத்து, அவனைப்பற்றி நான் அறிந்திருக்கிற அளவு உனக்குத்
தெரியாது, பையனே, பொறு! ஏதோ சத்தங்கேட்கிறது, உனக்
கது கேட்கிறதா? என்றான்.

அவர்களிருவரும் சற்று அமர்ந்து கேட்டார்கள். அப்போது
வேதனையினால் உண்டாகும் காட்டு கூச்சலையும், சாப வார்த்தை
யையும் கேட்டார்கள்.

அதைக் கேட்டபோது தீத்து, அவன் அவ்வளவு கோபா
வேசங்கொண்டிருக்கையில் அவனுக்கு பத்துபேருக்குரிய பெல
ன் உண்டாயிருக்கிறதாயினும் இப்போது நாம் ஓடிப்போகவேண்டும்
என்று இருவருமாக அரைகுறையாய் கொடிவழியே ஓடினார்கள்.
அவ்வழி அவர்களை வெகு சீக்கிரமாய் நகரவாசல்வரைக் கொ
ண்டுவந்து விட்டது. நகரத்திற்குள்ளே பத்திரமாய் அவர்கள்
வந்து சேர்ந்தபின், தீத்து, ஸ்தேவானைத் திரும்பிப்பார்த்து நீ
போய் கொஞ்சகாலத்திற்கு தாயாரை யழைத்துக்கொண்டு வீட்
டைவிட்டு வெளியே அவன் கண்ணுக்கு மறைவாக தங்கியிருக்க
வேண்டும். இன்றிரவு உன்னை அவன் வீட்டில் காணக்கூடாம
லிருக்கும்படியா யிருக்கவேண்டும். கொஞ்சம் நில்! உனக்குத்
தும் பணம் தேவையாயிருக்கும். நான் சம்பளம் வாங்கியாயிற்று.
இந்தா, இதையெடுத்துக்கொண்டுபோ, சீக்கிரமாய்ப்போ என்று
ஒரு பெரு பையை ஸ்தேவானுடைய கையில் கொடுத்துவிட்டு அவ
சரமானதினால் தீத்து தனிதமாய்த் தன் வேலைக்குப் போய்விட்
டான்.

# பதினைந்தாம் அதிகாரம்.

இம்மட்டும் இன்னதற்கு கொஞ்சந்தானிருக்கிறது. கொஞ்சங்காலந்தானிருக்கிறதென்கிற முழுமையைச் சொல்லிற்று. குருடனொருவன் வழியே போய்க்கொண்டிருந்த வேறொருவனைக்கண்டு தன்னிடமிருந்த காசுகளுள்ள பிச்சைப் பெட்டியைக் குலுக்கி, அங்கே போய்க்கொண்டிருந்த வழிபோக்கனொருவனைப் பார்த்து, இந்தக் குருடனுடைய என்மீதில் இரக்கமில்லையா? என்ன; இல்லை, என்று அந்த வழிபோக்கன் அவனை மறுத்துக்கூடப்பாராமற் போய்விட்டான்.

நல்லது குழந்தையே, பிச்சைக்காரர் நாங்கள் எருசலேமில் ஆசேகம்போகிற இருவரும் என்று குருடன் சலிப்பாய் சொன்னான்.

ஆயினும் அவர்கள் பிதிமிக்குருடர்களல்ல என்று ஒருவித மானகர்வத்தொனியோடு கூறினபடியால் அக்குழந்தைச் சென்றனள்.

அவர்கள் இரண்டு பேரும் தேவாலயத்தின் அழகான மண்டபங்கள் ஒன்றில் உட்கார்ந்திருந்தார்கள். உண்மையாய் அமிமிகவும் ஜெபிக்கப்படத்தக்க இடம், எப்படியென்றால் தூண்களால் நிறைந்திருந்த அந்த மண்டபத்தின் தாழ்வாரம் வெய்யிலுக்கு அவர்களுக்கோர் அடைக்கல ஸ்தானமாயிற்று. இவ்வுன்னதமான ஸ்தலத்தில் குளிர்ந்தக் காற்று வெகு இதமாக வீசிற்று. ஜீவ பட்டணத்திற்குள்ளே உஷ்ணமானது சகிக்கக் கூடாததாயிருந்தது.

பிரதி தினமும் அந்தக் குருட்டி மனிதனும் கோத்தியான கனத்த சருட்டை மயிர்கள் கண்களில் விழுந்துக்கொண்டிருந்த யந்த வழக்கான வுன்முழுமையுமாக ஆலயத்திற்கு வருவார்கள். அதிகாலையில் தேவாலயத்தின் பிரதான வாசல் திறக்கப்படும்படியாகக் காத்துக்கொண்டிருப்பார்கள். காலையில் அப்படி போனால் அந்தத் தூண்களின் தாழ்வாரத்தில் நல்ல முழுவாய் காத்திருப்



பார்கள். பகற்காலத்தில் கையிற் கொண்டுவந்தக் கொஞ்ச ரொட்டியைத் தானுங் குழந்தையுமாகப் பகிர்ந்து சாப்பிட்டு விட்டு நாளெல்லாங் கழித்து இரவு சமீபித்தகாலம் இளைப்படைந்தவர்களாய் அந்த நாளிற் கிடைத்த வருமானத்தோடு தங்கள் வீட்டிற்குப் பேரய்ச் சேருவார்கள்.

அந்தக் குருடனுக்கு தேவாலயத்தின் மண்டபங்கள் வீடாக விருந்தது. அவன் அதை அதிகமாய் விரும்பி நேசித்தான். அந்தக் குழந்தைப் பையனுவனும் அந்தத் தேவாலயமானது மிக வழகான, பெருத்தாயவெளிகளை கற்களால், கட்டப்பட்டிருக்கிறதென்றும், அதின் உட்புறமெல்லாம் தங்கமயமாய் ஜொலிக்கிறதென்றும், ஆலயத்தின் குருக்கண்மார்களெல்லாரும் அகலமான காப்பு நாடாக்களையுடைய அலங்காரமான அங்கிகளை அணிந்தவர்களாயிருக்கிறார்களென்றும் திரும்பத் திரும்ப அவனுக்குச் சொல்லிக்கொண்டேயிருப்பான்.

அவர்கள் அந்த மண்டபத்தில் உட்கார்ந்துக்கொண்டே தேவாலயத்திற்குள் கொஞ்சமுறைய மூடிவில்லா ஆராதனை நடக்கும்போது கீதங்களோடு கூடிய வாத்தியங்களையும் கேட்டுக் கொண்டிருக்கக்கூடும். சுடான ஆகாயத்துடனே மேலெழும்பிச் செல்லும் தூபவாசனையையும் எவரிந்துக்கொண்டிருப்பார்கள். காலையிலும் மாலையிலும் அக்குழந்தைப் பையன் அவ்வந்தனை ஆலயத்திற்குள் தலைமைக் கோரித்து கடத்திக் கொண்டுபோவது வழக்கம். அந்த மணிநேரத்திற் கூடிவந்திருக்கும் சபையாருடன் கூட அவர்களும் பங்குபெற்றுக்கொள்ளுவார்கள். இப்படியாக அவன் இப்பொழுது உட்கார்ந்து ஒரு பெரிய தூணினருகே சாய்ந்துக்கொண்டிருக்கையில் அவர்கள் ஆராதனையின் பிரார்த்தனையிலோர் பாகம் அவன் திரும்பக் கேட்க நேர்ந்தது:—

உலகத்தை வார்த்தையினால் உண்டாக்கினவரே, நீர் வாழ்க! சதாகாலங்களுக்கும் நீர் வாழ்க! நன்றியில்லாமையில் ருந்தெல்லாவற்றையும் உண்டாக்கினவரே நீர் வாழ்க! பூமியின் மிதிலங்கி அதற்காக பச்சாதாபப்படுகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்! அவர் உண்டாக்கின சிருஷ்டிகளின் மீது மனதுருகுகிற

வர் யாரோ அவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்! அவருடைய பரி
சுத்தவான்களுக்கு வாளைமான கன்மைகளை அருளிச் செய்கிற
வர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்! சதாகாலங்களுக்கு உயிரோடி
ருக்கிறவர் யாரோ அவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்! அவர் என்
றென்றைக்கும் அதே விதமாயிருக்கிறார், பிற்பகலும் பிரட்சகரு
மாயிருக்கிறவரெவரோ அவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்! ஸ்தி
யா ஸ்தியமானவரே! நீர்வாழ்க! எங்களுடைய தேவனே சர்வ
லோகத்தின் ராஜாவே! சகல இரக்கமும் மன உருக்கமுமுள்ள
தேவனே, எங்கள் தேவனே, எங்கள் பிதாவே நீர்வாழ்க!".

இது எனினும், அவர் ஏ. அவர் பிழையும் குருடனாகிய
என்மீது இறங்கி மனதருவாரகரும்; நான் பெலவானை,
நிலிப்பேன், கும் கீடிய காலமாய் நிலித்து பிச்சைபெற்றுத்
திரிவேன் என்று சொல்லிக்கொண்டு தன் பெலமுள்ள கரங்களை
நீட்டிக் குலித்தான்.

இதோ போகிறவர்கள் அநேகம்பேராயிருக்கிறார்கள், பசி
க்கொண்ட குண்டவாசர்களே! பிரவிக் குருடனவன் பேரில்
இரக்கமாயிருங்கள் என்று குழந்தையாகவன் சொன்னான். கல
வைக்கல் பாலியிருந்த தனதின்மீது பிருபியான போ காலடி
வைத்து நடப்பது நிலியாய் கேட்கும் குருடனுடைய செவிக்
கேறிற்று. குழந்தையானவன் இட்ட சத்தத்தைக் கேட்ட
போது அங்கே நடந்துபோனவர்கள் நின்றார்கள். அப்பொழுது
அவர்கள் குண்டவரே இவன் குருடனாய் பிறந்தது இவன் செய்த
பாவத்தினாலேயோ இவனைப் பெற்றவர்கள் செய்த பாவத்தி
னாலேயோ? என்று அவனைப் பார்த்தும் கேட்டார்கள். இக்
கேள்வி குருடனுடைய செவியில் விழுந்தபோது அவனுடைய
இரண அவனுடையமார்பிற் றெக்கும்படியாய்ப்பாரமாயிருந்தது. இது
ஒரு பழமையான கேள்வி. இரியமின் நன்றிறவுத்தினாலேயிரு
ந்த கேள்விப்பட்டதில்லையோ? ஆனால் இப்போது இதைக் கேட்
டதும் அவன்தான் நன்னை சபிக்கப்பட்டவன் என்று நினைத்துள்
ளே சிந்தித்தான். தம்முடைய சிருஷ்டிகளிடத்தில் அபரிமித
மான அன்பாயிருந்தாலும் அவர் குற்றமற்றவரை அவன செய்யும்



குற்றத்தினிமித்தமாகத் தண்டிக்கிறவராயிருக்கிறார் என்று சி
ந்தித்தான்.

ஆனால் போதகர் அதைப்பற்றி சொல்லுகிறார்! அவர் சொல்
லுவது ஏதோ புதுனமையும் ஆதனமுமாயிருக்கிறது. அவர்
அதற்கு: அது எப்படியென்றால், அது அவன் செய்தப் பாவமும
ல்ல அவனைப் பெற்றவர்கள் செய்தப் பாவமுமல்ல, ஆனால் தேவனு
டைய கிரியை அவனிடத்தில் விளங்கும்படியாகவே இது இருக்
கிறது என்றார். பகற்காலமிருக்கும்மட்டும் நான் என்னை அனு
ப்பினவருடைய கிரியையைசெய்யவேண்டும். ஒருவனும் கிரியை
செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. இன்னும் நான் உலகத்
திலிருக்கும்போது, நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்.

"உலகத்தின் ஒளி!" என்ற சத்தத்தைக் கேட்டவுடனே
அந்த மனிதன் தன் தலையை யுயர்த்தி அத்தொனி இருந்து புறப்
பட்டப் பக்கமாய் தன் பார்வையற்றக் கண்களை உயர்த்தினான்.
உடனே குழிவிழுந்துபோன் அவனுடைய கண்களின் இரெப்பை
களில் மென்மையும் குளிர்ச்சியும் உண்டாக உணர்ந்தான். ("அவர்
அனாயிலோவாம்; சாமிழ்தீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்
றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி" னார்.)

மகா வியப்பும் இரகியமுமான சத்தம் அவனுக்கு உண்டா
கி "நீ போய் சீலோவாம் என்ற குளத்திலே கழுவு" என்று
சொல்லப்பட்டது. அப்போது நடக்கும் அடிகளின் சத்தம்
நின்றுவிட்டது.

அந்தப் பிச்சைக்காரன் எழுந்து தன் குழந்தையை தன் கை
களை நீட்டிப் பற்றிக்கொண்டு வா! வா! என்றான்.

அப்போது குழந்தை அவர்கள் நமக்கு பணம்கொடுக்கவில்
லையென்று வருத்தத்தோடு அவர் உமது கண்களின் இரெப்பை
களின்மேல் சேற்றைமாத்திரம் பூசினார். அவர் அப்படி என்
செய்தார்!

அதற்கு அந்தக் குருடன் தன் குழந்தையைப் பார்த்து நீ
பேசாதே, சும்மாயிரு, என்னைக் குளத்தண்டை அழைத்துக்

கொண்டுபோ. அவர் எனச்சொல் கட்டளையிட்டபடியே அதிலே எச் கண்களைக் கழுவவேண்டும் என்றான்.

சலவைக் கல்லின் படிகளை விட்டு மேலே இறங்கி இறங்கி இரண்டு பேருமாய்ப் போனார்கள்.

அப்போது பையன் மெதுவாய் இதோ மறுவுகள் இயேசு என்னப்படுகிற மனிதனே அழைப்பதைக் கேட்டேன் என்று சொல்லிக் கொஞ்சம் பொறுத்து, எழுமானே நிஸ்தும்; குளம் இதோ இருக்கிறது. நீர் முழுதாளில் நில்லும்; உம்முடைய அங்கியை நான் வாங்கிப் பிடித்துக்கொள்ளுகிறேன். இப்போது உம்முடைய கைகளை நீர் கீட்டேயிராலுல் தண்ணீர் உமது கைகளுக்கு எட்டும் என்றான்.

அந்தகனுடைய அந்த மனிதன் அவனுடைய கைகளை ஆழமாய்த் தோய்த்து குமிழிகள் எழும்பத்தக்க அளவாய் தண்ணீரை யன்னி தன் கண்களின்மீது அடித்துக்கொண்டான். பின்பு அவன் மௌனமாய் பின்னுக்கு வந்தான். உடனே அந்தப் பையன் வியப்பான ஒரு பார்வை அவனுடைய முகத்தில் உண்டானதென்று, பையன் இது என்ன! உமக்கு உண்டது என்ன! என்று கத்தினான்.

ஆனால் அந்த மனிதன் பையனுடைய வார்த்தைகளையும் சந்தடியையும் கவனிக்கிறவனாக காணப்படவில்லை. எப்படியெனில், அந்த மனுஷன் அப்பையனுக்குப் பதில் ஒன்றுஞ் சொல்லாமல், அவன் தன்னுடைய கைகளை வானத்துக்கு நேராக எறெடித்துக் கூப்பி உரத்த சத்தமாய் சொன்னது:—

"சதாகாலமும் இருக்கிற கர்த்தராகிய தேவனே! நாங்கள் உம்மைத் துதிக்கிறோம். உம்மை என்றென்றைக்குமே போற்றுகிறோம். நீர் தேசங்களோடும் புகழ்ந்துப் போற்றி மகிமைபடுத்துகிறோம்!

எங்கள் இராஜாவே! எங்கள் தேவனே! உமது நாமத்தை துதிக்கிறோம்!

ஒருவராகிய மகாதேவனே! சதாகாலங்களுக்கும் ஜீவனை படைக்கிறவரே!



ஓ, என்றென்றைக்கும் மகிமையுள்ள ராஜருடைய கர்த்தாவே நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர்.

ஓ, நித்திரைமானவரே! இரா இருட்டிலும், அந்தகாரத்திலும் இருந்து என்னை உம்முடைய ஜோதியுள்ள கைகளினுலே இரட்சித்தீரே! என் பாவம் மறைக்கப்பட்டது. என் பெற்றோர் செய்த பாவங்களும் மூடப்பட்டது. வெட்கமுண்டு போனவனும் சபிக்கப்பட்டவனுமாகிய வென்னை மெய்யாகவே உம்முடைய இரக்கத்தில் நினைத்தருளினீர்.

நித்தியமாயும், எப்போதுமாகவும் துதிக்கப்பாத்திரராயிருக்கிற கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்!

இதை அந்தகக் கண் திறக்கப்பட்ட அந்தகன் சொல்லிமுடித்தானும்; இந்தப் பையன் அவனை பக்கதோடும் பயத்தோடும் சம்மாவித்தான். எனென்றால் குழி விழுந்ததும் மூடப்பட்டு மாயிருந்த அவனுடைய கண்கள், திறக்கப்பட்டது. அவனுடைய கண்கள் தன்னுடைய பூரணமும் பிரகாசமுமான கண்களைப் போல விருந்தன. அவனுடைய கண்ணைத் திறந்தவருடைய நாமம் இயேசு என்று அவன் சொன்னது இன்னதென்று அறியாமல் திரும்பத்திரும்ப அவருடைய நாமம் இயேசு என்று ஒரே மூச்சாய் சொல்லிக்கொண்டிருந்தான். பிள்ளைக்குரிய அவனுடைய மூளை ஆச்சரியத்தால் நிறைந்து தடுமாறிற்று.

அந்த மனிதன் இப்பொழுது திரும்பி அவனைச் சமாதானமாயாதை செய்தான். கடைசியாக நீ ஒரு சிறு பிள்ளையாகத்தானிருக்கிறாய்.

அந்தப் பையன் பயத்தோடு நான் தான் உமமைக் காலையிலும் மாலையிலும் வழி நடத்தினவன் என்று அவனுக்குச் சொன்னான். அப்போது அவன் இனிமேல் நீ என்னை வழி நடத்தாதிருப்பாயாக. நித்தியராயெயருக்கு நன்றியறிதலுள்ளதாயிருப்பதாக! இது முதற்கொண்டு நான் உன்பேரில் கவலையாயிருப்பேன் என்று அந்தப் பையனுக்குச் சொன்னான்.

நீர் குணமாக்கப்பட்டதை எங்களுக்குச் சொன்னதுபோல

பரிசேயருக்கு முன்பாக வந்து அறிக்கைசெய்தார்? என அத்தனி பிச்சைக்காரன் எனக்கு நிகழ்ந்த பிரமாப்பத்தை சுருக்கமாய் வெளிவிடவேன். எனவே விதேயமாகியிருக்கலாமா அறிந்தேனு ரூல்! அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை மூத்தங்கூட தொடுத் திருப்பேன் என்றான், அவனைச் சுற்றி நின்றவர்களில் ஒருவன் அவன் தான் இவன் என்பதை தான் நம்பவேமாட்டேன். அந்த அந்தகனைப்போல காணப்படுகிறான். அதேயும், ஆச்சரிய மாயிருக்கிறது என்றான்.

இந்த விஷயத்தில் அவன் என் பொய்சொல்லவேண்டும்? அவன் பொய்சொல்லுவதினால் அவனுக்கு இலாபம் என்ன? என்று வேறொருவன் சொன்னான்.

அதற்குப் பிச்சைக்காரன், இல்லை நான் சொல்லுவது பொய் யல்ல; நான் அறிவித்ததின்படியே என் கண்கள் திறக்கப்பட் டன. நாசரே குருவைப் பிரசவன்தான் என்று வாக்கைத் தொடர்ந்து சொன்னான்.

அதன்மேல் ஒரு பரிசேயன், போக்கிலியும் மரியாதையுமான ஆலோசனை சங்கத்தார்களே, நீங்கள் விஷயத்தில் ஒரு அற்புதம் செய்யப்பட்டதாகச் சொல்லுகிற ஒரு மனிதனை சோதனை செய் யும்படியாக உங்களுக்குமுன்பாகக் கொண்டுவந்திருக்கிறேன். இந்த அற்புதம் ஓய்வுநாளில் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாகச் செய்யப்பட்டிருப்பதால் இது விஷயம் நீங்கள் யோசிக்க வேண் டிய விஷயமாயிருக்கிறது, என்றான். இதைச் சொன்ன பரிசே யனே ஒரு பெரிய மத வைராக்கியன். அவனுடைய பக்தியோடு கூடிய முகமும், மேலே சொல்லுகிற அங்கியும், இவனுடைய மத வைராக்கியத்தைக் குறித்தமாயிருக்கிறது. இப்படியாக இவன் சொன்னதைக் கேட்ட காய்பா: ஐயா உத்தமரே, நீர் புத்திசாலித் தனமாய்ச் செய்தீர் என்று சொல்லி பிச்சைக்காரனைப் பார்த்து ஆடா, உன் சங்கதியைச்சொல்லு, நாங்கள் நிர்ணயம் செய்கிறோம். என்றான். இதைக்கேட்ட அவன்: நான் சொல்லவேண்டியதில் ஒன்றுமில்லை. இயேசுவென்ற ஒருவர் சேறுண்டாக்கி என் கண்களின்மேல் அந்தப்பூசி என்னைப்பார்க்க: சிலோவாம் குள



த்துக்குப் போய்கழுவு, என்று சொன்னார். அப்படியே நான் போ ய், கழுவினேன். அதனால் எனக்கு பார்வை வந்தது, என்றான். இதைக் கேட்டதும் அந்தப்பெரிய சங்கத்தில் இருந்தவர்களுக்குள் முக்கோணமும் கலையசைத்ததும் காணப்பட்டன. கடைசியாய் ஒருவன் இயேசுவாகிய இந்த மனிதன் தேவனிடமிருந்து வந்த வனல்ல. ஏனென்றால், அவன் ஓய்வுநாளை அனுசரிக்கிறதில்லை, என்றான். இதற்கு முன்னதாகவே இந்தக் குற்றத்தை அவன் பலதடவைக ளில் செய்திருக்கிறான். அது நமக்கு எல்லாருக்கும் தெரியும், என்றான். இதைக்கேட்ட நிக்கோதேமு: பாவியாயிருக்கிற ஒரு மனிதன் அப்படிப்பட்ட ஒரு அற்புதத்தை எப்படி செய்யக்கூடும்? இந்த இயேசுவினால் சொல்லப்படுத்தப்பட்ட நீ என்ன சொல்லு கிறாய்? என்றான். அதற்கு அந்த மனிதன் அவர் தீர்க்கதரிசி யென்று நான் நினைக்கிறேன், என்றான். அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவொரு அங்கத்தான்: நாம் இது விஷயத்தைப்பற்றிக் கேள்விகள் கேட்கும்படி இந்த மனிதனுடைய பெற்றோர்களைப் போய்க் கொண்டுவர ஒரு உத்தியோகஸ்தனை அனுப்பிக்கலாமென் றான் நான் சொல்லுகிறேன், என்றான். இது சங்கத்தாரால் ஒத்துக்கொள்ளப்பட்டு அதேமாதிரி நடந்தது, சபையோர்கள் கூடி கலந்துகொண்டிருந்தார்கள். அப்போது பிச்சைக்காரன் ஒரு பக்கமாய் நின்றுகொண்டிருந்தான், தன்னுடைய தேவரும் பிரகாசமா னகண்களோடு நடப்பதை கவனித்துக்கொண்டிருந்தான். கொஞ்சநேரத்துக்கெல்லாம் உத்தியோகஸ்தன் திரும்பி வந்தான். அவனோடுகூட ஒரு கிழவனும், நன்றும் போர்த்துக்கொண்டிருந்த ஒரு ஸ்திரீயும் வந்தார்கள். அவர்கள் அறைக்குள் பிரவேசித்த போது, அவர்கள் தங்களுடைய பிள்ளையை இரகசியமாய்ப் பார் த்து, அங்கே கூடியிருக்கிற பெரிய மனுஷர்களுக்கு முன்பாக நின்று வந்தனம்செய்தார்கள்.

காய்பா கொஞ்சம்நேரம் வரைக்கும் பேசாமலே அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு, அவர்களைப் பார்த்து கோபத்துடன் எங்களுக்குமுன்பாக இருக்கிற இந்த மனிதன் உங் களுடைய குமாரனே? இவன் பிறவிக்குருடனாயிருந்து உங்களு

டைய குமாரனே? இப்போது எப்படி பார்க்கமுடிந்தது? என்று கேட்டான். அந்தக் குழவன் மறுபடியும் வர்தனம்செய்து தன் கைகளை விரித்து, தன் தோட்டமே மன்னிப்புக் கேட்பதுபோல ஆங்கி மறுமொழியாக சொன்னது: மிக்க கர்த்தருடைய பிரபுவே, இவன் எந்தனுடைய குமாரனே, இது எங்களுக்குத் தெரியும். இவன் பிறவிக் குருடனென்றும் எங்களுக்குத் தெரியும். ஆனால் அவன் எந்தக் காரணத்தினால் இப்போது பார்வையடைந்தானே அது எங்களுக்குத் தெரியாது. அவனுக்கு யார் பார்வை கொடுத்தான் என்பதும் எங்களுக்குத் தெரியாது. அவனே வயதானவன், ஆகையால் அவனையே கேளுங்கள். அவன் தானே பேசுவான் என்றன். இதைக்கேட்ட காய்பா பிச்சைக்காரனைப் பார்த்து அப்படி நில்லு! என்றான். அந்த மனிதன் முன்னுக்கு வந்து தன் பெற்றோர்களின் பக்கத்தில் நின்றான். பிரதான குசாரியன் பயமுறுத்துவதைபோல் அவனைப் பார்த்தான்.

ஆனாலும் பிரகாசமுள்ள அவனுடைய கண்கள் எதற்கும் பின் வாங்கவில்லை. கடைசியில் பிரதான குசாரியன்: நீ லட்சியம் செய்யாவிட்டால் உனக்குத் தருந்த பிரகாரம் தண்டனை விதிக்கப்படும். இந்தச் சங்கதியைப்பற்றி உண்மையை அறிக்கையிட்டு நீ சொந்தமானதினால் உண்டான மகிமை தேவனுடையதாகையிலும் தேவனுக்குக் கொடு. மனிதனோ, இயேசு என்றும் பெயரினவன் பாவியென்று எங்களுக்குத் தெரியும் என்றான். இதைக் கேட்டதும் பிச்சைக்காரன் தன்னை எதிர்பார்த்து நிற்பவர்களை நின்று, சங்கதாகா எரிட்டு, அவனுடைய கண்களிலிருந்து ஒரு தெளிவான ஒளியை ஒரு எக்காளம் ஊதுகிறதுபோல் சத்தமிட்டு அந்த அறை முழுவதும் தொனிக்குமாறு அவன் மறுமொழி சொன்னான்:

இந்த மனிதன் பாவியோ அல்லவோ எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மாத்திரம் எனக்குத் தெரியும். அதாவது: நான் முன்னே குருடனாயிருந்தேன். இப்போது பார்க்கிறேன்.

கொஞ்சநேரம் வரைக்கும் சத்தமில்லாமலிருந்தது. பிறகு இவனாயில் பேசாதிருந்த ஒரு குழவன் தன் கழுத்தை நீட்டித்



கொண்டு சொன்னது:—அவன் உனக்குச் செய்தது என்ன? உன் கண்களை அவன் எப்படித் திறந்தான்! எனபதுவே. மறுபடியும் அந்தப் பிச்சைக்காரன் பதிற் சொன்னது:—நான் உங்களுக்கு முன்னமே சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. ஏகையால் மறுபடியும் இப்போது ஏன் நீங்கள் கேட்கிறீர்கள்? நீங்கள் கூட அவருடைய சீஷர்களாயிருப்பீர்களா? என்பதுதான். இதைக் கேட்ட காய்பா, கண்ணில் கெருப்பு பறக்க நாங்கள் மோசேயின் சீஷர்கள். இழிவான ஜாதியில் பிறந்திருக்கிற உன்னைப்போன்ற பிச்சைக்காரர்கள்தான் இந்த மனுஷனுடைய சீஷர்கள். தேவன் மோசேயினிடத்தில் பேசினார் என்பது எங்களுக்குத் தெரியும். இந்த மனுஷனைப்பற்றியோ, அவன் எங்கிருந்து வந்தான் என்கிறது எங்களுக்குத் தெரியாது, என்று சொன்னான். இதைக் கேட்ட பிச்சைக்காரன் பரிகாசமாய், என், இதவும் ஒரு ஆச்சரியந்தான் அவன் எங்கிருந்து வந்தானென்பது உங்களுக்குத் தெரியாமலிருப்பதும், அவன் என் கண்களைத் திறந்திருப்பதும் ஒரு ஆச்சரியந்தான்! இப்போது தேவன் பாவிகளுக்குச் செவிகொடுக்கிறதில்லை என்பதை நமக்குத் தெரியும்.

ஆனால், எவனுவது தேவனை வணங்குபவனாயிருந்து, அவருடைய சித்தத்தின் பிரகாரம் செய்தால் அவனுக்கு அவர் செவி கொடுப்பார். உலக சிருஷ்டிப்பு முதற்கொண்டு பிறவிக்குருட னாய்ப் பிறந்த ஒருவனுடைய கண்களை எவனுவது திறந்தானென்று கேள்விப்பட்டதில்லை, என்றான். இதைக் கேட்ட காய்பா, பிச் சைக்காரப்பயலே! முழுமையும் பாவத்தில் பிறந்த நீயா எங் களுக்குப் போதிக்கிறாய்? இந்தப்பரிசுத்தமான விடத்தை விட்டுப் போ மறுபடியும் உன்னுயிர் உன்னுடையதா யிருக்கவேண்டுமோ னால். இங்கே வாராதே என்றான். இதைக் கேட்டதும் அந்த மனிதன் மனதில் விசனங்கொண்டவனாய்ப் போய்விட்டான். எனவேறுல், அந்த ஆலயத்தினுடைய மகிமைகளைப் பார்க்க அவனுக்கு ஆவல்கொண்டிருந்தான்.

இனிமேல் அவன் கிட்ட போகக்கூடாத மதிற்களைப் பார்த் துக்கொண்டே நடந்து போகையில் தன்னோடு பேசும் ஒரு சத்

தித்தை அவன் கேட்டான். அவன் திரும்பிப் பார்க்கையில் கீதா னும் இனிமையுமான பார்வையோடு தன்னைப் பார்த்த ஒரு வனைக் கண்டான். அதனால், அவனுடைய மனமானது கவர் கிற்று. காரணம் அவனுக்கே தெரியவில்லை. அந்த மனுஷன் அவ னோடு பேசினார். அவருடைய குரல் அவனுக்குத் தெரியும். அது அவனே மேலோகம் முழுத்திற் கழுவும்படி ஏவினவரின் குரல். அவர் அவனைப் பார்த்து: தேவகுமாரனே விசுவாசிக்கிறாயா? என் றார். பிச்சைக்காரன் பயத்தோடி மறுமொழி சொன்னதாவது: கர்த்தரே, நான் அவரை விசுவாசிக்கும்படியாக அவர் யார்? என்றான். இயேசு அவனைப்பார்த்து நீ அவரைப் பார்த்திருக்கி றாய், உன்னோடி பேசுகிறவர் அவர் தான் என்றார். பிறகு அந் தப் பிச்சைக்காரன் அவருடைய பாதத்தில் விழுந்து அவருடைய வஸ்திரத்தின் தொங்கலை முத்தமிட்டுக் கர்த்தாவே, நான் விசு வாசிக்கிறேன், என்றான்.

இது இப்படியிருக்க, அவனை ஆலயத்தைவிட்டு வெளியே தள் ளின பரிசேயர்களில் சிலர் அருகாமையிலே நின்றுகொண்டிருந் தார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இயேசு அவர் களுடைய மனதிலுள்ள எண்ணங்களை யறிந்தும் அவர்களைப் பார்த்து இந்த உலகத்தை நியாயந்தீர்க்கவே நான் வந்திருக்கி றேன். பார்க்காதவர்கள் பார்க்கும்படியாயும், பார்ப்பவர்கள் குருடராய்ப் போகவும் நான் வந்திருக்கிறேன் என்றார்.

இதைக்கேட்ட பரிசேயர்கள் கோபத்தோடி நாங்களும் குடவர் குருடராயிருக்கிறோம்? என்றார்கள். இயேசு அவர்களைப் பார் த்து: நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப்பாவம் இல்லை. ஆனால் நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுவதால் உங்கள் பாவம் உங்களிடத்திலிருக்கிறது என்றார்.

# பதினெட்டாம் அதிகாரம்.

வசந்தகால வாரம்பத்தினத்தியத்தில் ஒருநாள் இரண்டு பிர யாணிகள் செங்குத்தான பிறைவழியாய் மேலேறிப்போனார்கள். அந்த வழியானது நாசரேத்து என்னும் மலைநாட்டிற்குக் கொண்டுபோயிற்று. வழியோ கரடுமுரடாயும் கஷ்டமாயுமிருந் தது. அந்த ஸ்திரீயானவள் மெதுவாக நடந்துப்போகையில் பெருமூச்செறிந்தாள். அந்தப் பையன் அந்தப் பெருமூச்சைக் கேட்டு திரும்பி அவளுடைய முகத்தைக் கவலையுடன் பார்த்தான். அந்த முகமானது, குறைவும் வெளிச்சத்தில் வெண்மையாகப் பிரகாசித்தது. அவளைப் பார்த்துப் பையன்: தாயே, நீ அளவுக்கு மிஞ்சி களைத்திருக்கிறாய். இழேயிருக்கிற ஊரில் நாம் இராத் தங்கியிருக்கவேண்டும். இங்கே உட்கார்ந்து கொஞ்சநேரம் இளை ப்பாறு, என்றான். இதைக் கேட்டவுடன் அந்த ஸ்திரீ கொஞ் சம் தெளிவடைந்து, அந்தப் பையன் தன்னுடைய ஆட்டுத் தோலினால் மூடின கரடு முரடான கல்லின்மேல் படுத்தாள். மறுபடியும் பெருமூச்செறிந்து அவள் கடைசியாக: ஆம், நான் மிகவும் களைப்படைந்திருக்கிறேன். இந்த மலைகளை ஏறிவருவதி னால் எனக்கு சக்தியற்றுப்போகிறது என்றாள். இதைக் கேட்ட அந்தப் பையன்: கொஞ்சநேரம் நீ இளைப்பாறினபிறகு உனக்கு சுகம் உண்டாகும். கொஞ்ச நாளாக நாம் வெகு தூரம் நிரந் தோம். உனக்குச் சக்தி வருகிறவரைக்கும் அதோ தெரிகிற ஊரில் நாம் வசிக்கக்கூடுமானாலும் வசிக்கலாம். இங்கே சேர்த் தியாயில்லையா? மலைகளைப் பார்! எவ்வளவு பசுமையாயிருக் கின்றன! பூக்களைப் பார்! நீ இளைப்பாறும்போது உனக்கு நில வை நான் பறிக்கட்டும் என்றான். இதைக் கேட்டு அந்த ஸ்திரீயானவள் புன்சிரிப்பாக சிரித்து: ஏன் ஸ்தேவானே, நீ இளைப்பாற வேண்டியதில்லையா? பட்டணத்துக்குப் போவதற்கு முன்னே இன்னும் கஷ்டப்பட்டு மலையேறவேண்டுமே என்றாள். அதற்கு ஸ்தேவான்: தாயே எனக்கு ஒருபோதும் களைப்பு என்

பதே இப்போதண்டாகிறதில்லை என்றான். பிறகு அவன், பாறைகளின் மத்தியில் அசைந்தாடிக்கொண்டிருந்த பிரகாசமான வர்னத்தையுடைய பூக்களைப் பறிப்பதற்காக ஒரு செங்குத்தான கரையின்மேல் ஏறினபோது அவன் தாயானவள் அவனை ஆசையுடன் பார்த்து நின்றாள். அவள் தனக்குத்தானே ஆ, நீ, என் பிரியமான பிள்ளை! இப்போது அவன் எதிர்பாராத ஒரு மனிதனுயிருக்கிறான். ஆனாலும், இன்னும் அன்புள்ள குழந்தையினுடைய மனது அவனுக்குண்டு என்றாள். அவளுடைய மடியின்மேல் நிறைய பூக்களை வைத்து, அவனைப் பார்த்து அந்த வாலிபன் தாயே! பார், இங்கே வெள்ளை, சிகப்பு, மஞ்சள் நிறமான ரோஜாப்பூக்கள் இருக்கின்றன. அவைகள் நேர்த்தியாயில்லையா! இன்னும் வேறு சில சாதி புஷ்பங்களும் இருக்கின்றன. இவைகள் சிறிய சட்சத்திரங்களைப்போலிருக்கின்றன. அதோ தெரிகிற அந்த வீட்டில் ஒவ்வொரு கிட்சன்னும் தோட்டம் ஒன்று இருக்கிறதை நீ பார்க்கிறாய்; நான் இந்த வெப்பு ரோஜாக்களைப் பறித்த அந்த உயரமான பாறையிலிருந்து எனக்கு மாதளம்பூக்களையும், பனிக்கட்டிப்போல வெண்மையாயிருக்கிற இச்சிலிமரங்களையும் நான் பார்க்கக்கூடும். அப்படிப்பட்ட இடத்தில் வசிக்கிறதென்றால் உனக்கு விருப்பம் இராதா? இப்போது நான் உன்னைக்கேட்கக்கூடும். உண்மையில் நம்பிரவருக்கும் உணவுவாங்க போதுமானதை நான் சம்பாதிக்கக் கூடும் என்று சொல்லி கொஞ்சம் பொறுத்து கனவுகண்டாற்போல அவன், அவர் வசித்திடம் நாசரேத்; அவருடைய வீட்டை நாம் பார்ப்போம் என்றான். இதைக் கேட்ட அவனுடைய தாய் கொஞ்சநேரத்துக்கெல்லாம் என் ஸ்தேவானே, நாம் அவசரமாய் வழிடத்தபோகவேண்டுமென்று நினைக்கிறேன்; எனென்றால் சூரியன் ஒருமணிநேரத்திற்கு முன்னே மேலே போய்விட்டது. சகிரத்தில் இரவு எம்மை மூடும்என்றாள். இதைக் கேட்ட அந்த பையன், என் தாயே, நீ சொல்லுவது சரிதான். நான் உனக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறேன் என்றான்.

அரைமணிநேரம் கழட்டப்பட்டு, மேலேயேறி, இரண்டு பிர



யாணிகளும் வரிசையில் எல்லையண்டை வந்துவிட்டார்கள். இங்கே மலைப்பக்கத்திலுள்ள ஒரு ஊற்றிலிருந்து வரும் தண்ணீரானது மேலேயிருக்கும் ஒரு கற்பாத்திரத்தில் ராகத்தோடு விழுந்தது. இந்த இடத்தில் அந்த வழிதீ இடுக்கென்று நின்றாள். அவன் புல்லின்மேல் சாய்ந்து, இனிமேல் நான போகமாட்டேன். நான் ஆசௌக்கியமாயிருக்கிறேன் என்று கேலிப்புடன் சொன்னான். அதற்கு ஸ்தேவான்: ஓ தாயே, நாம் ஏறக்குறைய அந்த விடுதிலிருக்கிறோம். இந்த தண்ணீரில் கொஞ்சம் உனக்கு நான் கொடுக்கிறேன். அதினால் உனக்குக் களைதீரும் என்றான். ஆனாலும் அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவன் பின்புறமாயிருந்த புல் நிறைந்த கரையின்மேல் அவனுடைய தலை சாய்ந்தது. அந்தப் பையன் அவள்மேல் சாய்ந்துகொண்டிருக்க தான பயத்துடன் அவளுக்கு பிரக்ஞைதப்பி இருக்கிறதென்று கண்டான். அவன் நிக்கற்றதையுதன கையைப் பிடித்துக்கொண்டு; நான் என்ன செய்வேன்? தாயே, ஓ தாயே! நான் என்ன செய்வேன் என்று உரக்கக் கதறினான். அவனுக்கு அருகாமையிலே ஒரு சத முமுண்டானது. அவள் களைத்திருப்பாளென்று, நான் கொஞ்சம் தண்ணீர் கொடுக்கட்டும் என்பதே அந்த சத்தம். அவன் நிமிர்ந்து பார்த்தான். அவன் தன் பக்கத்தில் ஒரு ஸ்திரி தன் தோளின்மேல் ஒரு தண்ணீர் பானையைச் சுமந்துநிற்பதைக் கண்டான். இதை அவள் தீவிரமாக ஸ்நேகத்தில் அமிழ்த்தி, ஏழை விழுந்திடக்கும் ஸ்திரியின்மேல் குளிர்ந்தவளாய் வெண்மையான அவளுடைய முகத்தின்மேல் அந்த புதிய குளிர்ந்த தண்ணீரைத் தெளித்தாள். அதோ! அவள் தெளிவடைகிறாள். சிக்கிரத்தில் அவளுக்கு பிரக்ஞைவரும் என்று சொன்னான். அவள்: உன்னுடைய பாத்திரத்தில் தண்ணீர் நிறையச்செய்து அவளுக்குக் குடிக்கக் கொடு என்றான். ஸ்தேவானும் அப்படியே செய்தான். உடனே அவன் தாய் எழுந்து உட்கார்ந்து தன்னைச்சுற்றிப் பார்த்தாள். இதைக்கண்டு அவன் சந்தோஷப்பட்டான். ஆனாலும் உடனே அவள் மறுபடியும் மூர்ச்சையடைந்தாள். அந்த வாலிபனைப் பார்த்து வந்த அந்த ஸ்திரி மாரில் உனக்கு சகோதரர்கள்

ண்டா? என்றுள். அதற்கு ஸ்தேவான் இல்லை; நாங்கள் மத்திரத்துக்குப் போகிறோம். அது இவ்வேயிருந்து அதிக தூரமா? என்றுள். அது மேல்மீதியில் இருக்கிறது. இன்று ராத்திரி அவ்வளவு தூரம் நடந்துபோவது அவளால் ஆகாது, என்று பதில் சொன்னுள். ஏனால் அவள் என் வீடு அருகாமையிலிருக்கிறது என்று சொல்லி இருட்டான இலைகளின் வழியாய் மிகக்மிஞ்சி கென்று பிரகாசிக்கும் வெளிச்சங்காணுமிடத்தைக் காட்டிக் காட்டினுள். அவளே நிற்கும்படிசெய்ய எனக்கு ஏதாவது செய்தால், நல அடிகள் போகுமுன் மிரிபோய்ச் சேரலாம். இன்றைய ராத்திரி நீங்கள் என் வீட்டில் தங்கலாம் என்றுள். இதைக் கேட்டு ஸ்தேவான் சந்தியறிதலுடன்: நீ நல்லவள் தான் மனப்பூர்த்தியாய் உனக்கு வந்தனஞ்செய்கிறேன் என்றான். அவர்கள் இருவருமாக அந்தக் கிராமத்தைத் தாண்டி பிரிஸ்காவைத் தேடி அந்தக் குடிசையைப் போய்ச் சேருமளவிலும் தன்னோடிருக்கும்படியான அவளுக்கு ஏதாவதைக் கொடுத்துவந்தார்கள். அந்தக் குடிசையும் அந்த ஸ்திரி சொன்ன பிரகாரம் அதிக சமீபத்திலிருந்தது. அந்தக் குடிசைபோனதும் அந்த வீட்டுக்காரி தன் விருந்தாளிக்கு வேண்டியவற்றை ஏற்பாடுசெய்துக்கொண்டிருக்கும் அறையிலிருந்த ஸ்தேவான் சாத்தகொண்டிருந்த அறைக்குள் போனுள். அப்போது அவள்: காலுகிறுள். காலேக்குள் அவள் சுகமாகிவிடுவாள் என்றுள். அவன் தன்னைச் சுற்றியிருக்கிறவைகளையெல்லாம் பார்க்க அவளுக்கு அவகாசமிருந்தது. இந்த வீட்டின் சுற்பாகமெல்லாம் மிகவும் தாழ்மையானதாயிருந்தபோதிலும் ஒரு புஷ்பத்தைப்போல் அவளுடைய சுத்தமையும் சேர்த்தியையும் இருந்ததைவென்று கண்டான். இப்போது அவன் அந்த ஸ்திரியை மிக அபிமானமாய்ப் பார்த்தான். அவள் வயதாயும் கலவுளுள்ள லட்சணங்களோடுகூடவளாயுமிருக்கக் கண்டான். மத்திய வயசுக்குமேல் அவள் இருந்தும், அவளுடைய முகமானது அழகையும் கண்கள் தெளிவையும், வாய் பிருதுகளையும் தலையில் கருமையில் வெண்மை கலந்த பொன்னிறத்தோடு கூடிய கொஞ்சம் நரைமுடியுள்ளதாயும் இருந்தது. அவள் அவ



னைப் பார்த்து; நீ கூட களைப்படைந்திருக்கிறாய் என்றுள். மேலும், அவள்: நீயும் சாப்பிட்டால் தூங்குவாய் என்று பிரகாசமும் புன்சிரிப்புமுள்ள முகத்தோடு அப்படி சொல்லிக்கொண்டே அவள் அந்தப் பையனுக்குமுன்பாக மாத்திரந் செய்த பாத்திரத்தில் பாலும், வாற்கோதுமையப்பங்களும் வைத்தாள். அதை அந்தப் பையன் சாப்பிட்டானவுடனே அவள் அவனைப் பார்த்து நீங்கள் தனிமையாய், வீட்டிலிருந்து வெகுதூரம் இப்படி பிரயாணம்செய்துவரக் காரணமென்ன எனக்குச் சொல்லு எனென்றுள், உன் தாய் எனைநோடி நீங்கள் கப்பர்நாகூமுரில் வசிப்பதாகச் சொல்லுகிறுள் என்றுள். இதைக் கேட்டதிலுல் பையனுக்குத் தைரியமுண்டாகி எல்லாக் கதையையும் தெளிவாக அவளுக்குச் சொன்னுன். கடைசியில் நசரேயரால் தான் சொஸ்தமான அந்த அற்புதத்தையும் சொன்னுன். அவன்: உனக்குத் தெரிகிறுப் போல் நாங்கள் கப்பர்நாகூமூரிலிருந்து புறப்பட்டு வேண்டிய தாயுமிருந்தது. அவருடைய வீட்டைப் பார்க்க வெனக்கு விருப்பமிருந்தபடியால் நாசரேத்துக்கு நாங்கள் வந்தோம். ஒருவேளை அவரை இங்கே நாங்கள் காணக்கூடும் என்று நினைத்தேன். இந்த இயேசுவானவர் உனக்குத்தெரியுமா? என்றுன். இதைக் கேட்டவுடன் அந்த ஸ்திரியின் கண்களில் தாரைதாரையாக கண்ணீர் பெருகிற்று. மறுபடியும் அவள் முகத்தை புன்னகைப்பானது மாற்றி தெய்வீக அழகுண்டாகச் செய்தது. அவள், அவர் என் குமாரன்; இது அவருடைய வீடு என்று கபடன்றி சொன்னுர்.

# பத்தொன்பதாம் அதிகாரம்.

சிறுவனே, உன் எஜமானன் உன்னைப் பார்த்திருலே, அவனுடைய தயவை நீ சம்பாதித்தாய். அதைதான் உனக்குச் சொல்லுவேன். எனக்குத் தெரிந்தமட்டிலும் என் அதிகாரத்தின் கீழ் வர்தவர்களில் அதேகருக்கு மேலாக உன்னுடைய கடமைகளை விசுவாசத்துடன் செய்துவந்தாய். ஆகையால் நான் உன்னோடு ஒரேகம்பண்ணை இஷ்டப்படுகிறேன். எனக்கு வயது ஆகிக்கொண்டுவருகிறது. என்னுடைய உத்தியோகத்தின் வேலைகள் என்மேல் பளுவாக இருக்கின்றன. நீ சுகமாயிருந்து, புத்திசாலியாயிருந்தால் நான் பார்க்கும் உத்தியோகமாயே உனக்கொன்னை வேலைக்கு நீ என் மாமட்டாய் என்பதற்கு எனக்கு ஒரு காரணமும் தோன்றவில்லை. ஏனென்றால், என் சம்பளத்தை வைத்துக்கொண்டே நான் புத்திசாலியாயிருந்து வர்தேன். அதைக்கொண்டே எனக்குச் சொந்தமாக ஒரு நிலாட்சத்தோட்டம் வாங்கினேன். எனக்கு வயது முதிரும் காலத்தில் நான் அங்கேயேயிருப்பேன். ஆக இப்படியாக பெரோஸி என்பவன் நித்தலைப்பார்த்துப் பேசினான். அப்போது அவன் எகமாக தோட்டத்தில் ஒரு பெஞ்சியின் மேல் உட்கார்ந்திருந்தான். நித்தி பரியாதையுடன் அவனுக்கு முன்பாக நின்றுக்கொண்டிருந்தான். இந்த வார்த்தைகளைக் கேட்டபோது அந்த வாலிபனுக்குச் சந்தோஷத்தினால் மெய்புளகம் வாய்ந்தது. ஆனாலும் அவன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஏனென்றால், அந்தப் பிழவன் இன்னும் சொல்லப்போகிறானென்று தான் அறிந்தான். பெரோஸி, நான் உனக்கு முக்கியமாய்ச் சொல்லவேண்டிய தொன்றுண்டு; அதிக கனம்பொருந்தியவிஷயமே கேட்டுக்கொண்டபிறகு பேரில் அந்த வேலையை நான் உனக்கு ஒப்புவிக்கிறேன். நான் வேறொருவனை அந்த வேலைக்காக தெரிந்தெடுத்திருக்கவேண்டி மென்பதை நான் மறக்கவில்லை. ஆனாலும், யஹூதியனுடைய வேண்டுகோளுக்கிணங்க உனக்கு அந்த



வேலையை இடுகிறேன். வேறொருவனை என்றால் எதற்கென்றால் நீ அறியாத வயதுள்ளவன் ஆகையால் உனக்கு புத்தி போதாது என்பதே தவிர உன்னிடத்தில் நம்பிக்கையில்லை என்பது அல்ல. அந்த வேலையானது இதுதான்: நிபோபியாவுக்கு கொஞ்சதூரத்தில் இருக்கிற நிலாட்சத் தோட்டத்தை நீ போய்ப் பார்க்க வேணும். அப்போது அந்தத் தோட்டத்தைப் பார்த்து வருகிறவனுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை நீ எடுத்துக்கொண்டுபோகவேண்டும். அந்தப் பணத்தை அவன் இந்த பணப்பையோடு உன்னிடத்தில் அவனுக்காகக் கொடுத்தனுப்பப் போகிற இந்தக் கடிதத்தில் நான் கண்டிருக்கிறபிரகாரம் செலவழிப்பான். அந்தப்பையில் நான் சொல்லிய பணம் இருக்கிறது. அதை உன்னோடு கூடவே வைத்துக்கொண்டு தூதபாணியாக நீ போகவேண்டும்.

நீ அதிசீக்கிரமாய்ப் போக்கூடிய கோவேறு கழுதையை உன் வசம் ஒப்புவிக்கிறேன். இப்போதிருந்து சாயங்காலத்திற்குள்ளாக நீ போய்ச் சேரலாம். நீ பகலில் போனால் சீக்கிரமாய்ச் சேரலாம் என்றதைக்கேட்டபிறகு: இன்னும் அரைமணி நேரத்தில்தான் தயாராயிருப்பேன். அந்த இடத்தை எப்படிக் கண்டுபிடிக்கிறதோ அதற்கு வேண்டிய தகவல்களோ நீ எனக்குச் சொல்லவேண்டும் என்றான். இதைக்கேட்ட அந்த பிழவன் யோசனையோடு: இன்னும் அதிகமும் செய்வேன் உன்னோடு கூட தூசாவையும் அனுப்பித்தருகிறேன். ஏனெனில், இம்மாதிரி வேலைக்கு அநேக தடவைகளில் அவன் அங்கே போயிருக்கிறான். தூசாவையால் அவனுக்கு வழி தெரியும், என்றான். இதைக் கேட்ட நித்தி இந்த மாதிரியான வேலைக்கு அவன் போனபோதெல்லாம் அவன் தனிமையாய்ப்போனானே அல்லது வேறொருவன் அவனோடு கூட போனதுண்டோ? என்றான். அதற்கு பிழவன்: அவன் தனியாய்ப்போனான் என்று கொஞ்சம் தாக்ஷிண்யமற்றுச் சொல்ல, அதன்மேல் நித்தியுக்கு கோபம் வந்ததைக் கண்டு அவன் சாதுவாக தேசத்தில் கள்ளர்கள் பயம் உண்டு என்பது உனக்குத் தெரியும். ஆகையால் ஒருவன் போவதைவிட இருவராகப் போ

யது அதிகப் பரிதாபஸ்தன் என்றான். அதற்கு நித்து: நான் தனிமையாய்ப்போவது உனக்கு நம்பிக்கையற்ற விஷயமானால் நான் போகவேமாட்டேன். அத்தகைய தூசாவே, வழக்கம்போல் பையை எடுத்துக்கொண்டுப் போகட்டும், என்றான். அதற்குக் கிழவன்: இல்லை, இல்லை, சிறுவனே, இப்போது நீ அர்க்ருவனத்தோடு இருக்கிறாய். நீ செல்லவேயிருக்க வேண்டுமானால் உன் கோபத்தையடக்கி உன் பேச்சையும் அடக்கவேண்டும். நான் உன் நன்மைக்குமுன்றே னென்று உனக்கு நான் சொல்லவில்லையா? அதன்றி இன்னும் உண்மை. பிறவனே, உன்னை நான் நேசிக்கிறேன். என் குமாரனைப்போல் உன்னிடத்தில் நான் அன்பாயிருக்கிறேன். ஆனாலும், நீ தனிமையாய் இன்றையதினம் போகக்கூடாதென்று ஏதோ ஒன்று எனக்குச் சொல்லுகிறது, என்றான்.

அதற்கு நித்து: எனக்கு பலம் இல்லையா? கள்ளர்கள் வந்தால் அவர்களோ எதிர்க்கக்கூடிய பலம் எனக்கு இல்லையா? என்று சொல்லிக் கொண்டு தன் தேகத்தை நன்றாய் நெளித்தாற்போல் வைத்து நின்று, தன்னுடைய விசாலமான புஜங்களோ பின்னுக்குப் போகப்பண்ணி நின்றான். மேலும் அவன்: என் நல்ல பெரேனியே, கள்ளர்களுடைய வழிகளில் அவர்கள் பலகு நிடக்களும் நீர் எண்ணுவதைவிட எனக்கு அதிகமாகத் தெரியும், என்று சொல்லி, பிறகு அவன் கள்ளர்களோ ராஜ்ஜ சுதந்திரம்படி நாதிஷ்டமாய் நேரிட்டால் மகா உயர்ந்த (மேலான) தூசா எனக்கு இறைவரிருப்பான். அவன் பெருத்த தேகத்தோடி முக்கலை போன்ற ஒருவன் கையில் அகப்பட்டால் என்ன கதியாகும் என்று கான் என்னைக்கூடும் என்றான். அதற்குப் பெரேனி இழுத்தாற்போல், நீ என்ன சொல்லுகிறாய்? என்றான். நித்து தன்னுடைய உதட்டைக் கடித்து: நல்ல பெரேனியே, நான் போகவேண்டியது நேரமாய் இருக்கிறது. உமக்குப் பிரியமிருந்தால் போகிறதனை தூசா என்னோடி வரவேண்டாம், அவன் எனக்குப் பாரமாயிருப்பான் என்றான். இதைக் கேட்ட பெரேனி நல்லது இந்த விஷயத்தில் உன் இஷ்டம்போல் நீ செய். பேகோவா தாம் உன்னைப் பாதுகாப்பாராக என்றான். இதைக் கேட்ட நித்து சிரித்தக்



கொண்டு பெய்யாகவே, அது நேர பரிதியுள்ள ஸ்ரீர்வாதம். என் னுடைய பருமனுன் தடியினாலும் இரண்டு கத்திகளினாலும் அதை பலப்படித்திக்கொள்ளுவேன் என்றான்.

இதைக்கேட்டு பெரேனி தன் தலையை அசைத்து: நீ ஒரு புரட்சாதியாலுயிருப்பது விளையாயிருக்கிறது. உன்னுடைய வார்த்தைகள் அருளான தேசத்தைச் சேர்ந்தது என்றான்.

அரைமணி நேரத்திற்கெல்லாம் அந்த இரண்டு பலமும் வேகமுமாயோடக்கூடியதான ஒரு கோவேறு கழுதையின் மேலேறி அந்தப் பெரிய மூற்றத்தைவிட்டு சபதப்வென்று தனிதமாய் சென்றான்.

பணப்பையான து அவனுடைய உடுப்பின் மேலுள்ள இடுப்பைச்சுற்றி பத்திரமாய்க் கட்டப்பட்டிருந்தது. தன் பக்கத்தில் ஒரு பையில் சிற்றுண்டிகளைப் போட்டிருந்தான். தன்னுடைய அரைக்கச்சையில் இரண்டு பயங்கரமான கத்திகளைப் போட்டிருந்தான். அவன் சத்திரோதய நேரத்திற்கு முன்பே கான் திரும்பி வந்துவிடுவேன். போய்வருகிறேன் மித்தனம்! என்று சொல்லி, பெரேனியைப் பார்த்து தன் கையை யாட்டி அவனுடைய கவலை வாய்ந்த முகத்தைப் பார்த்துச் சிரித்துப் புறப்பட்டான். அந்தக் கிழவனும் தான் வீட்டிற்குள் திரும்பிப்போகும் போது தன் தலையை அசைத்து தனக்குத்தானே! இது விஷயத்தில் என் மனதில் ஏதோ கலக்கம் உண்டாகிறது. அந்தப் சிறுவனோடு எவனுவது ஒருவன் போயிருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிப்போனான்.

இதற்குள்ளாகத் நித்து நகரவாசலையடுத்த சேர்ந்து மலை சாலைக்கு நடத்தும் கதவுகள் நிலைத்த குதிரை எதிர்செல்லும் வழியாய் ஏறிப்போய்க்கொண்டிருந்தான். அப்போது குளிர்ச்சியான வசந்தகால வயல்களிலும், நிராட்சதத்தோட்டங்களிலும் சூரிய வெளிச்சமானது உல்லாசமாயும் பிரகாசமாயும் இருந்தது. வசந்த காலத்தில் மாத்திரம் அந்த தேசத்தில் காணப்படும் பச்சை நிறத்

தோடி அலைகள் காணப்பட்டன. வழியோரங்கள் புஷ்பி
தக் காணப்பட்டன. நானுவித வர்ணந்தள் கூடிலைலைகளாயிரு
தன, சிகப்பு, மஞ்சள், நீலம் முதலான வர்ணங்கள் அலை
யின் பேரில் பாய்பாத்தி பூச்சுகள் மொய்த்தன. கூடுகட்டி
கொண்டு இருக்கும் பறவைகள் யேஸ்கோரிலும், புதர்களிலும்
இரெப்பையை உடித்துக்கொண்டுப் பறந்தன. ஆகாயத்தில் ஆ
ரம் எக்கோ விஸ்தாரத்திற்கு வானம்பாடியானது பாட்டு
னுல் ஆகாயத்தை நிரப்பினதாகள்.

அந்த வாசனைமிகும் காற்றை நீத்து உள்ளுக்கு இழுத்து
சுவாசித்து சருட்டை மயிருள்ள தன் தலையை பின்னுக்கு
சாய்த்து தானும் சந்தோஷத்துடன் பாட ஆரம்பித்தான். உண்
மையில் அப்படிப்பட்ட காலையில் சுயசமாப்பாயும் நிர்மலமையாயும்
இருப்பது நல்லதுதான். பகல் வருக்கொண்டிருக்க, அவன்
நாட்சத்தோட்டங்களும் காருபடிசெய்த வயல்களும் வேலை
செய்யும் வேலைக்காரர்களால் நிறைந்த, இலைகளைப் பின்னால் வி
ட்டு மனுஷர் சஞ்சரிக்கில்லாமலும் பாழாயும். இருக்கிற இடத்
தைப் போயடைந்தான். இங்கே, நெருக்கமான வழியானது
அல்லது ருதினாலேறிச் செல்லும் ஒற்றடிப்பாதை காலிறாகிமுள்ள
குன்றுகளின் மத்தியிலும் அடர்ந்த நெருங்கிய காட்டு சோஜா
புஷ்ப புதர்களின் மத்தியிலும் விசேஷமான நிறப்புஷ்பங்களோ
புஷ்பிக்கும் பூண்டுகள் காட்டு ஒலிவமரங்களின் மத்தியிலும் போ
கும் அந்தப் பாதை வழியே போனுன். நீத்தவுக்கு அந்த இடம்
நன்றாய்த் தெரியும். அவன் இப்போது அமைதியும், ஸாத்விகமு
மாயிருந்தான். கொஞ்ச தூரத்திற்கெல்லாம், அவன் நின்று
தான் வீணிவந்த கோவேறு கழுதையைக்கட்டி, ஸாத்விகத்தோடி
மரங்களின் மேற் முளைத்திருந்த செடி கொடி மரங்களின் வழி
யாய் ஒரு நிறந்த வெளிக்குப் போனுன். அவ்வெளியானதோ
ட்டி மார்க்கத்தினின்று மறைந்திருந்தது. இவ்விடத்திலிருந்தக்
குன்றின் பக்கத்தினின்று ஒரு பெரிய ஊற்று ஸ்படிகம்போல் தெ
ளிவாயும் பளிங்குபோலும் குளிர்ச்சியாயும் ஒடிவந்து, அடியி
லிருந்த ஒரு அகன்று குவிந்த பாறையில் பாய்ந்து வழிந்து ஓடி



ற்று. இந்த நாணியமான விடத்தில் அதிகச் செழிப்பும் அடர்த்
தியும் கொடிய வளர்ச்சியையுடையதுமான வாசனையுள்ள பச்சை
ப்புற்கள் பரவியிருந்தது. நீத்து தன் காலைத் தரையோடு
வைத்துக்கேட்டான். பிறகு அவன் ஒரு குலவிருகைப்போன்ற
ஒலி என்னும் மாத்தின் பிதேரி காட்டின் வழியாய்ப் பரந்தான்.
அவன் தான் இருந்த உயரமானவிடத்திலிருந்து தான் பிரயாணஞ்
செய்து வந்தவழியான அடியின் பக்கமாய் ஒரு கம்பளிபட்
டை நாம்போல் விரிந்து இருந்தது கண்டான். புதிதும் பசுமை
யுமான இலைகள் சூரியப்பிரகாசத்தில் பூலைனும், தனக்குக்கீழே
நூற்றுக்கணக்கான அடிகள் தூரத்துள்ள சில நிறமுள்ள ஜலம்
அருமிருங்கு காணப்படுவதையும், வெளியே தூரத்தில் மலைக
ளின் பின்னுல் சிட்டுத்திட்டாயுள்ள அதின் பிரமைகளும் பிரகா
சமும், அடிவானத்தில் நாரமாய்க் காணும் பனிமூடிய மேகத்தை
ப்போன்ற டர்மோன் மலையானது இருந்தது. வையுறுக்குத் திரு
ப்பியுண்டாயி மாத்திலிருந்தக் கீழே மெதுவாயிறங்கி மிகோகளி
ன் வழியாய் போய்க் கோவேறு கழுதையின் ஜீனிலயப் பிடித்
தான். அதன் பின் அவன் அந்தப் பிராணியின் மேல்லிய ரீண்ட
கழுத்தின்மேல் அதைத் தட்டிக்கொடித்து சந்தோஷத்துடன்
அதைப்பார்த்து ஒருபோதும் நீ குடித்திராத அவ்வளவு இனிமை
யான தண்ணீர் உனக்கு உண்டு என்று பின்னும் அதற்கு வேண்
டிய தெல்லாவற்றையும் சரியாய் கொடித்துவிட்டுதான் புல்லின்
மேல் உட்கார்ந்து தன் பையைத் திறந்து அதினின்று உணவுகளை
வெளியே எடுத்து சாப்பிட ஆரம்பித்தான்.

அந்த இடம் மிகக்குளிர்ச்சியும் இனிமையுமான சேர்த்தி
யான இடம். தூரத்திற்கேட்கும் பறவைகளின் சப்தமும் பாய்ந்
தோடும் ஜலத்தின் தொனியும், பகற்போஜனத்துக்கு கோவே
று கழுதை போடும் அசையின் சத்தமுமன்றி வேறே யொன்று
மங்கே கிடையாது. நீத்துவுக்கு கொஞ்சம் நித்திரை மயக்கம்
உண்டாகிறப்போலிருந்தது. அந்த மயக்கத்தோடே அவன் தன்
முகத்தைப் பார்த்து அதி தன் ஸ்காரத்தில் அசைவாதி மாத்தி
ரம் நின்றவிட்டு இருப்பதைப் பார்த்து தான் சுகமாய் தன் கையை

முடக்கி அதை தனக்கு தலையணையாக்கிக்கொண்டு அயர்ந்து நித்திரை செய்தான்.

எவ்வளவு நேரம் அங்கிருந்தானென்றவனுக்குத் தெரியாது. நித்திரை மயக்கத்திலுல் அவன் மந்தபுத்தியுள்ளவனாயிருந்தும், ஏதோ தப்பிதம் நடந்திருக்கிறதாக அறிந்து நித்திரை மயக்கத்திலுல் வருத்தத்துடன் அழைத்து கண்விழித்திருந்தான். அப்போது அவன் புத்தியினத்தின் முழு அளவும் அவன்மேல் வந்திருப்பதாக அறிந்தான். எப்படியென்றால், அவனுடைய கையும் காலும் பந்தோபஸ்தாகக் கட்டப்பட்டிருந்தது. முக்கால் அருகாமையாயிருந்த மரத்தின் அடிமரத்தின் மீது சாய்த்துக்கொண்டு பயங்கரமான வெற்றிக்கொண்டப் பார்வையோடு அவனைப் பார்த்துக் கொண்டிருக்கையில், அவனின் மற்றக் கூட்டத்தாரெல்லாரும் தனையில் முரட்டித்தனத்தோடு கத்தி கிளர்ச்சிசெய்துகொண்டிருந்தார்கள்.

நித்தி விழித்தபின் அந்தக் கூட்டத்தாருக்கு அவனைச் சேவை செய்யவும், அவனை பரியாசஞ்செய்து சிரிக்கவுந்தக்க குறிப்பாளே மாயிருந்தது.

அந்தக் கூட்டத்தாரில் ஒருவன், நித்தலைப்பார்த்து என் பிரிய இளவரசே நீ சாப்பிட்டு இளைப்பாறியாயிற்று? என்றான்.

இன்னொருவன், மெய்யாய் உன்னை நாங்கள் இங்கே கண்டு பிடிப்போமென்றெண்ணினதே யில்லை; ஏனுல் உனக்கு கண்ணை மூடித் தெரிந்திருக்கிறபடியே, இப்படி நாம் சந்தித்தது பழைய யேற்பாடாக விருக்கிறது. சந்தேகமில்லாமல் நீ எங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தா யென்றான்.

நித்தி அந்தக் கட்டுகளிலிருந்து தப்பித்துக்கொள்ள போராடியும் தன்னுல் கூடாமற்போயிற்று. அப்படி செய்ததாக கோபம் தோடு தன்னைச் சுற்றியாகினவர்களைப் பார்த்தான்.

அப்போது தாமக்கல், உன்னுடையப் பணப்பையையும், கோவேறு கழுதையும் சேர்த்து நீ எனக்கொரு சொற்பியாசம் வெளியாக்



னம் என்று அந்தப் பணப்பையை நைசாயெடுத்திருப்பதாய்க் குதுக்கிக் குதுக்கிக்கொண்டு சொன்னான்.

வேறொருவன், வெகுகாலமாக எங்களுக்கு ஒன்றையும் மல் துர்அதிர்ஷ்டமாயிருந்தது, நீ இப்போது பிட்டியை எங்களுக்கு வெகு விசேஷமே என்றான்.

இனிமேல் யாதொரு காமதமுமின்றி ஒருவேலைக்குப் புறப்பட்டுப்போக வேண்டும். அங்கே நமக்கு எல்லாம் சரியாய் நடந்தேறுமானுல், நமது துர்அதிர்ஷ்டத்திற்கு ஒரு முடிவுண்டாவதை நாம் சீக்கிரமாய்க் காணலாம். என்று தாமக்கல் சொன்னதோடு இன்னும் ஒருதரம் அந்தப் பணப்பையை ஒரு ஆட்டி ஆட்டி இது தற்சமயம் நமக்குப்போதிய தென்றான்.

நித்தி எப்போதும் விசேஷ நேரம் பாராட்டியிருந்த கேயாஸ் பால்யனைக் கட்டவிழ்த்து விட்டு விடட்டுமா? அவனைக் கட்டவிழ்க்கட்டுமா? என்றான்.

அதற்கு தாமக்கல், இல்லை! முதலாவது நான் அவனுடைபைசல்செய்யவேண்டிய கணக்கொன்றுண்டு. இக்காலத்திற்கு முன்னே நான் என்ன நித்தவுக்கு முன் வந்து நின்று அவனை உச்சரத்துடனே விளாசிப் பார்த்து, எனக்குப் பிற்பாடு பாதகமையைக்காட்டியதற்காக என் பின்னே ஸ்தேவானை அடிக்கும்படியான சமயம் நேரிட்டது. அப்படியாக நான் அடித்துக்கொண்டிருக்கும்போது யாரோ ஒருவன் என்னை மூர்ச்சித்து விழும்படியடித்து என் கையையும், காலையும் கட்டிவிட்டபோது நான் இக்கற்றலனுய் விடப்பட்டிருந்தேன் என்றான்.

ஆம், அவனும் வெகு நேர்த்தியாய்க் கட்டப்பட்டிருந்தான் என்று கேயாஸ் ஹஹஹவென்று நகைத்து, அங்கேயவன் பேய்ப் பிடித்தவன்போல் சத்தமிட்டுக்கொண்டு நான் அங்கேபோய் கட்டவிழ்க்கும் பரியந்தம் விழுந்துக்கிடந்தான். நாய்கள் அவனைத் தின்னுது விட்டிருந்ததால் இன்னும் அவன் அங்கே கிடந்தான். என் நம்பிக்கைபடியே அவனைக் கட்டியிருந்தக் கட்டுகள்.

நாய்களுக்குப் பர்தோபஸ்து செய்யும்படியாக அவ்வளவு மிஸரி யையாக கட்டப்பட்டிருந்தது என்றான்.

நீத்து அதை நோக்கி கூர்ந்து எரிச்சலுடன் கொறித்தெழுந்த மேரையாய் நீ இதே விதமான நிலைமையில் ஸ்தேவானுக்கும் செய்ய நினைத்திருந்தாய் என்றான்.

ஆக அப்படி செய்தவன் நீயே! என்றெனக்குத் தெரிந்தது. பூதனுடைய் காயே! என்று தமக்கஸ் எரிச்சலுடன் சொல்லி பிறகு கோபத்தினால் பேசமல் நின்று மீளும் இருபுறமும் கருக்குள்ளதுமான கத்தியைத் திக்கற்ற நீத்துவின்மேல் மீசையெறிந்தான். அது நீத்துவின் தலைமேற்பட சற்றே தப்பி அவனுக்கு பின்புறமாயிருந்த மரத்தின் பருத்து போறையாயிருந்த, அடி மரத்தின்மேல் பாய்ந்து, கத்தியானது மீசப்பட்ட பலத்திற் கேற்ற அது பாய்ந்த விடத்தில் பிடித்துக்கொண்டு கிறுகிறென் ருடிற்று.

இதைக்கண்ட கேயாஸ் முன்னேடி வந்து மதுமதா நீ என்ன நினைத்திருக்கிறாய்! என்று சத்தமிட்டு இந்த அற்ப விஷயத்திற் காக நீ பையனை கொல்ல விரும்புகிறாயோ? நீ அடிக்கடி தெரி விக்கிறாப்போல அவன் உன் சொந்த மகனுங்கூட இருக்கிறான் என்று தமக்கஸைப் பார்த்து சொன்னான்.

அதற்கு தமக்கஸ் அவன் என் மகனேயல்ல. அவன் ஒரு சபிக்கப்பட்டவன். அவனை நான் வெறுக்கிறேன் என்று சத்த மாய் கேயாசுடனே சொன்னான்.

எங்களுக்கு யாருக்கும் இது ஒரு பெரிய சங்கதியல்ல என்று கொஞ்சம் நிறுத்தாப்போல கேயாஸ் சொல்லி, அதற்காக வெல்லாம் நீ அவனைக் கொல்லலாகாது. என்ன சொல்லுகிறாய்? அவனைப்போகவிட நான் கட்டவிழ்த்து விட்டேனா? அல்லது அவனை நம்மோடு எருசலேமுக்கு அழைத்துக்கொண்டுப் போகலாமா வென்றுக் கேட்டான்.

நாம் அவனை எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு போவோம் என்று தமக்கஸ் சொல்லி மரத்தின் அடியிலிருந்த கத்தியைப்



பிடுங்கி பால்டனுடைய கால்சோக்கட்டியிருந்த கயிறுகளை அறுத்துவிட்டு, நான் கோவேறு கழுதையின்மேல் ஏறிக்கொண்டு சவாரி செய்வேன்; இந்தப் பையனோ, என்னைவிட்டுத் தப்பிப் போகட்டும் பார்க்கிறேன், அவனை என் கைகளிலுலேயே கொல்லுவேன்! என்றான்.

அந்தக் கூட்டத்தாரெல்லாரும் உடனே புறப்பட்டு வழி நடந்தார்கள்; இரண்டுபேர் வேலுக்காரர்களைப்போல முன் நூலே போனார்கள். நீத்து வேறே இரண்டுபேருக்கும் மத்தியில் கைகள் கட்டப்பட்டவனும் மத்தியிலும் மற்றக் கூட்டத்தார் எல் லாரும் தமக்கஸ் கோவேறு கழுதைமேல் சவாரிசெய்ய அவனைச் சூழ்ந்துக்கொண்டும் வழி நடந்தார்கள்.

நீத்து தன்னுடன் வந்தவர்களாகிய கூட்டத்தாரைப் பற்றிக் கவனிக்கக்கூடாதவனும் தன்னுடைய சொந்த உபத்திரவங்க ளால் அவ்வளவும் தூர எண்ணங்கள் கொண்டவனுமிருந்தான். மற்ற இடங்களை யெல்லாம் விட்டு அந்த இடத்தில் நான் தாங் கினேன்! நான் மதியீனனுயிருக்கிறேன் என்று தான் யோசித் தான். ஆனால் அவர்கள் யாரும் அங்கே எங்கும் இருந்திருக்க மாட்டார்களென்று நன்றுயறிந்து நிச்சயித்திருந்தேன். நான் என் வேலைமார்க்கமாய் போயிருந்திருக்கவில்லை? நான் இராத்தி ரிக்கு வரத்தவறிப் போவேனுனால் பேரனை என்னை நினைப்பான், நாட்சத் தோட்டத்திற்கு நான் போகவேயில்லை என்று அவன் கண்டு பிடிப்பானுனால் பணம் அவர்களுக்குச் சேரவில்லை என்று தெரிந்துக் கொள்வானுனால் என்ன நினைப்பான்?

நான் அந்தப் பணத்தைக் கொண்டுபோய் செலுத்திய பின் னராவது அவர்கள் என்னைப் பிடித்துக்கொண்டார்களா? என்று மனம்குமுறி சத்தமிட்டான்.

அப்போது அவர்களிலொரு மனிதன் போதமான பகுத் தோடு, நீத்துவைப் பார்த்துக் கயிறுகளால் உன் மணிக்கட்டி கள் நோவெடுக்கின்றனவா? என்றுக் கேட்டான்.

அதற்கு நீத்து சருக்கமாய், இல்லை என்று சொல்லி ஒரு கல்லை

நம்பிக்கையோடு, நீ எப்போதும் என் நினைவிலிருந்தாய், கேயாசே, நான் தப்பிக்கொள்ளத் தக்கதாய் நீ எனக்கு சகாயம் செய்யமாட்டாயா? என்றுக் கேட்டுக்கொண்டான்.

அதற்கு அவன் பால்யனே! நீ ஒரு மூடனைப்போல பேசுகிறாய். என் நீ எங்களைவிட்டுத் தப்பிக்கொள்ள விரும்புகிறாய்? நாங்கள் உன்னுடைய நேசிதர்களாயிருக்கிறோம்; இதற்கு முன்னிரம் தோழர்களுக்குள் அநேக காட்சிகளிப்புடனே கழித்திருக்கிறாய். நீ உன் சொந்த புத்தியை உபயோகித்து பின்னுக்கு வருகிற நம்முடைய பாத்திரமுள்ள பிரதானியை வசப்படுத்திக் கொள், இன்னும் மற்றவைகளெல்லாம் உன்னோடே சரியாகிவிடக்கும்.

அப்போது நித்தி, இல்லை; நான் அப்படிச் செய்ய முடியாது, அவன் என்னை வெறுக்கிறான். என் விஷயமாய் நானே அவனை வெறுக்கிறேன். ஸ்தேவானே அவன் அடித்த அன்றையத்தினமே அவனைக் கொன்றிருந்திருப்பேனென்று விரும்பியிருந்தேன்.

அதற்கு அவன் சிரித்துக்கொண்டு, உலகமே அவனை விட்டு விட்டிருக்கும்; கடைசியில் அது அவனுக்கு நலமாயிருந்திருக்கும் என்பதை நான் சந்தேகிக்கிறதில்லை.

சற்றநேரம் பொறுத்திருந்து, தன் தோழர்களைப் பார்த்து அந்த நிமிஷத்தில் நான் யாரென்று நீங்கள் சொல்லக்கூடுமா? அவன் என்னை இரண்டுதரம் யூதனென்றழைக்க நீங்கள் கேட்டிருக்கிறீர்கள் என்றான்.

அதற்கு கேயால் யோசனையுடன் இப்போது நீ கேட்கிற தெதுவோ அதை நாமே தெரிந்துக்கொள்ள வேண்டுமென்று அதிக ஆசையாயிருக்கிறேன். எனென்றால், உன்னை அதிகப்படுத்தி பேட்டிக்கொள்ளுவதற்கு சந்தேகமில்லை. நீ எருசலேமிலிருந்து திருடிக்கொண்டு வரப்பட்டவனென்று நான் நினைக்கிறேன். எப்படியென்றால், நான் முதல் முதல் அந்தச் சமாரித்தியனான தமஸ்கஸை சந்தித்தபோது அவன் அப்போது தான்



யூதேயாவிலிருந்து புதிதாய் இந்தப் பக்கங்களுக்கு வந்தவன் போலிருந்தான். அப்போது உனக்கு வயது சுமார் முன்று ஒரு கடலை நிமக்ஸ் உன் தகப்பனென்று தன்னே சொல்லிக் கொண்டதினாலே நீ அவனைக் கோபத்தினாலே அடித்தாய்.

நித்தி பதிலொன்றுரு சொல்லவில்லை. அந்தப் பெரிய மிருத்தினுடைய மகன் நான் அல்லாதபடியாலே நான் சந்தோஷப்படுவேன் என்று தனக்குள்ளே நினைத்தான். ஆனால் நான் யாருடைய மகன்? யூதாகோ வெறுத்தும்படி அவன் எனக்குக் கற்பித்தான். நான் ஒரு யூதன் என்பதினால் என் சகோதரன் அல்ல; என் தாயாரும் எனக்குத் தாயார் அல்ல. இவைகளெல்லாம் அநேக வருஷங்களாய் துக்கம் நிறைத்தவைகளாய் அலைந்தகூட என்னை வெறுக்கவேண்டுமென்றான்.

இப்பொழுது இரவாயிற்று; தன் கண்களை வதைத்து சந்திரன் உதயமாகிறது, பிருளாயிருக்கிற மலைக்கு பின்புறத்திலிருந்து மற்ற மலைநாட்டு கூட்டத்தாருக்கு சந்திரன் பெரிதும் மகிழ்ச்சியுண்டாக்கியிருந்தது. அவன் கண்களிலிருந்து முத்தான கண்ணீர் பெருகிற்று. இது சந்தோஷாதயம். பெலேஸ்தி இப்போது எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். நான் வரவில்லை, அவர்கள் என்னைக் கிருடனென்று நினைப்பார்கள் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

## இருபதாம் அதிகாரம்.

அந்தக் கள்ளர்களின் கூட்டமானது நித்தம் எப்போதும் கன்முகாவில் பண்ணப்பட்டி கடக்க அவர்களால் ஏவப்பட்டும் வெகு வினாவாக ஒருசேலையும் தோக்கிச் சென்றார்கள். அவர்கள் பிரயாணம் செய்த தோமனை இரக்கலத்தில் தூணச்சந்தி ரன் பிரகாசிக்கிறதாயிருந்தது. பகற்காலங்களிலோ அவர்கள் புதர்களிலும் காடுகளிலும் தங்கள் உணவுகளுக்காக யார் அகப் படுவார்களோ என்று மறைந்து கொண்டிருப்பார்கள். இரவு நிச்சிடமுள்ள பிரயாணிகளிற் சிலர் அவர்கள் பிரயாணம் செய் கையில் அந்தக் கள்ளர்கள் கையில் விழுவார்கள். அப்போதவர் கள் சொத்துக்களை உடனே பறிகொடுப்பார்கள். அவர்கள் அவ் வாறு பறிகொடுக்கையில் எவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார்களோ அதற்குத் தக்கபடி நடத்தப்படுவார்கள். அவர்கள் தங்களுக் குள்ள எல்லாவற்றையும் கொடுத்துவிட்டால் அவர்களைப் போக விடுவார்கள். இல்லாவிட்டால் பாதி பிராணனாக அடிப்பார் கள். ஆனால் அந்தக் கள்ளரை எதிர்த்து நிற்கவாவது யாதாம் கூச்சல்போடவாவது முயன்றால் அந்தப் பிரயாணிக்கு ஐயோ! அனர்த்தம்! பன்னிரண்டு கதிகளை உடனே பிடித்து சும்மா யிரு எனறு பிரட்டி அமர்த்தி உடைய பிரியமான பழமொழியா கிய, "இறந்தபோன மனிதர் கதை சொல்லமாட்டார்கள்" என்ற அர்த்தத்தை அவனுக்குச் சொன்னார்கள்.

தான்சாம்மான் உதயத்தில் அவர்கள் எருசலேமுக்கு மேற்கே நித்தும் மலைகளை விட்டிச் சேர்ந்தார்கள். அங்கே ஒரு விசாலமான ஒரு பள்ளத்தாக்கினிடத்தில் பாளயமிறங்கி சில மணிநேரங்கள் ஆகப் பயணாரியும் இளைப்பாறியிருந்தார்கள்.

சாப்பிட்டானபின் அமக்கல் என்பவன் தன்னைவிட்டு எவரும் எனக்காக இங்கே காத்திருக்கவேண்டாம். நான் மாத்திரம் நகரத்திற் குள்ளே போகிறேன். உங்களுக்குள்ளே ஒரு குழப்பமும் இல்லா



திருக்கட்டும். எனென்றால் நாம் தொடுத்த காரியத்தை முடித்தற் கடாமற்போய்விடுமே என்று கோல் என்பவனே ஒரு பக்கமாய் கொண்டுபோய் அவனோடு மெல்லிய தொனியுடன் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தான். அவ்விருவரும் பேசிக்கொண்டிருந்த விஷ யம் தீத்துவுக்கு முதன்மைப்பற்றினதான என்பது உண்மையில் தெரிந்தது. ஆனால் அவனை அதைக்குறித்து தெரிந்துகொண் டவனுக ஜாடையும்கூட காட்டவில்லை; அவனை அதிசிக்கிரதில் நிறைவேறும் அதிசயத்தை எதிர்நோக்கி இருந்து தான் தப்பித் தக்கொள்ள சமயம் வர காத்திருந்தான். அவனுடைய புத்தி முன்னமே தன் தாய் தந்தையர்கள் இன்னேர் என்று கண்டு பிடிக் கும் முறையில் நிச்சயித்ததை ஞாபகத்திலுல் எருசலேமில் அவர்கள் இருபபார்களாலுல் தன்னை யவர்களுக்கு வெளிப்படுத்தலாம் என்ற எக்முற்ற யோசனை நிறைந்தவனாயிருந்தான். இதை எப்படிக் கொண்டுசெலுத்தலாமென்று தான் அறியாதவனாயிருந்தான்; ஆனால் அவன் முற்றும் நிஷ்காரண நம்பிக்கையுள்ளவனாயிருக் தான்.

சில மணி நேரங்களுக்குள்ளாக அமக்கல் திரும்பி வந்து அவன் எல்லாம் சரியாயிருக்கிறதே என்று சந்தோஷத்துடன் தெரிவித்தான். உடனே சற்றுப்பொறுத்து ஒரு குவளை நிறைய திராட்சை மதுபானம் செய்து, பிழலில் பதித்து கனிக்கவும் செய்தான்.

மற்ற மனிதர்கள் மெல்லிய குரலோடி சம்பாவித்திருக்கை யில் அச்சம்பாஷணையின் சிரியதோர்பாகம் தீத்துவின் காதில் விழுந்தது. இவ்விடத்தில் முன்னமே ஐந்தாறு பேருக்கு அதிகமான பேர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள் மேற்கொண் டுவதே வாஸ்தவமே

இந்நிரவே நம்மெண்ணத்தை நிறைவேற்றலாமா? தந்திர உபாயத்திற்கு முன் இருட்டாயிருக்கும்போதே தேவாலயத்தின் வாசல்களை சுருவாய் தள்ளி நிறுத்திவிடலாம். உன்வாசற்படியண் டையிருக்கும் பொன்குல் வார்க்கப்பட்ட கழுகை இழுத்துவிட்டால் தொலைத்துப்போடலாம் என்று பரபரப்பாய் சொன்னான். அந்த

எழுது மேசையிலிருந்து வைக்கப்பட்டது. அது ஹாரிஸுடைய கண்களுக்கு அருவருப்பானதாயிருந்தது.

பொன்னால் வார்ப்பிக்கப்பட்ட எழுது அஸ்திரம் அது யுத்தருக்கு ஏதாகாது என்றால் நாம்கொண்டு என்ன? நாம்கு கேவ்டியிலி கொள்ளாதாலே!

பேசாதே! அவசரத்திலும் போகாமல் இன்னொருதரம் நாம் தேவாலயத்தின் வாசலுக்குள் வரப்போகிறதில்லை. இப்போதே அத்துடன் ஐய்ந்துள்ள சில பொற்பலிதிரவை மொத்தக்கொண்டு போகவேண்டும். இன்னும் வேறென்ன வேண்டும்.

இவர்கள் இவ்வளவு பேசிக்கொண்டிருப்பதற்குத் தெரியாதிருக்கும்படி அவர்கள் சத்தத்தை மட்டுப்படுத்திருந்தார்கள். அதற்குப்பின்னொருவன் கொஞ்ச சத்தத்தோடே அந்தப் பொருள் அப்படியிருக்கிறது பார் என்றான். ஆம், பிறகு இவனும் அதின்மேல் தன் கைகளிலுள்ளதை வைத்தான். ஆனால் அதை முடியவேண்டுமென்றிருக்கும். அது முடிக்க வழியில்லாதவனாயிருக்கிறான். அது பெரும்தொகைக்கு பெறுமானதா? அது ஒரு பெரும் தொகை பெறுமானதே! இந்த ஒரு பெரும்பொக்கிஷம் மனிதர் அதிகமாயிலாத இடத்துக்குக் கொண்டுபோய் ஒரு ஆஸ்பியாருடைய கண்டை உடைக்கும் காலத்தில் அதை யாரும் அறியாதபடிக்கொண்டு தனியிடத்தில் பிரிப்போலாம் நாம் கொண்டிருக்கும் யோசனை என்றான்.

நாம் திரும்பி வருகையில் இதைக்குறித்து ஆலோசனைபண்ணலாம். அதற்குப்பின் ஆறுதலாயிருந்து சமாதானமாய் இருக்கலாம் என்றான். பின்னும் ஒருவன் இந்தயோசனை மனதிலிருந்தால் தருக்கா; பாபாசுக்கு இது தெரியுமா? என்றான்.

அவனுக்குத் தெரியாது அவனெறு கைதாங்கியிருப்பான் தன் ஒரு பிரியினைபோலும் அவன் தேவாலயத்தினின்று அந்தப் பொற்தழுவை எடுத்துவிட மாத்திரம் எண்ணியிருந்தான். ஆனால் அது எங்கேயிருப்பது பரிசுத்தம் அல்லவென்று நினைத்திருந்தான். அவனெறு முரட்டுயிருந்தும் தேவாலயத்து அதிகாரிகளுக்கும் அவனுக்கும்படாது என்றான்.



வேறொருவன் நம்முடைய கொள்ளையில் அவன் பங்காளி ஆகாதிருப்பதற்கு காரணம், நியாயத்திற்கு இந்தப் பக்கங்களில் ஒருவரும் நம்மை யறியமாட்டார்கள். ஆகையால் நாம் சமயத்திற்கு ஓடிப்போகவுமகூடும். நம்மை தொடருகிறவர்கள் அவனைப் பிடித்து சிலுவையில் அறையட்டும் அது நமக்கு விசேஷந்தான். தமக்கஸ் இவர்களிட்ட சப்தத்தைக் கேட்டு எழுந்து அவர்களுடைய மூடத்தனத்தின் நிமித்தம் அவர்களை முரட்டித்தனமாய் கடிந்துகொண்டு ஆகாரமும் மதுபானமும் கொண்டுவரச் சொன்னான். அவன் சாப்பிடுகையிலும் குடிக்கையிலும் தீத்துவை அடிக்கடி பயங்கரத்துடன் பார்த்தான். தீத்து திகிலடைந்து தன் கைகளை கெட்டியாய் பிடித்துக்கொண்டு தமக்கஸ் கொண்டிருந்த எண்ணத்தை தான் அறிந்துக்கொண்டதாக எண்ணினான்.

இந்தப் பாலியனை நாம் என்ன செய்யலாம் என்று அந்த நேரமே அந்த மனிதர்களில் ஒருவன் கேட்டான். இவைகளை கவனித்த தமக்கஸ், அது என் மனசுக்கே தெரியும் என்று தன் இவர்ந்த கண்களை தீத்துவின்பேரில் வைத்து பொல்லாப்புக்கு ஏதுவான புன்சிரிப்புடனே பார்த்தான்.

தன் தலையான நன்றாய் அறிந்துக்கொண்ட கேயாஸ் அவனின் எண்ணத்தைத் தடுக்க வெகு பரிதமாய் என் தமக்கஸ்லை மதுபானத்தைச் சாப்பிடு. அது உனக்கு நன்மையும் சுகமுமாயிருக்கும். இந்தப் பாத்திரத்தைக் கையிற் பிடி, நான் அதின் நிறைய மதுபானத்தை விடுகிறேன் அதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? என்றான்.

தமக்கஸ் அந்த பாத்திரம் நிறைய இருந்த மதுபானத்தை உறிஞ்சி வெட்டிவிட்டு திரும்பவும் அதில் நிறையவிட, வெட்டினான். இது மிகவும் நேர்த்தியான மதுபானம். இது நமக்கு எங்கே கிடைத்தது?

அந்த விளிம்புவகைவிட்டு இது நேற்றையதினம் சமாரிய மதுபான வியாபாரியினிடம் வாங்கினது. இன்றிரவு நாம் செய்யப்போகிற காரியத்திற்காக வேண்டி நம்மில் ஒவ்வொருவனுக்

கும் அகரியம் வேண்டியது என்றான். எனென்றால் வாலிபன் தித்துவைபோல் சண்டை செய்வதில் அவ்வளவு தைரியசாலி வருவருமில்லையென்று உனக்குத்தெரியும். போனவருஷம் நாம் வைரபுத்தப்பட கொஞ்சம் தப்பினது. அந்த இராட்சதனுடைய எத்தியோப்பியனோடு தனிமையாய் சண்டைபோட்ட பாலியன் இவனே, உனக்கும் ஞாபகமிருக்கும், இப்போது நீ என்ன சொல்லுகிறாய் இன்று இராத்திரி எங்களோடு சேர்ந்து ரோமர்களோடு சண்டையிடுவாயா? என்றான்.

அதற்குத் தித்து தான் கொண்டிருந்த கவலையின் பயத்தினால் அப்படியே தான் சண்டைபோடுவேன்! ஆனால் சண்டை போடுவதற்கு வேண்டியது எதுவோ அதை மாத்திரம் எனக்கு கொடுத்துவிடு என்றான்.

நான்காம் தடவையாக கேயாஸ்னினிடம் மதுபானத்திற்காக ஜமக்கஸ் தன் பாத்திரத்தை நீட்டினான். அய்யோ இங்கே விட்டுப்போக எனக்கு மனமிருக்கிறது. அவன் இவிமேல் என்னை விட்டு தப்பிப்போகாமலும் என் காரியத்தில் தோற்றுப்போகாமலும் அவனை இங்கேயே விட்டுவிடுவது கஷ்டமானது என்று மெதுவாய் சொன்னான்.

அதற்கு கேயாஸ் அப்படியல்ல என் நண்பனே என்று தித்துவினுடைய கோளின்பேரில் கைகளைவைத்து எச்சரிக்கை செய்வதுபோல் ஜமக்கஸ்ஸைப் பார்த்து நாம் பத்திரமாய் இருக்கும்படியிருந்தால் அவனை நாம் இவ்விடத்தில் விட்டுப்போகக்கூடாது, இன்று இராத்திரி அவனை என் வசத்தில் வைத்திருக்கிறேன், அவன் என்னை விட்டு தப்பிக்கொள்ள வகையில்லை! என்று சொல்லிக்கொண்டு வெளிச்சமாய் தித்துவை வெகு கோபத்துடன் கண்களை உருட்டிவிழித்துப் பார்த்தான். இன்னும் கேயாஸ் மதுபானம் கொடுத்துக்கொண்டிருக்க ஜமக்கஸ் அதை குடித்துக்கொண்டே சந்தோஷமாயிருக்க தூரம்பித்து, நாம் எடுத்துக்கொண்ட காரியத்தில் நாம் ஜெயமடைந்தால் பையன் என்னவாகும் ஆகட்டும், என்னைவிட்டுத் தப்பிப்போன பெண்பிள்ளையாயிப் பிரிஸ்காவை கண்டுபிடிக்கட்டும். அவள் அவனுடைய தாய்



தந்தையர்களைப்பற்றி அவனுக்கு சொல்லுவாள் இன்று இராத்திரி நாம் ஜெயித்தால் எனக்கு இவன் செய்திருக்கிற நிந்தைக்காக பழி வாங்குவேன்! ஆ, ஆ! ஆனால் வா நாம் வெகு நேரமாய் வெளியே இருந்துவிட்டோம். நாம் இப்போது சந்தேகங்களை நிவர்த்தித்துக்கொள்ள இரண்டு இரண்டு பேராகவும் மூன்று மூன்று பேராகவும் நகரத்திற்குள் பிரவேசிக்கவேண்டும், மேல் சந்தையிலுள்ள லிலேயோப்பாவினுடைய மதுபானக் கடையில் நாமெல்லோரும் சந்திப்போம். அங்கு நாம் பரபரணையும் கதிப்போம் இருட்டு ஆக ஆக மீதிபேர்களும் வந்து சந்திப்பார்கள். எல்லாருக்கும் நிறைய பூராய்குடிக்கக் கொடுக்கலாம், நாம் எல்லாரும் நாமும் பூராய் குடிக்கலாம். மீதியாகிற மதுபானத்தை யுத்த தேவதைக்கு காணிக்கையாக கொடுப்போம் அந்த தேவதையும் மற்ற எல்லா பிடாரிகளும் நமக்கு அனுகூலபுரிவார்களாக.

அவைகள் நமக்குகனிபுரியட்டும்! எபிரேயர்களின் தேவனிடமிருந்து பொக்கிஷங்களைக் கைப்பற்றிக் கொள்ளுகிறது ஒரு பக்திபணிவிடையாயிருக்கிறது; நம்முடைய சொந்தத் தெய்வங்கள் அதிலுள் இலாபம் அடையக்கூடும்! என்று கேஸ்தஸ் என்பவன் சொல்லுனான்.

ஜமக்கஸ் இப்பொழுது எழுந்து நின்று தாங்கள் கையிட்டுக் கொண்டப் பரிசுத்தமில்லாதக் காரியத்தில் தங்களுக்குத் தானே ப்புரியும்படியாக எல்லா அவிசுவாசிகளின் தேவதைகளை வேண்டிக் கொண்டு குடி வெறியோடு மதுபானம் தருகியிலிருந்த மீதி மதுபானத்தைத் தரையிலே ஊற்றினான்.

கிலேயோப்பாவின், மேற்கூரையிலுள்ள மதுபானக்கடையிலிருந்து மனோஹரமான மஞ்சள் நிறமுள்ள பெரிய வெளிச்சமானது இருட்டை நீக்க சக்கதாகப் பிரகாசித்தது. அப்போது தித்து, கேயாஸ், ஜோக்கா என்னும் அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்த இன்னொருவனும் ஆக மூவரும் அவர்களுடைய வஸ்திரங்களைப் பார்த்துக் கொள்ள அதினருகே நின்றார்கள். ஜோக்கா என்பவன் அந்த இடம் அதோ தெரிகிறது, அது எனக்கு நன்றாய்த் தெரியும். நான் இளவனாயிருக்கும்போது அங்கே அநேக இராத்

நிரனோ சந்தோஷமாய்க் கழித்திருக்கிறேன் என்று சொன்னான். அப்படியானால் நீ எருசலேமில் பிறந்தவனா? என்று கேயாஸ் கேட்க: அவன் பிறந்ததும் வளர்ந்ததும் எருசலேமில்தான். என் தகப்பன் ஒரு சட்டான். தேவாலயத்தின் உபயோகத்திற்காக பரிசுத்தமான பாத்திரங்களைச் செய்துக் கொடுத்திருக்கிறான். நமக்கலை நான் முதல் முதல் சந்தித்தது மிலேயோப்பாவினுடைய கடையில்தான். வந்த காட்களில் அவன் அதிக அழகுள்ளவனாயிருந்தான். பின்பு அவனுக்கு ஏதோ சில காரியங்கள் சம்பவித்தது. அது என்னவோ எனக்குத் தெரியாது. ஒருநாளியுடன் வேறொரு குழந்தையையும் எடுத்துக்கொண்டு சலிலேயாவிற்கு ஓடிப்போய்விட்டான். அந்தக் குழந்தை இங்கே இருக்கும் இந்த வாலிபனே. அந்தப் பெண் பிள்ளை இவனை தாமீ என்று அழைக்க நான் கேட்டிருக்கிறேன். அதற்குப் பின்பு அவனைத் தீத்து என்று யாவரும் அழைக்க நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் அவனுடைய உண்மையான நாமதேயம் தாமீ என்பதைப் பற்றி நான் சந்தேகிக்கிறதேயில்லை.

தீத்து இவ்வுகளையெல்லாம் கவனத்தோடு கேட்டுக்கொண்டிருந்தானே தவிர வேறொன்றும் பேசவில்லை. எனென்றால், அந்த மனிதன் இன்னும் அதிகமாய்ப் பேசுவானென்று எதிர் நோக்கிக் கொண்டிருந்தான். கேயாஸ் என்பவன் தன் கதையொன்றைக் காட்டியவனைக் காவல் பண்ணியிருந்தான். அவன் வெகுதூரமாக அந்த இருட்டில் மறைந்திருக்கக் கூடும். ஆனால் அவனை அப்படிச்செய்ய பரிமளமற்றவனாயிருந்தான். அப்படியிருந்ததற்கு அவனுடைய காரணமென்னவெனில், அவன் அங்கே நின்றிருந்தால் தன்னுடைய இரகசியமான பிறப்பு, தாய்தந்தையர் வம்ச வழி ஆகியவற்றின் காரியங்களைச் சற்று விஸ்தாரமாயறியலாமென்று சிந்தித்துக்கொண்டிருந்தான். அவர்களாயாவரும் அதிகமாய்ப் பேசிக்கொள்ளுகிற பரபாசைப் பார்க்கவும் அவன் அதிசயத்தைப் பார்க்கவுமிருந்தான். எல்லாவற்றிற்கும் கடையாக கூடிய சிலர் இவ்வரும் விஷயத்தைக்குறித்து அறிந்துகொள்ளவும் ஆசையாய்ப் பதுங்கிக்கிடக்கிறபோற் காட்டினான்.



நான் இப்போது போலவே, கப்பர்நாகூமுக்கே போகவேண்டும். அப்படி போலவே பெனேனியினிடத்திற்குப் போய் அவன் சொன்னது சரியாய்ப்போயிற்று. அவன் சொன்னது சரி என்று அறிக்கைசெய்ய வேண்டியதாகவரும். பணமும் கோவேறு கழுதையும் போய்விட்டது. அவைகளை எப்படித் திருப்பிக் கொடுப்பேன்? என்னை வந்தாலும், கொஞ்சநேரம் நான் காத்திருப்பேன். ஒருவேளை என் நன்மைக்காக நேரிட்ட இவையெல்லாவற்றினாலும் நன்மை நேரிடினும் நேரிடும் என்று அவன் தனக்குள்ளே சிந்தித்துக்கொண்டிருந்தான்.

இதற்குள்ளாக அவர்களெல்லாரும் மதுபானக் கடைக்குள் நுழைந்துக்கொண்டார்கள். கப்பும்படியான சமயம் வந்து அந்த நேரம் கடந்துப்போய்விட்டது. அதோ பார்! அங்கே பரபாஸ் இருக்கிறான்! அவன் இப்போதுகூட நமக்கலைடனே பேசிக் கொண்டிருக்கிறான் என்று கேயாஸ் மெதுவாகச் சொன்னான்.

இதைக்கேட்ட தீத்து அங்கே நின்ற இராணுவத்தப் பிண்டம் போன்ற ஒரு மனிதனைக் கண்டான். அந்த மனிதனுடைய தைரியத்தைக் காட்டும் குறிகளும், வேகமும் பிரகாசமுமுள்ளக் கண்களும் நமக்கலை-டைய உப்பிய கொலோபாதகமான முகத்திற்கு நேர் விரோதமானதாக காணப்பட்டன. தீத்து பரபாஸைப் பார்த்தும் தான் அவனிடத்திற்போய் அவனைப் பார்க்க மனதுண்டானது. ஆகவே அவன் அந்த ஜனக்கூட்டத்தில் வழிபண்ணிக் கொண்டு என்ன பேசிக்கொள்ளுகிறார்களோ என்று கேட்கும்படியான அவ்வளவு சமீபத்திற்போனான். அவர்கள் பேசிக்கொண்டிருந்தவைகள்: அதனிருக்கும் இடத்திலிருந்து ஒருதரம் கீழே தள்ளிவிடப்படுமானால் மறுதரம் அதை அங்கே வைக்கும்படியான் துணியான். அவன் நம்முடைய தேவனுடைய ஆலயத்தை ரோமர் அதிகாரத்தைக் காட்டும் அடையாளமாகிய அதினால் வெகு நாளாக அவமதித்து நடந்துவந்தான். அது உடைப்பட்டு, மறுபடியும் அதை ஒன்றுப்போல் சேர்க்கக்கூடாத அவ்வளவு சிறிய துண்டுகளாக உடைக்கப்பட்டுப்போகும். நானே தினந்தோறும் அந்த மனுஷனின் முற்றத்தில் எதிர்நிற்பேன். பிலாத்தின் உள்ளுக்குள்

ளே மிக்கப் பயங்காரியென்று ரான் உனக்குச் சொல்லுகிறேன். அவன் நமக்குப் பயப்படுகிறான். கொரியாவிலே அவன் நமக்கு அடங்கிப்போகவில்லையா? கொந்தராகோக்கு முன்பு அவன் கோவிலுக்குள்ளிருந்த பரிசுத்த சொத்துக்களைத் தன் உபயோகத்திற்காக எடுத்துக்கொள்ளுகிறதற்கு இருந்த சமயத்திலும் நமக்கு அடங்கவில்லையா? என்று பரபாஸ் மெல்லிய குரலாய் அவனுடைய மனச்சாட்சியை யோசனையுடன் தொட்டான்.

அவன் மறுபடி சொல்லத் தொடங்குவதற்குள் முப்பது போட்டிகளில், நீ உண்மையாய்ச் சொல்லுகிறாய். நாம் போய் அந்தச் சபிக்கப்பட்ட மிலிரைக்கும் அவன் இடத்திலிருந்து வெளித்தள்ளுவோமென்றார்கள்! மாற். 20. 4

எல்லாரும் மகமாத்தராய் எகோபித்து தெருவின் பக்கமாய்ப் போய்த் தாக்கினார்கள். பரபாஸ்விட்ட இருந்தபடி வழி நெடுக நீதிமன்றத்துடன் அந்தச் சமாசாரத்தை யோசனை கூட்டங்களிருக்கப்பட்டதைக் கண்டான்.

அவர்களுடைய முக்கியமும் உறுதிப்பாடுமான முகங்கள், அந்தக் கூட்டத்தின் சப்தங்களின் தொனியாகிய மேலாக அப்போதிருந்தாவே தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்தைக்கொண்டிருக்கும் நிலைமைகளின் வெளிப்பாடுகளிலே தெரிவதையும் கண்டான்.

அவர்கள் தங்களுடைய நிலைமை இன்னுமொன்று அறிந்தவுடனே தாழ்ந்த முரட்டுச் சத்தமுள்ள முணுமுணுப்பு அந்தக் கூட்டத்திற் பரவியது. பரபாஸ் நிகானித்து, முக்கியமான விலாசத்தைகளால் அவர்கள் கொண்டு செலுத்தவேண்டிய முறையை நிவர்த்திகளோ யெல்லாம் அவர்களுக்குச் சொன்னான். பின்பு தேவாலயத்தை நோக்கி இருட்டிலேயே செல்ல ஆரம்பித்தான்.

அவர்கள் அவ்விதமாக அதிகமாய் செல்லாதற்குள் கேடங்களின் சப்தம் அவர்களுக்கெட்டிற்று. "கேள்வியா? எங்கே யிருந்து வருகிறதாம்? மேலேயிருக்கலாம்? சத்துருக்களா?" என்ற உரத்த சத்தமாய் அவர்களில் ஒருவன் கேட்டான்.



அதற்கு பரபாஸ்-க்குப் பின் நிதானமுடன் முன்னுக்குத் தள்ளிக்கொண்டுபோன கேயாஸ் "மரணமும் குழப்பமு" மென்றும் அது உரோமர்களுடைய காவல் என்றும் சொன்னான்.

பின்னும் பரபாஸ் மனிதர்களே முன்னுக்குப் போங்கள்! ரோமனைப் பிடியுங்கள். அவர்கள் ஒரு கைபிடி அல்லது கொஞ்சம் பேர்தானிருக்கிறார்கள் என்று கத்தினான்.

இதற்குப்பின் அந்தக் கூட்டமானது பெரிய ஆரவாரத்தோடு முன்னுக்கு தாக்கிச்சென்று ஒரு நிமிஷத்திற்குள் ஒரு மூர்க்கமான சண்டை சத்தங்கேட்டது. பட்டயங்களின் ஓசையும், கேடகங்களின் ஓசையும், கொல்லென்ற சத்தமும், காலின் கீழ்ப்பட்டு காயப்பட்டவர்களின் வேதனை சத்தமும் அங்கே மும்மூரமாய் அதிகரித்தன. அந்த மும்மூரம் நடக்குமிடத்தில் பரபாஸ் போய்நின்று முன்னுக்குச்சென்று அக்கூட்டத்திற் பாய்ந்து ஒரு பைத்தியக்காரனைப்போல சண்டைபண்ணினான். அதிக நேரமாவதற்கு முந்தி கூட்டமானது கலைந்ததுபோவதுபோலிருந்தது.

தமக்கல்ல நாம் காட்டிக் கொடுக்கப்பட்டிப்போனோம் என்று தியாட்டனே காதிற்கொசகொசென்று சொன்னான். நாம் தனிதாக ஓடிவிடுவோமாக; நாம் இன்றிரவு ஒன்றையும் செய்யக்கூடாதவர்களாயப் போனோம். உரோமர்கள் தேனீக்களைப் பார்க்க அதிக பெருங்கூட்டமாயிருக்கிறார்கள், என்று சொல்லி மற்றவர்கள் பதிற்சொல்லுவதற்கு முந்தி சற்றுங்காத்திராமல் அக்கூட்டத்தின் வழியே சரேலென்று பாய்ந்து ஓடிவிட்டான்.

தகுந்தனமே முன் பக்தந்திவின்று ஒரு பெருங்கூச்சல் கிளம்பிற்று. இளம்பிய அக்கூச்சலானது நகரத்திற்குச் சமீபமாயிருக்கும் யுத்த ஆயுதசாலையிலிருந்து உரோமர்கள் நம்மேல் வந்துவிட்டார்கள்.. பரபாஸ் பிடிபட்டான், உங்கள் உயிரைக் காபபாற்றிக்கொள்ள ஓடிப்போங்கள் என்றெழுந்தது.

கூட்டமானது பெருங்குழப்பங் கொண்டதாயிற்று. அவனவன் தான் தான் தப்புமவித மெவ்விதமென வெண்ணி தத்தம் பத்திரத்தையே நாடினார்கள். தித்து மற்றவர்களோடு வேகமாய் அழைத்துப்பட்டு தான் செய்த தென்னவென்று தனக்கே தெரியா

மல் அந்த இருட்டில் விழுந்தடித்து ஒரு ஒடுக்கமான தெருவின் வழியாய் பாய்ந்துச்சென்றான். சற்று நேரமானபின் தன்னை ஒருவரும் துரத்தாதது கண்டு கொஞ்சம் மூச்சுவிட்டு வாங்கிச் சமைப்படுத்திக்கொண்டு, நிதானித்து நின்று கூட்டத்தின் கொடிய இறைச்சலையும், துரத்திக்கொண்டு வந்த யுத்தவீரர்களுடைய சப்தத்தையும் வரவர அதிக தூரமாய்க் கேட்பதையும் கவனமாய்க்கேட்டான்.

அப்போதவனுடைய இருதயம் வெகு தைரியமுள்ளதாயும் நம்பிக்கை கொண்டதாயும் முடிந்தது. இப்போது நான் தப்பினேன்; பத்திரமாயிருக்கிறேனென்றெண்ணினான். காலவசமாகும் அக்கூட்டத்தாரின் பார்வைக்கு மாத்திரம் தப்பியிருக்கவேண்டும், அப்பொழுது நகரத்திற்கு வெளியே தான் சுலபமாய் போகக்கூடும் என்றும், பெலேனியிடம்சென்று நடந்த சம்பவங்களனைத்தையும் அறிக்கை செய்வேன், அவன் அப்போதென்னை நம்புவானென்றும் எண்ணிக்கொண்டான்.

அந்த இருட்டில், தனிமையாய் ஒரு நேசித்தலுமில்லாமல் அவன் அங்கேநின்றபோது, கப்பர்நாகூமிலிருந்த அமைதியுள்ள தன் வீட்டின் நினைவு அவனுக்குமிக இன்பகரமாகயிருந்தது. அதில் அவன் தரித்திருந்த சீரான உட்சட்டையான துவளவு ஈரமும் உவர்மையுமாயிருந்தது! இப்போது அவன் தன்தலையில் பரபரவென்றேறும் கொடியதலை நோயுமிருப்பதாக உணர்ந்தான். தான் காயம்பட்டதாக நினைத்தான். ஈரக்கிரவத்தடன் தன் தலையிலடர்ந்த கட்டை சுருட்டைமயிரைத் தடவி பார்த்தபோது ஏராளமாய் இரத்தம் பெருகிக் கொண்டிருப்பதாக ஒரு ஆழ்ந்த காயத்தைக் கண்டான். அப்போதவன் தனக்குத் தானே இது என்ன விபரீதம்! முன் நடந்த சண்டையில் எனக்குக் காயம்பட்டதைக் குறித்து நினைக்கவேயில்லை யென்று சொல்லிக் கொண்டான்.

உடனே அவன் தனக்கு ஒருவித ஆபாசமிருப்பதாயும் தன்தலை இலேசாயிருப்பதாயுங் கண்டான். எனக்கு சகாயமில்லாவிட்டால் நான் தெருவிலே அழிந்துப் போவேனென்றும் எண்ணினான்.



ஈரக்கிரதையாயும் தன்னுற் கூடிய வினாவாயும் பக்கசுவற்றைப் பிடித்துக் கொண்டு தெருவழியாக முன்னேறிச் சென்றான். அப்போது சந்திரனுதயமாகிறதாயிருந்தது. அதன் மங்கலான வெளிச்சத்தில் தான் ஒரு திறப்பான மைதானத்திற்குச் செல்லுவதாகக் கண்டான். அதற்கப்பால் எரிகிற நெருப்பு வெளிச்சமும் அதினருகே அசைகின்ற இருண்ட உருவங்கள் இருப்பதாகவும் கண்டான்.

தீத்து தனக்கு சகாயம் வெகுசாயுங்கிட்டி நெருங்கி இருக்கிறதென்கிற எண்ணத்திலும் தனக்கு மோசம்வரும் என்பதை மறந்து போனவனுய்ச் சுறுசுறுப்புச் சத்தமிட்டுக்கொண்டு முன்னுக்கு ஓடினான். அடுத்த விநாடியிற் பாதி ஆயாசங்கொண்டு தரையோடு தரையாய் விழுந்து பெலங்கெட்டவனுய் உதவிக்காக உரக்கக் கத்தினான்.

அந்த நெருப்பினைச்சுழந்து கூடியிருந்தவர்களாகிய உரோம போர்சேவகர்களிலொருவன் தீத்து போட்ட சத்தத்தைக்கேட்டு, அது என்ன சத்தமென்று கேட்டான்.

வேறொருவன் நான் ஒன்றும் அப்படிக் கேட்கவில்லையே. நற்சத்தம் எம்மாதிரியாயிருந்தென்று பதிற் கேட்டான்.

அதற்கு அவன் அது ஒரு அழுகைசத்தமாயிருந்தது. வெகு சமீபமாய்க் கேட்டது. ஆனால் அது என்ன வென்று எனக்குத் தெரியவில்லை என்றான்.

அப்போது தூற்றுக்கதிபதி, அது கலகக்காரர்களுடைய அமளியாக்கும். மேழேயுள்ள பட்டணத்தில் இன்னும் அவர்களைத்தூண்டியடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அநேகரைச் சிறைப்படுத்திக்கொண்டார்கள். அந்தக்கலகக்காரர்களில் விசேஷித்த இரகசியகாரனுகிய பரபாசையும் சிறையாக்கிக்கொண்டார்கள். பாஸ்கா பண்டிகை வாரத்திற்கென்று வெகு தேர்த்தியான வேடிக்கையாக அவர்களை இருக்கப்பண்ணுவோம் என்று சொன்னான்.

அதற்கவன் நீ என்ன நினைக்கிறாய் என்றான். பின்னும் அவன்

என் சிலுவைகள் ஸ்திரப்படுத்தப் படுவது நிச்சயமாயிருக்கும். இதேவிதமாகத்தான் பிலாத்து இந்தமகா கொடிய ஜனங்களைக் கீழ்ப்படுத்த எற்பாடு செய்திருக்கிறான். வேறே இலெகியோனுக் கதிகமானவர்களைக் கிரமப்படுத்தினவுக்கு அதிகம் செய்யப்படுவது, பண்டிகை காலத்தில் நகரத்திற்குள் வருகிற ஜனங்களுக்கு வெகு சுகமானக் காக்ஷியாயிருக்குமென்றான்.

உஷ் யேசாதிரு! நான் அந்தச் சத்தத்தைத் திரும்பவுங்கேட்டேன் என்று சொல்லி அங்கிருந்த நெருப்பில் ஒரு தீவர்த்தியைக் கொளுத்திக்கொண்டி அக்கம் பக்கங்களில் அதிவிரைவாய்ப்போய் அவசரத்துடன் தேட ஆரம்பித்தான்; தோழனே! இதோ இங்கே காயப்பட்ட ஒரு மனிதன் விழுந்துக்கிடக்கிறான். அவனைத் தூக்கிக்கொண்டுவா ஒத்தாசையாக ஒருவனை கொடுவென்றான்.

இவ்விதமாக அவர்களிருவரும் பக்கம்பக்கமாய் நின்று அவனை நெருப்பண்டைக்கொண்டு வந்து நெருப்பு வெளிச்சத்தில் மேலோட்டமாய் அவனை இன்னனென்று பார்க்க ஆரம்பித்தார்கள்.

இருவரிலொருவன், அவனைப்பற்றி நீ என்ன அறிந்துக் கொண்டாயென்று கேட்க, மற்றவன் அவனுடைய உடைகளைப் பார்த்தால் அவன் யூதனுயிருக்கிறான். கலகக்காரர்களிலொருவன் அவனை நம்மிடமிருந்து தப்பித்துக் கொள்ளக்கூடாதென்று நினைத்து இவ்வாறு செய்து விட்டார்கள் என, நூற்றுக்கதிபதி, அவனுடைய தோள் உட்சட்டையிலின்று ஒரு துண்டு கிழித்து அவனின் தலையைக்கட்டி. அவனுக்குக் கொடியக் காயம்பட்டிருக்கிறதை. அதோ அந்தத்திராட்சாரசத்தை என்னண்டைக் கொடு; அதிற்கொஞ்சம் நான் அவன் உட்கொள்ள அவனுக்குக் கொடுப்பேன் என்றான்.

இதைப்பார்த்துக் கொண்டி பக்கத்தில் நின்ற ஒருவன், மாற்குஸ் நீ மெய்யாகவே ஸ்திரியைப்போன்ற அழகுள்ளவன் என்று அறிவித்தான்.

அப்போதந்த மாற்குஸ் என்று பேர்கொண்டவன், நான் அவனை பஸ்காபண்டிகை வார்த்திற்காகப் பத்திரப்படுத்துகிறேனென்று மிருகத்தைப்போல சிரித்து, அப்படிப்பட்டவன் தன் தலை



யிற்பட்டக் காயத்தோடி இறப்பது மிகவும் கலமாயிருக்குமென்று சொன்னான்!

தூரத்து, நெருப்பின் வெளிச்சத்திலுமைம், தான் உட்கொண்டிராட்சரசத்தினாலும் அவன்பட்டக் கொடியகாயத்தைக் கட்டின கட்டின் உதவியினால் மயக்கந்தெளிந்து தேர்ச்சியடைந்தான். அவன் தனகண்களை விழித்துக் கொண்டிருப்பதைக்கண்ட மாற்குஸ்தி பதியானவன், தித்துவைப் பார்த்து, நீ எழுந்து நிற்கக்கூடுமா வென்று கேட்டான்.

அதற்கு தித்து எழுந்து நின்று கொஞ்சங்குறைய ஒருவாறு சரியாயிருக்கிறதென்றான்.

அதற்கவன் நீ அந்தச் சண்டையிலிருந்தாயா? என்று கேட்டான்.

தித்து: நான் இருந்தேன். ஆனால் என்று மெல்லியக்குரலோடு சொல்லுவதற்குள், கேவல மிருகத்தன்மையுள்ள அவன் நெற்சாலைக்கு அவனைக் கொண்டுபோ என்று உடனே உத்திரவுக் கொடித்தான். தித்து தன் நியாயத்தைக்காட்டி போராடுவதற்குள்ளாகவே அந்த இரண்டியுத்தவீரர்களால் அவனைத் தங்களிருவருக்கு மிடையில் நடத்திக்கொண்டுபோய் விடப்பட்டான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவனை ஒரு குளிர்ச்சியும் சரமுமான இடங்கிற்குள் தள்ளிக்கொண்டுபோய் விட்டதைக் கண்டான். இங்கே அவ்வளவுக்குள் வதங்கி வாடியிருந்த லவக் கோல்போரின்மேற் சாய்ந்துக்கிடந்தான். அவன் அதிகம் பயந்திருந்தும், அவன் தலையில் நோய் இருந்தும் அவன் அயர்ந்த நினைத்திரை செய்யலாயினான்.

---

# இருபத்தோராம் அதிகாரம்

தீர்க்க தான் போடப்பட்டிருந்த அறை இருட்டறையில் ஒரு வாரத்திற்கு மேலாக பிறரது ஒரு காலியில் ஆவள் தன் சகாயில்லாத சித்திலைமையிலிருந்தெழுந்தபோது வாசற்படியில் சோபயுத்த வீரர்களிருந்தார்கள். இவர்கள் அவளை வெளியே வரவழைத்து தேசாதிபதியின் அரண்மனை சேருமன்னார்களும் தெருக்களின் வழியாய் மௌனமாயும் துரிதமாயும், அவளை கூட்டிக்கொண்டு போனார்கள். அதிக பலமாய்க் காவற்பண்ணப்பட்டிருந்த பிரதான வாசல்வழியாய்க் கடந்துபோகிறபோது அவர்கள் தாங்கள் "பிரிற்ஸோரியம்" அல்லது நீர்ப்பதெய்யும் தியாயாஸ்தலமண்டபத்திலிருப்பதாக தங்களைக் கண்டார்கள்.

தீர்க்க அரிதாய் சுற்றமுற்றாய்ப் பார்த்து பின்பு தன் தலையைத் தன் மார்பின்மேற் சாய்த்துக்கொண்டான். அவன் பார்த்தக் கொஞ்ச தூரத்தில் அந்தப்பெரிய மண்டபமானது ஜனங்களால் நிறைந்திருப்பதையும் அதிக உயரமான விடத்தில் பிலேற் கம்பீரமாய் உட்கார்ந்திருக்க ஒரு மனிதனையும் அவனை உடனே தேசாதிபதியாயிய பொந்தியு பிலாத்து என்றும் கண்டு அறிந்துக் கொண்டான்.

அவன் தன் மனதிற்கண்டான சூழ்ப்பமானவும் பயங்காமான வுமான எண்ணங்களின் காரணமாய் சற்று நேரமாக தன்னைச் சுற்றியிருந்தவைகளை மறந்துவிட்டான்.

அவனைச் சுற்றியுண்டான அடக்கமும் மூர்க்கமுமான முகமுகங்களும் சத்தத்திலுமை மறைபடியும் விழித்து மேலே பார்த்த போது பரபாஸையுடைய காம்பீரமான உருவத்தைப் பார்த்தான். அவன் நான்கு யுத்தவீரர்களால் பலமாய் விலங்கிடப்பட்டு காவற்பண்ணப்பட்டவனாய் தியாயாதிபதியின் ஊசனத்திற்கு முன்பாக யாவரும் அவனைப் பார்க்கும்படியான ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் நிறுத்தப்பட்டிருந்தான்.



தியாயாதிபதி அவனைப்பார்த்து, நீ மார்க்கு மாதத்திற்குச் சரியான ஆகார்மாதம் 27-ம் தேதி சாயங்காலம் நாஜாரேத்தாருக்கு விரோதமாய் கலகம் உண்டி பண்ணினதாகவும், தன் கடமைகளைச் சட்டப்பிரகாரம் செய்துவரும் யுத்தக்காவற்காரர்களைச் சேர்ந்த போர்சேவகர்களை கடினமாய் உன் கொத்தக் கைகளினாலே கொன்றதினால் குற்றஞ்செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறாய், உனக்காக நீ சொல்லிக்கொள்ளக் கூடிய தேதாலது உண்டா? என்றான்.

அதற்கு பரபாஸ் சற்றேனும் பின்னிடையாதக் கண்களோடு தேசாதிபதியைப் பார்த்து; என்மேல் குற்றஞ் சாட்டுபவர்கள்யார்? அவர்கள் முன்னால் நிற்கட்டும் என்றான்.

அப்போது பிலாத்து; சாக்ஷிகளைக் கொண்டுவாருங்கள் என்று கருக்கமாய்ச் சொன்னான். நிலமைதார் முன்னுக்கு வந்து நின்றார்கள் அவர்களில் தெஸ்தஸ் ஒருவனுமிருந்ததைக்கண்டு நீத்து தூச்சரியப்பட்டான். சாக்ஷியும் ஏனேரோடொன்று ஒத்து இருந்தது. எப்படியென்றால் மேற்கண்ட இரவில் கைதியாயுள்ள பாஜாஸ்தருக்கு விரோதமாய் மிகவும் கலகம் செய்தானென்றும் சண்டையில் இவ்வளவென்று கணக்கு தெரியாதவிதமாய் உரோமர்கள் கொல்லப்பட்டுப் போனதற்கு அவனானே உத்திரவாதியுமாயிருந்தானென்றும் எற்பட்டது.

இதைச் சாக்ஷிகளுடைய வாக்கு மூலத்துக்கு நீ என்ன சொல்லுகிறாய்? என்றும் நீ செய்திருக்கிற குற்றத்திற் சேற்ற தண்டனையை கொஞ்சதேரத்திற்குள் நான் உனக்கு விதிக்கக் கூடாதென்பதற்கு யாதாம் காரணம் உண்டா? என்றும் பிலாத்து அவனைக் கேட்டான்.

என்பேரில் இந்தக்குற்றங்களைச் சாட்டும் சாக்ஷிகள் அந்த ஆகார்மாதம் 27ம்தேதி இரவில் என்ன செய்துக் கொண்டிருந்தார்கள்? என்று பரபாஸ் கேளிக்கையாக சிரித்துக் கொண்டு கேட்டான்.

அது உனக்கு கேடுத்ததல்ல, நீ எதாவது பேசவேண்டுமானால் உனக்காகமாத்திரம் நீ இப்போது பேசலாம்; இல்லாவானால், நான்

உனக்குத் தீர்ப்பு விதிக்கும்போது பேசாமலிரு என்று பிலாத்து கோபத்துடன் உதாசீனம் கொடுத்தான்.

அதற்கு பரபாஸ் தன்னுடைய விஷயம் விசாரணைக்கு வராமலிருக்கையிற்றானிருந்தது யாதெனில், நான் இதைச் சொல்லுவேன்: யகோவாவின் ஆலயத்திலிருந்து அந்தப்பிரகாரத்தைக் கழுகுப் பெயர்த்துத் தள்ளவேண்டுமென்றிருந்த எங்கள் எண்ணம் நிறைவேறுமற்போனதைக் குறித்து மாத்திரம் நான் அதிகவிசனப்படுகிறேன். மேலும் பரிசுத்த ரகசியமாய் வருஷலேமை அசுசிப் படுத்துகிற ரோமர்கள் ஓரேகழுகினை யுடையவர்களாயிருந்தால், நான் வானபரியந்தம் எட்டுகிற கழுகர்களுடைய அருவருப்பை இத்தலை உலகத்திருந்து என் பட்டயத்திறல் வெட்டித்தள்ளி நீக்குவேன் என்றான்.

அதோமனை கைதுசெய்ய வேண்டுமென்னும் வார்த்தைகளானது அங்கு வந்திருந்த ரோமர்களுக்கு மனவருத்தத்தையும், யூதர்களுக்குச் சந்தோஷத்தையும் உண்டுபண்ணிற்று. பிலாத்துவின் முகம் வெளுப்புதட்டி, கோபத்தினால் வரும் தொனியானது நடுங்கிக் கொண்டிருக்கையில்:—

உன் சொந்தவாயிதழ்ந் தூக்கினே தீர்ப்புக்குட்பட்டாய்; நான் உனக்கு ஆக்கினை தீர்ப்பு விதிக்கவேண்டியது மாத்திரம் மீதியாயிருக்கிறது. (அப்பிரல் மாதத்திற்குச் சரியான) அடுத்த நிசான் மாதம் 15 ம் தேதி வெள்ளிக்கிழமையன்று நீ சிலுவையின் மேல் ஆணிகளால் கடாயபட்டு உன் உயிர்போகும் மட்டும் அதின் மேலேயே இருக்கவேண்டியது. என் முன்னின்று கொண்டு போகப்படும்போது சபுக்கிதல் அடிக்கப்படுவாய். மறுபடியும் சிலுவையிலறையப்படும் முன்சபுக்கிதல் அடிக்கப்படுவாய்" என்னை சொல்லி காவலாளிகளைப் பார்த்து கைதியைக் கொண்டு போகக் கட்டளையிட்டான்.

இவ்விதமாக நடந்தேறிய பயங்கரமான வார்த்தைகளினால் நித்ய ஜீவாதிபதியும் விடாய்ப்புவிருத்தியடைந்திருந்தான்; ஆனால் பரபாஸோ, தனக்காய் ஜீவனுள்ள கர்த்தர் அற்புதமாய் நித்திய மரணத்தினின்றும் வெளி வந்ததாகத் தன்னை சுவிஷேஷ நடத்த



ஆன்றிரியு போட்டிருந்த மார்கவசத்தோடு தேசாதிபதியின் சமுகத்தினின்று நடந்துபோனான்.

சாம்பல் புதன் கிழமை கலகக்காரர்களுக்குரிய சாசகிளை தூராயும்படியாக விசாரணைத் தொடங்கிற்று. பரபரவை கையாக்கினின்று பின்பு ஓட்டப்பிடித்த இவர்கள் போர்வீரர்கள் பிடித்தார்கள். இவர்களுக்குரிய விசாரணையை பிலாத்து வெகுசீக்கிரமாய் செய்முடித்தான். அவர்களோவ்வொருவரையும் சவுக்கினால் தொழுமாத்தில் ஒரு இரவுமுழுதும் மாட்டியிருக்கச் செய்தான். அதுதான் தொழுமரமான சிலையாக்கப்பட்ட இரண்டாவிகளின் கால், சிலமயம் கைகளை ஆணியறைவதை மாட்டுவதாக அவர்களுக்கு அமைய செய்யப்பட்டுள்ள மரமாம்.

விதிக்கப்பட்ட படியே லகுகிளோ தண்டிக்கும் படியாகக் கொண்டபோன பிறகு, பிலாத்து தன்னைச் சூழ்ந்திருந்த உத்தியோகஸ்தர்களிடத்தில் சில நிமிஷங்கள் ஆலோசித்தான். பின்பு அவன் மற்ற கைதிகளை முன்னே கொண்டுவந்து நிறுத்துங்களென்று அதிகாரத்தமாய்ச் சொன்னான்.

ஏரூயூசனத்திற்கு முன் இருந்த விடத்திற்கு நீக்கி மூட்டுக்கணமாய் தள்ளிக்கொண்டு வரப்பட்டான். அப்போது அவன் தன் கண்களை ஏறெடித்தபோது, தன் பக்கத்தில் தனக்கு ரொம்ப பழக்கமான உருவங்கொண்ட மனிதர்கள் நிற்கிறதைக் கண்டான். பிறகு இருவரும் ஆச்சரியத்தோடு ஒருவரை யொருவர் பார்த்தார்கள். அப்போது அமைக்கள் புன்சிரிப்பு சிரித்தான். அந்தச் சிரிப்பு பார்க்கிறதற்கு நிமையுள்ளதாயிருந்தது.

கைதிகளே, உங்கள்மேல், வழிபறிக்கொள்ளை, கொலை, கலகம் என முன்னுரிமைக் குற்றங்கள் சுமத்தப்படுகிறது. உங்களுக்கு விரோதமாயுள்ள சாசுதிகள் உங்களைப்பற்றிச் சொல்லவேண்டியதைச் சொல்லட்டும்; பின்பு நீங்கள் உங்களுக்காகப் பேசிக்கொள்ளலாம் என்று பிலாத்து அவர்களுக்குச் சொன்னான்.

முதல் சாசுதியானவன், அமைக்கள் அதிகமாய்ப் புகழ்ந்து பேசிய மதபரனம் விற்ற சமாரிய மதபரன வியாபாரியேயாம், அவன் தான் சமாரியாவிலிருந்து எருசலேமுக்கு பிரயாணஞ்

செய்துக்கொண்டு போகையில் வள்ளர்கள் தன்னை வந்து எதிர்த்து, தான் எருசலேமிலுள்ள சகோதரர்களுக்குக் கொண்டுபோன சர்வதேசத்தை யுண்டாக்கும் மறுபாஷைத்தையுடைய தருத்தினையும், சொத்துக்களையும், உடுப்புகளையும் பறித்துக்கொண்டார்கள். பின்னும் அவர்கள் அவனை அடித்து பலவீனமான கேடான கோணிகளுக்குள்ளே போட்டு, வழியோரத்தில் பாதி உயிரோடு விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இவ்விதமாய் அவன் கிடந்துக் கொண்டிருக்கையில் அவ்வழியாய் பிரயாணஞ் செய்துக்கொண்டு போன தன்னுடைய சொந்த தேசத்தாருள் ஒருவனைப் பார்த்து கப்புமிக் கப்பட்டு கவலையோடு காப்பற்றப்பட்டான். தன் மதிபாஷைக் கடையில் வந்த இந்தக் கூட்டத்தார்தான் தன்னை அவ்வளவு கொடூரமாய் எதிர்த்தவர்கள் என்கிறதாகச் சாட்சிசொன்னான்.

அடுத்த சாயுங்காலம் கல்கம் நடந்த அன்னியு கலீபாப்பாவி னுடைய மறுபாஷைக்கடையில் கைதிகளைக் கண்டதாகவும், பின்பு அவர்கள் சோமக்காவுக்காரர்களோடு செய்த சண்டையில் பரபாஷை இருக்கக் கண்டதாகவும் மறுபடியாய் சாதித்துசொன்னான்.

தீர்க்கதரிசி பிடித்த தூற்றுக்குதிரையானவன், ஊரான் அவனைப்பிடித்த சந்தர்ப்பங்களையெல்லாம் சொல்லி, அந்தக்கையினிலே தானே உண்டான கலகத்தில் கம்பத்தப்பட்டதாக நினைத்துக் கொண்டானென்றும் சொன்னான்.

கடைசியாக முகாமுக்கு கொண்டுவரப்பட்ட சாயுங்காலஸ் எனபவனோ, அவன் தான் சாயுங்காலம்போது அமைக்கஸ் தன்னைப் பார்க்கவொட்டாமல் பக்குவமாய் நின்றான். தீர்த்திருந்து செய்யப்பட்ட இராஜ காரியாலயின்மேல் உட்கார்ந்திருக்க அவன் அவனை மரக்கப்பார்வையாய்ப் பார்த்தான்.

கைதியானகுறித்து நீ என்ன சொல்லப்போகிறாய்? என்று பிலாத்து கேள்வியைப் பார்த்துக் கேட்டான்.

அதற்கு கேள்வியை தானையைப் பார்த்துக்கொண்டே மகதி களின் பக்கத்தில் நின்றும் சாயுங்காரர்களைக் கலந்துகொண்டு பார்த்தான். அடுக்கடுக்கு குணங்களை கொலைபாதகம் பரிகாரையாய்ப்



பார்க்கிறதாக அவன் உளறுவதாய்த் தோன்றிற்று. கடைசியாக அவன் தாழ்ந்த குரலோடு பேசத்தொடங்கினான்:—

மேன்மைதங்கிய பிரபுவே, நடந்ததை யெல்லாம் சொல்லி விடும் பஸ்காவில் நான் கண்டனைக்குத் தப்புவதாக வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. அது அப்படித்தானே? என்றான்.

அதற்கு பிலாத்து, உனக்குச் சொல்லப்பட்டபடியே நீ தப்புவிக்கப்படுவாய். நீ சொல்லுவதைச் சொல்லென்று கோபத்தோடே சொன்னான்.

பின்பு கேள்வஸ் கல்லது, அதோ இருக்கிற ரூமக்கஸ் எங்கள் கூட்டத்திற்குத் தலைவன். மொத்தத்தில் நாங்கள் எல்லாம் இருபதுபேர்கள். ஆனால் அதில் பன்னிரண்டுபேர் மாத்திரம் சாரியங்கள் யாவற்றையும் கொண்டு செலுத்துகிறவர்கள். எங்கள் முக்கிய ஸ்தானம் கப்பர்நாகும். ஆனால் அநேகமாய் எங்கள் வேலைகளெல்லாம் எருசலேமுக்குப்போகும் பெரிய மார்க்கத்தில் நடந்தேறுகிறது. அங்கே தான் எங்களுக்கு எப்போதும் எடுக்கக்கூடியவளவு கொள்ளை அகப்படும். நாங்கள் அதிகமாய்க் கொள்ளையடிப்பதெல்லாம் அங்கேதான். அபிடியாக விருத்தக் காலத்தில் எங்களுக்கு யுத்தமாய்த் தோன்றியபடி கைதிகளை அநேகரை கொலைசெய்து விட்டோம். அநேகரை காங்கள் கயாதினமாய்ப் போகவிட்டோம். ஆனால் யாராவது சத்தம் அல்லது தொந்தரவு செய்தால் தாரதமாகவும் சத்தங்காட்டாமலும் கூடியபட்டும் கொலைசெய்யும்படியாக எங்கள் தலைவன் எங்களுக்கு உத்திரவு செய்தார் என்றான்.

அதற்குப் பிலாத்து, அப்படியாக எத்தனைப்பேர்களை நீங்கள் கொலை செய்திர்கள்? என்று கேட்டான்.

அதற்கவன் தன் தலையைச் சொரிந்துக்கொண்டே யோசனை செய்து, மேன்மைதங்கிய பிரபுவே, எனக்குச் சரியாய்த் தெரியாது. நாங்கள் அவர்களை எண்ணவில்லை என்று மறுமொழி சொன்னான்.

இந்த வாலிபன் அந்தக் கூட்டத்திற்சேர்ந்த ஒரு அவயவமா?

யென்று தன் கையை நீட்டி நீத்துலைக் காட்டி பிலாத்து கேட்டான்;

அதற்கவன் மேன்மைதங்கிய பிரபுவே, கொஞ்சகாலமாகத் தான், எனக்கவன் தெரியும், அவன் பெயர் நீத்து, அவன் எங்கள் தலையனுடைய மகன் என்று இருந்தோம். ஆனால் அவனை அவனுடைய குழந்தைப் பருவத்தில் களவாடப்பட்டவனாக தெரிந்துக் கொண்டோம். ஆகையிலுலே அவன் தமக்கஸ்-க்கு உறவினன் அல்ல என்று ஆலோசிக்கப்பட்டது என்றான்.

அதற்கு பிலாத்து, உங்கள் கூட்டத்தின் அலுவலாக அவன் நீ சொல்லியபடி உங்கள் கொள்ளைக்கும், கொலைக்கும் பங்காளியாயிருந்தானோ? என்று கேட்க.

சற்று நிதானித்து பிறகு அவன் இந்த வாலிபன் மிகவும் நல்ல மனதுள்ளவன். அவனை யோக்கியனாகவே விட்டிருக்கும் பக்ஷத்தில் அவன் மகாயோக்கியனாயிருந்திருப்பான். ஆனால் அவன் தைரியசாலி, ஒரு சண்டையில் தயாரான கைகாரனாயிருந்தான் என்று கெஸ்தஸ் சொன்னான்.

அதிலுல் அவன் நீ சொல்லிவந்த விஷயத்தில் அவனும் பங்காளியென்ற கருத்தை கொள்ளுகிறாயா? யென்று பிலாத்து அவனைக் கேட்க.

கெஸ்தஸ், அவன் ஒரு எத்தியோப்பியனைக் கொன்றது நிஜந்தான். ஆனால் அது ஒரு நியாயமான சண்டையில் அப்படி நடந்தது. இல்லாவிட்டால் அவன் இவனைக் கொன்றுவிட்டிருந்திருப்பான் என்று சொன்னான்.

அப்போது பிலாத்து, உங்களுக்கு விரோதமாய் இவர்கள் சொன்ன சாக்ஷியை நீங்களே கேட்டீர்கள். இப்போது முதலாளியாகிய நீ முதல் பேச்சாமென்றான்.

உடனே தமக்கஸ் அடர்ந்தமயிருள்ள தன் தலையை நிமிர்த்தி கனைத்த தொனியுடனே பேச ஆரம்பித்தானவன்:— மேன்மை தங்கிய பிரபுவே, அந்த மனிதன் முன்னே சொன்ன யாவும் பொய் மிக இழிவான பொய். நான் மகாயோக்கியன். நான்



மின் பிடிக்குந் தொழிலாளி. இதோ இங்கே இருக்கிற இந்த வாலிபன் என் மகன். அவன் மிகவும் துடுக்கானவன். அவன் எனக்கு அதிக விசனத்தை யுண்டாக்கினவன். சந்தேகமில்லாமல் அவன் அதிகக் கெடுதியைச் செய்தவன். அவன் சேர்ந்திருக்கும் இந்தக் கெட்ட கூட்டத்தின் சாவகாசத்தினின்று விலக்கிக் கொண்டுப்போக நான் எருசலேமுக்கு வந்திருக்கிறேன். பெலியோப்பாவின் மதுபானக் கடைக்கு நான் ஒரு வேலையாக அனுப்பப்பட்டேன். அகப்படாமலிய நான் என் ஒரே பிள்ளையின் மேல் விரோதமாய்ப் பேசவது எனக்கு மனவருத்தத்தை யுண்டு பண்ணுகிறது; ஆனால், என்றான்.

அதற்குள்ளாகப் பிலாத்து அவனைத் தடுக்கும்படியாக போதும் நீ போதுமானமட்டும் சொல்லிவிட்டாய். சந்தேகமின்றி நீ ஒரு சிறந்த பிரஜையும், பிள்ளைக்காகத் தகப்பனுமென்று உன்மேலெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் எங்கள் பஸ்கா பண்டிகைக்கு வருகிறவர்களுக்கு உபசாரமாக உன்னைத் தப்பவைத்துவைக்கவேண்டும். எப்பிரில் மாசத்துக்குச்சரியான நிசான் மாதம் பதினைந்தாம் தேதி வெள்ளிக்கிழமையன்று பரபாஸைக்கு எப்படியோ அப்படியே உனக்கும் செய்யப்படும். காவலாளிகள், இந்தக் கைதியை என் முன்னின்று அகற்றுங்களென்றான். அப்போது தமக்கஸ்-ஒரு மிருகத்திற் கொப்ப முக்காரம் போட்டு பேரிடி முழக்கமிட்டான்.

பின்பு பிலாத்து நீத்துலைப் பார்த்து, நீமானுஷ தகப்பனுக்கு அடங்காதப் பிள்ளையே நீ உனக்காக பேசிக்கொள்ள வேண்டியது ஏதாவது உண்டா? என்றான்.

அப்போது நீத்து, நியாயாதிபதியின் கோபங் கொண்ட முகத்தையும், தன்னைச் சூழ நின்ற தனுடைய விரோதிகளின் முகத்தையும் பார்த்து, காயப்பட்ட தன் தலையின் நோவையும் உணர்ந்து மிகவும் வேதனைக் கொண்டவனாய் ஓ, ஸ்தேவானே! ஓ, தாயாரே! என்று உரக்கக் கத்திக் கதறினான்.

கடந்த இவைகளெல்லாவற்றினாலும் பிலாத்து முழுதுங்களைப் படைத்தவனானான். அதுவுந் தவிர, அந்த வேளை அவனுடைய

பகற் பொழுதைத் திருப்தியே யோயுமாயிருந்தது. விருந்தாளிகள் தன் வீட்டிற்கு அன்று வருவடியாக எதிர்பார்த்திருந்தான். ஆனையினும் அவன் அன்று காலேயிற் கண்டக்காகிகொல்லாவற்றினும் அடைந்த மனவெறுப்பு கோப்பு முதலியவைகளினின்றும் தன்னே சிறப்படித்திக்கொள்ள வேண்டியது அதிக அவசியமாயிருந்தது. இது காரணம் பற்றி வெறுப்பும் கோபமும் கொண்டவனுய்த் தனிதமாய்த் தான் எழுந்து தினமுசொன்னதாவது :—

போதும்! இது காட்சிக்கான இடமல்ல! நீ மற்றவர்களோடு கூட பாபேலிவாயாக; நீ இல்லாமற் போவது உலகத்திற் கேற்ற தாயிருக்கும்! காலுலானிகான் இவனே யகற்றுங்கள்! மண்டபத்தை சுத்தமாக்குங்கள்.

நீத்தி இன்னுமொரு முறை தாண்டைக்கப்பட்டிருந்த மானன புல்லுகள் நிறைந்த காவலறைக்குள்ளே போய் படுத்துக் கொண்டான். இந்தச் சமயம் அவன் அமைதியாயிருந்தான். காலேயில் கடந்த காட்சியையும் தன் மேல்வரும் பயங்கரமான தண்டனையையுமுள்ள! ஜூன் கடலில் ஸ்தேவானேடு ஒழித்த அந்தத் திவ்யமான தினங்களேயும், அவன அரியாதலேப்பட்டமுதல் நினைக்குந் தெரிந்த கன நேரம் பிரிந்தாலோயும் சோகபுஷ்பமிழமும் கதை முகமுள்ள சிறுவி ருத்தியும், பிரமனன நல்ல பெஞ்ஞனியையும்பற்றி யெல்லாம் நினேந்து கொண்டிருக்கையில், இன்னுமொரு முகம் அவனுடைய நினேவுக்கு முன்பாக வருத்தருவியதோறும்; அந்தத் திருமுகமானது இப்பூமியில் காணக் கிடைக்காததும் இவ்வுலகத்தின் அன்பிற்று மேற்பட்டதுமான மானிடபுத்தியிற்கெட்டாததுமான அன்போடு கூடியதும், இரக்கமுள்ளதும், அறிவுக்கூடாத இரகசிய ஞானமுள்ளதும், அழகு வாய்ந்ததுமான சுகமேயாகிய இயேசுவின் திருமுகமேயாம். இந்தத் திருமுகத்தையருளித் தரிசித்தான். அதுவுமன்னியில் திரும்ப இயேசுவானவர் சொல்லி அவன் கேட்டவாக்கியத்தினிற் சொல்லுமேலும் கவனியில்லாதவனும், அதன்னின் சந்தோஷமற்றவனுமான அவன் அனைகளே சிந்திக்கலாயினுன். அவர் சொல்லுவதும்



அவன் கேட்டதுமான வார்த்தைகளாவன:—"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்பதே. இத்தனருமையான வாக்கை அவன் உரத்தசத்தமாய்த் திரும்பத்திரும்ப சொல்லிக்கொண்டிருந்தான். அப்படி அவன் சொல்லிக்கொண்டிருந்த சத்தமானது புண்பட்ட அவனுடைய மண்டைக்கு ஆரோக்கியமாயிருந்தாலோல் தோன்றிற்று.

இவ்வாருக சொல்லிக்கொண்டிருக்கையில் "அவனுடைய கண்கள் மூடிக்கொண்டன! ஆற்றுக்குதலம்போன்ற அவ்வார்த்தைகளோ அவன் வாயிற் சொல்லிக்கொண்டே யிருந்த நித்திரைச் செய்தான்.

அவன் நித்திரைசெய்கிறபோது கனவுக் கண்டான். அவன் ஸ்தேவானேடு இருப்பதாயும், அவர்கள் இருவரும் தனிமையாய் ஒரு பெரியதும் விசாலமுமான பசும் புற்றரையின் மீது நடந்து செல்லுவதாயும் நினேத்தான். அத்தத் தரை ஒரு மனேஹரமுள்ள இடமாயிருந்தது. அவர்களேச் சுற்றிலும் எல்லாவிதக் வர்ணமும் வடிவமுமுள்ள புஷ்பங்கள் புஷ்பித்திருந்ததாயும், அவர்கள் தலேக்கு மேலாக வானம்பரிபூரணமான பரவசப் பதித்துக்கூடியப் பாட்டிலுல் ஆகாயத்தை நிரப்பினதாயு மிருந்தது.

ஸ்தேவான் தன் வழக்கம் போல தன்னுடைய இனிமையும் மேன்மையுமான குரலோடு "காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லே, நூற்கிறதுமில்லே; என்றாலும், சாலோமோன் முதலாய், தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்திருந்ததில்லே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." என்று ஆண்டவர் சொன்னதை நீ எப்படி நினேக்கிறாய்? நம்முடைய பரமபிதா நம்மைக் காட்டுப் புஷ்பங்களேப் பார்க்க அதிகமாய் நேசிக்கிறார். எனென்றால் நாம் அவருடைய பிள்ளேகள் என்று ஒருதரம் மாத்திரம் அல்ல, அநேகதரம் ஆண்டவர் சொல்லியிருக்கிறதே என்று சொன்னதாகவும். அதற்கு நீத்தி தீ அவருடைய பிள்ளே. ஆனால், காயேன்—தான் யாருடைய பிள்ளே

என்று எனக்குத் தெரியவில்லை யென்று பரிதாப வார்த்தையோடு சொன்னதாகவும் பிறகு அவன் தன் கண்களை மறிட்டுப்பார்க்க, அவர்களிருவரின் பக்கமாய் கண் கூச்சம்படியான வெண்வஸ்திரந் தரித்த ஒரு மனிதனுடைய உருவம் வருவதாகக் கண்டான்.

அவன் மனதில் அவர் இன்னொன்றறிந்திருந்தும், ஸ்தேவானைப் பார்த்து அது யார்? என்று கேட்டதாகவும்.

அதற்கு ஸ்தேவான் பூரண நம்பிக்கையுடன் அவர் தான் ஆண்டவர் என்று அவருக்கு எதிர்கொண்டோடிச் சந்திக்கப் போனான். ஆனால் தீத்துவோ தானிருந்த விடத்திலேயே நின்றான். அவனைச் சந்திக்க அவனுக்கு ஆசையிருந்தும் பயந்தான். ஏனெனில் அவன் பாவஞ்செயதவனென்று அறிந்திருந்தான். அவன் பார்த்துக்கொண்டிருக்கையில் ஸ்தேவான் மிகுந்த சந்தோஷத்தினால் பொங்கி ஆண்டவருடைய பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்தான். பின்பு இயேசு தம்முடைய கரங்களை அவன் மேல் வைத்து அவனைத் தூக்கிவிட்டார். அவ்விரண்டுபேரும் காட்டுப் புஷ்பங்களின் மத்தியில் நேசமாய் பேசி உலாவிக்கொண்டு வந்தார்கள். அப்பொழுது தீத்து அவனுடைய பாவப்பாரம் அவன் மேல் இருந்ததை அவன் உணர்ந்து திரும்ப அவரைப் பார்க்க தைரியமற்றவனாய் தன் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டான்.

அவரோ, என் பிள்ளையே! என்றார்.

அப்போது அவன் அந்தச் சத்தத்தைக் கேட்டதும் தன் கண்களை மெதுவாக அவரைப் பார்த்தபோது, இதோ! அவனுடைய இருதயத்தின் குற்றமும் கறையும் அழிவுள்ள மனச்சுபாவமும் தைரியமும் அவனின் ஆத்துமாவான து பெலனுமொன்றி னபிறகு நிறைவடைந்தது. அப்போது ஆண்டவர் முன்னுக்குச்சென்று, அவனுடையப் புருவத்தினிடமாய்த் தொட்டு நீயுங்கூட என்னுடையவன்தான்! என்று சொன்னார்.

இதெல்லாம் அவன் கனவின் விபரம். அவனுடையப் புருவத்தினிடமாய்த் தொட்டு நீயுங்கூட என்னுடையவன்தான் என்று



அவனுக்கு சொன்னவுடன் அவன் விழித்துக் கொண்டான். ஆனால் அந்த இருட்டுக் கிடங்கில் இருந்த இருட்டில் அவனுடைய கண்கள் ஜொலித்துப் பிரகாசித்தது. அவன் சிரித்தான். இதோ பாருங்கள், என் இராஜாவை அவருடைய அழகுடையவராக என் கண்கள் கண்டன. நான் அவருடையவனாயிருக்கிறேன் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.



# இருபத்திரண்டாம் அதிகாரம்.

இப்போது ஸ்தேவானும் அவனுடையடிகாயும் நாசரேத்துக்குப் போகும் கற்பாறைகளடர்ந்த மார்க்கமாய் போய் ஒரு மாதத்திற்கு மேலாகிறதுக அவர்கள் இதுவரைக்கும் இயேசுவின் தாயார் மரியாளுடைய வீட்டிலேயே தங்கி இருந்தார்கள். பிரிஸ்காள் தான் நாசரேத்தில் மரியாள் வீட்டிற்குப்போய்ச் சேர்ந்த அன்றிரவு வர்த்தமானித்துப் படித்துக்கொண்ட அந்தத் தன் படிக்கையிலிருந்து ஒருபோதும் எழுந்திருக்கவில்லை. அவள் அப்படிப் படுத்துக்கொண்டிருந்தது அதுபோகமுள்ள மரியாளுடையக் கண்களுக்கு அவள் நாட்கள் கணக்கிடப்பட்டுப்போயினவென்று தெளிவாய்க் காணப்பட்டன. ஒரு நாள் அந்தப் பெலவீனப்பட்டிருந்தவளுக்கு ஏதோ உதவி செய்ய அந்தம்மாள் அவளிடமாய்க் குனிந்தபோது, என் குமாரனுக்கு செய்தியனுப்ப விரும்புகிறேன்; நாம் அவருக்குச் சொல்லியனுப்பினால் அவர் உன்னைச் சொஸ்தம்செய்வார் என்று சாந்தமாய் சொன்னார்கள்.

அதற்கு அந்த வியாதிக்காரி அந்தம்மாளின் கையைப் பிடித்துக்கொண்டு; இல்லை, இல்லை, நான் சாகப்போகிறேன். அதைப் பற்றி எனக்குச் சந்தோஷம் என்று மகாகருடன் சத்தமிட்டாள். கடிய காலத்திற்கு ஜீவிப்பது எனக்கு பாரமாகத்தானிருக்கிறது. ஆனால் என் நியாயம் அவ்வளவு சந்தோஷமுள்ளதாயிருந்ததில்லை. எவ்வளவோ சமாதானமும் அமரிக்கையுமாயிருக்கிற இந்த இடத்திலேயே நான் சாவேனாக வென்றாள்.

உண்மையாகவே, அவள் அவ்விடம் வந்து சேர்ந்தபோது பிரயாணத்தினிமித்தம் கஷ்டத்திற்குத் தப்பின அமரிக்கையான சமாதானமுள்ள இடமாயிருந்தது. அழுக்கில்லாத வாசனைப் பொருந்திய அந்தக் கற்பனை மெத்தையின்மேல் யாதொரு வேதனையுமின்றி இருந்தாள். ஆனால் நாளுக்கு நாள் பலவீனமாய்



படுத்திருக்கையில் அவள் தன் காலத்தில் அதிகமாதச் சந்தோஷமுள்ளவளாயிருந்தாள்.

எப்போதும் அந்தச் சிறியவீட்டின் வேலைகளெல்லாம் செய்து முடித்தான பிறகு, மரியம்மாள் தன் பின்னுகிற தையல்வேலையை எடுத்துக்கொண்டு வியாதிக்காரி படுத்திருக்கும் அறைக்குள் வந்து அவள் படுக்கையின் பக்கமாய் உட்கார்ந்து அவள் நித்திரைசெய்ய சக்தியில்லாமற் செய்வது வழக்கம். சில சமயங்களில் அவர்களிருவரும் பேசிக்கொண்டிருப்பார்கள். ஒருதரம் அந்தம்மாள் பிரிஸ்காளுடன் பெந்தகோஸ்தின் அதிசயமான கதையை பாகம் பாகமாக நிறைத்திரங்கள் காணப்பட்டது, தேவதூதர்கள் வானலோகத்திலிருந்து வந்து பாடியபாட்டு, சாஸ்திரிகள் வந்து சந்தித்த சந்திப்பு இவைகளைப் பேசினார்கள். இன்னொருதரம் ஸ்தேவான் தன் தாயின் பக்கமாயுட்கார்ந்திருக்கும்போது அந்தம்மாள், தாங்கள் தேவதூதர்களால் எச்சரிக்கப்பட்டு எகிப்துக்குப் பிராயாணப்பட்டுத் திரிதமாய் போனதையும்; அங்கே இருந்த விபரீதமான ஜனங்களையும் அவர்களுடைய வழக்கப் பழக்கவழக்கங்களையும்; அங்கேயிருந்து திரும்பப் புறப்பட்டு வருகையில் தங்கள் சொந்தப் பழைய வீடும் சிநேகிதர்களுமிருந்த தேசமாகிய யூதேயா நாட்டிற்குத் திரும்பிவராமல் சிறுமலை ஊராகிய நாசரேத்தூருக்கு வந்ததைப் பற்றியும் பேசினார்கள்.

அப்போது ஸ்தேவான் இயேசுவின் குழந்தை அல்லது இளமை பருவம் அவருடைய் பால்யபருவம், அவருடைய வாலிபபருவம் ஆகிய இந்தத் திவ்ய விஷயங்களைப்பற்றிப் பேசும் போது கேட்பதில் ஒருபோதும் இளைப்படைவதில்லை

பின்னொருநாள் அந்தம்மாள், அதோ அந்த அத்திமரத்தின் நிழலிலிருக்கும் விசப்பலகையின் மேலே தான் அவர் குழந்தையாயிருந்தபோது வாசித்தார். வெய்யில் தாழும்போது நானும் என் பின்னுந்தையற்வேலையை அங்கே கொண்டுவருவதெனக்கு வழக்கம். இந்தக் கிராமத்தின் தெருவில் மற்ற பிள்ளைகள் தூரத்தினண்டை விளையாடுகையிலும், கூடிகளிலுள்ள பகுதிகளை வேட்டையாடுகையிலும், கூவிக்கொண்டு விளையாடுகையிலும், அவர்

எப்போதும் என்னண்டையிலே இருப்பதையே விரும்பினார். அப்படியிருந்தும் அவர் உலகத்திலிருந்த பிள்ளைகளெல்லாரையும்விடமிகவும் சந்தோஷம் நிறைந்தவராயிருந்தார். அவர் எப்போதும் சூரியப்பிரகாசமுடையவராய் சிரித்துக்கொண்டு தம்முடைய நிவ்ய பணிவிடையைப் பற்றிப் பாடிக்கொண்டிருக்கிறவராயிருந்தார். மற்றவர்களெல்லாரும் அவரைப் பிரியமாய் நேசித்தார்கள். இந்தக் கிராமத்திற்குள்ளே, காயப்பட்டவர்களுக்குக் காயங்கட்டவும், அழுகிற குழந்தைகளை ஆறுதற்படுத்தவும், வியாதிடையிருக்குங் குழந்தைகளைக் குணப்படுத்தவும் யாருமிராதவகையாய் அவ்வளவு அயத்தமாயிருந்தார். அவரைப்போல அவ்வளவு அழகும் நிவ்யமுமான கதைகளைச் சொல்லக் கூடியவர் ஒருவருமிருக்கமாட்டார்கள். அவர் என்னண்டையே இருப்பதை அதிகமாய் நேசித்தார் என்று நான் சொன்னேனே, அக்காலங்களில் அவர் என்னைக்கூட வீட்டிலும் தோட்டத்திலும் செய்யும் என்னுடைய வேலையில் எனக்கு அதிகமாய் உதவி செய்வதில் காலத்தைக் கழிப்பார். அயல்வீட்டுப் பிள்ளைகள் சோளம்புடைத்தெச்சற்றி வண்டிகள் எப்படி அடர்ந்து இருக்குமோ அப்படியே அவரைச்சுற்றி மக்கை மத்தையாய் வந்து சூழ்ந்துக்கொள்ளுவார்கள். அதோ இருக்கிற விசுப்பலகையின்பேரில் அவர் உட்கார்ந்திருப்பதைப்படி யென்பது எனக்கு ஞாபகமிருக்கிறது. எப்படியென்றால் அவருடைய தோட்டுவின்பேரில் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளும், பன்னிரண்டு சிறுபிள்ளைகள் அவரைச் சூழ்ந்திருக்கவும், சிலர் அவர் பாதங்களிலுட்கார்ந்து அவர் முழந்தாளிற் சாய்ந்திருக்கவுமாக அவர்கள் எல்லாரும் தங்கள் கண்களை விழித்து கதைகளைச் சாய்ந்துகொண்டும், அவர் பேசுவதைக் கவனித்துக்கொண்டு மிருப்பார்கள். அவர் அவர்களோடு பேசின விதமாவது:—பறவைகளைப் பாருங்கள், அவைகள் அவைகளுடைய கூடுகளை எவ்வளவு அழகாகவும், பொறுமையோடுங் கட்டி, அக்கூடுகளில் அவற்றின் சிறு முட்டைகளை சரியான பக்குவகாலம் வரும்மட்டாக வருந்தப்பட்டு மேலே செய்து அவைகளை வளர்க்கிறதென்றும்; காடுகளின் பள்ளத்தாக்குகளில் புஷ்,



பச்சைப் பாருங்கள் அவைகள் தன்னந்தனியே தேவன் தவிர மற்ற எவரும் கவனியாதபடி எவ்வளவு அழகாயும் நிவ்யமாயும் வளருகின்றன வென்றும்; பனிக்கட்டிகளைப் பாருங்கள்! அவைகள் சத்தமில்லாமலும் வெண்மையாயும் குளிர்கால இரவுகளில் மேகங்களினின்று விழுகின்றன. அப்படியிருந்தும் அவைகளில் ஒவ்வொரு தண்டும் அழகான வஸ்துக்களாயிருக்கின்றன வென்றும், சொல்லுவார். சில சமயம் அவர் ஒய்வுநாட்களில் பிள்ளைகளிடத்தில் சங்கீதங்களை ஒப்புவிப்பார். அவர்களுக்கு வேத வாக்கியங்களிலுள்ள பெரிய கதைகளைச் சொல்லுவார். அக்கதைகளிற் சில வருமாறு:—சிறிய நாணற் பெட்டியிலிருந்த மோசேயைப் பற்றியும், அழகுவாய்ந்த இராஜகுமாரத்தியைப்பற்றியும்; கோலியாத்தையும் தைரியமுள்ள இளந் தாவீதைப்பற்றியும்; பலவானுமாய மூடமனிதன் சிம்சோனைப்பற்றியும் இன்னும் மற்றவர்களைப் பற்றியுஞ் சொல்லுவார்.

இப்படியாக இவைகளெல்லாம் மரியம்மாள் சொல்ல கேட்டுக்கொண்டிருந்த ஸ்தேவான் பிரகாசமுள்ளக் கண்களோடு, ஆழ்ந்த சிந்தனையோடுகூடிய கருத்தோடும் பார்த்து; ஆ! நான் அந்தக் காலங்களில் நாசரேத்தூரில் வாசம்பண்ணியிருந்திருக்க எவ்வளவாய் விருப்புகிறேன்! என்றான்.

அதற்கு மரியாள், சாந்தமும், அழகும் உள்ள புன்னகைப்போடு அவனுடைய அடர்ந்தச் சுருட்டை மயிருள்ள சிரசின்மேல் தன்னுடைய மெலிந்த பஞ்சுமுள்ள கரத்தைவைத்து; கொஞ்சம் பிதானித்து, உன் போக்கு வரத்துகளிற் சில வற்றில் நீ அவரைப் போல இருக்கிறாய் என்று நீ அறிந்துக்கொள்; தோட்டத்தில் நீ அவ்வளவாய் வேலைசெய்துக்கொண்டிருக்கும்போதும், உனக்குத்தானே நீ பாடிக்கொண்டிருக்கும்போதும், இப்போது நீ என் பாதங்களிற் உட்கார்ந்திருப்பதும் அவர் உன்னளவு இருக்கும்போது உன்னைப்போல இருந்ததை நான் எப்போதும் நினைவு கூறுகிறேன். அதின் பொருட்டே நான் அவரைப்பற்றி உன்னிடத்தில் அடிக்கடிப் பேசுகிறேன் என்றார்கள்.

இதைக் கேட்ட ஸ்தேவான் சிம்மாசனத்தின்மேல் உட்கார்ந்

திருக்கும் ஸீஸரைப் போலிருப்பதைப் பார்க்கிலும் அவரைப் போல இருப்பதையே நான் விரும்புகிறேன்! என்று மிக அவலோடு அபயமிட்டான்.

அந்தவிஷயத்தில் தீபுத்திசாலி என்றோ அறியக்கூடாத ஜோதிப் பிரகாசத்தினால் பிறந்த அவருடைய தூய்மைக் கண்களோடு அந்தமரியாள் அவனை நோக்கி சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் ஸீஸர் தன்னுடைய தெய்வாவதாரமெனும் ஒரு பாவியானமனிதனைப் பார்க்கிறான். ஆனால் இயேசுவோ—என்று சொல்ல; ஸ்தேவான் "அவர் தேவனுடைய பரிசுத்தர்" ஆயிருக்கிறார் என்று பயபக்தியோடு சொன்னான்.

அதற்குப்பிறகு கொஞ்சநேரம் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். ஆனால் அதற்குப்பின் எப்போதும் வணக்கமாயும், சங்கடமில்லாமலும், எப்போதும் உண்மையுள்ளவனையும், இயேசுவின் காலியாயிருந்த இடத்தை நிறப்பும்படியாக எப்படி முயற்சிக்கிறானென்று ஸ்தேவானே இயேசுவானவருடைய தாயார் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அந்தம்மாள் தன்னுடைய உள்ளத்தில் அவன் அவரைப்போலாகவேண்டுமென்ற பிரியங்கொண்டிருந்தார்கள்.

பிரின்காளைப்பற்றியோ, அந்தம்மாள் மிதவும் அனுதாபமும் இரக்கமுமுள்ளவர்களாயிருந்தார்கள். அவள் தன்னுடைய ஜீவியத்தின் ஒருபாகத்தில் எங்கேயோ அநுதாரமுற்றவளாயிருந்தாளென்பதை தேவஉதவியினால் அறிந்தவர்களாயிருந்தார்கள். ஒரு நாள் அந்தம்மாள் தன்னுடைய தையல்வேலைபைச்செப்புக்கொண்டு அந்தபஸ்பீனே வியாதிக்காரியின் படுக்கையின் பக்கத்திலுட்கார்ந்து, மௌனத்தோடு அடிக்கடி தலையணையின் மேலிருந்த அந்த வெளுத்து தளர்ந்திப்போன முகத்தைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள் அப்போது அவளுடைய குழிய கண்ணின் இமைப்பைகளிலிருந்து அந்தம்மாள் கண்ணீர் மெதுவாக கீழே பாய்ந்தோடுவதைக் கண்டார்கள். உடனே அந்தம்மாள் எழுந்து படுக்கையின் மேற் கவிழ்ந்து தன்னுடைய இருகரங்களினாலும் வருத்தப்படுகிறவளின் மெலிந்தகரம், குளிர்ந்தகரமான கைகளை எடுத்



துப் பிடித்துக்கொண்டு சாந்தமாய் உன்னுடைய மனஸ்தாபத்தை எனக்குச் சொல்லமாட்டாயா? என்றுக் கேட்டார்கள்.

அந்தகூனமே அந்தத் தூக்கம் தெறந்தக் கண்களைத்திறந்துக்கொண்டு தன்முகத்திற்குமேலே காணப்பட்ட அன்பு நிறைந்த முகத்தை ஆச்சரியத்தோடும், வாஞ்சையோடும் பார்த்தாள் ஆம்! எல்லாவற்றையும் நான் உனக்குச் சொல்லுவேன் என்று மெதுவாய் அவள் சொன்னாள். சிலவருஷங்களுக்கு முன்னே நான் ஒரு பெரியகுற்றஞ்செய்தேன். அது இதுவரையில் என் ஜீவியம் முழுவதையும் அலந்துக்கொண்டது. அதற்குப்பின் இன்னும் நான் அதைச் சரிப்படுத்திக் கொள்ள எனக்குத்தகுதியில்லாதவளாயிருக்கிறேன் என்று சொன்னதோடு அவள் தீத்துவின் சரித்திரத்தையும் சொன்னாள். அவன் குழந்தையாயிருக்கும்போது அவனைத் திருடிக்கொண்டு தன் தேசமெங்கும் இராக்காலத்தில் வந்துவிட்டதையும் சொன்னாள்.

அதைக் கேட்ட மரியம்மாள், நீ என் அத்தைக் குழந்தையை வதித்துக்கொண்டு வந்தாய்? என்றுகேட்டார்கள்.

அதற்கவள்: நமக்கஸ் அப்படிச் செய்ய என்னை ஏவினான் என்று பெலவீனத்தோடு உத்திரவுச்சொன்னாள். நான் அந்தக் கிறுக்கனை விட்டுப் பிரியக்கூடாதவண்ணமாய் நேசித்துக் கொண்டுவந்தேன். ஆகவே நான் அப்படிச் செய்யத் தீர்மானித்தேன். நான் எப்போதும் அவனையவன் தாயினிடங்கொண்டு போய் சேர்த்துவிட எண்ணினதுண்டு. ஆனால் ஒருபோதும் அப்படிச்செய்ய தைரியம் எனக்கு வரவில்லை. ஒருதரம் நான் அப்படிச் செய்யவேண்டுமென்று சொன்னபோது, என் புருஷன் கோபத்தில் என்னை அடித்துக் கீழே வீழ்த்தினதைவிடக் கொடூரமாய், நம்பிக்கையற்றவிதமாய் நருமபடி என் குழந்தை ஸ்தேவானைக் காட்டிப்பயமுறுத்தினான். அவன் அது முதற்கொண்டு உனக்குத்தெரிந்திருக்கிறபடி உரோமையுடைய குமாரனைத்தம்முடைய தயவினாலே அவனைச் சொந்தம்செய்தவனாக்கும் நிக்கதற்றவனும் கண்டுபிடிக்கிறவனுமாயிருந்தான். ஆ, நாங்கள் உமக்கு என்ன கொடுத்தாலாகும்! இப்போது நீர் என்னை மறுப்பீர். இந்தக்கூரையின்

கீழ் இருப்பதற்குக்கூட நான் பாத்திரமுள்ளவள் அல்ல என்றாள். மரியம்மாள் ஒரு விநாடிநேரம் அமர்ந்திருந்து, அந்த வியாதிக்காரியின் நெற்றியின்மேல் இரக்கங்கொண்டவர்களாய் முத்தமிட்டார்கள். பிறகு அந்தம்மாள் நீ இந்தத் தப்பிதத்தை இன்னும் சரியாய் உணர்ந்து மறதிபடுத்தவேண்டும். உன் மகன் ஸ்தேவான் கப்பர்நாகூமுக்குப்போய் வாலிபன் தாவீதுவை இவ்விடம் அழைத்துக்கொண்டுவரட்டும். நீ அவனிடத்தில் இவைகளை யெல்லாம் சொல்லி, இக்கதையை ரூபிக்கத்தக்கவைகளையெல்லாம் அவன் கையில் ஒப்புவித்துவிடு. அப்படியான ரூபகாரத்திற்கேற்றவைகள் இங்கே உன்னிடத்திலுண்டா? என்றார்கள்.

ஆம், என்று தன்தலையணையின் கீழிருந்து ஒரு சிறுகட்டைப் பற்றி இழுத்தாள். அது ஒரு காப்பிளி தூளியிலுற் சுற்றப்பட்டு நூலிலுற் கட்டப்பட்டிருந்தது. ஒருபோதும் அது என்னை விட்டு நீங்காதபடி பத்திரப்படுத்தியிருக்கிறேன். அது நான் அவனை எடுத்துக்கொண்டு ஓடிவந்தபோது அவனுக்கு உடுத்தியிருந்த சட்டை. அவனுடையதாயார்தானே தன் சொந்தக்கைகளினுற் செய்ததுமானது. அதையவன் தாயார்தானே யறிக்கைக்கொள்ளுவாள். அதோடுகூட இருப்பது ஒரு வெள்ளிச்சங்கிலி, அதை நான் தரித்துக்கொள்ளும்படியாக அவன்தானே என்னை மற்றுநாமார்களிலிருந்து பிரிவன் தாவீதைப் பார்த்துக்கொள்ளும்படி என்னை தெரிந்தெடுத்ததினுல் எனக்குக் கொடுத்தது. அவள் என்மீதுவைத்திருந்த நம்பிக்கையை எவ்விதமாய் நான் போக்கடித்துவிட்டேன்! எனக்கென்னதான் வாய்க்குமோ என்று பிரிஸ்காள் சொன்னாள்.

நீ மெய்யாகவே பாவம் செய்தாய் என்று விசாரத்தோடு மரியாள் சொல்லி; துயிலும் தேவன், உலகத்து நீ உன் இருதயத்தை அவருக்குமுன் தாழ்த்தும்போது, அவர் தாவீது இராஜாவுக்கு அவன செய்த தோஷபரிகாரத்தை மனமிரங்கியதுபோல மன்னித்திருப்பார் என்றாள்.

அதற்கு பிரிஸ்காள் துயிலுக்கும் சாம்பலுக்கும் சரியாய் என் இருதயம் தாழ்த்தப்பட்டிருப்பதை தேவன் அறிகிறார். ஆயினும், பயங்கரம், எனக்குச் சமாதானம் உண்டாகவில்லை! என்று சொன்னாள்.

அதுகேட்டு மரியாள் துக்கங்கொண்டவளாய் ஆ, தேவக்குமாரனே! இந்தப் பாவவியாதிக்கொண்டு பீடித்திருக்கும் ஆத்துமாவிற்குச் சுகங்கொடுக்கத்தக்கதாக நீர் இங்கே இருப்பதை நான் விரும்புகிறேன் என்று தன் புழு கண்களோப்போன்ற கண்களை யெடுத்துத் தனக்குள்தானே மெதுவாய்ச் சொல்லி, நாளை, அவளுக்குச் சொல்லுவதின்னதென்று அறியாதவளாயிருக்கிறேன் என்று மறுபடியும் அந்த வியாதிக்காரியைப் பார்த்து இயேசு என்றழைக்கப்படும் என் மகன் உனக்குத் தெரியுமா? என்றுக் கேட்டாள்.

அதற்குப் பிரிஸ்காள், நான் அவனைப் பார்த்திருக்கிறேன். நான் அவரோடு பேசும்படியாகவும், என் ஸ்தேவானை சொஸ்தப்படுத்தினதற்காக அவருக்கு நன்றிசெலுத்தும்படியாகவும் எப்போதும் வாஞ்சைக்கொண்டிருக்கிறேன். ஆனுல் என் இருதயத்தின் பாவம் பெரிதாயிருக்கிறபடியினுல் நான் அப்படிச் செய்யத் துணியவில்லை. நான் அவனை கப்பர்நாகூமில் பார்த்தது மனுஷருக்கும் என் பாவத்தை என் காலின்கீழ் மிதித்துக்கொண்டிருந்தேன் என்றாள்.

அப்போது மரியாள், அவர் ஒருவரே பாவமில்லாதவர் என்று தைரியமாய் சொல்லி, அவர்காம் பாவம்செய்தவர்களை இரட்சிக்கும்படியாக மேலே வானுலகத்தினின்று இந்த உலகத்தில் வந்தாரென்று அவர் சொல்லை நீ எப்போதும் கேட்டதில்லையா? என்று வினவினாள்.

அதற்குப் பிரிஸ்காள், அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார். அவர் எப்படி அவர்களை இரட்சிப்பார்? என்று ஆவலோடு கேட்டாள்.

அதற்கு மரியம்மாள், அவர் ஒருகடவையல்ல; ஆனுல் அநேக சுடனைகளில் "அவனை விசுவாசிக்கிறவனெவனுனு, அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடைவான்" என்று சொல்லியிருக்கிறார் என்றார்கள்.

"யாராலுமும்" என்று அவர் சொன்னது உனக்கு நிச்சயமாய்த் தெரியுமா? என்றுப் பிரிஸ்காள் கேட்டாள்.

அதற்கு இயேசுவின் தாயார் ஒருதடவை மாத்திரமல்ல ஆனால் அநேகத் தடவைகளில் அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார் என்றார்கள்.

அதைக்கேட்ட பிரிஸ்காள் பயத்துடன் நான் விசுவாசிக்க வேண்டியதென்ன? என்று கேட்டாள்.

அவளுக்கு உத்திரவாக மரியாள், நீ "அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்றும், அவர் இழந்துபோனவர்களைத் தேடி இரட்சிக்கவுமே வந்தார் என்றும் அப்படியாக அவர் வந்த நோக்கத்தை நிறைவேற்ற அவர் வல்லமையுடையவர் என்றுமே" விசுவாசிக்கவேண்டும் என்றாள்.

அப்போது அவள், மரணத்தைவிட கேவலமான நிலைமையின்று என் ஸ்தேவானே இரட்சித்திருக்க, நான் அவரை விசுவாசியாதிருப்பதெப்படி? என்று தன் கைகளைத் தட்டிச் சந்தோஷக்கூச்சலிட்டுச் சொன்னாள். பின்பு அவள் அவர் வல்லமையுள்ளவர் என்று விசுவாசிக்கிறேன் என்று தன் கண்களை மூடி, மரியாள் அவள் தரங்கெட்டாள் என்று நினைக்கக்கூடிய அவ்வளவு அமைதலாய்ப் பிரித்துக்கொண்டாள். அந்நாளே ஸ்தேவான் அந்த அறைக்குள் மெதுவாய் வந்து தன் தாய் படுத்துக்கொண்டிருந்தப் படுக்கையின் பக்கத்தில் நின்று அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான்

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அன்பு முடிவாய் வருகிறதா? வென்று மெதுவாயக் கேட்டான். தூங்கும் அவள் அவசரக்குரலைக்கேட்டு விழித்துக்கொண்டாள்

அவள் விடாய்த்தவளாய் "எல்லாரையுமிட நான் ஒரு பெரும் பாவியாயிருந்துக்கொண்டிருக்கிறேன், ஆனாலும் அவர் என்னை இரட்சிக்கும்படியாக வந்தார். நான் சமாதானமுள்ளவளாயிருக்கிறேன். நீ இந்நாளைக் காண்கையில் இதை யவனுக்குக் கொடுத்துவிடு, அந்தம்மாள் எல்லாம் உனக்குச் சொல்லுவார்கள் என்று சொன்னதின்பிறகு அந்த இருண்ட கண்கள்



திரும்ப மூடிக்கொண்டன. கடைசியாக அவள் தன் கண்களை மூடிக்கொண்டாள். அன்றிரவின் அநேக மணிநேரங்களாக அவள் தூங்குகையில் அவர்கள் இரண்டுபேரும் படுக்கையின் பக்கமாய் உட்கார்ந்துக் காத்துக்கொண்டிருந்தார்கள். அருணோதயத்தில், அந்த வெளுத்த உதடுகள் அசைந்தன; அப்போது ஸ்தேவான் குனிந்து இரண்டுவார்த்தைகளைக் கேட்டான். அவ்வார்த்தைகளாவன :—"ஸ்தேவான், இயேசு" என்பனவே. பின்பு அந்த விடாய்த்த மூச்சு முழுதுமாய் நின்றுபோயிற்று. அவள் தன் இளைப்பாறுதலுக்குட் பிரவேசித்தாள்.

அதன் பின்பு கிழத்திசை வழக்கம்போல் பிரேத அடக்க முறைமை சுலபமாய் நடந்தேறிற்று. அன்று சாயங்காலம் தீத்துவைப்பற்றிய கதையை மரியம்மாள் ஸ்தேவானுக்குச் சொன்னார்கள்.

அதைக் கேட்டு ஸ்தேவான் அதிகமாய் தன் மனதில் துக்கங்கொண்டவனும் எழு தாயாரே! என்றான். மரியம்மாள் : இல்லை அவள் தன் மனதில் அவ்வளவு பாரம் தாங்கியவளாய், அழுதது ஆச்சரியமல்ல! அவள் ஒருபயங்காளியும், அவள் ஜீவித்தகாலமெல்லாம் பயங்கரமுள்ளவளாகவே ஜீவித்தாள் என்றார்கள்.

பின்பு அவன் தன் தகப்பனுடைய பொல்லாத ஜீவியத்தைத் தான் அறிந்தமட்டில் இயேசுவின் தாயாருக்குச் சொன்னான். எனக்கு இப்போது இருப்பதெல்லாம் அவன்தானே என்று மனக்கசப்புடன் சொல்லி முடித்தான்.

அப்பொழுது மரியம்மாள், அதுதானா உன்னெண்ணம்? என்று கேட்டார்கள்.

அதைக் கேட்டு ஸ்தேவான், மரியம்மாளின் கருத்தையறியாதவனாய், இல்லை, ஆயிரம்தரம் இல்லை, அம்மா, என் தாயின் கடைசியான வார்த்தைகளை நீங்கள் கேட்டீர்களா? என்று கேட்டு, உடனே என் தாய் சாகுந்தருவாயில் மூச்சொடுங்கும் நேரத்தில் எனதுடைய பெயரை அவருடைய பெயருடன் கூட்டிச்சேர்த்தாள்; நான் செய்யவேண்டிய தினனதென்று எனக்குத் தெரியும் முழு ஜீவனையும் அவருக்கே தத்தம்செய்கிறேன் என்றான்.

அது கேட்டு மரியாள் தனது ஆழ்ந்த நோக்கமுள்ள கண்களால் வினையத்துடன் மலைகளின்மேல் பார்த்து, நீ மெய்யாகவே செய்வாய். ஆனால் வருங்காலங்களில் என்னென்ன அவர் செய்யும்படியாக அவருக்கு நேரிடுமோ எனக்குத் தெரியாது. பொல்லாத சத்துருக்கள் அவர்மேல் நோக்கமாயிருக்கிறார்கள்; சிலவேளைகளில் அவரது ஜீவனைப்பற்றியும் பயப்படுகிறேன் என்று சொல்லி ஸ்தேவானின் பக்கமாய் திரும்பியபோது அவளுடைய நாக்குக் குளறிற்று.

அப்போழுது ஸ்தேவான் அவர் பிதாவினால் நேசிக்கப்பட்டவர் அல்லவா? அவருடைய பகைவர்களின் கையினின்று அவரை இரட்சிக்கவல்லவர் அல்லவோ? என்றான்.

எழுதியிருக்கிறபடி 'அவர் மகிமையாய் வெற்றிச்சிறப்பார்!" என்று மரியாள் உறுதியாய்ப் பதில் அளித்தாள்.

அதைக் கேட்ட ஸ்தேவான், தான் பயபக்தியாய் அந்தம்மாளிடத்தில் நடந்துகொண்டான்.

அதற்குப்பின் கொஞ்சநேரம் மௌனமாயிருந்து அவனுக்குச் சொன்னதாவது :— உன்தாய் உனக்கு விதித்தபடி நாளைக்கு நீ போகவேண்டும். நீ வாலிபன், தாயிதைக் காண்பாயேயானால், கடந்தேறிய எல்லாவற்றையும் அவனுக்குச் சொல்லு; நானோ ஒருசலேமுக்குப் போகப் போகிறேன். அவர் எதோ என் உத்தியை நாடுகிறார் என்று எனக்குத் தெரிகிறது என்று மரியம்மாள் ஸ்தேவானுடன் சொன்னாள்.

அதே பிரகாரமாக அவன் தன் தாயினுடைய வெள்ளிச் சங்கிலியையும், தீத்துவில் தாயார் நெய்த அவனுடைய சட்டையையும், தன்னோடு எடுத்துக்கொண்டு தனியையாகப் பிரயாணஞ்செய்ய காலையிற் சீக்கிரமாய்ப் புறப்பட்டான். அவன் புறப்படும்போது, அவன் மரியம்மாளுக்கு பயணஞ்சார வந்தனம் சொல்லி, எல்லாம் தீர்ந்து முடிந்தபின்னர் பையனை தான் மாத்திரம் தனியையாய் விடப்பட்டதையும் உலகமானது விஸ்தாரமாயிருந்தும் தனக்கு யாருமில்லாதிருப்பதையும்பற்றி யழுதான். அப்போது அந்தம்மாள் அவனை ஆசீர்வதித்து முத்தமிட்டு அனுப்பினாள்.

---

# இருபத்துமூன்றும் அதிகாரம்.

காய்பாதான் தொந்த அறையின் தளத்தில் தன் தலையை மார்பின் புறமாய் தொங்கவிட்டுக்கொண்டும் தன் கைகளை பின் புறமாய் கட்டிக்கொண்டும் மேலுங் கீழுமாய் நடந்துகொண்டிருந்தான். அவன் நெற்றியின் கீழ் அவனுடையக் கண்கள் கோபத்தோடு எரிந்து பிரகாசித்தும் தழல்போல ஒளி வீசிக் கொண்டிருந்தன. இடைக்கிடையே அவன் தனக்குத்தானே எரிச்சலுடன், அவன் தேவ தூஷணக்காரன்! அவன் சபிக்கப்பட்டவனுயிருப்பான்! அவன் ஒருபோதும் எனக்குத் தப்பித்துக் கொள்ளுவதில்லை! என்று தான், பிரதான ஆச்சாரியனுகிய காய்பா, பொருத்தனைப்பண்ணிக்கொள்ள வில்லையா? என்றான்.

அதற்குள் அவன் எதோ கொஞ்சந் சத்தம் வெளியிலே கேட்டு துரிதமாய் நடந்துப்போய் ஜன்னலின் கதவை பறக்கத் திறந்து, ஆம் மல்கூஸ் தீயா, உள்ளேவா! கல்லேயு, நீ என்ன சொல்லப் போகிறாய்? என்றான்.

அதற்கு அந்த மனிதன் வணக்கமாய்த் தலை கவிழ்ந்து, அதிக வணக்கத்திற்குரிய ஐயனே, எனக்கு உத்தரவானபடியே நான் பெத்தானியாவிற்குப் போயிருந்தேன். நான் அவ்விடம் போன போது, லாசருவின் வீட்டைக் கண்டுபிடிக்க கஷ்டப்படவில்லை. தெருக்களில் ஜனங்கள் அவனுடைய வீட்டிற்கு போய்க்கொண்டும் வந்துக்கொண்டு திரும்பதினுல் நிறைந்திருந்தார்கள். அவனுடைய வீடு ஒரு குடிசையாயிருந்த போதிலும் வெகு விமரிசையும் நேர்த்தியுமாயிருந்தது என்றான்.

அதற்குக் காய்பா எரிச்சலுடன் அவனை எதிர்த்து அந்த இடம் எவ்விதமாயிருந்தாலும் எனக்கு அக்கரையில்லை. அந்த மனிதன் :— அந்த மனிதனை நீ பார்த்தாயா? என்று கேட்டான்.

லாசரு என்னும் அந்த மனிதன் சகமும் ஜீவனுமுடையவனு

யிருக்கிறான். அவன் தன் மீட்டின் சோட்டத்தில் நூனங்களோடு பேசிக்கொண்டிருக்கிறான் என்று மல்கூஸ் சொன்னான்.

அவன் நூனங்களோடு பேசிக்கொண்டிருந்தானே! என்று மூக்கில் சொல்லிக்கொண்டு இந்த தேசம் பேச்சுக் காரரால் தற்காலம் நிறைந்திருக்கிறது. அவன் என்ன சொன்னான்? என்று கேட்டான்.

அதற்கு மல்கூஸ், அவன் உயிர்த்தெழுந்த கதையைப்பற்றி சொல்லிக்கொண்டிருந்தான். அவன் மூன்று நாள் கல்லறையில் கழித்தது ஒரு தூக்கம் தூங்கினதுபோலிருந்ததுதான்றும், தேவதூதன் போற்றிப் புகழ்ந்து ஸ்துதித்தது போலவே நசரேயனையும் போற்றிப் புகழ்ந்து ஸ்துதித்து அவனை தேவகுமாரனும் இஸ்ரவேலின் ரட்சகர் என்றும் சொன்னான்.

அதைக் கேட்டு காய்பா தன் பற்களைக் கடித்துக்கொண்டு நூனங்கள் என்ன சொன்னார்கள்? என்று கேட்டான்.

நூனங்களெல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறபடி! காவலின் குமாரனுக்கு ஜெயம்! என்று சத்தமிட்டார்கள் என்றும்! இப்படிப்பட்ட அதிசயத்தைப்பற்றி ஒருபோதும் கேள்விப்படவில்லையே என்றும் பெத்தானியா முழுவதிலும் முள்ள நூனங்கள் எல்லாரும் பைத்தியங்கொண்டு போனவர்களாய் பிருக்கிறார்கள் என்றும் மல்கூஸ் விளம்பகர்த்தான்.

அப்போது காய்பா, இது ஒரு பெரும்பொய், பண்டிகைகாலத்தில் இவ்வூரிலேயும் இவனுடன்தோழர்களாலும் பெரிய கலகக்காரனாக்கக்கூடியதாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நான் உனக்கு விதித்த விஷயத்தைப்பற்றி மற்றவர்களோ விசாரித்தாயா? என்றான்.

அந்த மனிதன் தன் எஜமானனைப் பயத்துடன் பார்த்து, பெத்தானியாவில் இது நிச்சயமாய் நடப்பித்த ஒரு அற்புதமென்று நம்பிக்கப்படுகிறது. நான் அறிந்த சுவனத்தோடு, தாங்கள் எனக்கு விதித்தபடியே விசாரணைசெய்து, அநேக அறிவாளிகளையும், கல்விமான்களையும் கண்டு ஆலயக்களிடத்தில் தாங்கள் சொன்ன



விஷயத்தைப்பற்றிக் கேட்டேன். அவனே வைத்த கல்லறையையும் சோதித்துப் பார்த்தேன். அந்த மனிதன் மரித்ததையும், அவன் அடக்கம்பண்ணப்பட்டதையும், அவன் நாலுநாள் கல்லறையிலிருந்ததையும் மறுக்கக்கூடாததாயிருக்கிறது. ஆனால் அவனே நசரேயர், தேவனுடைய வல்லமையினாலே மாத்திரம் நிறைவேறக்கூடிய விதமாய், உயிரோடெழுப்ப சக்தியுள்ளவராயிருக்கிறதெப்படி என்பது எனக்குத் தெரியாது, மற்றவர்களும் அதை எனக்குச் சொல்லக் கூடியவர்களாயிருந்திலீலை என்றான்.

அதற்குக் காய்பா, உன் புத்தியை நீ காத்துக்கொள்! பொல்லாங்கன் உன்னை மேற்கொள்ள விடாதே. தேவதூஷணக்காரனுடைய சிஷன் எனக்கு வழிபடும்செய்ய முடியாது என்று தன் பிரியமுள்ள மேலிக்காரனை வெகு கண்டிப்பாய் பிரதான ஆசாரியன் பார்த்தான்.

அதற்கு மல்கூஸ், தீமை தலையை நோக்கிக் கொண்டு நான் ஒரு சிஷன் அல்ல! ஆனால் விஷயங்கள் என்னுடைய புத்திக்கு எட்டாதவையாயிருக்கின்றன என்றான்.

அப்போது காய்பா, மூர்க்கனே, வெறிக்கொண்டு, போதும்! என் முன்னின்றுபோய் ஆலோசனை சங்க மண்டபத்தை ஆயத்தப்படுத்து. ஒரு மணிநேரத்திற்குள் அது தயாராயிருக்கட்டும் என்றான்.

தயாரான பிரதான ஆசாரியனுடைய ஆலோசனை மண்டபத்தில் வந்து கூடிய கூட்டத்தின் மத்தியஸ்தனுயிருந்த வயோதிபனான அன்னு, மூன்றமே இந்த விஷயத்தில் அதிகாலம் பொறுமையாயிருந்தோம். அந்த மனிதன் சரிப்படுத்தப்படவேண்டும்! அதிதீவிரமாய் அப்படிச் செய்யவேண்டும். அவனை அப்படியே இந்த மூன்று வருஷங்களாய் விட்டிருந்ததுபோல விட்டுவிடுவோமானால், எல்லா மனிதர்களும் அவனை விசுவாசிப்பார்கள். உரோமர்கள் வந்து நமது ஜாதியாரையும் நமது தேசத்தையும் அபகரித்துக்கொள்ளுவார்கள். சரியாய் அப்படியே செய்வார்கள். அதிக காலங்களுக்கு முன்னமே நாம் அவனை மட்டுப்படுத்தியிருக்கவேண்டும். அப்போதே அது என் ஆலோசனையாயிருந்தது.

ஆரம்பத்திலேயே அதைச் சுலபமாய்க்கொண்டு செலுத்தியிருக்கலாம். ஆனால் இப்போதோ விஷயங்கள் அவனே மரணத்திற்குட்படுத்தும்படியான அதிகக் கஷ்டநிலைமைக்கு வந்து விட்டது என்றான்.

அதி சேட்டி நீக்கோதேமு சாந்தமான குரலோடு அந்த மனிதனை மரணத்திற்குட்படுத்தும் விஷயம் எனக்குப் பிரியமில்லை யெனென்றால் என் அபிப்பிராயத்தின்படி அவன் மரணத்துக் கேற்றதொன்றையும் செய்திருக்கிறதில்லை என்றான்.

காய்பா, பிடிவாதமாய் உனக்கு ஒன்றுமே தெரியாது. ஒரு ஜாதியார் முழுதும் அழியாதபடி, ஜனங்களெல்லாருக்காகவும் ஒரு மனிதன் சாகிறது நலமாயிருக்கு மென்பதையும் சிந்தியாமலிருக்கிறாய் என்று கோபமாய் சொன்னான்.

ஒரு விநாடிப்பொழுது மௌனமாய் நீக்கோதேமு காய்பாவை நோக்கி, பயபக்தியோடு கீழே பிரதான ஆசாரியர் யெகோவாவை கும்மைக்கொண்டு பேசுகிறார்! ஆனால் குற்றமற்ற ஒரு மனிதனை மரணத்திற்குட்படுத்துங் காரியத்தினின்று நம்மை விலக்குவாராக. எனக்கோ இதிலேல் இந்தக் காரியத்தின் விஷயமாக செய்ய வேண்டிய தொன்றுமில்லை என்றான்.

அதற்கு அன்னா, நாங்கள் அநேகக் காலமாக நீயும் அவனுடைய சிஷ்யர்களிலொருவனென்று சந்தேகித்துக்கொண்டிருந்தோம் என்று மூர்க்கோடு சொன்னான். ஆகையால் நீ சனகெரிம் ஆலோசனை சங்கத்தில் நுழைந்து உன் இடத்தை இழந்தாய். போ, இனிமேல் நீ உன்னுடைய மேன்மையும் நன்னடக்கையுமுள்ள தச்சனுகிய எழுமானையும், அவன் தன் பின்னடியாராக சேர்த்துக் கொண்ட உலகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களையும் சேர்ந்துக் கொள் என்றான்.

நீக்கோதேமு மறுஉத்திரவு ஒன்றுஞ் சொல்லாமலே அமைதியோடு மரியாதையாய் சனகெரிம் ஆலோசனை சங்கத்தைவிட்டெழுந்து வெளியே போய்விட்டான்.

யோக்கனன் அதற்கு, அவன் போனதற்கு போகட்டும்! நாம் நம்மில் ஒவ்வொருவரையும்பற்றி இப்படி வாதித்துக்கொண்டிருக்



தால் நமக்கிருக்கிற காலத்தை இழந்துவிடுவோம். இவ்விதமாக அவன் எல்லாரையும் பார்த்துப் பேசவே, கொஞ்சம் அவனுக்கு இசைந்தாற்போல் தைரியின் சத்தமும் முண்டாயின.

ஆனால் அங்கே உண்டான அந்தச் சத்தத்தோடு சேராத ஒருவன் இருந்தான். அவன் தன் காலின் கீழிருந்த தரையை நோக்கிக்கொண்டும், தன் கைவிரற்களினால் தனது நீண்ட தாடியை சரித்திக்கொண்டும், யோசித்துக்கொண்டு மிருந்தான். அந்த மனிதனுடைய பெயர் யோசேப்பு. அவன் ஜெருசலேமி அரிமத்தியா ஊராயிருந்தான்.

யோக்கனன் தொடர்ச்சியாக, தன் விஷயத்தை பிரஸ்தாபித்து முழக்கமிட்டுக்கொண்டிருக்கும் லாசருவைக்குறித்து "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" எனக்குத் தோன்றுகிறபடி அவனை இருந்து எழுந்து வந்த கல்லறையிலேயே இருந்து விட்டிருந்தானால் நலமாயிருக்கும். அவன் மெய்யாகவே மரித்துப்போயிருந்திருப்பானேயானால், அவன் அப்படியே கல்லறையில் இருந்திருக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்குமானால், நாம் முன்னமே தேவன் அவனுக்கு மேல் விதித்த தீர்ப்பையே நாம் கொண்டுசென்று அவனை மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பது நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாயிராது என்றான்.

அதற்கு அன்னு, நீ மிகவும் புத்திசாலித்தனமாய் பேசினும், அந்த மனிதன் இருக்கவேண்டிய அனுமதாட்கள் சரியானபடி இருந்தாயிற்று என்று தெரிகிறது. இப்பொழுது அவனுடைய தேகமானது அவன் தேவதூதனைப் பேசுகிறபடியினாலே நியாயத்தின்படி பிதாவினுலே உயிரடைந்திருக்கிறது. அதிசேகரமாய் அவனை அவ்விதமான வழியினின்று நீக்கி அவனுக்குரியதை நீ பார்த்துக்கொள். எனென்றால், அதிகமான பேர் அவனை பின் சென்று போகிறார்கள் என்று சொன்னான்.

மேலும், அவன் ஒரு பிரதமாக உலகத்தில் யாதொரு பாத்தியதையு மில்லாதவனுயிருக்கிறான். அவன் யாரோடு கூடிப்பழகுகிறானோ அவனையும் அசுசிப்படுத்துகிறான் என்று இன்னொருவன் பயபக்தியாய் சொன்னான்.

அதற்கு அரிமத்தியா ஊராளுகிய யோசேப்பு ஸ்தாசரு என்னப் படுகிற அந்த மனிதனை விட்டுவிடு! என்று தன்னுற் பொறுக்கக் கூடாதவிதமாய்ச் சொல்லி; அவனை நான் நன்றாய் அறிவேன்; அவன் நீதிமானும் உத்தமனுமாய் இருக்கிறான். அவனை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பப்பட்டதிலிருந்து நான் பார்த்திருக்கிறேன். அது அப்படியிருக்கிறதை அவன் ஒரு பிசாசு பிடித்தவனல்ல; அவன் விசுவாசித்தவேண்டியதை விசுவாசிக்கிறான், அவன் விடுதலையான தினமித்தம் நீதியின்படி நீதிவனை ஸ்தோத்திரிக்கிறான், அவரைத் தூக்கிலையில் தன்னைக் கல்லறையிலின் றெறிவரச்செய்த இரட்சகனையும் மகிமைபடுத்துகிறான் என்றான்.

அதற்கு அன்னு, மிருதுவாக இந்த விஷயம் பொறுத்து கேட்டுக்கொள்ளலாம். நசரேயர் இருக்கும் இடம் எங்கே என்று யாராவது தெரிவிக்கக்கூடுமா! என்று கேட்டான்.

காய்பா அதற்கு இன்னைக்குக்கூட அவர் பெத்தானியாவுக்கு வந்திருக்கிறார். அங்கே அவர் இதேலாசருவினிடத்தில் தங்கி இருக்கிறார். நான் ஆலோசனை மண்டபத்திற்குள் பிரவேசித்தபோது இந்த உண்மை எனக்குத் தெரியவந்தது. அவர் சந்தேகமில்லாமற் பண்டிகைக்கு எருசலேமில் இருப்பதாக கருதிக்கொண்டிருக்கிறார். அவரை இரகசியமாக பிடிக்கவேண்டும்... ஜனங்களுக்குள் குழப்பமுண்டாகாதபடி. அப்படிசெய்யவேண்டும். ரோமகியாதிபத்தியத்திற்கு விரோதமான சில காரியத்திற்குட்படுத்தம் படியான சில சாட்சிகளை அவருக்கு விரோதமாய் ஏற்படுத்தவும் வேண்டும். எனென்றால், இந்த நியாயாதிபத்திய சங்கமானது ஒருவனையும் மரணதண்டனைக்குட்படுத்தத்தக்க அதிகாரமற்றது என்று சொன்னான்.

அங்கே வந்திருந்தவர்களில் அநேகருடைய கண்கள் உரோமருக்கிருந்த மேலான அதிகாரத்தையும் தங்கள் ஜாதியாருக்கிருந்த சாதுவான நிலைமையையும் பற்றிக் கேள்விப்பட்டவே, கொடுப்பெரிய காரபோற பயங்கரமாய்க் காணப்பட்டனர். இதால் அன்னுவானவன் அதிசயமும் மெதுவாயும் பின்வருமாறு சொன்னான்:—

ஜீவஜனங்களுடைய சபைக்கு விரோதமாக இருப்பதாய்



ரோமர்கள் காட்டினதில்லை. இதற்கு திருஷ்டாந்தமாக கம்முடைய தேவாலயமே சாக்ஷியாய் நிற்கிறது. நாம் அதை மறந்து போகக் கூடாது. அதுவுமன்றி ரோமர்களால் அவர்களுடைய கொடுமையான இருப்புக்கையிலுல் தொறுக்கப்படவுங் கூடாது. நம்மாலாண்மட்டும் ஒவ்வொரு விஷயத்திலும் நாம் அவர்களோடு சினேகமாகவே இருக்கும்படி நாம் வழி தேடிக்கொள்ளவேண்டும். இந்த மனிதன் இயேசு இராஜாங்கத்தாருக்கு விரோதமாக கலகம் செய்ததாக குற்றஞ்சாட்டி விடுவீர்களானுல் நம்முடைய வேலையுற்றிலும் முடிந்தது போலும். பிறகு நாம் அவனை பிலாத்துவின் கையில் ஒப்புக்கொடுத்து விடலாம். அப்படிச் செய்தால் அவனுக்குச் சரியான தண்டனை விதிக்கப்படும். விசேஷமாக நாளைக்கு அதிகாலைக்கமாக அவனைக் காவல்செய்து கவனிப்போமாக. இப்படிப்பட்ட விஷயங்களில் ஒய்வுநாளுக்குத்த பிரமாணங்கள் கவனிக்கப்படாமற் போனால், நிச்சயமாக அவசியமான ஒரு வேலையை செய்து முடிக்க சக்தியுள்ளவர்களாவோம் என்றான்.

ஆலோசனைசங்க மண்டபத்தின் கதவண்டை அதைத் தட்டுகிற பெருஞ்சத்தங் கேட்கப்பட்டது. அதைக் காய்பா ஆச்சரியத்தோடு பார்த்து உரத்த சத்தத்தோடு நாங்கள் ஒரு காரியத்தைக் குறித்து ஆலோசிக்கையில் அவ்வளவு தைரியமாக யார் அதை குலைக்க நாடுகிறது? ஆயினும் நில்லு! அது யாதோ விசேஷ சங்கதியாயிருக்கலாம்! என்று அவனுடைய மைத்துனர்மார்களில் ஒருவனை கதவைத் திறக்கும்படி சைகைக்காட்டினான்.

உடனே ஒரு மனிதன் திரும்பிவந்து, இவன் நசரேயருடைய தோழர்களில் ஒருவன்... இவன் பிரதான ஆசாரியரோடு பேச விரும்புகிறான் என்று சொன்னான்.

அப்போது அதைக் கேட்டு காய்பா ஆலோசித்தான்.

அந்த வரும்படி கட்டளையிடமாட்டீரா? அவன் ஒருவரை அந்த மனிதனைச் சேர்ந்திருக்கொண்டதற்காக தன் மூடத்தனத்தைக்குறித்து பஸ்தாபப்படு றவனுக இருக்கலாம். அவன் அப்படிப்பட்ட

வனுக இருக்கும் பகுதியில் அவனை நமக்குச் சமயோசித சகாயஞ் செய்யத்தக்க ஒருவனுக எற்படித்தலாமே என்று அன்னு ஆலோசனை சொன்னாள்.

அப்படியானால் அவனை உள்ளே கொண்டுவரட்டும் என்று காய்பா சொன்னான்.

அந்த அறையில் அப்போது சத்தமில்லாதிருந்தது. ஆனால் இந்தச் சமயம் உள்ளே பிரவேசித்த மனிதனுடைய காலடிசத்தமாத்திரம் கேட்டது. அவன் உள்ளே வந்து நின்று கூடிவந்திருந்தச் சபையைப் பார்த்து நிதானிக்கையில், அவன் குள்ளனும், கபடற்ற இடங்கையானும் புறக்கணிக்கப்பட்ட முகமுள்ளவனுமாயிருந்தான்.

அன்னுவினுடைய கண்கள், வந்து நின்ற அந்த மனிதனைக் கண்டபோது பகுங்கொண்டவனைப்போல நகைத்தான்.

நீ முன்னுக்கு வந்து உன் விருப்பங்களை எங்களுக்குச்சொல்லமாட்டாயாவென்று காய்பா நயவசனிப்பாக சொன்னான்.

அந்த மனிதன் அவனைப்பார்த்து, நீ பிரதான ஆசாரியனா? என்று மூரட்டுத்தனமாய்க் கேட்டான்.

அப்போது காய்பா கோபங்கொண்டு பயலே! ஆம் நான் தான் பிரதான ஆசாரியன்! நீ என்ன சொல்லப்போகிறாய் என்றுக் கேட்டான்.

ஆனால் அன்னு அவனை எச்சரிக்கிறபோல அவனைத்தொட்டு, என் நல்ல மனுஷரா, நீ நசரேயனைப்பற்றி எங்களிடத்திற் பேசும்படியாக வந்தாயல்லவா? என்றுகேட்டான்.

அந்த மனிதனுடைய முகம் பிரகாசமுள்ளதாயிற்று. அவன் ஒளியுடைய கண்களிற் தைமஷ்றைத்த ஒளிவீசிற்று. பின்னும் அவன் தும்! நான் உங்களிடத்தில் பேசும்படியாகவே வந்திருக்கிறேன்! நான் இனிமேல் அவருடைய முகத்திற்குமுன் தரித்திருக்க முடியாது. நீங்கள் அவருடைய சத்துருக்கள் என்று ஏன் என்றான். வந்திருக்கிறது. ஆகையால் நான் வந்திருக்கிறேன்

ஆ! உன பிதாக்களால் விலக்கப்பட்ட பா[illegible]களுடைய சிலைகளாலும் நீ பட்ட அலைச்சல்களை விட்டு, அவ



யாசிய மடிக்கு அல்லது அரவணைப்புக்குத் திரும்பும்படி விரும்பியமைந்திருக்கிறாய். நான் சொல்லுவது சரிடல்லவா? என்று நயமாய்ச் சொன்னான்.

சபையைப்பற்றி எனக்கு அக்கறை இடையாது! சபைக்கு மேலாக நான் என்னைப்பற்றி அக்கறைப்படுகிறேன்; ஆனால் எனக்குப் பணம் வேண்டியது. அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுப்பேனானால் நீங்கள் எனக்கு என்ன கொடுப்பீர்கள்? என்று அவன் கேட்டான்.

சந்தோஷம் தன் கண்களிற் பளிச்சென்று ஜொலிக்கக் காய்பா தன் ஆசனத்தை விட்டெழுந்து, என் மனிதனே நான் உனக்கு என்ன கொடுக்கலாம்? என்று ஆச்சரியத்தோடுக் கேட்டான்.

ஆனால் அன்னு, காய்பாவைப் பார்த்து, என் மகனே நான அவனை சரிப்படுத்திக்கொள்ளுவேன். உன்னைவிட இந்த விஷயத்தைப்பற்றி எனக்குத்தெரியும்என்றுக் கழுத்துக்கொண்டான். அதன் பின்பு அவன் தன் ஆசனத்தின்மேல் பேரயுட்கார்ந்து: அதற்கு அதிகத்தொகை தேவையில்லை உண்மையாக என் நல்ல மனிதனே, அவர் இருக்கும் இடம் நாங்கள் முன்னமே தெரிந்துக்கொண்டோம். ஆயினும் நீ எங்களுக்கு உதவிசெய்கிறவனாக இருக்கலாம், நாங்கள் உனக்கு அதற்காக உதாரமாய்க் கொடுக்க ஏற்பாடுசெய்திருக்கிறோம். இருபது வெள்ளிக்காசு உனக்குப் போதுமா? யென்ன சொல்லுகிறாய் என்றான்.

அந்த மனிதன் கீழே தரையை நோக்கி நின்றான். அது கொம்பக் கொஞ்சம். எனக்குத் தெரிந்திருக்கிறபோல உங்களுக்கு அவருடைய போக்கு வரவுகள் ஆகிய யாவும் தெரியாது என்றான்.

அதற்கு அன்னு உனக்குக் கொடுப்போம் என்று சொன்ன தொகையிற் பாதி இன்னுங்கூட தரும்படி அதிகப்படுத்துகிறேன். நீ அவரைப் பத்திரமாய் எங்கள் கையிற் காட்டிக் கொடுத்துவிடு [illegible]னக்குழப்பமில்லாதபோது காட்டிக்கொடு. நாங்கள் மெய்யாய் உனக்கு முப்பது வெள்ளிக்காசு கொடுப்போம். இது நல்ல தொகை. அசட்டை செய்யாதே என்று மெதுவாய சொன்னான்.

அந்த மனிதன் ஒரு விதச் சோம்பலுடன் தன் அழிச்சாலைகளைக் குழப்பிக்கொண்டு தன்னைச் சுற்றி யிருக்கிற ஐசுவரியவான்களாகிய சாகஸிகளே கள்ளத்தனமாய்ப் பார்த்தும் உத்திரவு ஒன்றும் சொல்லவில்லை.

அப்போது காய்பர், கடுந்தோபங்கொண்டு உச்சிரமாய்ப் பேச எத்தனிக்கையில் அன்னு, காலம் அவர்களுக்கு குளிர்ந்துப் போயிருக்கிறது. அவர்கள் குரலுங்கூட அவர்களுக்குள் மங்கிப் போயிருக்கிறது. நீ சிக்கிரமாய் முடிவுசொல்ல வேண்டும். எனென்றால் நாங்கள் வேறு ஏற்பாடுகள் செய்ய யோசிக்கிறோம். நீ முப்பது * வெள்ளிக்காசைப் பெற்றுக்கொள்ளுவாயா? பெற்றுக்கொள்ளமாட்டாயா? உங்கள் எஜமானன் எப்படியும் எப்போதாவது தண்டிக்கப்பட போகிறார் என்று சொன்னான்.

அந்த மனிதன் ஒரு விநாடிகாலம் மௌனமாய் இருந்து. பின்பு மெதுவாய்ச் சொன்னான்: கல்லது நான் அதைச் செய்வேன்; தொகைதான் கொஞ்சமாய் இருக்கிறது. ஆனால் நான் ஒரு ஏழை மனிதன். நான் எனக்காகவும் பார்க்கவேண்டும். இந்த இயேசுவைப் பின்பற்றினதில் அநேக மாதங்களை வீணே கழித்துவிட்டேன். அவரை மேசியாவென்று நான் நினைத்தேன்; ஆனால் அவர் அல்ல—அவர் அல்ல—அவர் அல்ல என்று சொல்லி சத்தம் அற்றுப்போனவனைப்போல் முழுமுழுத்தான்.

அதைக்கேட்டு அன்னு, நீ உனக்கும் எங்களுக்கும் இருபகுதி சீராருகும் காரியத்தை ஞானமாயும் சரியாயும் செய்தாய் என றெழுந்து ஒவ்வொரு கணுக்களும் நடுக்கமுற்றிருந்த கேடுகெட்ட அந்த நீசனிடம் நெருங்கிப்போய் நீ அரண்மனையை விட்டுப் போகிறதற்கு முந்தி உணவும் திராட்சரசமும் சாப்பிட்டுக் கொண்டுபோ. ஆனால் முதலாவது, உன் பெயர் என்ன? நீ அந்த நசரேயனுக்கு என்ன வேண்டும்! என்று கேட்டான்.

*அல்லது வெள்ளி நேக்கல்கள், இதை மாணாக்கி பணக் கணக்குபடி பதினேட்டு டாலர்களுக்குச் சமம். இந்தத் தொகை ஒரு அடிமைகுறிய நியாயமான விலையாம்.



என் பெயர் யூதாஸ்காரியோத்து, எப்போதும் அவரோடு கூட இருக்கிற பன்னிருவரில் நானும் ஒருவன் என்று அவன் தன் வார்த்தைகள் அன்னுவுக்கு பிடிப்படாவண்ணம் அவ்வளவு மெதுவாய் பதிற் சொன்னான்.

அதைக்கேட்ட அன்னு தன் கைகளைத் தேய்த்துக்கொண்டும், வெகு கவனத்தோடு இவைகளைக் கேட்டுக்கொண்டு தன்னைச்சூழ இருந்தவர்களை பார்த்துக்கொண்டும் அவரை எப்போதும் பின் பற்றுவோர்களில் நீ ஒருவன்! என்று ஜெய சிரிப்பு சிரித்தான். ஆ, நான் நினைத்ததைவிட இதமிக நேர்த்தியாயிருக்கிறது. இது மெய்யாகவே நன்று! இப்போது என் நல்ல மனிதனே, நசரேயர் இதையெல்லாங்குறித்து சந்தேகப்படாமல் இருப்பது முக்கியமானகாரியம். நீ அதை யறிந்திருக்கிறாய்; எனென்றால் நீ ஒரு தந்திரவாதி யுகையால் கவனத்தோடு நான் சொல்லப் போகிறதைக் கவனி. வழக்கம்போல நீ திருப்பிப்போய் அவனைக் கவனித்துக்கொண்டிரு. யாதொரு கலகமில்லாமல், ஜனங்களை எழுப்பிவிடும் சத்தமில்லாமல், பத்திரமாய், நான் பத்திரமாய் என்று சொல்லுவதைக் கவனித்தீ அப்படிப்பட்ட சமயத்தில் அவனை எங்கள் கைகளில் ஒப்புவித்துவிடு. நாங்கள் மற்றவைகளைக்குறித்து கவனித்துக்கொள்ளுவோம். அதற்குப் பின் உடனே அந்த வெள்ளிக்காசு உனக்குக் கொடுக்கப்படும். இதுதான் உண்மையாக பெருந்தொகை. அது உன்னுடையதாகும் என்று ஒருகாலத்தில் அந்த மனிதனுடைய கையில் வைத்தழுத்தினான்.

அதையவன் பேராசையோடுப் பிடித்துக்கொண்டு உற்சாகத்துடன் ஏதோ சொல்லிக்கொண்டான்.

ஆனால் அன்னு திருப்திகரத்தோடு சந்தோஷமாய் அறை யின் சதிவைத்திறந்து, இந்தா, மல்கூஸ் இந்தமனிதனுக்கு போதுமான ஆகாரமும் திராட்சரசமும் கொடுக்கப்பார் என்று அன்னு சொன்னான்.

ஆனால் இதைக் கேட்டு அந்தமனிதன் கோபத்தோடு காய்பர வினிடமாகத்திரும்பி, இல்லை நான் ஒரு பிச்சைக்காரனல்ல எனக்கு நீதியாய்க் கொடுக்க வேண்டிய தென்னவோ அதுதான்

எனக்குத் தேவை. பின்னுமவன் அன்னுவின் கண்களில் கூர்மையாய்ப் பார்த்து; அவன் கூறி: அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுப்பேன். அதைக்குறித்துச் சந்தேகப்படவேண்டாம். எனென்றால், நீங்கள் அவரை வெறுப்பதுபோலவே நானும் அவரை வெறுக்கிறேன்! என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் பாராமல், தனக்குப்பின்னே இருப்பவரைப் பாராமலே விரைவாகப் போய்விட்டான்.



## இருபத்துநான்காம் அதிகாரம்.

குழந்தையானவன் கோபத்தோடு தன் தாயின் உடுப்பின் தொங்கலை இழுத்துக்கொண்டு, அவளைப் பார்த்து: தாயே நான் வீட்டுக்குப் போகவேண்டும். இத்தனை நாழியாக நாம் என இங்கே இருக்கவேண்டும்? என்று சொன்னான்.

அதற்குத் தாய்: இல்லை, என் குழந்தாய், நீ பொறுமையுடனிருக்கவேண்டும், இதற்குமேல் நாம் செம்ப நேரங்கார்க்கவேண்டியதில்லை. இதோ பார் உனக்கு பலகாரம் இருக்கிறது. நீ அதைச் சாப்பிடும்போது திரும்ப நாம் இங்கே இருக்கிறதின் காரணத்தை உனக்குச் சொல்லுகிறேன். அது எனென்றால்,

உன் கடைசி காலம் வரைக்கும் நீ இந்தத் தினத்தை உன் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டுமென்று சொன்னாள்.

அதற்கு குழந்தை தன் தாயின் முகத்தை அண்ணாந்துப் பார்த்து பலகாரத்தைத் தின்றுக்கொண்டே அது என்ன என்று எனக்குச் சொல்லு என்றான்.

அதற்கு அவள் நீ மிகக்குழந்தையாய் இருந்த போது என் கோகோ, நீ மரணமடையத்தக்கவனாயிருந்தாய். அப்போது இந்த இயேசுவானவர் உன்மேல் கிருபைமாக்கினார், என்றாள்.

அப்போது குழந்தை நீ இதை அநேகந்தடவைகளில் எனக்குச் சொல்லியிருக்கிறாய்! எனக்கு இன்னொரு பலகாரம் கொடு எனக்குப் பசியாயிருக்கிறது என்றான்.

ஹும், என்மகனே, நான் உனக்குப் பலதடவைகளிற் சொல்லியிருக்கிறேன், எனென்றால் இந்த இயேசுவானவரே இரு நதிராமற்போவாரானால், நீ கல்லறையில் இப்போது படுத்துக் கொண்டிருப்பாய். நானும் பிள்ளையில்லாதவளாயிருக்க வேண்டும்! என் குழந்தாய்! கண் "அன்பே! என்று சொல்லிதாயாரானவள் இளகியமனதோடும் பசுத்தோடும் இரண்டினையெடுத்து பார்போடனைத்துக்கொண்டாள்.

அப்போது சிறுவன் தாயே, நீ என் அவ்வளவு கெட்டியாய் என்னைப் பிடிக்கிறாய்? என்று தன் கண்களின் மேலிருந்த தன் சுருட்டை முடியைத் தள்ளிக்கொண்டுக் கேட்டதோடு அதோ! ஐ! அந்தவழகுள்ள பசுவியைப்பார் என்றான்.

அதற்குத் தாய் அந்தப் பசுவியைப்பற்றி அக்கறைப்படாதே குழந்தாய், ஆனால் கேளு! இந்த இயேசுவானவர் இராஜாவும் மேசியாவுமாயிருக்கிறார். இன்றைக்கு அவர் இந்த மார்க்கமாய் வரப் போகிறார். நீ அவரைப் பார்ப்பாய் என்றாள்.

அதற்குக் குழந்தை, அவர் ஒரு இராஜா என்றால் அவர் இரு டம் நுண்டவாயிருப்பாரோ? என்றான்.

தாயானவள் குழந்தாய், அது எனக்குத் தெரியாது அவர்



அப்படிக் இரிடம் நுண்டவராயிருந்தாலும் இருப்பார். நாம் பார்க்கலாம். ஆனபோதிலும் ஆயிரமாயிரமான ஜனங்களைப் பார்! இதோ நமக்கு ஒரு கல்லை . இடமிருக்கிறது. அவருக்குச் சமீபமாயிருந்து நாம் அவரைப் பார்க்கலாம் என்றாள்.

அதற்குச் சிறுவன், இல்லை, நான் அதை விரும்புகிறவில்லை. நான் ஒரு இராஜாவைப்பார்க்க எனக்குக் கவலையில்லை. அதை விட நான் விளையாடுவதை விரும்புகிறேன். நாம் வீட்டிற்குப் போவோமாக; என்றான்.

இதற்குள் அவர்களுக்கருகாமையிலிருந்த வேறொரு ஸ்திரி குழந்தையின் தாயானைப்பார்த்து :—ஏனது! அதோ உன்டாகிற சத்தத்தைக் கேட்கிறாயா? அதோ அவர்கள் வருகிறார்கள்! என்றாள். அவர்கள் என்ன சொல்லிக்கொண்டு வருகிறார்கள் என்று கேட்க; அவர்கள் "தாவீதின் மைந்தருக்கு ஓசன்னா! ஓசன்னா! கர்த்தருடைய நாமத்திலே வருகிற அவருக்கு ஸ்தோத்திரம் உன்னதத்திலும் ஓசன்னா! என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள் என்று சொன்னான். ஆ! அப்படியானால், இது ஒரு ஆசீர்வதிக்கப்பட்டதினம்! நினைக்கும்போது நீயும் இதைப்பார்க்குபடி ஜீவித்திருக்கவேண்டும்! ஆனால் ஜனங்கள் ஒடுகிறதைப்பார்! அவர்கள் குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு போகிறார்கள்! என்று கூவினாள்

அப்போது அந்தச் சிறுவன் : தாயே அவர்கள் என் அப்படிச் செய்கிறார்கள் என்று திரும்பக் கேட்டான்.

அதற்குத் தாயானவள் : நீ என் தோளின்மேல் உட்கார்ந்துக் கொண்டுப் பார் இப்போது நீ ஒரு பெரிய மனுஷனைப்போல அவ்வளவு உயரமாயிருக்கிறாய். நான் பார்க்கக்கூடியதற்குமேல் தூரமாக நீ பார்க்கக்கூடும். நீ என்னைக் காண்கிறாய்? என்றதற்குச் சிறுவனைக் கேட்டாள்.

அப்போது அந்தச் சிறுவன் : அநேகமான ஜனங்கள் திரண்டு வருவும், அவர்களுக்கு மத்தியில் ஒருவர் கோவேறு கழுதையின் மேலேறிவருவும் நான் காண்கிறேன் என்று சொன்னான்.

ஆம்! ஆம்! காணுங்கூட காண்கிறேன். வருகிறவர் அயராயிருப்பாரோ! உங்கள் ஆசாரஞ்செய்துக்கொண்டும், மரக்கிளைகளோ அவருக்குமுன் பரப்பிக்கொண்டும் வருவதைப்பார்! தங்கள் வஸ்திரங்களைக் கிழித்து அவைகளை வழியில் * விரித்து வருவதையும் பார்! என்று இன்னொருத்தி சொன்னாள்.

இதற்குள்ளாக அந்தப் பலவீயானது அவர்களுக்கு வெகு சமீபமாகவந்துவிட்டது. அவருடைய சீஷர்களோடுமற்றெல்லா ஜனங்களும் உரத்த சத்தமாய் தேவனை ஸ்தோத்திரிக்கவும், களிகூறவும் ஆரம்பித்தார்கள். எவைகளால், அவர்கள் அவர் செய்யக்கண்ட மகத்துவமும் வல்லமையுமுள்ள கிரியைகளுக்காக அப்படிச்செய்தார்கள். பின்னும் அவர்கள் சொல்லிப் பாடியதாவது:—

ஓ யேகோவாவே, தாவீதின் மைந்தனுக்கு ஜீவனைக்கொடுத்தாரும்! யேகோவாவின் நாமத்தில் ஏற்பிக்கப்பட்டப்போகிற எங்கள் தகப்பனாகிய தாவீதின் இராஜ்யம் ஆசீர்வதிக்கப்பட்டதாயிருப்பதாக! யேகோவாவின் நாமத்தில் வருகிறவராக இராஜா ஆசீர்வதிக்கப்பட்டவராயிருப்பாராக.

உன்னதத்திலிருக்கிற தேவனிடத்திலிருந்து எங்கள் சமாதானமும் இரட்சிப்பும் வருகிறதாயிருக்கிறது! உயர்ந்த வானத்திலே இருக்கிறவரான அவருக்குத் துதியுண்டாவதாக! உயர்ந்த வானத்திலே இருந்து உம்முடைய இரட்சிப்பை இப்போதே தீர் அனுப்பியருளும்! என்பதேயாம்.

இவ்விதமாக அவர்கள் ஆரவாரித்துக்கொண்டு வருகையில், தாயாரானவள், குழந்தாய் அவனைப்பார்! அவனே இராஜாவும், அவரே மேசியாவுமாயிருக்கிறார்! என்னோடுகூட நீயும் சொல்லு, சத்தமாய் சொல்லு என்று இராஜாவுக்கு ஓசன்னா! தாவீதின் மைந்தனுக்கு ஓசன்னா! என்றார்கள்.

* நகர் பிரவேசஞ் செய்யும் இராஜாக்களுக்கு நடத்திவந்த மரியாதை அங்கிகாரத்திற்கு அடையாளமாம்.



இப்படியாயிருக்கையில், ஸ்திரியே நீ பேசாமலிரு; நீ உன் குற்றமற்றகுழந்தைக்கு தேவனுடைமையைக் கற்பிக்கவும், பைத்தியம் பிடித்தவளா; என்று சொல்லுவதைக்கேட்டாள்.

அதைக்கேட்ட அந்த ஸ்திரியானவள் கடினமான அந்த வார்த்தைகளால் திகைக்கிட்டு திரும்பி அப்படிப்பேசியது இன்னாரென்று பயத்துடன் பார்க்கும்போது அவ்வாறு பேசினவன் ஒரு பரிசேயன் என்று அவள் கண்டாள். அவள் அந்தச் சிறுவனைத் தன் மார்போடணைத்துக்கொண்டு அந்தப் பரிசேயனைப் பார்த்துச் சொன்னதாவது:—

நீ சொல்லுகிறது என்ன என்று எனக்குத் தெரியவில்லை. அவர்தான் என் பிள்ளையை இரட்சித்தவர். ஆகையால் நான் அவரைப் போற்றிப் புகழுகிறேன் என்று சொன்னாள்.

ஆனால் அந்த மனிதன் அவளுடைய பதிலுத்திரவைச் சற்றுங் கவனிக்கவில்லை. அவன் ஆண்டவரைச்சுற்றி நெருங்கிப்போய்க் கொண்டிருந்த ஜனத்திரளோடுகளாளி முன்னுக்குச் சென்றுக் கொண்டிருந்தான். அப்போது அவன் இவர்களை சொல்லுகிறதென்னவென்று உனக்குக் கேட்கிறதா? அவர்களைப் பேசாதிருக்கும்படிச் சொல்லு என்று கோபத்துடன் கத்தினான்.

ஆண்டவர் தாமே அவனைத் திரும்பிப் பார்த்து: இந்த ஜனத்திரள் பேசாமலிருந்தால், அந்தக் கற்கள் உடனே அந்தச் சத்தத்தைப் பிரதிபலிக்கும் என்று நான் உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுது, உனக்குக் கிடைத்த இந்த காலமாவும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்போதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. உன்னைச் சந்திக்கும் காலத்தை நீ அறியாமற் போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சுழ மதிற் போட்டு, உன்னை வளைத்துக்கொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்

போட்டு, உன்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார்."

அவர் எருசலேம் நகரத்திற்குள் வந்தபோது, நகரத்தாரெல்லாம் வரும் அசைவற்று, இவர்யார்? என்றார்கள். அப்போது அந்த ஜனத்திரள்: கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்த தீர்க்கதரிசியாகிய இயேசு இவர்தான் என்று சொன்னார்கள்.

அவருடன் சூழ்ந்துவந்த ஜனத்திரளின் ஆர்ப்பரிப்பின் சத்தமும், ஸ்திரீகளும் நகரவாசலுக்குட் பிரவேசித்தவுடனே நின்றுபோயிற்று. நகரத்திலுள் வந்த ஜனத்திரளில் ஒருவன் அந்திய தேசஉடைதரித்தவனாய், இந்தக் காட்சியின் பிரமிப்பைக் கூடஇருந்து பார்த்தவனுக்குத் தன்னுடைய மற்றத் தோழர்களின் பக்கமாய்த் திரும்பி! கிரேத்தர்காள், இதைக் குறித்து நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? என்று ஊக்கத்துடன் விஞ்சினான்.

இது ஒரு ஆச்சரியமான காட்சி. இத்தப் புருஷோத்தமரே! அவருடைய முகம், பூமியிலிருந்து கண்டானவருடையது தாயிராமல், வேறு சமுகமுடையதாயிருக்கிறது. இவரைப்பற்றி நீங்கள் யாதாம் அறிந்துக்கொள்ளவேண்டாமா?

நான் கேளவிப்பட்டிருக்கிறபடியே, என் அப்போஸ்தலர்களுடைய வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறவரும், அநேகக் காலங்களாக அவர்களால் எதிர்பார்க்கப்பட்ட உண்மையான மேய்ப்பராகிய பிரபுவானவர் இவரே. இப்போதும் அவர் தம்முடைய இராஜ்யத்தின் சிங்காசனத்தை எருசலேமில் ஸ்தாபிக்கவேண்டுமென்று அவர்கள் ஆவலோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நான் அவரைப் பார்க்க பயபக்தியுள்ளவனாய் அவருடைய சமுகத்தில் நிற்கிறேன்.

நான்கூட, என் ஆந்திரோனிக்கேஸ், அப்படித்தான். ஆனால் அது எப்படியாகும்? நாம் புறஜாதியாரும் நம் முற்பிதாக்களுடைய மேய்ப்பனுக்கு விரோதமாய் எழும்பினவர்களாயிருக்கிறோம். ஆனாலும் நம்மேல் அவனிடத்திற்கு மனஸ்திருப்பப்பட்டவர்களாயிருக்கிறோம். அப்படியிருக்க யூதருடைய இராஜாவாகிய இவர் நாம் கும்மண்டை வர இடங்கொடுப்பாரோ? என்று வேறொருவன் கேட்டான்.

அதற்கு அப்லீஸ், ஏனக்கதெரியாது. ஆனால் அவர் இன்னும் இராஜ மகிமையைத் தாம் தரித்துக்கொள்ளவில்லை. குழந்தைகளும், ஸ்திரிகளும் பயமில்லாமல் அவரைக் கிட்டிச்சேருகிறார்கள் என்பதை நீ பார்க்கவில்லையா? என்று சொன்னான்.

இதுவரைக்கும் பேசாமலிருந்த வேறொருவன்: அது மெய்தான் அவர் இராஜாவாயிருப்பாராகில், அவர் இந்தப் பூமியிலுள்ள இராஜாக்களிலிருந்து பிரத்தியேகப்பட்டவராக இருப்பார் போலும். அவருடைய தோழர்கள் தாழ்மையுஞ் சீலமுள்ளவர்களுமாயிருப்பார்கள். அவர்களில் ஒருவன் எனக்குத் தெரியும் அவன் பிலிப்பு என்ற கிரேக்க நாமங் கொண்டவன். அவனையே தேடி அதைப்பற்றி அவனிடத்தில் அதிகமாய் விசாரிக்கலாம். அப்படியாக அவர்களெல்லாரும் நகரத்திற்குட் பிரவேசித்து தேவாலயத்தைத் தேடிப்போனார்கள். ஏனெனில், பிலிப்பு என்ற அந்த மனிதனை அங்கே கண்டு பிடிக்கலாமென்று நோக்கத் தோடு போனார்கள்.

அவ்விதமாக அவர்கள் தேவாலயத்தில் புறச்சாதியாருடைய பிரகாரத்திற் போனதும் அவர்கள் பேசிக்கொண்டிருந்த அந்த பிலிப்பு உட்பிராகாரத்துக்குள்போக ரூபஸ் என்பவனுடைய கண்கள் உடனே அவனைக் கண்டது. அவன் பிரவேசித்த அந்த இடத்திற்கு இந்த அந்திய நாட்டவர்கள் போகக் கூடாது. ஆகவே, ரூபஸ் தூரிதமாய் முன்னுக்குப் போய் அவனையவன் தோளின் மேல் தொட்டு மெதுவாக, கல்ல சிநேகிதனே, உம்மோடு ஒரு வார்த்தைப் பேசவேண்டுமென்றான்.

பிலிப்பு உடனே திரும்பி, மங்கலில்லாத அந்தக் கோக்க னைப்பார்த்து கொஞ்சம் பின்னுக்குத்தள்ளி சற்றுக்குனிந்தாப் போல, ஆ ரூபஸ், நீயா! என்ன பேசப்போகிறாய்? என்றான்.

அதற்கு ரூபஸ், நான் உம்மோடு ஒரு நிமிஷம்போல் பேச வேண்டியதாயிருக்கிறது. நானும் என்னைப்போல யூதமார்க்கத்

நிற்றுப்பட்ட சிலரும் பண்டிகைக்கு வந்திருக்கிறோம். இன்று நாங்கள் நாசரேத்தூர் ரிக்கதரிசியாகிய அவர் நகரத்திற்குட் பிரவேசிக்கக் கண்டோம். அங்கே நாங்கள் அவரைப்பற்றி சில விபரீதங்களைக் கேள்விப்பட்டோம். ஆகவே நாங்கள் அவரைப் பற்றி யறியும்படி, "ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அவனைக் கேட்டுக்கொண்டார்கள்."

பிலிப்பு வருத்தத்தோடி அவனைப்பார்த்து: நிதேவிதனே நீ ஒரு புறச்சாதியானாயிருக்கிறாய். அதுமாத்திரமல்ல நீ விக்கிர காராதனையை விட்டு மெய் விசுவாசத்திற்குத் திருப்பப்பட்டி ருக்கிறாய். இது எப்படியாகுமோ எனக்குத் தெரியவில்லை. ஆயி னும் கொஞ்சம் பொறு! எங்கள் கணக்கில் இருக்கும் இன்னொரு வரோடு நான் யோசித்து வருவேன். இங்கே காத்திரு. நான் வெகுசீக்கிரமாய் திரும்பிவருவேன் என்று சொல்லி வெளியே வந்து அங்கிருந்த ஜனக்கிரளினூடே அந்த ஆளைப் பார்க்கமுடியா மல் கொஞ்சம் தேடிவிட்டான்.

அந்தக் கிரேக்கன் தன்னுடன் தோழருக்கு சைகைகாட்டி என் அப்லீஸ் கீர்த்தியாயமாய்ச்சேர்ந்தான் என்று கண்டுபுற்றவனுக்குச் சொன்னான். அவர்களுடைய பிரகாரத்துக்குள்ளே நாம் அந்நி யர்களாயிருக்கிறோம் என்பதை அவர்கள் மறக்கவே முடியாது.

அப்படியானால், அவர் நம்மை ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று மிகவும் சமாற்றப்பட்டுபோனவனைப்போல அப்லீஸ் சொன்னான். பின்னும் அவன் நான் இனி எப்போதும் இங்கே வராமலிருப் பது சரி, நாம் இங்கே இருந்து புறப்பட்டுப் போய்விடுவோமாக என்றான்.

இல்லை, கிரேக்கனே நீ ரொம்ப ஆத்திரக்காரனாயிருக்கிறாய் என்று அந்த எரிச்சலுள்ள வாலிபனைப் பார்த்து ரூபஸ் மிரித்துக் கொண்டு சொல்லி, நாம் இங்கே வந்ததற்கு காரணத்தை நிச்ச யமாய் அறிந்துகொள்ளும் வரைக்கும் நசரேயருடைய தோழன் நமக்குச் சொன்னபடியே நாம் இங்கே காத்துக்கொண்டிருக்க வேண்டியவர்களாயிருக்கிறோமே. அதைவுமல்லாமல் நான் ஒரு புறச்சாதியானென்று அவன் எனக்குச் சொல்லியுமிருக்கிறானே.



அந்த வார்த்தையை நான் வெறுக்கிறேன்! ஆயினும் பார்! அவன் தன்னோடி வேறொருவனைக் கூட்டிக்கொண்டு திரும்பிவரு கிறான் என்றான்.

அப்போது பிலிப்பு ஓடி அவர்களுக்கு சொன்னது: நாங் கள் உன்னைப்பற்றி ஆண்டவரோடி பேசினோம். தேவாலயத் தின் உட்பிராகாரத்துக்குள் அவர் இருக்கிறபடியால் நீ அங்கே போவது நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாயிருக்கிறபடியால் அவர் காமே உன்னண்டைக்கு வருவார். அவர் எப்போதும் இரக்கமுள்ளவரும், தாழ்மையுள்ளவர்கள்மேல் பட்சாதாபமுள் ளவருமாயிருக்கிறார் என்று சொன்னான்.

அதைக் கேட்டபோது, கர்வமும் ரோஷமுமுள்ள அப்லீஸ் என்பவனுடைய முகம் சிவந்தது. ஆனால் அந்திரோனிக்ஸ் மாறுத்திரவாக பிலிப்புவைப் பார்த்து:—

உன் ஆண்டவர் எங்களைக் கனப்படுத்துகிறார். நாங்கள் புறச்சாதியாரா யிருந்தபோதிலும் அவருக்குப் பிரியமான கொஞ்ச ஊழியஞ்செய்யலாமே என்றான்.

அதற்குப் பிலிப்பு உத்திரவு ஒன்றும் சொல்லாமல் இந்தப் பரிவசங்கொண்டவனுடைய முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு மேசையிருந்து பின் தன் கண்களை நிமிர்த்திப்பார்த்து: ஆண்டவர் அதிசமீபமாய் வருகிறார் என்றான்.

அப்போது அந்தக் கிரேக்கர் பிலிப்பு தங்களுக்குக் காட்டிய பாரிசமாக வுக்கமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்தப் பக்கத்திலே இருந்த அவர்கள் தாங்கள் காணவேண்டுமென்று வார்த்தைக்கொண்டிருந்த இயேசுவானவர் அவர்களிடம் சேருங்கி வருவதைக் கண்டார்கள். அப்போது அவர்கள் மிக மரியாதை யுடனும் தாழ்மையுடனும் அவருக்கு முன்பாக வணங்கினார்கள். இயேசுவானவர் தம்முடைய கண்களை வானத்திற்கு நேராக உய ர்த்திச் சொன்னது:—

"மனுஷகுமாரன் மகிமைப்படுகிறதான வேளை வந்தது என்றார்."

பின்னும் அவர், தமக்குமுன் நின்றவர்களிலுடையது வாக்க முள்ள முகங்களை தேடிப்பார்த்து, "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். சோதுமை மணியானது நிலத்தில் விழுந்து காகாவிட்டால் தனித்திருக்கும், செத்தபோ யால் மிகுந்த பலனைக் கொடுக்கும். தன் ஜீவனைப் பிரேமிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறு க்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான். ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப் பின்பற் றக்கடவன், நான் எங்கேயிருக்கிறேனோ அங்கேதான் எனதூழியக்கார னும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்," என்று சொல்லி சற்று நேரம் சும்மாயிருந்து எதையோ மறந்துவிட்டவனைப்போல நிதானித்து மேகங்கள் அகன்று இருந்த சுத்தமான வானத்துக்கு நேராய்த் தமது முகத்தை உயர்த்தி பச்சாதாபமுள்ள சாந்தத்தோடுங்கூடிய குரலோடு மறுபடியும், "இப்பொழுது என் ஆத்துமா கலங்கு கிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையி னின்று என்னை இரட்சியும் எனறு சொல்லுவேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்று பிரார்த்தித்தார்.

அதற்குப் பின்பு எல்லாவற்றிற்கும் எல்லாருக்கும் சூரியப் பிரபைக்கு மேலேயுமிருந்து அளவற்ற அண்ட விஸ்தாரமான இடங்களையும் நிரப்பத்தக்க ஒரு பெரிய கனிவுள்ள சத்தம் முழங் கக் கேட்டது. அந்தச் சத்தம்: "மகிமைப்படுத்தினேன், இன் னமும் மகிமைப்படுத்துவேன்" என்று முழங்கிற்று.

இவ்விதமாக அந்தக் கிரேக்கர் அவருடைய பிரார்த்தனையை யும் அதற்கு உன்னதத்திலிருந்து வந்த மறுத்திரவையுங் கண்டு பயங்கொண்டவர்களாகி அசர்ந்தார்கள். அவர்கள் இயற்கையா கவே தங்கள் கைகளால் தங்களுடைய முகங்களை மூடிக்கொண்டு தரையிலமேற சாய்ந்தார்கள்.

அந்தக் காரணியைக் கவனித்துக்கொண்டிருந்த அக்கேந்ற



யுதரரிகளில் ஒருவன் அது இடி இடிக்கிறது என்று விரோத மாகச் சொன்னான்.

மற்றவர்களோ, அவர்களுடைய மூச்சைக் கிழடக்கி, ஒரு தேவதூதன் அவரோடு பேசினான் என்று முணுமுணென்று சொல் லிக்கொண்டார்கள்.

அப்போது ஆண்டவர் அவர்களை நோக்கி: "இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று. இப்பொழுதே இந்த உலகத்திற்கு நியாயித்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படு வான். நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல் லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்."

அவர் சொன்னதைக் கேட்ட அங்கிருந்த ரபீகளில் ஒருவன், "கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம். அப்படியிருக்க மனுஷ குமாரன் உயர்த்தப்பட" (சிலுவையில் அறையப்பட) "வேண்டிய தென்று எப்படிச் சொல்லுகிறீர்? இந்த மனுஷகுமாரன் யார்?" என்றார்கள்."

"அதற்கு இயேசு: இன்னும் கொஞ்சகாலம் ஒளி உங்களி டத்தில் இருக்கும். இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்; இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான். ஒளி உங்களோடிருக் கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத் தில் விசுவாசமாயிருங்கள்" என்றார்."

அதன் பின்பு இந்த ஜனத்தாருக்கு இன்னுங் காணப்படாத படி அவர்களை விட்டு விலகிப் போய்விட்டார்.

அந்தக் கிரேக்கர் தேவாலயத்தை விட்டு புறப்பட்டு தங்களு க்குள்ளே ஊக்கத்தோடு தாங்கள் கண்டவைகளையுங் கேட்டவை களையுங்குறித்து சிந்தித்து பேசிக்கொண்டு போனார்கள். நாம் அவனைத் திரும்ப பார்த்து பேசலாம்படிக்கு நாம் எருசலேமிலேயே தரித்து இருப்போமாக என்றார்கள்.

ஆனால் யூதர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. எனெனில் அவர் ஒளியைப் பார்க்கக்கூடாதபடி அவர்களுடைய கண்கள் குருடாக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய இருதயம் விரோதத்தினாலும் கசப்பினாலும் நிறைந்திருந்தது.

வானத்திலே இருந்து கேட்ட அந்த அசரீரி வாக்கினிமித்தம் யெகோவாயத்தின் தலைவர்களிற் சிலர் அவர்மேல் விசுவாசமைத்தார்கள். ஆனால் அவர்கள் அவரைப்பற்றி அறிக்கையிட அணியவில்லை. எனெனில் பரிசேயர்களுக்குப் பயந்திருந்தார்களே. மெய்யாகவே அவர்கள் தேவனிடத்திலிருந்து வரும் மகிமையைப் பார்க்கிலும் மனுஷரால் வரும் மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்.



## இருபத்தைந்தாம் அதிகாரம்.

ஆசோ ஒரு தண்ணீர்குடம் சுமந்துவருகிற ஒருமனிதன் வருகிறான். அவனை நீ பார்க்கிறாயா? அவன் இந்த வழியாய்த்தான் வருகிறான் என்று யோவான் சொல்ல, பேதுரு தனக்கு யோவான் காட்டியப்பக்கமாக ஊக்கமாய்ப் பார்த்து, அவன் இருக்கிறானென்கிறதை நான் பார்க்கிறேன். நாம் சீக்கிரமாய் அவனைத் தொடர்ந்து போவோமாக. இல்லாவிட்டால் நம்முடைய பார்வைக்கு அவன் தப்பிப்போய்விடுவான் என்றான்.

ஆகவே அவ்விருவரும் அந்த மனிதனைத் தொடர்ந்து போனார்கள். அவன் அப்போது ஒரு ஐசுவரியமுள்ள குடிமகன் வாசம் பண்ணின ஒரு வீட்டின் வாசற்படிக்குமுன் நின்றுகொண்டிருந்தான். அவ்விருவரும் தைரியமாய் அந்தக் குடம் அல்லது பாத்திரத்தை அசைத்துக்கொண்டிருந்த மனுஷனுக்குப் பிறகாலே பிரவேசித்தார்கள். அவன் ஆச்சரியத்தோடே அவர்களைத் திரும்பிப் பார்த்தான்.

அப்போது பேதுரு, நாங்கள் இந்த வீட்டின் எஜமானைப் பார்க்க விரும்புகிறோமென்ற அதிகாரத்தோடு சொன்னான்.

அதற்கு அந்த மனிதன் பிரம்மணங்கி, நல்ல ஐயமார்களே, நான் போய் அவனை அழைத்துக்கொண்டு வருகிறேன். நீங்கள் இங்கே சற்றுப் பொறுத்திருங்கள் என்று அவ்விருவரையும் ஆச்சரியத்தோடு பார்த்து அவன் சொன்னான்.

அங்ஙனமே அவன், போய் திரும்பி வருகையில் தன்னோடு ஒரு வயோதிபனை அழைத்துக்கொண்டு வந்தான்.

அப்போது பேதுரு தன் கண்களால் தூரமாயோதிபனைப் பார்த்து; இந்த வீட்டின் எஜமான் நீரோயாளுல உமக்கொரு செய்தி நான் கொண்டுவந்திருக்கிறேன் என்று சொன்னான். அந்த வயோதிபன் தன் தலையைக் குனிந்துக்கொண்டு நீ சொல்லு நான் கேட்கிறேன் என்று மறு உத்திரவு சொன்னான்.

அதற்குப் பேதுரு : நான் என் பிதாவோடுகூடப் பஸ்காவை புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்திற் கேட்க சொன்னார் என்று சொல்லுகிறவனை எங்களோடும் அனுப்பினீர் என்பதே உமக்கு கொண்டுவந்த செய்தி என்றான்.

அதைக்கேட்ட அந்த வயோதிபன் தலைக்குத்தானே முழுமுழுத்தான் இதே வார்த்தையை நான் என் கனவிலே கேட்டேன்; இதோ அந்த அறையை ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறேன். அங்கு ஆயத்தமாயிருக்கிறது எங்களுக்கு யாருங்கள் என்று சொன்னான்.

அந்தப்படியே அவர்கள் அவ்விடம் போனார்கள், அவன் அவர்களுக்கு, பஸ்கி யாரும்படி வேண்டியிருந்தவைகளெல்லாம் ஆயத்தமாக்கப்பட்டிருந்த ஒரு பெரிய மேல் அறையைக் காண்பித்தான். அவர்கள் அவ்விடமே பஸ்காவை ஆசரிக்க இன்றுப் வேண்டிய துயத்தம்பண்ணினார்கள்.

சாயங்காலமேலோ வந்தபோது இயேசுவானவர் தம்முடைய பன்னிரு சீஷரோடுகூட பந்தி யமருகிறவராக அவ்விடத்திற்கு வந்தார். அவர்கள் யாவரும் அவரைச்சுற்றிலே வந்தபோது, வழக்கம்போல் மேசையின் பக்கமாய் சாய்ந்து உட்கார்ந்தார்கள். இயேசுவானவர் அவர்கள் வரிசையின் மத்தியில் உட்கார்ந்து, தம்முடைய பன்னிரு சீஷரையும் பார்த்துச் சொன்னதாவது: நான் பாடு படுவதற்குமுன்னி ஆவலாய் உங்களோடு இவைப் பஸ்காவை புசிக்க ஆவல்கொண்டிருந்தேன். சொல்லுறேன், இனி ஒருபோதும் இவ்விதமாய் உங்களோடு புசிப்பதில்லை யென்றும், தேவனுடைய இராஜ்யத்தில் இது நிறைவேறுமளவும், நான் இதைப் புசிப்பதில்லை யென்பதும் உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்.

அவர்கள் போஜனம் பண்ணுகையில், "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுக்கப்போகிறான்" என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றுரைத்தார்.

இப்படியாக அவர் சொன்னதைக்கேட்ட அவர்கள் யாவரும் ஆச்சரியப்பட்டு அதிக துக்கங்கொண்டவர்களாய் ஒருவரையொருவர் பார்த்து, ஒவ்வொருவரும் "ஆண்டவரே நானோ?" என்று



கேட்டார்கள். இந்தச் சமயத்தில் ஆண்டவரால் அதிகமாய் நேசிக்கப்பட்ட யோவான் பந்தியில் அவருக்கடுத்தாபோல உட்கார்ந்திருந்தான்.

பேதுரு அவனைக் கவனமாய்ப் பார்த்து, இயேசுவானவர் யாரைப்பற்றி அப்படிச் சொன்னாரென்று அவரைக் கேட்கும் படியாய் அறிவித்தான்.

அப்போது யோவான், ஆண்டவர் தவிர மற்றெவரும் கேட்காதவண்ணமாய் மெதுவாக "ஆண்டவரே, யார் அவன்?" என்று கேட்டான்.

அதற்கு இயேசுவும் தமது மெல்லியக் குரலால், "இக்கத் துணிக்கையைத் தோய்த்து யாருக்குக் கொடுக்கிறேனோ அவனே என்று இக்காலம் வரைக்கும் யூகருக்குள் வழங்கிவருகிறபடி, அவனுக்குமுன் ஒரு மெல்லிய அப்பத்தைப் பிட்டு, துணிக்கை யொன்றை யெடுத்துச் சுருட்டி தாலத்திற் போட்டு, யூதாஸ் ஸ்காரியோத்தினிடத்திற் கொடுத்தார்.

அவனே, அவனே ஒருபோது நேசித்தவருடைய கரத்திலிருந்து சிநேகத்தின் சின்னமாக அதைவாங்கினவுடனே யூதாஸுக்குள்ளிருந்த எல்லாவித பயங்கரமான துர்ச்சகுனங்களும் கட்டவிழ்க்கப்பட்டன போலாயிற்று. அவனுடைய தீய ஒளிநிறைந்த அவனுடைய கண்களோ விரைத்து விழித்துக்கொண்டு பார்த்தான். இயேசு அவனைப் பார்த்து அமர்ந்தாபோல மெல்லிய சத்தமாய் "நீ செய்யவேண்டியதைச் சீக்கிரமாய் செய்" என்று அவனுக்குச் சொன்னார். அவனுடைய கண்களிலிருந்து புறப்பட்டப் பார்வை சகிக்கக்கூடாததா யிருந்தது. யூதாஸ் அறையைவிட்டு வெளியே புறப்பட்டுப் போய் அந்த இருட்டில் எதோ தனக்குள்ளே பயங்காரமாயுளறிக்கொண்டு வெகு அவசரமாய் போனான்.

அவன் போய்விட்டபிறகு இயேசு மீதியான பதினொருவரையும் பார்த்து: "இப்போது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார்." "பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு

நீங்கள் வரக்கூடாதென்றும்" "நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்றுஞ் சொன்னார்.

"அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப்புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.

பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்களெல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லை யென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."

இதற்குப் பின்பு பேதுரு யேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போகப்போகிறீர் என்று கேட்டான். எனென்றால் அவன் மற்றவர்களைப்போலவே தன் மனங்குழம்பினவனாய்த் தூக்கமாயிருந்தான்.

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது நான் எங்கே போகிறேனோ அங்கே நீ என்னோடு வரமுடியாது, ஆனால் அதற்குப்பின்பு நீ என்னைப் பின்பற்றிவருவாய் என்று சொன்னார்.

அப்போது பேதுரு: நான் என் இப்போது உம்மோடு வரக்கூடாது ஆண்டவரே! என்று வற்புறுத்தி ஆவலோடு கேட்டுக் கொண்டான். உமக்கு நித்தம் என் ஜீவனையும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேனென்றான்.

அவன் அப்படிச் சொன்னதைக் கேட்டு, இயேசு துக்கம் நிறைந்தவராய் அவனைப் பார்த்து: "மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் தறிடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி,



இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள். ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார்."

அதற்குப் பேதுரு கவராக்கிய வார்த்தையோடு: "எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றான்."

அப்போது ஆண்டவர் அவனுக்கு எச்சரிக்கையாக; "சீமோனே, சீமோனே, இதோ; கோதுமையைச் சல்லடையிலே புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான், நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்."

ஆனால் பேதுரு மறுபடியும் ஆண்டவரை நோக்கி: "ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்."

அப்பொழுது இயேசு விசனத்தோடு அவனை நோக்கி: "இன்றைக்கு இந்த இராத்திரியிலே, சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்கு முன்னே, நீ மூன்றுதரம் என்னை மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்."

அதற்குப் பேதுரு மிகவும் அலட்சொண்டவனாய்: "நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கவே மாட்டேன் என்று உறுதியாய்ச் சொன்னான்; எல்லாரும் அப்படியே சொன்னார்கள்."

அப்பொழுது இயேசு தாம் எடுபட்டுப் போனபின்பு வருங்காலத்தில் அவர்கள் படவேண்டியப் பாடுகளெல்லாவற்றையும் அறிந்து சிந்தை மிக நொந்தவராய் அநுதாபங்கொண்டு அவர்களுக்கு இன்பந் தரத்தக்கதானவைகளையும் மனங் குளிரப்பண்ணக்கூடிய விஷயங்களையும் உபதேசித்துச் சொன்னார். அவர் சொல்லியவைகளோ அவர்கள் கொஞ்சநேரத்திற்குள் நேரிட்ட பயங்கரங்களையுங் கண்டு மறந்து விட்டபோதிலும், அவைகள் எல்லாம் நடந்தேறிய பின்னர் யோவான்

அவர் தங்களுக்குச் சொல்லியனுப்பிய சொல்லாவற்றையும் நினைவு கூர்ந்து எழுதியிருக்கிறான். அவர்கள் இரவாள் வரைக்கும் காம் வாலிக்கத்தக்கதாக மனக்குக் கிடைத்திருக்கிறது. அவ்வாறே அவர்களுக்கு உபதேசித்தபோது அவர் அப்படியே நேபமும் அவர்களோடு செய்தருளினார். பின்பு அவர்கள் ஒரு கலைநி பாட்டைப் பாடினார்கள். அப் முடிந்தவுடன் அவ்விடத்தில் புறப் பட்டுப்போனார்கள்.

இப்பொழுது அவர்கள் ஒலிவமலைக்கு வந்தபோது, கெத்சே மனே, என்ற தோட்டத்திற்குள் சென்றார்கள். அந்தத் தோட்ட மானது எண்ணெய் ஆட்டி வடிக்கும் செக்கு என்று திருப்பப்பட் டிருக்கிறது. எதென்றால், அங்கே பெரிய ஒலிவமரங்கள் அதேக மாய் வளர்ந்துள்ளன; அங்கே ஒரு தொட்டி கல்லினால் செய்யப் பட்டிருக்கிறது. ஒலிவப் பழக்காலங்களில் நூற்றிய ஒலிவக் கொட்டைகளிலிருந்து அத்தொட்டியிலாட்டி எண்ணெய் எடுப் பது வழக்கமாயிருந்தது.

அத்தோட்டமானது அமைதியும் சமாதானமுள்ள இடமான இடமாயிருந்தது. ஏனென்றால், தாம் ஜெபிக்கவும் இரவைப்பாறவுந் தக்க இடமாக அதில் நிதவும் பிரியங்கொண்டவராயிருந்தார்.

அந்தத் தோட்டத்தில் அப்பெரிய பஸ்காபண்டிகை நிறைவே றுகிறதினால் தூணமான தனது ஒளியை வாளாமாகப் பிரகா சிப்பித்தது. அல்லெளியானது புதிய இலைகளின் வழியாய் அழைந்து ஜேயுள்ள தலையின் மீது வெள்ளி பில்லைகளைப் போல் அங்கு மிங்கும் விழுந்துப் பிரகாசித்தன.

அவர்கள் தோட்டத்திற்குள் பிரவேசித்தவுடனே, தமது சகோதரனைப் பார்த்து; "நான் நெடுப்பண்ணுமளவும் இங்கே உட்கார்ந்திருங்கள்" என்றார்.

பின்பு அவர் தம்முடன் பேதுரு, யாக்கோபு, யோவான் என்ற மூவரையும் அழைத்துக்கொண்டு கலைகள் நிறைந்த ஒலிவ மரங்களுக்கு ஊடேசென்று அப்புறம் போய்; "என ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்ற கடை



யில் சொன்னார். அவருடைய கண்கள் முகத்தினுல் நிலைத்து மங்கின. "நீங்கள் இங்கே தங்கி, விழித்திருங்கள்" என்று அம்மூன்று பேருடனே சொன்னார். அவர்கள் மூவரும் அவருடைய பிரியத்தின்படியே பிருதுவான இளம்புற்களின்மீது அவருடைய கட்டளையின்படியே தங்கியிருந்தார்கள்.

அவர் "அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் அப்புறம்போய் முழங்காற்படியிட்டு: பிதாவே, உமக்குச் சித்தமானுல் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னு டைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவது" என்று ஜெபம்பண்ணினதை அவர்கள் கேட்டார்கள்.

அவர்கள் அங்கே தூரமாய் உட்கார்ந்து விழித்துக்கொண்டி ருந்தபோது, அவர்கள் தெளிவாய் எதையும், அதற்குப்பின் கேட் கவும் பார்க்கவுங் கூடாதபடிக்குக் கன நித்திரையின் ஆவி யவர் கள் மேல் வந்து விட்டது. அவர்கள் தோட்டத்தில் தனித்திருந்த வருடைய வணங்கிய உருவத்தின்மீது பிரகாசிக்கும் உடைதரித்த தேவதூதனுவன் வந்து வணங்கி நிற்பதை மங்கலாய்ப் பார்த் தார்கள். அதில் அவர்தானே அல்லது வெள்ளியைப்போல மிளிரு கும் சந்திரகிரணங்களின் ஒளி மரக்கிளைகளின் வழியாய் அப்படி க்காணப்படுகிறதோவென்று நிதானிக்கிறவர்களாயிருந்தார்கள் எனென்றால், அவர்களுடைய ஆவி விபரீதமான தூக்கத்தின் மயக் கம் அவர்களை மேற்கொண்டிருந்தபடியால் தூண்டவருடைய வேதனையை கொஞ்சமாய் அறிந்திருந்தும் அசையக்கூடாதவர் களாயிருந்தார்கள்.

அவர் அங்கே அநுபவித்த அந்தப் பாடுகள் அந்த அவஸ்தைப் போன மனிதர்களுக்கு அவர்களுடைய நித்திரை மயக்கத்தினுல், தெரியாமற் போயிற்று? அல்லது அந்த அதி இரகசியமும் பரி சுத்தமுமான காட்சி அழிவுள்ள அவர்களுடைய கண்கள் காணக் கூடாதபடி சர்வவல்லமை அதை அவர்களுக்கு மறைத்ததா? அதெப்படியிருந்தாலும் இருக்கலாம், ஆயினும் இயேசுவானவர் பூண்பட்ட நெஞ்சினராய் வேதனையோடி மனுஷிய பச்சாதா பத்தை காட்டிவருகையில், அவருடைய ஆத்தும வேதனையினுல்

அவருடைய நெற்றி சிவந்து என்ன இரத்தமாயிருந்தது. தாம் "விழித்திருங்கள்" என்று சொல்லிவிட்டுப்போன சீஷர்களிடம் வந்து அவர்கள் நித்திரைசெய்கிறதைக் கண்டு, அவர் பேதுருவைக் கொண்டவராய்: "சீமோனே, நித்திரைபண்ணுகிறாயா? ஒரு மணிநேரம் நீ விழித்திருக்கக்கூடாதா?" என்று உரத்துச் சொல்லி பின்பு "ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" என்று உள்ளமுருகிச் சொன்னார்.

பின்பு அவர் இரண்டாந்தரம் போய்: "என்பிதாவே, இப்பாத்திரம் நான் பானம்பண்ணினாலொழியா இது என்னை விட்டு நீங்கக் கூடாதானால், உம்முடைய சித்தத்தின்படி ஆகக் கடவது" என்று ஜெபம்பண்ணினார்.

அவர் மறுபடியும் வந்து அவர்கள் நித்திரைபண்ணுகிறவர் களாயிருக்கக்கண்டார். அவர்களுடைய கண்கள் மந்தாரத்தி நித்திரை மயக்கம் அடைந்திருந்தது. ஆக அவர்களை எழுப்பிப்போக அவர் கள் புத்தி மயக்கத்திலும் அவருக்கு என்ன உத்தரவு சொல்லக் கூடாதவர்களாயிருந்தார்கள்.

மூன்றாந்தரம் அவர் அவர்களைக் கண்டபோது தாவீதைப் போல் "உம்முடைய என் இருதயத்தைப் பிளந்தது; தான் நிகழும் வேதனைப்படுகிறேன்; எனக்காகப் பரிதபிக்கிறவனுண்டோ என்று யாத்திருந்தேன், ஒருவனும் இல்லை; தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன்" என்று சொல்லியிருந்திருக்கக்கூடும். சங். 69 : 20.

அவர் அவர்களிடத்தில் மறுபடியும் போய்; அதே வார்த்தை களைச் சொல்லி நான்காந்தரம் ஜெபம்பண்ணினார்.

பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்திற்கு வந்து அவர் கள் இன்னும் நித்திரை செய்கிறதைக் கண்டு, "இனி நித்திரை பண்ணி இளைப்பாறுங்கள்; இதோ மனுஷகுமாரன் பாவிகளு டைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது" என்று அவர்களைப் பார்த்து பரிதவித்துச் சொன்னார்.



அதன் பின்பு அவர் எழுந்திருந்து மறுபடி கவனத்தோடு செயியுற்று, இப்போது வேளையும் வந்து விட்டது என்றார். எனென்றால், அவர் தம்மைத்தொடர்ந்து வரும் அர்ச்சனைகளு டைய சாலடி சத்தத்தைக் கேட்டு, அல்லிரூட்டில் தீவர்த்திகளு டைய வெளிச்சத்தையும் கண்டு, நித்திரைசெய்கிறவர்களின் பக மாய்த் திரும்பி: "என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ! வந்துவிட்டான், எழுந்திருங்கள் போவோம்," என்று சத்தமா கக் கூப்பிட்டு சொன்னார்.

அந்தப் பாதி இருட்டில் யூதாஸோடு தகோரி விழுந்தடித்து வருகையில் யோக்கனன் அவனை இங்கே கண்டுபிடிக்கலாமென்று எப்படித் தெரியுமென்று கோப்தகோடு கேட்டான்.

அந்த மணிதன் மேலே பார்த்து, தான் பிடித்துவந்த தீவர்த் தினுடைய வ்வாலையின் உதயியால் அவன் முகத்தைப் பார்த் தான். அவன் தைரியசாலியா யிருப்பது கண்டு, அதினின்று பயந்து பின் சென்றான்.

பின்பு யூதாஸ் அவர் அங்கே இருப்பார், அந்த இடம் எனக்கு நன்றாய்த் தெரியும். ஜெபம் செய்யும்படியாக அவர் அங்கே போவார் என்றான்.

அப்போது யோக்கனன் "நாவாசி மன்னிப்புக் கேட்கிற போல, நாம் காலத்தை வீணாக்கிக்கூடாதென்பது உனக்குத் தெரியும் என்றான். காரணமில்லாத ஒருவித பயம் அவனைப் பற்றி இவனுக்கிருந்தது.

"நீ செய்வதைச் சீக்கிரமாய்ச் செய்," என்பதுதான் அவர் எனக்குச் சொன்ன வார்த்தைகளென்று யூதாஸ் அவனுக்குச் சொன்னான்.

திரும்பவும் யோக்கனன் பனியினால் குளிர் நடுக்கங்கொண்ட வனாய். ஐயோ! குளிர்ந்தக் காற்றுபிருக்கிறதென்று தன்னுடைய போர்வை அங்கியினால் இழுத்துத் தன்னைச் சுற்றிக்கொண்டான்.

அதற்கு யூதாஸ் பொய்ச் சத்தமாய் சிரித்து, "எனக்குத்தானே எதோ சொல்லிக்கொண்டான்.

அப்பொழுது யோக்கனன், பல்து சற்காலமிருந்து நாம் அவனைக் கண்டுபிடிப்போமானால், அந்தச் சமயமான தூணையோயிடப் போலென்பதற்கு என்ன நிச்சயம்? என்று பின்னும் கேட்டான்.

அந்த மனிதன் மறுபடியும் எழுந்து கேட்பதற்குப் பிரக்ஞை முழுமுழுள்ள சத்தத்தோடு "நான் அவனை முத்தஞ் செய்வேன்" என்று சொன்னான்.

யோக்கனன் தன் கண்டனத்தையும் இன்னும் அதிக சொருக்காய் இழுத்து தன்னோடு சுற்றிக் கட்டிக்கொண்டான். இச்சமயம் வரும்படியாக விரும்பி வற்புறுத்தி பலவந்தம் செய்திருப்பேன். அவன் அழகும் சௌந்தரியமுள்ளவனுடைய பிரத்தியோகிகம் இப்படிப்பட்டக் காரியத்திற்கு மிக்க ப்ரியோகமானவனென்று சொன்னான்.

அதற்குமேல் அவன் ஒன்றும் பேசாமல் மௌனத்திலிருந்து வாத கலகலனின் உபதேசத்தைச் சிந்தையில் தாபரமாகத் திருத்திருந்து அவர்களுடைய, முடிக்காயும் சுருக்காயும் அங்கோடி வரும்படியாய் கட்டளைகளைக் கொடுத்தான்.

கல்லிருந்து செய்த வாசற்படிபோல மங்கலாய் காணப்பட்ட இடத்தில் நின்று, கடைசியாக "இந்த இடம் இதுதான்." "நான் காட்டும் வழியாகவே வாருங்கள்" என்று சொல்லி, என்ன எதற்கென்று தெரியாத இருட்டறைக்குள் அந்தத் தோட்டத்திற்குள் கடந்துபோனான்.

இயேசுவை யூதாஸ் காண்பிக்கிறான்

இயேசுவை யூதாஸ் காண்பிக்கிறான்

இயேசுவை யூதாஸ் காண்பிக்கிறான்

தார்கள். அப்போது அவனுக்குள்ளேயே வெகுநாளாகப் புகைந்துகொண்டிருந்த வர்மமும் பகையும் அவனுக்குள் ஒரு வெடிக்கிளம்பிஞற்போற் கிளம்பிற்று. அவன் ஒரு காட்டுமிருகம் குதிக்குமாபோல குதித்து முன்னுக்கு வந்து, இயேசுவின் கையைப் பிடித்து ரபீவாழ்க! என்று கூச்சலிட்டு அவரை முத்தஞ் செய்தான்.

அவரைப் பார்க்கப் பார்த்தவர்களாகிய மற்றவர்கள் தரையிலே விழுந்தார்கள்; ஆனால் ஆண்டவர் மாத்திரம் "யூதாசே, மனுஷகுமாரனே முத்தத்தினாலேயா காட்டிக்கொடுக்கிறாய்" என்று துக்கத்தோடே சொன்னார்.

இதைப் பார்த்தபோது பேதுரு முன்னுக்கேறி வந்து:— ஆண்டவரே! பட்டயத்தினாலே வெட்டி விழுத்துவோமா? என்றுகேட்டு உத்தரவுக்குக் காத்திராமலே, தன் பட்டயத்தை யுருவி குறிதப்பிவீச, அவ்வீசு இயேசுவைப்பிடிக்க முன்னேறிச் சென்ற பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனுடைய காதை வெட்டிக்கொண்டு போயிற்று.

அதைக்கண்ட ஆண்டவர், அமரிக்கையாயும் அதிகார தத்துத் தோடும் "அவனே நோக்கி:" "உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு" என்று சொல்லி "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்கவேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்றார்."

பின்னும் அவர்: "இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி," போர்வீரர்கள் பக்கமாய்த் திரும்பி, தம்முடைய கைகளைக் கெட்டியாய்ப் பிடித்திருந்தவனைப் பார்த்து: "கொஞ்சம் விடு" என்றுரைத்து, தமது கரத்தை நீட்டி காயப்பட்டவனைத் தொட்டு சொஸ்தமாக்கினார்.

யோக்கனனும், இன்னும் மற்ற தேவாலயத்தின் வேலைக்காரர்களும் தங்களருகிருந்த பயம் நீங்கினவர்களாய், அவரைக்



கோபப்படுத்தக்கூடிய விதமாய் அவரைச் சூழ்ந்து நிரண்டு நின்றார்கள்.

அப்படிச் சூழ்ந்திருந்தவர்களைப் பார்த்து சொன்னது:

"ஒரு கள்ளனைப் பிடிக்கப் புறப்பட்டவருகிறது போல, நீங்கள் பட்டயங்களோயும் தடிகளையும் எடுத்துப் புறப்பட்டு வந்திர்களே, நான் தினந்தோறும் தேவாலயத்தில் உங்களுடனேகூட இருக்கையில் நீங்கள் என்னைப் பிடிக்கக் கைநீட்டவில்லை; இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது என்றார்."

சீஷர்கள் இவ்விதமாக அந்தத் தர்ச்சகுணமான வார்த்தைகளைக் கேட்டபோது அவர்களெல்லாரும் ஏக்கங்கொண்டோராயினர். அதேசமயத்தில் அந்த மிருகங்களைப்போன்ற ஜனத்திரள் அவரைப்பற்றிப் பிடித்துக் கொண்டிருந்ததையும், சகாய மற்றவரைப் போலவும் இருந்த அவர்களுடைய ஆண்டவரும் அதிபதியுமானவரை பயத்தோடு பார்த்து அவரைக் கைவிட்டு விட்டு ஓடிப்போனார்கள்.

இது இப்படியிருக்க, வெகு நேரமாய்த் திரிந்ததினாலே களைப்படைந்திருந்ததினாலும் ஒரு வாலிபன் சுவர் நிழலில் நித்திரை செய்ய வேண்டி கீழேபடுத்திருக்க நேரிட்டது. அவன் தன் மேல் வஸ்திரத்தை எடுத்து அந்த இரவின் குளிர்ந்த பனிக்கு நீங்க தன் மேல் போர்வையாக போர்த்திக் கொண்டு, மற்ற தன் வஸ்திரங்களைச் சுற்றி தனக்குத் தலையணையாக வைத்துக் கொண்டான். அவன் தான் விசனங்கொண்டவனும் தனித்தவனுமாயிருந்ததினால் அயர்ந்து நித்திரைசெய்துகொண்டிருந்தான். முதலில் அங்கே நேர்ந்த சந்தடி ஒன்றும் அவனுக்குக் கேட்கவில்லை. ஆனால் ஜெயங்கொண்டோமென்றெண்ணிய ஜனத்திரள் அப்பக்கமாய் பிரதான வாசலுக்குப்போன சந்தடியைக் கேட்டு அவன் எழுந்திருந்தான். அவர்களில் ஒருவன் தற்செயலாய் சொன்னவார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் அவன் எழுந்து நின்றான்.

அப்போது அவன் ஒரு நிமிஷமேனும் யோசிக்காமல் "அவர் நசரேயரோ!" "அவர் தானே!" என்று தன் வஸ்திரங்களைத்

தூக்கித் தோளின்மேற் போட்டுக் கொண்டு திரும்பிப் போகிற கூட்டத்தின் பின்னாலே ஓடினான். ஒரு கோடியில் அவன் அவர்களோடுபோய்ச் சேர்ந்தான். வேர்த்தலின் சிவந்ததழல் அவன் பக்கமாய் வீச பின்னாலே வந்துகொண்டிருந்த போர் வீரர்களுக்கு அவன் இன்னானென்று தெளிவாய் வெளிப்பட்டது. அவர்களில் ஒருவன் முன்னுக்குவந்து அந்த வாலிபன் மேலே போட்டிருந்த வஸ்திரத்தைப்பற்றி பிடித்துக் கொண்டு பின் வருமாறு கத்தினான்:— இதோ அவர்களில் இவனும் ஒருவனிருக்கிறான்! இவனையுங் கூட்டம் கொண்டுபோவோமாக என்றான்.

உடனே அவ்வாலிபன் அம்மட்டில் தன்னுடைய கம்பினிபோர் வையை அந்தப் போர்வீரருடைய கைகளில் விட்டுவிட்டு நழுவி விட்டான். அந்த இருட்டில் பாதி நிர்வாணியாய் ஓடிப்போன அவனை அந்தப்போர்வீரர்கள் திமிர் பிடித்தார்போல பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

# திருடத்தாரும் அதிகாரம்.

அந்தப்பெரிய வாசல்மண்டையிருந்த மணியைச் சத்தமாயும் அதிகாரமாயும் அடித்துக்கொண்டு: இங்கே நில்லு! என்று யோக்கனன் கட்டளையிட்டுக்கொண்டிருந்தான்.

கொஞ்சம் தாமதித்து வாசற்காப்போன் எச்சரிக்கையோடு கதவைத் திறந்தான். எனென்றால் இராத்திரியில் அதிக நேரஞ் சென்றது என்று வெளியே எட்டிப் பார்த்தான். அப்போது அவனை நோக்கி:

உன் எஜமானனிடம்போய்ச் சீக்கிரமாய் வரும்படியாகச் சொல்லு என்று யோக்கனன் கோபத்திருந்தப்படியினால் எரிச்சலுடன் கத்தினான்.

அதற்கு அந்த மனிதன், சுவீரா, என் எஜமானே! உம்மை உள்ளே விடும்படியாக எனக்கு உத்திரவு உண்டு என்று வாசற் கதவைப் பறக்கத் திறந்து விட்டான்.

தேவாலயத்தின் உத்தியோகஸ்தர்களும், மல்கூஸ், யோக்கனன் என்பவர்களுக்கு மத்தியில் அவரைப் பிடித்திருந்த இரண்டு போர் சேவகர்களும் கடைசியாக அவரைக்காட்டிக்கொடுத்த யூதாஸுமாக வாசலுக்குட் பிரவேசித்தார்கள். மற்றவர்களெல்லாம் யோக்கனனுடைய கட்டளைக்கணங்க வெளியே காத்திருந்தார்கள்.

அவர்கள் பெரிய முற்றத்தைச் சேர்ந்தவுடனே அன்னு வேகமாய் அங்கேவந்தான். அப்போது அவன் தன் கண்களை இயேசுவின்மேல் வைத்து, சந்தோஷமாக, நீ மனிதனைக்கொண்டு வந்து விட்டாய்! சரிதான் என்றான்.

பின்பு யூதாஸைப்பார்த்து: நீ மெய்யாகவே புத்திசாலி. இக்காரியத்தை வெகு புத்திக்கூர்மையோடு நடத்தினதற்காக உன்னைப் புகழவேண்டும். இந்த முப்பது வெள்ளிக்காசு உன்னுடையதே. அவைகளை எடுத்துக்கொண்டு நீ ஓடிபோ. உன்னு

தவி இனிமேல் எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லி, அவனுக் கெதிரில் ஒரு சிறிய பையை வீசி எறிந்து விட்டு, பிடிப்பட்டவரை கன்ருய்ப்பார்த்துக் கொள்ளவேண்டுமென்று அவருக்கருகே போனன்.

யூதாஸ் கீழே குனிந்து அந்தப் பையை தரையிலிருந்தெடுத்துக் கொண்டு அந்த இருட்டுக்குள்ளே போய் விட்டான். அதற்குப் பின் இயேசுவை ஒரு தரமுங்கூட பார்க்கக்கிடைக்கவில்லை. ஆனல் அவருடைய திவ்ய கண்கள் தன்னைப்பார்ப்பதாக உணர்ந்தான். அக்ஷணங்கள் அதனைத் தொடர்ந்து போயின. அவன் மடியிலிருந்த பையானது நெருப்பைப்போலெரிந்தது. அப்போது அவன் "தேவனே!" என்று அலறினன். அவன் திரும்பத் திரும்ப ஒரு பைத்தியக்காரனைப்போல அந்த இருட்டில் அலறிக்கொண்டு போனன். அவன் தன் வினையின் பலனை அனுபவிக்கவேண்டிய தண்டனை ஆரம்பமாகிவிட்டது.

இது நிற்க, அன்று கடைசியாக, நீ அந்தமனிதனை அதிக அஜாக்கிரதையாகக் கட்டியிருக்கிறயென்று பின் வாங்கிக்கொண்டே சொன்னல்லவா? அவனுடைய எண்ணம் அந்தப் பிடிப்பட்டவரை முன்னடியே சோதிக்க வேண்டுமென்பது ஆனல் அவன் பொறுத்திருப்பது மேலான காரியம் என்று திடுக்கென தீர்மானித்தான். அவனுக்கு நடுக்கமும் பயக்கமும் உண்டான தென்றுணர்ந்தான். அவன் தான் பிழையும் அளவுக்கு மிஞ்சிக் களைப்படைந்தவனும் தான் தன்னைக்காத்துக் கொள்ளவேண்டுமென்றும் யோசித்தான். தவிர, அந்தமனிதன் மிகசாந்தமுள்ளோராயிருந்தும், அவரிடத்தில் விளங்கும் சில விசேஷமான காரியங்கள் எனக்கு வெறுப்பாயிருக்கிறதுஎன்றன்.

இவ்வாறு யெல்லாம் இருந்தும் அவன் தொடர்ந்தாபோல் அவனைக்கட்டியிருக்கும் கட்டுகளைக் கவனி; பத்திரமாய்க்கட்டு பிறகு காய்பாவின் வீட்டிற்குக்கொண்டுபோ. நானும் தொஞ்சம் எதாவது சாப்பிட்டுக் கொண்டு உடனே அங்கே வந்து இருப்பேன் என்று உரத்து சொன்னன்.

இது இப்படியிருக்க: "நீ பேதுருவா?" என்ற ஒரு சத்தம்



உண்டாயிற்று. வேறே யாருமில்லை. கேள்! அவர்கள் போய் விட்டார்களா! இன்னும் மற்றவர்கள் எங்கே! என்று கேட்டது.

இல்லை, எனக்குத் தெரியாதுஎன்ற யோவான் "மேய்ப்பனை வெட்டுவேன், ஆடுகள் சிதறடிக்கப்படும்" என்று அவர் சொன்னப்படியே ஆயிற்று. நான் என் ஓடனேனை எனக்குத் தெரியவில்லை; அது ஒரு பயங்காளித்தனமாயிருந்தது நான் அவரைத் தேடும்படியாசப் போகிறேன். ஒரு வேளை அவர்கள் அவரைக் காலையிற் போக விட்டாலும் போகவிடுவார்கள் என்றன்.

அதற்குப் பேதுரு மிகவருத்தங்கொண்டவனுய்: அவர்கள் கர்தரையில் அவரைப் போகவிட மாட்டார்கள். போகவிடவே மாட்டார்கள் என்று சொன்னன்.

அப்போது யோவான் நம்பிக்கைக் கொண்டவனுக: ஆனல் அவர் அவர்களுடைய கைக்குத் தப்பிக்கொள்ளுவார் அவர் வல்லமையுள்ளவர் என்று சொன்னன்.

அதற்குப் பேதுரு: அவருக்குமுன்னே வல்லமை இருந்தது, ஆனல் அந்த வல்லமை இனிமேல் மீன் இல்லாமலிருக்கக்கூடாது! அறிந்துக்கொள்ளுகிறதற்கு அரிதான அநேகங் காரியங்களை முன்னே நமக்குச் சொல்லியிருக்கிறர். அவரை அவர்கள் கட்டினபோதுகூட "இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது" என்று அவர் சொல்லவில்லையா? என்றன்.

யோவான் ஒருவிநாடி மௌனமாயிருந்தான். அப்பறம் அவன்: நான் அவரைக் கண்டுபிடிப்பேன்; நீயும் கூடவருவாயா? என்றுஉறுதியான சத்தமாய் கேட்டான்.

மனக்கோஷடங் கொண்டவனுக பேதுரு: ஆம், நான் உன்னோடுகூட போவேன். ஆனல் நாம் போனல் நம்மால் என்ன ஆகும், நீ எங்கே அவரைத் தேடுவாய்? என்றன்.

பிரதான ஆசாரியனுடைய அரண்மனையிலே அவரைக் கண்டு பிடிக்கலாம், அவர்கள் அன்றிரா இருட்டில் என்னைக் கடந்து

போகையில், அவ்விதச் சட்டமோக் கொடுத்தபோது நான் கேட்டேன்என்று பேரவான் சொன்னான்,

அவ்வாறாக அவ்விருவரும் துரிதமாக நகரத்தை நோக்கி அதற்குள் பிரவேசிக்க நடந்து போகையில், மௌனமாய்ப்போனார்கள். எனென்றால் அவர்களுக்கு வார்த்தையாடுவதற்கு இடமில்லாதிருந்தது. அவர்களிருவரும் தனித்தனியே தங்களுடையச் தோஷ சிந்தையினால் விழுங்கப்பட்டவர்களாயிருந்தார்கள்.

அவ்விடத்தினருகே வந்தபோது கடைசியாக யோவான்: இந்த இடந்தான். நாம் உள்ளே போவோம் என்று சொல்லிக் கொண்டே கதவைத் தட்டினான்.

கூடிய சீக்கிரமாக கதவும் திறக்கப்பட்டது. பேதுரு அந்த இருட்டில் பின்னுக்குதாங்கி, நீ உள்ளேபோ நான் இங்கே காத்திருக்கிறேன் என்றுஜ்ஞாபகமாய் அவர் அங்கே நிராமலிருந்தாலும் இருக்கலாம் என்று சொன்னான்.

யோவான் அவனுக்குப் பதிலொன்றுஞ் சொல்லாமல் உள்ளே போய்விட்டான். அவன் உட்பிரவேசித்தும் வாசற் காவற்காரி அவன் பேரைச்சொல்லி வாழ்த்தினாள். உடனே கதவு சாத்தப்பட்டது.

வெளியே நின்றபேதுரு கவற்றின் மீது சாய்ந்த நிமிஷநேரத்திற்கெல்லாம் விடாய்ப்புங் குளிருங் கொண்டவனானான். அப்போது அவன் யோவானோடுகூட உள்ளே போயில்லாமற் போனேனே யென்று விருப்பங்கொண்டவனானான். பின்னும் அவன் தான் போய்விடுவது யுக்தம் என்று நினைத்தான். அப்போது அவன் சந்தோஷமாயிருந்த தினங்களில் தான் பேசிய வார்த்தைகள் அவனுடைய மனதில் மின்னலைப்போல பிரகாசித்து விளங்கின. அவ்வார்த்தைகளிற் சில யாதெனில்:—"ஆண்டவரே, நாங்கள் யாரண்டைப் போவோம்? நித்திய ஜீவவசனங்கள் உம்மண்டை தானுண்டே"என்பதே. இப்போது உண்மையில் அவன் எங்கே போகக்கூடும்; எல்லாம் போய்விட்டது. யாவரும் போய்விட்டார்கள். எல்லாரையும் யாவற்றையும் இழந்தும் விட்டான்.



இவ்வாறாக இவன் எங்கி நிற்கையில், கதவுதிறக்கப்பட்டு யோவான் வெளியே வந்தான். வழியோரத்திற் பிரகாசித்து வீசின வெளிச்சத்தைக்கொண்டு அவனுடைய முகத்தைப் பேதுரு பார்த்தான். அவனது முகம் வெளுத்து திக்கம் நிறைந்ததாய்க் காணப்பட்டது.

அப்போது, யோவான்: அவர் அங்கேதான் இருக்கிறார் இப்போதுங்கூட அந்தப் பிரதான ஆசாரியின் முன்பாக நியாயத்திக் கேள்விகள் அவரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நீ உள்ளே வருவாயா? என்றான்.

அதற்குப் பேதுரு: ஆம், நான் உள்ளே வருகிறேன் என்று பதிற்சொன்னான்.

அப்போது யோவான் காவற்காரியோடு சுருக்கமாய் பேசினான். அவள் அவர்களிருவரையும் போகவிட்டாள். அவள் தன் விரலினாற் பேதுருவைக் குறித்துக்காட்டி அங்கேபோ என்று விநோதமாய்ப் பார்த்துச் சொன்னாள்.

ஓ, அதோ நெருப்பு இருக்கிறது. எனக்குக் குளிருது என்று பேதுரு சொல்லி யோவானுக்குக் காத்திராமல் வெகு துரிதமாய் நடந்துபோய் அந்த நெருப்பண்டை நின்றான். அதைச்சூழ அநேகம்பேர் நின்றுக்கொண்டிருந்தார்கள்.

அங்கே போன பேதுரு குளிரினால் நடுக்கங்கொண்டவனாய் தன் கைகளை நெருப்பின்பேரில் விரித்து காய்ச்சிக்கொண்டு திருட்டுத்தனமாய் தன்னைச்சுற்றி யிருந்தவர்களை ஓரளவாய்க் கவனித்தான். இயேசுவைப்பற்றிய விஷயமொன்றையுங் காணவில்லை. பின்னும் அவன் தனக்குச் சுகமாயிருக்க, மற்றவர்கள் உட்கார்ந்திருந்ததுபோல தானுங் கீழே உட்கார்ந்திருந்தான்.

அங்கே உட்கார்ந்திருந்தவர்களெல்லாரும் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவன் நீ மல்கூஸைப் பார்த்தாயாவென்று வேறொருவனைக் கேட்டான்.

அதற்கு அவன் ஆம், நான் அவனைப் பார்த்தேன் என்றான்.

நசரேயருடைய சீஷர்களில் ஒருவன் அவனுடைய காதை வெட்டினது உனக்குத் தெரியுமா? என்றான்.

இல்லை, அது எனக்குத் தெரியாது. அப்படியும் நடந்ததா? என்று இன்னொருவன் கேட்டான்.

அதற்கு அவன் ஒரே ஒரு வீசிலே அவனுடைய பட்டயத்தினாலே அவன் காதை அறவெட்டிப்போட்டான். அப்போது நசரேயர் அவனுடைய காதைத் தொட்டு சொஸ்தமாக்கிவிட்டார் என்றான்.

அந்தக் காதை என்ன செய்தாரென்று சொல்லுகிறாய்? என்று கேட்டான்.

உண்மையில் அந்த வெட்டுபட்டக் காதை முன்னிருந்தது போலவே செய்துவிட்டார் என்று சொன்னான்.

அது ஒரு அதிசயந்தான்! ஆனால் முன் அவரைப்பற்றிச் சொல்லிய அநேகங் கதைகளைவிட இது அவ்வளவு ஆச்சரியமானதல்ல என்றான்.

அந்த மனிதனைப் பிடித்து இங்கே என் கொண்டுவந்திருக்கிறார்கள்? அவர் என்ன தப்பிதம்செய்திருக்கிறார்?

அவர் குருத்துவ தொழிலுக்கு விரோதமாக பேசியிருக்கிறார். நானே என் காதிலாலே ஒருதரம் அவர் அவர்களைக் குறித்துப் பேசுகையில் குருக்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளைவிட மேலானவர்களல்லாதவர்கள் என்றதுபோல பேசினார். இதைத்தவிரவும் அவர்களுக்குள்ளே அதிகக் கேடுபாடுகளுண்டு என்றார்.

அப்படியென்றபோதிலும் அவர்கள் அவருடைய சத்துருக்களாயிருப்பது கொஞ்சம் ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறது. அவர் அதிக நிதானமுள்ளவராயிருந்திருக்க வேண்டியதாயிருந்தது என்றான்.

ஆம்; ஆனால் அவருடைய வார்த்தைகளில் உண்மையிருக்கிறது என்று முதலில் பேசியவன் இறங்கிய குரலாக எனக்கு அநேக காரியங்கள் தெரியும். அவைகளைச் சொன்னால், அவை சரியான அவதூறாக இருக்கும் என்றான்.



வேறொருவன்: எப்போதும் சத்தியத்தையே பேசக்கூடாது. பொய்யுங்கூட வேளா வேளைகளில் உபயோகமுள்ளதாயிருக்கிறது என்று அவன் தன் கூட்டாளியைக் கடைக்கண்ணால் பார்த்து பெருஞ்சத்தமாய் சிரித்தான்.

இன்னொருவன்: தன் கைகளில் அவ்வளவு ஆயுதாக பட்டயத்தை வைத்திருந்து அவனைப் பிடித்தார்களா? என்றான்.

அதைக்கேட்ட பேதுரு அந்த வெளிச்சத்தினின்று சற்று பின்னுக்கு வாங்கி மரியாதையாய் வெளியே போய்விடவேண்டுமென்று விரும்பினான். மேலே கேட்டகேள்விக்கு யாரும் உத்திரவு சொல்லும் முந்தி சாவதானத்தோடு காவற்காரி பொழுது போக்கும்படியாய் குளிர்காய்கிற அந்த நெருப்பினண்டை வந்தாள். உடனே அவளுடைய கண்கள் பேதுருவைப் பார்த்து: அந்த இயேசு என்னும் மனிதனுடைய சிஷர்களில் நீயும் ஒருவனல்லவா? என்று உரத்தச் சத்தமாய்ச் சொன்னாள்.

ஒவ்வொருவரும் தூரிதமாய் திரும்பிப்பார்த்தார்கள். பேதுரு எழுந்து நின்று பீபத்துடன் நடுங்கி, "ஸ்திரியே! நீ சொல்லுகிற தென்னவோ எனக்குத் தெரியாது! அவரும் எனக்குத் தெரியாது என்றான்.

அதற்குப் பின்பு ஒரு அணுவளவு தைரியங்கொண்டவனாய் சாவகாசமாக பொழுது போக்கும்படி தெருவிற்குப் போகும் வழியில் வந்துசேர்ந்து, கல்லசமயம் முதலிலேயே போய்விடலாமென்று சிந்தித்துக்கொண்டிருந்தான். அப்போது அவன் அங்கே இருந்த விசுப்பலகையின்மீது சாய்ந்த பல விதத்திலும் அலைந்துபோன சிந்தனைகளையெல்லாம் ஒன்றுசேர்க்கப் பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது தூரத்திலே கூவின சேவலின் சத்தத்தைக் கேட்டான்.

அதைக் கேட்டபோது அவன் இது விடியற்காலத்துக்குச் சமீபமாயிருக்கிறதென்று தனக்குள்ளே நினைத்தான்.

அந்தக்ஷணமே அவன் இன்னொரு சத்தத்தினால் திக்குமுக்காடினான்:— இவன் நாசரேத்தூராகிய இயேசுவுடனேகூட

இருந்தான். மார்தன், இவன் மற்றவர்களோடுகூட வந்தா னென்று எனக்குச்சொன்னான். அவன் அவருடைய வேஷனென்று நம்மெல்லாருக்கும் தெரியும் என்பதே அந்தச் சத்தம்.

அப்போது பேதுரு: "ஸ்திரியே நீ சொல்லுகிற தென்ன? நான் அந்த மனிதனை அறியவேமாட்டேன்" என்றுரைத்து சத்தியம்பண்ணினான்.

பிறகு அவன் திரும்ப சோம்பற்கொண்டாபோல முற்றத்திற்குள் போனான். அப்படியாக அவன் என் தொங்கலிட்டுக் கொண்டிருந்தானென்று அவனுக்குத் தெரியாதிருந்தது. அவனைப் பார்ப்போமென்ற கனவு ஒழிந்து, நான் திரும்ப கப்பர்நாகூமுக்குப் போகவும் போகலாம் என்று தனக்குள்ளே எரிச்சலோடு சொல்லிக்கொண்டான்.

அவன் அப்படிச் சொல்லிக்கொண்டே தூண்களில் ஒன்றின் மேற் சாய்ந்து துக்கத்தோடு தனக்குள்ளே சிந்தனைப்பண்ணி இருக்கையில் ஒருவன் தன் கையிற் பிடித்திருந்த தீவர்த்தியை அவன் முகத்திற்குச் சரியாய்ப் பிடிக்க அதின் பிரகாசம் அவன் மேற் படும்படியாய் வீசிற்று.

அப்போது அவன் நீயார்? என்று புதுமையாய்க் கேட்டான். அந்தக் கேள்விக்குப் பதில் ஒன்றுங்கிடைக்காமையினால், அந்த அவனுடைய முகத்தைத் தான் எப்போதோ முன்னே பார்த்தாபோல் அவனுக்கு ஞாபகம் வந்தது. ஆக அவன் பேதுருவைப் பார்த்து: உன்னை நான் தோட்டத்தில் ஈசரேயரோடு இருக்கும் போது நான் பார்க்கவில்லையா என்று சொன்னான்.

"இல்லை நீ என்னைப் பார்க்கவில்லை" என்று பேதுரு தைரியமாய் உத்திரவு சொன்னான்.

நிச்சயமாகவே, நீ அவர்களில் ஒருவன்தான் என்று வற்புறுத்தினான். இப்படிச் செய்தவன் மல்கூஸினுடைய பந்துவாயிருந்தான். அவன் மறுகு பேதுருவைப் பார்த்து: நீ ஒரு கலிலேயன் என்று உன்பேச்சே உன்னை வெளிப்படுத்துகிறது" என்றான்.

அவன் சொல்லிய இவ்வார்த்தைகளினால் பைத்தியங்கொண்டவனைகவும், தன்னுடைய சய சதிமோசத்தினால் மனச்சாக்கி



யில் பயங்கரமாய்க் குத்தண்டவனைகவும் அந்தப் பொல்லாத மனுஷன் நீரோடை உடைந்தாற்போல் "நீ சொல்லுகிற அந்த மனிதனை அறியமாட்டேன் என்று உனக்குச் சொல்லுகிறேனென்று சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான்!" உடனே இரண்டாந்தரம் சேவல்கூவ அவன் கேட்டான்.

அப்போது அவன் கோபத்தோடு தன்னைத் தண்டிப்பதற்கியவர்களினின்று தப்பிக்கொள்ளும்படி பார்த்தான்; அச்சமயம் நிமிர்ந்து தன் ஆண்டவரை, யாரும் சகாயமற்றவராய், கட்டுக்குட்பட்டவராய் ஆலய முற்றத்தினுள் அவர்கள் கொண்டு வருவதைப் பேதுரு பார்த்தான். தான் "காவலிலும் சாவிலும் பின்பற்றுவேன்" என்றும், அன்புகூருவேன் என்றும் பொருத்தனைச்செய்துகொண்ட தன் ஆண்டவரைக் கண்டான்! அப்போதும் இயேசுவானவர் அவனைத் திரும்பிப் பார்த்தார். அவர் அவனைப் பார்த்த உடனே அவன் தன் இருதயத்திற் குத் தண்டவனாய் துக்கிக்கலாயினான். அவன் தனக்கு ஆண்டவர் "சேவல் இரண்டாந்தரம் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய்" என்று சொன்ன வசனத்தையும் நினைவுகூர்ந்து "அவன் மனங்கசந்து வெளியே போய் அழுதான்."

# இருபத்தேழாம் அதிகாரம்.

இப்போது நீ உன்னுடைய சேஷர்களைப் பற்றியும், ஜனங்களுக்கு நீ உபதேசித்தவகளைப் பற்றியும் எங்களுக்குச் சொல்லு. இந்தச்சமயத்தில் நீ உன் காரியங்களை யெல்லாம் எங்களுக்கு மறைக்காமல், உன்னுடைய பக்கம் அபஜெயப்படாதபடிக்கு யாவற்றையும் பூராவாக அறிக்கை செய்து கொள்ளலாமென்று அறிவிக்கப்பட்டது.

அந்தச்சமயம் பொழுதுவிடியாமலிருந்தும் சனகெரிம் *என்னும் சங்கம் முன்னமே நியாயவிசாரணைக்கு விநோயத்துடன் கூடி வந்திருந்தது. மண்டபத்தின் மத்தியில் வட்டமாயிட்டிருந்த ஆசனங்களின்மேற் காய்பா தன்முழு ஆசாரிய மேன்மைக்குத் தக்க உடுபாவனையோடு முதல் உட்கார்ந்து அவனது வலது பக்கத்தில் அன்னாவும் இடது பக்கத்தில் யோக்கனானுமாக உட்கார, மற்றவர்கள் யாவரும் தத்தம் உத்தியோக வரிசைக்கிரமமாக உட்கார்ந்தார்கள். அவர்களுக்கு முன்பாக, கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டவராகவும், இருபக்கங்களிலும் சேவாலய காவலாளிகளாற் காவற்பண்ணப்பட்டவராகவும்; இயேசுவானவர் நின்றார்.

அவ்வளவில் காய்பா கடுகடுப்பாக ஆண்டவரைப் பார்த்து: இப்போது நீ எனக்கு உத்திரவுசொல்லுவாய் என்றான். சிறையாக்கப்பட்டவர் தம்முடைய கண்களை எறெடித்து பிதான ஆசாரியனை நன்றாய்ப் பார்த்தார்.

பின்பு அவர்: நான் வெளியரங்கமாய் உலகத்தினனே பேசினேன்; ஜெப ஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடி வருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை. நீர் என்னிடத்தில் விசா

* கிறிஸ்துவின் காலத்திலிருந்த யூதருடைய ஆலோசனை சங்கங்களிலெல்லாம் மேலான சங்கமாம்.



ரிக்க வேண்டிய தென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றார்."

அவர் இவ்விதமாய்ச் சொன்னதற்கு அவரின் இருபக்கங்களிலும் நின்றவர்களில் ஒருவன்: "பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்திரவு சொல்லுகிறது? என்று அவரோடு சொல்லிக்கொண்டே அவரை "ஒரு அறை" கன்னத்தில் "அறைந்தான்."

சிறையாக்கப்பட்டவர் கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்தார். பின்பு அவர் சாந்தமாய் "அவனை நோக்கி": முன் பேசியது போலவே செய்யப்பட்ட அந்தக் கேவலமான நடவடிக்கையைப்பற்றிய கோப குறிப்பொன்று மில்லாதவராய் "நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால், தகாததை ஒப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில் என்னை என் அடிக்கிறாய்? என்றார்."

இதைக் கேட்டு அன்னா, அவனுக்குச் சாட்சிகள் வேண்டுமென்கிறான். அவர்கள் கொண்டுவரப்பட்டும் என்று கேளிக்கையாக சொன்னான்.

அப்போது ஒரு சின்ன சேர்வுற்ற கிழவன் பின்னே தொடர்ந்துவர ஆலய உத்தியோகஸ்தர்களில் ஒருவன் உட்பிரவேசித்தபோது கொஞ்சம் சூலேச்சலுண்டாயிற்று. அந்த உத்தியோகஸ்தனைப் பார்த்து காய்பா: உனக்கு இந்தச் சிறையாக்கப்பட்டிருக்கிறவனைத் தெரியுமா? என்று கேட்டான்.

சங்கிக்கப்படத்தக்க பிரபு, எனக்குத்தெரியும். இவன் இயேசு என்ற நாமமுடைய கலிலேயனுடைய தச்சன், கலகக்காரன், எப்போதும் ஜனத்திரளினுற் சூழ்ந்திருக்கப்பட்டவன் என்றான்.

அவனுடைய உபதேசங்களைப்பற்றி யுனக்கென்னத் தெரியுமென்று பிரியமுள்ளவனாக நடத்துக்கொண்டு அன்னா என்றவன் கேட்டான்.

பிரபு! அவன் சற்பனையான காரியங்களை உபதேசிக்கிறவன், நானே, அவன் ஜனசங்கங்களுக்கு: வேதபாரகனாயும்

விசேஷமாய்ப் பிரதான ஜோசியர்களையும்பற்றி எச்சரிக்கை யாயிருங்கள். ஏனென்றால், அவர்கள் கீண்ட அங்கிகளைத் தரித் துக்கொண்டு முதன்மையான இடங்களைத் தேடிப் பார்வைக்கு கீண்டஜெபங்களைச்செய்து தாய் தகப்பனற்ற பிள்ளைகளையும், வித வைகளையும் பகடிக்கிறவர்கள். அவர்கள் மாய்மாலக்காரர்கள் புத்தியீனர்கள், அவர்கள் நரகத்திலே தள்ளப்படுவார்கள். இப்படியெல்லாமிருந்தும் அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு நடவுங்கள் என்று அவன் சொன்னதைக் கேட்டிருக்கிறேன். இது தான் அவனுடைய உபதேசம்! இவைகளுக்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? என் கல்லு பிரபுக்களே என்றான்.

அப்போது அந்த விசாரணை வாலுக்குள் ஓர் அகோரமான முணுமுணுப்புண்டாயிற்று.

அது மெய்தான்! என்று அல்ஸ: ஒவ்வொருவரும் இவ்விதமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் அப்படிப்பட்ட விலக்கற்றை நானே கேட்டிருக்கிறேன் என்றான்.

மேலே சாக்ஷிசொன்ன அந்த மனிதனுடைய வாக்குமூலங் களைக் கேட்டுக்கொண்டிருந்த அனைத்துப் பின்னாலே வந்த அந் தகனும் உற்சாகங்கொண்டவனாய், வாதரீர் கொண்ட தன்னு டைய கண்களைப் பிடிப்பட்டவிடமாய்த் திருப்பி நடுக்கங் கொண் ட தன் விரலினால் அவனைச் சுட்டிக்காட்டினான். மேலும் அவன், ஓ, மனிதனே! நிசீர்வாதத்திலுள் கறுக்கள் விழுந்து போனவனுக விழுந்து கிடந்த என்னை நீ மூன்று வருஷங்களுக்கு முன்னே சொஸ்தமாக்கினாய் அப்படிச் செய்திலுல் நீ என்னை பிழைக்கவொட்டாமற் செய்து விட்டாய்; ஏனென்றால், என யாசகத்திலுள் எனக்குப் பணம் அதற்குப் பின் கிடைக்கவே யில்லை. தான பிரசைதேடுகிறவர்கள் என்னை வேலைசெய்யுமென்றி சொன்னார்கள்! ஆம், என்னைப்போல ஒரு பிழவனை வேலை செய்ய சொல்லுகிறார்கள்! என் கல்லு பிரபுக்களே, அது இப்பொழுதி எனக்கு வெட்கமாயிருந்தது? நான் என் படுக்கையின் மீதிருந்தி போது சுகமாய் உல்லாசமான ஜீவனம் செய்துகொண்டிருந்தேன். ஆனால் இப்போதோ நான் வேலை செய்ய வேண்டியதா



யிருக்கிறது. இல்லாவிட்டால் பட்டினியாயிருக்க வேண்டும். எனென்றால், பிழவனுயிருந்த என்னை எருதைப்போல பெலனுள் ளவனுக்கிவிட்டான்.

இந்த மனிதன் சொன்னதெல்லாவற்றையுங் கேட்டு காய்பா: அவனை வெளியே கொண்டுபோங்கள் என்று கட்டளைக்கொடுத் தான். அவன் வெளியே நடத்திக் கொண்டுபோகப்பட்டான் அப்படி அவன் நடத்தப்பட்டு போகையிலுங்கூட பயில்வித்தைக ளெல்லாம் காட்டிக்கொண்டு போனான்..

அதற்குப் பின் வெகுவினாவாக அதேகமான சாக்ஷிகள் ஒன் றின் பின்னொன்றாய் வந்துகொண்டே யிருந்தன. அவைகளை யெல்லாம் காய்பா விசாரணை செய்து முக்கியமான தொன்றை யும் கண்டுபிடியாமற் போனான்.

கடைசியாக, சிறையாக்கப்பட்டவரை மரணத்துக்குட்படுத் தத் தக்கதும் எற்றுக் கொள்ளப் படத்தக்கதுமான யாதொரு நியாயமுமில்லாமற் போகவே அன்னுவும் மற்றவர்களும் எக்கம் பிடிக்க ஆரம்பித்த போது, இரண்டு சாக்ஷிகள் தள்ளே கொண்டு வரப்பட்டார்கள்.

அந்த இரண்டு சாக்ஷிகளில் ஒருவன், இந்த மனுஷன் "கை வேலையல்லாத வேறொன்றை மூன்று நாளைக்குள்ளே கட்டுவேன் என்று இவன் சொன்னதை நாங்கள் கேட்டோம்," என்று சொன் னான்.

வேறொருவன், இல்லை! நீ தப்பிதமாய் சொல்லுகிறாய்! "இந்தத் தேவாலயத்தைக் கட்ட உங்களுக்கு நாற்பத்தாறு வருஷம் சென்றதே, இதை இடித்துப்போடுங்கள் நான் அதை மூன்று நாளையில் எழுப்புவேன் என்றார்," என்று சொன்னான்.

முதலிற் சொன்னவன், நான் சொன்னதும் அதுதானே என்று ஒருவித அசட்டையாய்ச் சொன்னான்.

அடித்தவனே, இல்லவே இல்லை, கழுதைக்காதுகளைப்போ லொத்த காதுகள் உனக்கிருக்கிறது என்று கூவினான்

இதைக்கேட்ட காய்பா கோபத்தோடே நீங்கள் வாக்கு

வாதம் பண்ணுவதற்கு இது இடமா? என்று அதிகாரியை அழைத்து இந்தச் சாட்சிகளை அப்புறப்படுத்து என்றான்.

பின்பு காய்பா எழுந்து நின்று அமரிக்கையாயும் சத்தமிடாதவராயும் இன்னும் அசையாமல் நின்றுக் கொண்டிருந்த இயேசுவானவரை நோக்கி வெடுவெடுப்பாக உனக்கு விரோதமாய் பேசும் இந்தச் சாக்ஷிகளைக் குறித்து நீ ஒன்றும் பதிற் சொல்லுகிறதில்லையா? என்று கேட்டான்.

ஆனால் அவன் கேட்ட அந்தக் கேள்வியைதாம் கேளாதவர் போல காணப்பட்டார். அவருடைய முகத்திலிருந்து விநோதமான ஒளியும் பரிசுத்தமான அமரிக்கையும் ஜொலித்தது. அவர் தம்முடைய வார்த்தைகள் நிறைவேறுங்காலம் இப்போதேவந்து விட்டதாக நினைத்துக்கொண்டிருந்தாரோ?

அந்தப் பிரதான ஆச்சாரியன் அவரைப் பார்த்து வினையத் தோடும், உரத்த சத்தத்தோடும்: "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான்."

பின்பு அந்தச் சிறையாக்கப்பட்டவர், புறக்கணிக்கப்பட்ட நசரேயர், தம்முடைய கைகள் கட்டப்பட்டவராகவும், தம்முடைய அங்கி கிழிக்கப் பெற்றவராகவும் குற்றஞ்சாட்டுதல்களினால் கறைப்பட்டவரைப் போலவும், தம்முடைய திவ்ய வெண்மையான முகத்தின்மேற் பட்ட அறையின் அந்தப் பொல்லாத நடவடிக்கையினால் இன்னுங் காணப்படுகிற குறிப்பையுடையவராகவும் பிரதான ஆச்சாரியனுக்கு உத்திரவாக: "தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து நான் தான்." "மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார்."

குற்றமில்லாத ஸ்ரீருவானவர் இயேசு என்னும் இரட்சகர், மேற் சொல்லியதை பிரதான ஆச்சாரியன் கேட்டபோது; "தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? தேவதூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு என்ன மாய்த்தோன்றுகிறது என்றான். அதற்கு அவர்



எல்லாரும் ஒரே சத்தமாய் கூக்குரலிட்டு: இவன் மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்று தீர்மானம்பண்ணினார்கள்."

அதன்பின்பு அவர்கள் அவரை அரண்மனையின் கீழேயுள்ள அறைகள் ஒன்றிற்கு இழுத்துக்கொண்டு போனார்கள். மரணத்தீர்ப்பை அநியாயமாய் விதிக்கப்பெற்றவரை, அங்கேயிருந்த தேவாலயத்தின் வேலையாட்களும் கூலிக்காரர்களும் பார்க்கும்படி அப்படிச் செய்தார்கள். அவர்களெல்லாரும் "வானத்தின் மேகங்கள்மேல் வீற்றிருப்பவர் இவர்தானே! இவரைப்பாருங்கள்! கிறிஸ்து, மேசையா, அற்புதங்களைச் செய்கிறவர்!" என்று அவர் மேல் துப்பி அவரைக் கைகளினால் அடித்தார்கள். பிறகு அவர்கள் ஒருவஸ்திரத்தை அவர் தலையின் மேல் எறிந்தார்கள். அது அவருடைய முகத்தை மறைத்து மூடிக்கொண்டது. அப்போது அவர்கள் "அவரைக் குட்டினவர்கள் சிலர் கன்னத்தில் அறைந்து: "கலிலேயனாகிய தீர்க்கதரிசியே! உன்னை அடித்தது யார்? என்று ஞானதிருஷ்டியினாலே சொல்லு என்று பகடியாய்ப் பலத்த சத்தமிட்டார்கள்.

இப்படியாக அவர்கள் களைத்துப்போகுமட்டும் இவைகளையெல்லாம்செய்துக்கொண்டிருந்தார்கள்.

இப்போது காய்பா ஆலோசனை மண்டபத்தை விட்டு வெளிப்பட்டு அரண்மனையின் உள் அறை யொன்றிற்குள்போய்; தான் சிறையாக்கப்பட்டவரோடு பிலாத்துவினிடம் போகிறதற்குமுந்தி சாப்பிட்டு இளைப்பாறினான். அப்போ அங்கே அவனுடைய மனைவியாகிய அன்னள் அவனைக் கண்டாள்.

அவளுடைய முகம் வெளுத்ததாகவும், கண்கள் நெருப்பைப் போல் விநோதமாய்ப் பழுத்ததாகவும் அவள்: "நீர் அந்த நசரேயருக்கு என்ன செய்தீர்?" என்று கேட்டாள்.

எனக்குத் தெரிந்திருந்தபடியே, நாங்கள் அவனைக் குற்றவாளியாகக் கண்டுபிடித்தோம். அவன் இன்னுங்கொஞ்ச நேரத்தில் தேசாதிபதியின் கையில் ஒப்புவிக்கப்படுவான் என்று காய்பா சொன்னான். பின்னும் காய்பா: நான் களைத்துபோயிருக்கிறேன்,

ரான் இந்த விஷயத்தை உன்னோடு பேசவேண்டிய அவசிய மில்லை. நீ ஒரு பெண் பிள்ளை, இராஜாங்க விஷயத்திலே யறிய மாட்டாய். என்னை விட்டுவிடு! என்று எரிச்சலுடன் சொன் னான்.

ஸ்திரியே! அந்த மனுஷன் தேவனுக்கணைக்காரன்! கொஞ் சம் முன்னே அவன் தன்னைக் கிறிஸ்து என்றும், தேவனுடைய குமாரன் என்றும், இனிமேல் வல்லமையுள்ளவருடைய வலப் பாரிசத்தில் வீற்றிருப்பானென்றும் என் முகத்தாலே உண்மை யாய் ஒத்துக்கொண்டான்! என்று காய்பா கடுந்துக்கொண்டே சொன்னான்.

இவைகளைக்கேட்ட அன்னா கதிகலங்கிச் சத்தமிட்டு: ஓ, என் மணவாளரே! அது அப்படி இருந்தால் நான் என்ன? அவரை விடுதலைசெய்து விடும் என்று உம்மை வேண் டிக்கொள்ளுகிறேன். அவர் நம்முடைய சொந்த தேசத்திற்குப் போகட்டும் என்று சொன்னாள்.

அப்போதுக்கூட காய்பா: நீ ஒரு பெண்பிள்ளையாயிருக்கி றாய், ஆகையால் உனக்குப் புத்தியில்லை! என்னை விட்டு அப்புறம் போ! என்று மறுபடியும் சொல்லுகிறேன் என்று காய்பாவும் புறம்திட்டிச் சொன்னான்.

அதைக் கேட்டபோது, அவனது மனைவி அவனைப் பார்த்து: அன்னாவின் குமாரத்தியினிடத்தில் நீ இப்படியா பேசுகிறாய்? "நான் உன்னை விட்டுப் போகிறேன்!" என்றால் உம்மை கான் எச்சரித்தறைக் குறித்து நீ உமது காலின்-கீழ் மிதித்தாய் என்று கினைவு கூர்ந்து இரக்கமுள்ள கண்களோடு கருதி, எழுந்து என்றுமை யுடைய மிதுங்கிய வெண்சோர்வு தரித்தவளாய் சொன்னாள். அப்பு றம் அவள் அந்த அறையை விட்டு கோலமாகப் பிரவேசித்து அழுதுகொண்டு திரும்பினாள்.

அதிகாலையில் அனைவரும் கூடியிருந்தபோதே குற்றஞ்சாட்டு கிற அதிகாரிகளிற் சிலர், கட்டப்பட்டவராகவும், இயேசுவைச் சூழ்ந்துகொண்டு தேசாதிபதியாகிய பிலாத்துவுக்கருகே கூட்



திக்கொண்டிருந்தார்கள். நாம் குற்றஞ்சாட்டக்கூடாதபடிக் கும், அரண்மனைக்குள் நாம் பிரவேசிப்பது நியாயமல்ல ஆகை யினாலும், பிலாத்துவே நம்மண்டைக்கு வரும்படியாக அவருக்கு, சொல்லு என்று காய்பா சொன்னான்.

பிலாத்து தான் விசாரிக்கப்போகிற ஜனங்களின் குணாதிச யங்களை நன்றாகவும் பூராகவும் அறிந்திருந்தபடியினால் உடனே அவர்களுக்குச் சம்மதித்து புறப்பட்டு வந்தான். மேலும் உரோ மருடைய வழக்கத்தின்படி சீயூய விசாரணை கச்சேரி திறந்த வெளியில் வைக்கப்படுவதாயிருந்தது; ஆகவே அரண்மனைக் கெதிரில் இந்தக் காரியத்திற்கென்று களவரிசைப்படுத்தின மேடையொன்று போடப்பட்டிருந்தது. மேலும் அது மோசேக் கு உரிய பலவர்ண சலவைக் கற்களமைத்துக் கட்டப்பட்டதா யிருந்தது. பின்பு பிலாத்து, தந்தத்தினால் செய்யப்பட்டிருந்த ரதத்தைப்போன்றதும், இராஜரீக ஆசனமும், தன் உத்தியோ கத்திற்குரிய சின்னமுமாகிய சிம்மாசனத்தின்மீது தான் உட் கார்ந்தான்.

அப்போது அவர்கள் இயேசுவானவரைப் பிலாத்து என்னும் தேசாதிபதிக்கு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அவர் மேல் குற்றஞ்சாற்றினவர்கள் அவரிருபக்கங்களிலுமாக நின்றார்கள். இயேசுவானவரைத் தேசாதிபதிக்கு முன் நிறு த்திய சங்கதி, கொஞ்சதேரத்திற்கெல்லாம் வாய்ச் சொல்லாகவே பரவி அதேகமான ஜனக்கூட்டம் திரண்டுருண்டுக்கொண்டு நெருக்கி களவரிசைப் படுத்தின மேடையிலேறுமாய் வந்துவிட் டார்கள். அங்கே பலமான உரோமைத் துருப்புகள், வேறே யாவரும் மேலே விழவொட்டாமல் அந்த வளைவைச் சூழ வைக் கப்பட்டிருந்தது.

இந்தக் காலத்திற் பிலாத்து இயேசுவானவரைப் பற்றி ஒன் றும் அறியாதவனு யிருந்திலில்லை. அவனி ஜனங்களுக்குள்ளே கலகம் உண்டாகுமென்று அறிந்தவனுய் எப்போதும் வேவு கார ர்களைக்கொண்டு அவருடைய சங்கதிகளை வெகு நுட்பமாய் அறிந் திருந்தான். அவருடைய போதனைகள் கொஞ்சங்கூட இராஜாங்

சுத்தைச் சம்பந்தப்பட்டதல்ல வென்றும் அவர் வெகு ஞான மாய் ஜனங்களுக்குள் குழப்பம் கலக்க முண்டாக்குங் காரியங் களே தெரிந்தவனென்றும் அறிந்தவனுயிருந்தான். ஆகையினால் அவன் சிறையாக்கப்பட்டவரைச் சிநேகிக்க மனதுள்ளவனுயி ருந்தான். அதுவும் அவர்கள் அவனைப் பகைப்பதற்கு விசே ஷக்காரணமான்று என்பதையவன் அந்த யூத குருபிரதானிக ளுடைய மாய்மாலத்தினால் கண்டுகொண்டவனு யிருந்தான். ஆகவே அவ்வுக்கிராதினால் அவன் சனசெரிம் சங்கத்தினின்று தலைவனுக வந்த பிரதான ஆசாரியனே நோக்கி: நீங்கள் இந்த மனிதன் மேல் என்னக் குற்றத்தைச் சாற்றுகிறீர்கள்? என்று கேட்டான்.

அதற்குக்காய்பா, அவன் குற்றவாளியாயிராவிட்டால் அவனை உம்மிடத்திற்கு நாங்கள் கொண்டுவந்து ஒப்புக்கொடுத்திருக்க மாட்டோம் என்று கர்வங்கொண்டு சொன்னான்.

இந்த இயேசுவானவரைப் பற்றி எனக்குச் சிலசங்கதிகள் தெரியும். நீங்கள் அவரை என்னிடத்திற்கு கொண்டுவந்திருக் கிறதின் நோக்கத்தையும் நான் அறிவேன் என்று மறைவிடமாயும் புன்னகைப்போடுந் சொன்னான். ஆயினும் நான் அவரைக் குறித்த இந்த விஷயத்திற்றலையிடக்கூடிய காரியம் ஒன்றும் இல்லையென்று எனக்குத் தோன்றுகிறதினால், நீங்களே இவரைக் கொண்டுபோய் உங்கள் நியாயப்பிரமாணத்தின்படியே நியாயத் தீர்த்துக்கொள்ளுங்கள் என்று பிலாத்துச் சொல்லிவிட்டான்.

அப்போது காய்பா, கோபத்தினால் தன் குரல் நடுமாற்றங் கொண்டதாய், நாங்கள் இந்த மனிதன் பேரில் சாற்றும் குற்ற மானது நீர் நினைக்கிறபடி அற்ப சொற்பமானதல்ல: நாங்கள் கண்டுபிடித்தபடி இந்த மனிதன் மரணமடைவதற்கேற்ற குற்றஞ் செய்திருக்கிறான். ஆனால் நாங்கள் எந்த மனிதனையும் மரணத் தண்டனைக்குட்படுத்துதற்க நியாயம் எங்களுக்குக் கிடையாதே என்றான்.

அப்படியானால் அவர் செய்திருக்கிற குற்றம் என்ன? என்று



பிலாத்து தன் கோபத்தை அடக்கிக்கொண்டு நியாயமாகப் கேட்டான்.

அதற்குக் காய்பா: நானே சரியான இராஜாவும் இறைவ னுமாயிருக்கிறதாகவும், சீஸருக்கு வரிகொடுப்பது சரியல்லவென் றுஞ் சொல்லித்திரிந்து ஜனங்களை யெல்லாம் வேறுமாதிரியாக மடத்திவிடுகிறான் என்று தன் கண்களிற் தெரிப்புப்பதற்கச் சொன்னான்.

இதைகேட்டபோது, யூத அதிகாரிகள் யாவரும் சரிதானென்று உரத்த சத்தமிட்டார்கள். இத்தருணஞ் சாற்றி விட்டால், நாங்கள் சொல்லுவதற்குறித்து அசட்டையாய் இரு ந்து பிலாத்துவையெழுப்பிவிடலாமென்று நினைத்தார்கள். அந்த க்குற்றமானது ஒரு உரோமை தேசாதிபதியின் காதுகளுக்கு மிக வும் வெறுக்கப்படத்தக்கது, ஆகவே அது பகைக்கப்பட்ட கூட்ட யினின் மேல் சீக்கிரமாய் முடிவைக்கொண்டுவரக்கூடியது என்று எண்ணினார்கள். ஆனாலும் அவர்கள் தங்கள் எண்ணம் நிறை வேறுமற்போனதினால் மோசம்போனார்கள். தேசாதிபதியானவன் ஒருகுற்றத்தையாதொரு ஆதாரமில்லாதவனும் தைரியசாலி யாயும் தன் ஆசனத்தை விட்டெழுந்து, காவலாளியை நோக்கி: குற்றவாளியாக சிறையாக்கப்பட்டவரை நியாய ஸ்தலத்துக்கு கடத்திவரும்படியாக உத்திரவுபண்ணினான்.

நியாயஸ்தலத்துக்குவந்த தேசாதிபதியாகிய பிலாத்து தன் ஆசனத்தில் உட்கார்ந்தபோது அவன் இயேசுவை நோக்கி: நீர் யூதருடைய இராஜாவா? என்று அவனைக் கேட்டான்:

அதற்கு அவர்: நீரே இப்படிச்சொல்லுகிறீரா? அல்லது மற்றவர்கள் அப்படி என்னைப்பற்றி உமக்குச் சொல்லுகிறார்களோ? என்று கேட்டார்.

அதற்குப் பிலாத்து: நான் யூதனு? என்று பரிகாசமாகக் கேட்டு, உம்முடைய சொந்த ஜனங்களும், பிரதான ஆசாரியர் களுமே உம்மை என்னிடத்தில் ஒப்புவித்தார்கள் நீர் என்னச் செய்தீர்? என்றான்.

இயேசு அதைக்கேட்டபோது அவனுடைய முகத்தை நன்றாய்ப்பார்த்து : " என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதாஞல் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே ; இப்படியிருக்க என் இராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார் "

ஆண்டவர் சொல்லியதைக்கேட்டபிறகு : " அப்படியானுல் நீ இராஜாவோ ? என்றீர் "

அதற்கு இயேசு ; " நீர் சொல்லுகிறபடி நான் இராஜாதான் சத்தியத்தைக்குறித்து சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன் ; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் " என்றார் "

" சத்தியம் " என்று பரிகாசமாய் ஏளனமாக சிரித்து " சத்தியமாவது என்ன " ? என்று பிலாத்து கேட்டான்.

அந்த ரோமனுடைய கேள்விக்கு, அவர் சொன்னது வேறும் வார்த்தையும் தேற்றமாய் இருக்கவில்லை.

அதற்குமேல் யாதொரு கேள்வியும் விருத்தியாயில்லாமல் அவன் தன்னுடைய ஆசனத்தை விட்டெழுந்து, கோபத்தினுல் நிறைந்து வைராக்கியங்கொண்ட நிலைமையில் பிரதானிகள் சூழ்ந்துக்கொண்டிருந்த கலகக்காரரிடத்தில் மேடையண்டைத் திரும்ப பிலாத்து போனுன்.

பிலாத்து அங்கே யிருந்தவர்களை வெறுப்புடன் பார்த்து முறு யிருந்தான். ஆனுல் அவர்களோ தங்கள் வெளிப்படையாய்க் காட்டிக்கொள்ள அவர்களுக்கு விருப்பமில்லை. அவன் தன் ஆசனத்தின்மேல் உட்கார்ந்து, சத்தமேற்ற அவர்கள் பயங்காரமாய் முணுமுணுத்துக் கொண்டிருந்த ஜனக்கூட்டத்தை நோக்கிக்கொண்டிருந்தது, பின்பு உரத்த கொடியமான சத்தத்தோடு பிரஸ்தாபித்தது : " நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லை " என்றார்.

குற்றமில்லையென்று தீர்ப்பாகிறதா யிருந்தது ! அவர்கள்



சுவிலையோடு ஆயத்தஞ்செய்த எற்பாடுகள் மண்ணுயா போகிறது ? அவர்களுடைய பிடியினின்று அந்த மனிதன் தப்பித்துக்கொள்ளுகிறதையா அவர்கள் பார்க்கிறது ? ஒருக்காலுமில்லை ! என்றவர்கள் முணங்கிக்கொண்டு, முதலாவதாக அவர்களுக்குள் எழுந்த கோபத்தின் அலையானது தன்னிலே தான் அடங்கிய பின்னர், பிரதான ஆசாரியர்களும், முதியோர்களும் பேசும்படி ஒருவருக்குப் பின்னெருவராய் எழுந்து நின்றார்கள். அவர்கள், நிறையாக்கப்பட்டவராய் தீர்ப்பிடும் ஸ்தலத்தினின்று திரும்பிவந்து பகைவர் மத்தியில் தம்முடைய பழைய இடத்தில் நின்றிருக்க அவர் மேற் குரோதங் கொண்டவர்களாக, ஒவ்வொருவரும் தோப்புத்தெளிப் பில்லாமற் குற்றங்கள் சாட்டுகிறதை அவர்மேற் குவித்தார்கள்.

இயேசுவானவராப் பிலாத்து நோக்கி : இந்தச் சாகிகள் உமதுமேல் எத்தனையான காரியங்களை உமக்கு விரோதமாய் சொல்லுகிறார்கள் ; நீர் அதைக் கேட்கிறீரா ?

என் நீர் உமக்கான காரியங்களைப் பேசிக்கொள்ளக்கூடாது ? அப்படிச் செய்ய நான் உனக்கு அனுமதிக் கொடுக்கிறேன் என்றான் ;

ஆனுல் இயேசுவோ மௌனமாயிருந்தார்.

அப்பொழுது பிலாத்துத் தனக்குள்தானே, அவர் ஒரு நீதியமானவர். இதுவே அவருக்கேற்ற சமயமும் இடமுமாயிருக்கிறது. நான் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறமட்டில் அவர் பிசுக்கு வல்லவர். இந்தப்பயல்களை மடக்கடித்துக் கீழ்த்தள்ளாமற்புகியற்றுப்போலிருக்கிறார். உண்மையாகவே நான் மிகவும் சந்தோஷமாய் இந்த விஷயத்தில் அவருக்கு உதவிச் செய்வேனே என்று யோசித்துக்கொண்டான்.

யோக்கனன் பேசிக்கொண்டிருந்தான். ஆயினும் பிலாத்து அவன் பேசியதைச் சரியாய் கவனிக்காமலிருந்தும் ஒரு வாக்கியமட்டும் அவன் காதில்விழுந்தது.

அது என்னவென்றால், கலிலேயா மூதல் இவ்விடம்வரைக்கும் நடந்த எல்லா யூதர்களையும் அவன் கலக்குகிறவனாயிருக்கிறான் என்றான்.

அப்போது பிலாத்து: "கலிலேயா!" என்ற வார்த்தையைக் கேட்டவுடனே ஒரு எண்ணம் அவனுக்குண்டாகி, அவர் ஒரு கலிலேயன் என்றறிந்து சொன்னாய்? என்றான்.

அதற்கு யோக்கனன்: ஆம், மாட்சிமைதங்கிய அரசே, அவன் கலிலேயன் தான் என்று பதிலுரைத்தான்.

அப்பொது பிலாத்து: அப்படியானால் சரிதான். நான் அவரை ஏரோதுவினிடத்திற்கு அனுப்புவேன். அவர் இப்போது நகரத்திலிருக்கிறார். அவருடைய சொந்த இராஜ்யத்திலிருக்கும் ஒரு மனிதனை அவர் தீர்க்கவேண்டியது அதிகத் தகுதியான காரியமாயிருக்கிறது என்றான்.

பின்னும் அவன்: தன் சிம்மாசனத்திலிருந்தெழுந்து அவசியமான உத்திரவுகளையெல்லாம் கொடுத்தான். பிறகு அவன் தன் அரண்மனைக்குத் திருப்பிப்போய் தான் செய்த விசாரணைகளையும் அதின் சூழ்ச்சிகளையுமெல்லாம் நினைத்துப் பார்த்து சந்தோஷமடைந்தான்.

போதுமான பிரியவினத்தை புண்படுத்துவதாயிருக்கிற இந்த வருத்தமான விசாரணை தன்னைவிட்டு தான் செய்த ஏதுவிலுல் நீங்கிப்போய்விட்டதாக வெகு விமரிசையாய் எண்ணினான். மேலும், ஆலயத்தில் கட்டத சொற்பக்காரியத்தினிமித்தம் * ஏரோதுக்குண்டாயிருந்த கோபத்தை ஒருவாறு தான் தணிப்பதற்கு இதினுல் தனக்கு வழியுண்டாக இது ஒரு முகஸ்துதியான காரணமாயிருக்குமென்றும் எண்ணினான். அதன் பின்பு

---

* லூக்கா. 13 : 1. ஒருகாலம் எருசலேமில் நடந்த அநேக அதிய கலகங்களிற் பிலாத்து நன் போர்சேவகரை கலவைத்தாழ்ச்சியாய் விட அவர்கள் சில கலிலேய பாதேசிகளை இரத்தஞ்சிந்தும்படியாதுர்கள். அப்படி விழுந்தவர்களைச்சேர்த்து ஆலயத்தின் பீடத்தண்டையிற் கொண்டுபோய் தண்டித்துப்போட்டார்கள். இப்படிச்செய்ததினுல் பிலாத்துவுக்கும் ஏரோதுவுக்கும் பகையுண்டாயிற்று.



பிலாத்து தன் சேவிக்காரருக்குத் தானைபுரிந்து ஆகாகிகொண்டு வரச் சட்டளைக்கொடுத்தான்.

அஸ்மோனியரின் அரண்மனையில் மந்தரோயினுல் கவ்வப்பட்டுக்கொண்டு மிதமிரவென்றிருந்த சிவப்பான மெத்தையிற் சாய்ந்துக்கொண்டிருந்த ஏரோது அங்கேயேயிருந்து, என்னை விசித்து நச்சரேயனை நான் தீர்க்கவேண்டுமென்று அவனே என்னிடத்தில் அனுப்பியிருக்கிறானென்றுசொல்லுகிறீர்களா?

பின்னும் அது நல்ல செய்திதான்! நான் அநேகமாய் அந்த மனிதனைப் பார்க்க வெகுநாய் விரும்பினேன்! நான் கேள்விப்பட்டிருக்கிறபடியே அவர் என்னிடத்திற் சில அற்புதங்களைச் செய்வார். மற்றக்காரியங்களை நான் பிறகுபார்ப்பேன்! கல்லது அவர் இப்போது தண்ணீரைத் திராட்சரசமாக்கி என் அங்கத்தின் மேலிருக்கும் புண்ணை ஆற்றி எனக்குச் சந்தோஷத்தையுண்டாக்குவார். அவரை உடனே நம்முடைய சமுகம் கொண்டுவாருங்கள். விசாரணைச் சங்கத்தை உள்ளே அழைத்துக்கொண்டு வாருங்கள். இவ்விடத்திலுள்ள சாவுக்கேதுவான காலதாமத்தினின்று விடுவிக்கப்படும்படி சில அதிசயமானக்காரியங்களை நடப்பிக்க நாம் இங்கே கூடியது தகுதியான தென்றான். ஆகவே அவர்கள் இயேசுவானவரை உள்ளே இராஜசமுகத்தில்அழைத்துக்கொண்டு வந்து நிறுத்தி இதோ அந்த மனிதன் என்றார்கள். அவருக்குப் பின்னுல் திரள் கூட்டமாய் பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் அசுத்தமுள்ள குற்றவாளிகளாக மரியாதையற்றவர்களாக உள்ளே தழைந்தார்கள். அதற்கு ஏரோது இவர்கள் யார்? என்றான்.

இவர்கள் யூதஜாதியாரின் குருபிரதானிகளென்றொருவன் பதிற் சொன்னான்.

அதற்கு ஏரோது கோபத்தோடு: நானே அந்த மனிதனிடத்தில் பேசவிரும்புகிறேன். அவர்கள் என் வழியை விட்டு பின்னுக்குப் போய் நிற்கட்டும் என்று சொன்னான்.

அவனுக்கு நியாயவிசாரணை நடத்தவேண்டுமென்ற எண்ணங்கிடையாது. ஆனுல் அவன் தனக்காகவும், மற்றுங் கொசகொசவென்று பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் அவனைச்சுற்றி

யிருந்தவர்களுக்காகவும் சில வேடிக்கையாகமாத்திரம் இருக்க
எண்ணினான். ஆகவே, அவனுக்கு அவர் பெயர் தெரிந்திருந்தும்,
ஏறையாக்கப்பட்டவனைப் பார்த்து: அவருடைய பெயர் என்ன?
என்றும், போதுமானமட்டும் அவரை அவருடைய வல்லமையான
செய்கைகளை யறிந்துவையிருந்தும்; "ஜனங்கள் சொல்லியது
போல் அவர் மெய்யாகவே அற்புதங்கள் செய்வாரா? என்றும்
அவர் அப்படிச் செய்யக் கூடியவரானால் இப்போது ஒன்று செய்ய
மாட்டாரா? என்றும் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தான்.

ஆனால் ஏறைப்படுத்தப்பட்டவரோ ஒன்றும் பேசாமல்
மௌனமாய் இருந்தார்.

இதனால் ஏரோது முகஸ்துதி கொண்டு திருப்தியடைந்த
வனானான். அவன் அவர் மேல் அதிக தயை கிறைந்தவனாய்
அவர் நமக்குப் பயப்படுகிறாரென்று; இல்லை, நேற்றே நான்
உமக்கு யாதொரு தீங்குஞ் செய்யமாட்டேன்; நீர் செய்வதை
நான் பார்க்கவேண்டுமென்கிற விருப்பமுடையோனாய் மாத்திரம்
கேட்கிறேன். நீர் என்னோடு பேசவாயாதேயும், உமக்கு விருப்
பமானால் நீர் திரும்பச்சபானம் செய்யலாம். அவருக்குக் கொஞ்சங்
கொடுங்கள் என்றான்.

அப்போது அவருக்குக் கொடுக்கப்பட்டப் பாத்திரத்தை
வேண்டாமென்று கையினால் தடுத்தார், அவர் முன் போல
மௌனமாகவே நின்றார்.

இதற்குப் பின்பு அவருடைய பகையாளிகள் எல்லாரும்
சகோஷ்டமாய் கோபத்தோடு சாபமிட்டுக்கொண்டு உள்ளே
போனார்கள்.

அவர்கள் நோக்கத்திற் தெரிந்தாய் ஏரோது: அவர் இராஜா
என்று தம்மைப்பற்றிச் சொல்லிக் கொள்ளுகிறாரே? என்று
சோர்ந்தாபோல சொன்னான். நல்லது அவர் இராஜாவைப்போல
நமக்குக் காணப்படவில்லை, நமக்கு அற்புதஞ்செய்துகாட்ட
வில்லையானால், நாம் அவமோடி பக்தயவாட்டங்கள், ஊடுவோ
மென்று யூதருக்குள் ராஜாவுக்குரிய வஸ்திரம் என்ன வர்ணம்?



மெய்யாய்ச் சொல்லவேண்டுமானால், நானதை மறந்துபோயிருக்
கிறேன் என்றான்.

அப்போது யூதர்கள் யாவரும் கோபத்தோடு மௌனமா
யிருந்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவன் வலியமாய் இராயரே
வெண்மை நிறம் என்றான்.

அதற்கு ஏரோது: அது வெண்மையா? அப்படியானால் ஒரு
வெள்ளையங்கியைக் கொண்டுவந்து அவர்மேற் போடுங்கள்,
ஒரு இராஜா அவ்வளவு ஏழைத்தனமாய் உடைதரித்திருப்பது
சரியானதல்ல வென்றான்.

பின்பு அவர்கள் ஒரு வெள்ளையங்கியைக் கொண்டு வந்து
அவருடைய எளிய யூதஉடையின்மேற் போட்டார்கள்.

ஏரோது தன் கண்களை சனகெரிம் சங்கத்தாரிடமாய் மூர்க்
கத்தோடு ஏறிட்டு, இவர் அதிகாரமுள்ளவரைப்போல காணப்
படுகிறாரில்லவா? மெய்யாகவே அவர் இராஜாதான்! எல்லாரும்
வந்து அவருக்கு வணக்கஞ்செய்யுங்கள் என்றான்.

அப்பொழுது அரசர் தோழரும் போர் சேவகர்களும் பரி
காசத்தனமுகஸ்துதி செய்ய முன்னே தள்ளிவந்தார்கள்.

ஆனால் ஏரோது, தன் இராஜரீக ஆசனத்திலிருந்து கவனித்
துக்கொண்டிருக்கும்போது, ஏறைப் படுத்தப் பட்டவரின் முகத்
தில் ஏதோ ஒரு குறிப்பைக் கண்டான், அது அவனை ஆராசங்
கொள்ளும் படிச்செய்தது. எனக்கு விருப்பமில்லாத ஒரு பார்
வையுடையவர் போலக் காணப்படுகிறார். அவர் சும்மாயிருப்பது
எனக்கு விருப்பமில்லை. அது இயற்கைக்கு விரோதமாயிருக்கி
றது. ஒருவேளை இப்போது அவர் ஒரு பயங்கரமான பெருங்
காரியத்தைச் செய்வார் போலும்; அவருக்கு எல்லையில்லாத வல்
லமையுண்டென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள் என்றான்.

பின்னும் அவன்: உத்தியோகஸ்தர்களில் ஒருவனை அதிகா
ரத்தோடு சைகை காட்டிக் கூப்பிட்டு, இந்த மனுஷனை அழைத்
துக் கொண்டு போங்கள்! திரும்பப் பிலாத்துவினிடத்திற்கே
அழைத்துக்கொண்டு போய் விடுங்கள் என்றான்.

அப்போது அந்த உத்தியோகஸ்தன்: அரசே, மேலே போட்டிருக்கும் அங்கியை எடுத்துப் போடலாமா? என்றுக் கேட்டான்.

ஒரோது அவசரத்துடன் இல்லை, இல்லை! அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைக் கொண்டுபோங்கள். யூதர்களைச் சுட்டிக்காட்டி, இவ்வறையிலிருந்து இவர்களை யெல்லாம் வெளியேற்றுங்கள் என்று ஒரு வீசு வீசி சைகையாக ஜாடைக் காட்டினான்.

அவன் சொன்னது போலவே யாவும் நடந்தேறிற்று. இன்னொரு முறையாக பிலாத்து தன் நியாயாசனத்துக்கு வரும்படியாக அழைக்கப்பட்டான். இயேசுவும் அவனும் எதிரெதிராக இருந்து காரியம் ஒழுங்குபடும்படியாயிற்று.

---



# இருபத்தெட்டாம் அதிகாரம்.

இராஜரீக ஆசனத்தின் மேல் மறுபடியும் தேசாதிபதியாகிய பிலாத்து தன்னுடைய தெற்றியை தெரிந்துக்கொண்டுவந்து உட்கார்ந்தான். அவன் வெறுப்புற்றோரைப் அவரைக் கொண்டு வந்தவர்களைப் பார்த்து: நீங்கள் இந்த மனிதனை ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனென்ற குற்றஞ் சாற்றி என்முன் கொண்டுவந்திருக்கிறீர்கள். பாருங்கள், உங்களுக்கு முன்பாக நீங்கள் அவர் மேற் சாற்றிய குற்றங்களை யெல்லாம் விசாரித்த போது அப்படியான ஒரு குற்றத்தையும் நான் அவரில் காணவில்லை. அப்படியே ஏரோதுவும் கூட, உங்களை யனுப்பியதற்குப் பார்த்தீர்கள்! அந்த மனிதனுக்கு ஆக்கினைத் தீர்ப்பிடாமலே திரும்ப என்னிடத்திலேயே அனுப்பி யிருக்கிறார். ஆகையால் நான் அவனை தண்டித்து விடுதலைசெய்வேன் என்றான்.

தண்டிப்பது தன்னில் தானே அதிக பயங்கரமானதாயிருப்பதினாலே அந்த யூதர்களுக்கு அவர் பேரிலிருந்த கோபம் ஆறிப் போகுமென்று எண்ணி இப்படியாகச் சொன்னான்.

அப்போது அங்கே கூடி வந்திருந்த ஜனத்தின் அதிதாழ்வான கேவலமுள்ளவர்கள் ஆயிரக் கணக்கான வர்களாயிருந்தார்கள். அவர்கள் காட்டு மிருகங்களைப் போல் ஈவுகிரக மற்ற அர்த்த மில்லாத பலத்த சத்தமிட்டதைப் பிலாத்து கண்டு கேட்டபோது, தன்னருகே நின்ற ஒரு உரோம உத்தியோகஸ்தனை அவர்கள் சொல்லுகிற தென்ன வென்று கேட்டான்.

எங்களுக்கு ஒரு குற்றவாளியை! விடுதலையாக்கும்! விடுதலையாக்கும் என்று கத்துகிறார்கள் என்பதாக பதிற் சொன்னான்.

அவன் சொன்னதைக் கேட்ட பிலாத்து: பண்டிகைக் காலத்திற் குற்றவாளி யொருவனை விடுதலை யாக்குவது வழக்கமாதையால், "அவர்கள் சரியாய் சொன்னார்கள்" என்று சந்தோஷமாய்

தன்னில் தான் நிலைத்துக்கொண்டு, எனக்கு நல்ல சமயம் கிடை
த்தென்று எழுந்து நின்று, "நான் யூதருடைய இராஜாவை
உங்களுக்கு விடுதலையாகச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்களா?" என்ன
வென்று பலத்த சத்தமாய் கேட்டான்.

ஏப்பிரில் மாதத்திற்குச் சரியான சான் மாதம் 15ம் அந்தப்
பண்டிகைகாலத்துக்குச் சரியான அக்காலத்தில் சிலுவையில் அறையப்
படும்படியாகத் தீர்ப்பைப் பெற்று நிறைச்சாலையில் பராபாஸ் ஆக்கி
னைத் தீர்ப்பிடப் பட்டிருப்பதைப்பற்றி பிரதான ஆசாரியர்கள்
அறிந்துக்கொள்ள நேர்ந்தது.

ஆகவே யோக்கனன் மற்ற அவர்களுக்குள்ளிருந்த அறிவா
ளிகளும் ஜனகூட்டத்தோடு கலந்து, ஜாதிஅபிமானியாக பராபாஸ்
பாடுபட்டுப் போகிறானென்கிறதாக ஜனங்களுக்கு வஞ்சகமாய் புக
ட்டினார்கள். அவர்கள், வஞ்சகவார்த்தைகளைக் கேட்ட ஜன
கூட்டமே கோபித்து கூக்குரலிட ஆரம்பித்து; கலாரேல்
லாரும் ஒன்றுசேர்ந்து கூடிவரும்படியாக பராபாஸ்! பராபாஸ்!
என்று கூவினார்கள். தடந்தென்ன வென்பதைப் பார்க்கும்
படி அதிகமாய் ஆசாரகனிஷ்டானோர் தூரணமனேக்கு ஓடிவந்து
சேர்ந்தார்கள். அங்கே இருந்தவர்களும் வந்தவர்களுமாகிய
யாவரும் ஒன்றுப்போல் சேர்ந்து பராபாசுக்காக கத்தி ஊளைகளிட்
டார்கள்.

அப்பொழுது பிலாத்து: கிறிஸ்து என்னப்படுகிற இயேசு
வைப்பற்றி நான் என்ன செய்யலாம்? என்றான்.

அதற்குப் பிரதான ஆசாரியர்கள்: "அவன் சிலுவையில்
அறையப்பட்டும்!" என்றார்கள்.

ஜனங்களெல்லாரும் விபரீதமாக பைத்தியங்கொண்டார்
போல், இரத்தஞ்சிந்த தாகங்கொண்டார்போல், அவர்களுக்கு
காலாகாலத்திற்தும் பிரதிபலிக்கும்படியாக, "அவனை சிலுவை
யில் அறையும்! சிலுவையில் அறையும்! அவனையதற்கும்! சிலு
வையில் அறையும்!" என்று பலத்த சத்தமாய் கூவிக்கதிக்
கூச்சலிட்டார்கள்.



பிலாத்து நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவ
ளுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி: "நீர் அந்த நீதிமானை
ஒன்றும் செய்யவேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்
பனத்தில் வெகுபாடுபட்டேன்."

இப்படிக்கு

"இலவுதியாள்."

என்று நக்கத்திரை விழைக்கப்பட்ட சித்திர படத்தின் பேரில்
எழுதி அந்த ஆளின் மூலமாய் அவனுக்குக் கொடுத்தனுப்பினாள்.
அவன் தன் மனைவியினிடமிருந்து வந்த கண்டனத்தை வாசித்
துப் பார்த்தான்.

அப்போது அவன்: முன்னேயவிட அதிகமாய் அவரை விடு
தலைபண்ணும் பொருட்டு ஆவல் கொண்டவனும் "அவர்களை
நோக்கி" மூன்றாவது முறை "என் இவன் என்ன பொல்லாப்
புச் செய்தான்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவ
னிடத்தில் நான் காணவில்லையே; ஆகையால் நான் இவனைத்
தண்டித்து விடுதலையாக்குவேன்" என்றான்.

ஆனால் அவன் ஜனங்களுக்குப் பயந்தவனென்று பிரதான
ஆசாரியர்கள் கண்டுபிடிப்பட்டும் தங்கள் சத்தத்தை உயர்த்தி"
அவரைச் சிலுவையில் அறையும்! சிலுவையில் அறையும்! என்று
கத்தினார்கள். இப்படியாக அந்தராளான ஜனக்கூட்டம் பேய்க்
கோலங்கொண்டோராய் ஓயாமல் அதையே சொல்லி ஊளையிட்
டுக்கொண்டேயிருந்தார்கள்.

பிலாத்து தன் சிம்மாசனத்திலிருந்து பயமுறுத்துகிற ஜன
ங்களைப் பார்த்து தன்னுடைய இருதயம் தனக்குள்ளே மெழுகு
போல உருக, அவன் தனக்குத் தானே தான் இந்த மனிதனை விடு
தலைபண்ணமுடியாதபடி காரியம் முற்றிப்போயிற்று. சமயம் கவ
ளிலில் ஒரு தூதன் குறைந்துபோகிறான் என்று சொல்லிக்கொண்
டான். பின்னும் அவன் தண்ணீர் கொண்டுவரச் சொன்னான்.
அது கொண்டுவரப்பட்டபோது, அவன் ஜனங்கள் எல்லாருக்கு

முன்பாக எழுந்து நின்று "இந்தநிமோனுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி "தண்ணீரை அள்ளி" தன் "கைகளைக் கழுவினான்."

அப்போது அந்த ஜனங்களெல்லாரும் பயங்கரமான வார்த்தைகளால் "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று பதிற் கூறினார்கள்.

பின்பு "அவன் பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும் படிக்கு ஒப்புக்கொடுத்தான்."

பரபாஸ் சிறைச்சாலையைவிட்டு வெளியே வந்தான்; அவன் அங்கே கடந்தேறியவைகளைக் கேள்விப்பட்டபோது, அந்த மனிதன் கபடியென்று நான் சொல்லவில்லையா வென்று பரிகாசமாய்ச் சொன்னாள்.

இதெல்லாமானதின் பின்னர் பிலாத்து தன் இருதயத்திற் கனத்தக் கவலைக்கொண்டவனாய்த் தன் அரண்மனைக்குள் சென்றான் உள்ளறைக்குள் தன்னேத்தான் மறைத்திருக்கிற வகைப்பார்த்தபோது தன் மனைவியாகிய கிலவுதியாளுக்கு எதிராக வந்தாள்.

அப்போது அவள்: நான் உமக்கு அனுப்பிய கண்டனைக்கடிதத்தைப் பெற்றீரா? என்று கேட்டாள்.

அதற்கு அவன், நான் பெற்றுக்கொண்டேன்; ஆனால் காலங் கடந்தபின் பின்னர் வந்தது. எல்லாம் நடந்தேறிய பின்னர் நான் உன் காகிதத்தை என் கைகளிற் பெற்றேன் என்று திக்கித்திக்கி சொன்னான்.

ரொம்ப நேரஞ் சென்றதென்றால் அர்த்தமென்ன? அந்த மனிதன் இறந்தாபோனார்? என்று கிலவுதியாள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

இல்லை, அவர் இன்னும் உயிரோடுதானிருக்கிறார். ஆனால் நான், அவரைச் சிலுவையிலறையப்பண்ணும்படியாக தீர்ப்புச்செய்தேன். அந்த ஜனங்கள் இப்போதுங்கூட அழுத்தி உபத்திரவப்படுத்துகிறார்கள். அவர்களோடு போர்கொடுக்க என்னால் முடிய



வில்லை. அந்த ஜனத்திரளை நீ பார்த்திருக்கவேண்டும். அது மிகவும் பயங்கரமான கூட்டம்! அநேக சத்தம், அவர்களிட்டச்சத்தம் இன்னும் என் காதுகளிற் கேளிக்கின்றது! என்று கடைசிட்ட அவன் தன் முகத்தை தன் தலையின்மேல் வைத்து மூடிக்கொண்டான்.

அதைக்கேட்டு கிலவுதியாள் அதைப்பற்றி ஒன்றும் பேசாமல் அவளுடைய கண்களால் அவனைப்பார்த்தாள். அவளுடைய முகம் வெளுப்பேறி சாமுகம் பேயாயிற்று. அவள் தன் இடைய கம்பிய குரலோடு "நீர் அவரை ஆக்கினைக்குட்படுத்தினீரா?" என்று வினவியதைப்பற்றி ஒப்புக்கொடுத்தீரா? என்று சொன்னாள்.

இன்னும் அவள்: தேவர்கள் நமக்குத் துணைசெய்வார்களாக! நாம் செய்யவேண்டியதைச் செய்யவில்லை என்று சொல்லி பிலாத்துவை தன்னந்தனியே விட்டு விட்டுக் கோபமாய் விரைந்துச் சென்றாள்.

இது இவ்வாறிருக்க அந்தப் போர்ச்சேவகர்கள் இயேசுவை அழைத்துக்கொண்டுபோய் அவருடைய மேல் அங்கியைக் கழற்றிவிட்டு அவரைத் தாழ்வான ஒரு தூணுடன்சேர்த்து அவர் முதுகு குவியும்படியாக கட்டினார்கள். வாரினால் செய்யப்பட்ட கனத்த சாட்டி முனையில் கருக்குள்ள சிறு இருப்பு துண்டுகளைக் கட்டி அதைக்கொண்டு அவருடைய வெறும் உடம்பின்மேல் தங்களுக்கு கோபமுண்டாகுமட்டும் அடித்து வேதனைப்படுத்தினார்கள். பின்பு அவர்கள் அவரை மேலே உயர்த்தி மறுபடியும் எரோது அவனைப் பரியாசஞ்செய்யும்படி அவருக்கு உடுத்திய அந்த அங்கியை அவர்மேற்போட்டு அவரை நியாயஸ்தலத்திற்கு இழுத்துக்கொண்டுபோனார்கள். அங்கேயிருந்த அந்த ஜனக்கூட்டம் முழுவதும் கூட்டமாய் அவரைப்பார்க்கும்படி அவ்விடம் போனார்கள்.

அங்கே முன்னே எரோது செய்ததுபோல அவர்களில் ஒருவன்: "அவரை வணங்குவோமாக," என்று கூவினான்.

அவன் அப்படி சொன்னது அவர்களுக்குப் பிரியமாயிருந்தது.

எரோது அவர் பேரிற்போட்ட வெள்ளை அங்கியை எடுத்து விட்டார்கள். எனென்றால் அது அவருடைய இரத்தம் பட்டு வெண்மை மாறி இரத்தாம்பரத்தை போலாயிற்று. சிவப்பு நிறமுள்ள ஒரு போர்வையை அவருக்கு உடுத்தினார்கள். அந்தப் போர்வை அங்கேயிருந்தவர்களில் ஒருவனுடையது. அப்பொழுது அவர்களில் ஒருவன் வெளியே ஓடி முள்ளிறைந்த மரத்தினின் றிருகிளையைக் கொண்டுவந்து, அந்த முள்ளிலைகளினால் ஒரு முடியை உண்டுபண்ணி அவர் சிரசின்மேல் வைத்து கன்னப் பொறிகள் வராக்கும் அழுத்தினார்கள். அவருடைய கரத்தில் ஒரு நாணற்கோலைத் தொடுத்துச் செங்கோல் என்றார்கள். பிறகு அவர்கள் மிகக்சந்தமாய், எல்லாரும் அவரைப் பார்த்து அந்தக் கூட்டத்தில் எதிரொலி யெழும்ப சிரித்தார்கள். முழந்தாளிலே நின்று "யூதருடைய இராஜாவே! நீர் வாழ்க!" என்று கத்தினார்கள். பின்னுகக் கட்டியிருந்த அவருடைய கரங்களிலிருந்த அந்தக் கோலைப் பிடுங்கி அவருடைய சிரசின்மேல் மோதியடித்தார்கள். அவருடைய முகத்தில் துப்பினார்கள். இப்படி அவர்கள் மிருகத்தனமாய் ஆடிப்பாடிக்கொண்டிருக்கும் சமயத்தின் மத்தியில் பிலாத்து அவர்களண்டை வந்தான்.

வந்த அவன் குரூரமாய் "அவனை இங்கே கொண்டுவாருங்கள்" என்று கட்டளை செய்தான். பின்னும் அவன் அவரை விடுதலை செய்யவேண்டுமென்ற எண்ணமாய் நியாயாசனத்திற்கு வந்தான். எனென்றால், அவன் தன்னிற்றானே பயப்பட்டபடியினாலும், தன் மனைவி கிலவுதியாளினிமித்தமாகவும் செய்யவேண்டியதின்னதென்றறியாதிருந்தான்.

அப்பொழுது அங்கு கூடிவந்திருந்த ஜனக்கூட்டத்திற்கு முன்பாக எழுந்து நின்றான். அந்த ஜனக்கூட்டம் முன் பார்க்கிலும் அப்பொழுது அதிகமாயிருந்தது. அங்கே அந்த மேடையின் பேரில் அவர்களுக்கெல்லாம் உயரநின்ற அவரை அவர்கள் பார்த்தார்கள். அப்பொழுது அவன் அங்கே கடல்போல விஸ்தாரமான முகங்களையே தவிர வேறொன்றையும் பார்க்கக்கூடாதவனாயிருந்தான். வேதனையினால் அவரின் கண்கள் இருளடைந்தும்



அவருடைய முகம் அவர்கள் படித்திய பாடு காட்டியக் கோரணியினால் அழுக்கடைந்தும், முள்முடி தரித்தவரும், இவ்பங்கி பூண்டருமாயிருந்தும் தெய்வீகசாயலாக மறுரூபமடைந்தவராயிருந்த அவருக்குப் பக்கமாய்நின்ற பிலாத்து உண்மையான அநுதாபத்துடன் மிக்க வணக்கமுள்ள குரலோடி அந்த நிலைமைக்குட் பட்டிருந்த இயேசுவை சுட்டிக்காட்டி "இதோ இந்த மனுஷன்!" என்றான்.

ஓ, ஜனங்களே இவர் இவ்வளவான வேதனையை அடைந்திருக்கிறபடியினாலும் அவமரியாதையும் மானக்குறைவுமாயிருக்கிறார் பாருங்கள்! அவர் போதுமானமட்டும் பாடுபட்டிருக்கிறாரல்லவா? நீங்கள் அவர் மேல் மனதிரங்கி அவரை விடுதலைசெய்ய மாட்டீர்களா? என்று கேட்டான்.

ஆனால் அந்தப் பிரதான ஆசாரியர்களும் மற்றும் அந்த தேவாலயத்தின் உத்தியோகஸ்தர்களும் அவருடைய இரத்தத்தைச் சிந்தும்படியாக பைத்தியங்கொண்டவர்களுமாயிருந்தார்கள்; அந்த வெறியினால் அவர்கள் உக்கிரமாய் எரிக்கும் வெய்யிலில் மூன்று மணிநேரத்திற்குமேல் அவர் திரும்பித் தங்களிடம் கொண்டுவரப்படவேண்டுமென்று காத்துக்கொண்டிருந்தார்கள். பிலாத்து இட்ட அபயமும், கட்டப்பட்டவருடைய பரிதபிக்கப்பட்டக் காட்சியும் அவர்களைச் சுட்டெரித்த சூரியனின் ஸ்வரலோடுகூட ஸ்வாலையை உண்டுபண்ணக் கூடியவைகளாயிருந்தன.

"அவரை சிலுவையிலறையும்! சிலுவையிலறையும்!" என்று அவர்கள் திரும்பத்திரும்ப அவர்களுடைய அடிதொண்டையினால் ஊளையிட்டார்கள்.

பின்புப் பிலாத்து திடீரென்று எழுந்த கோபத்தோடு: "நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள், நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றான்."

அதைக்கேட்டு அந்த யூதர்கள், ஜனங்களுடைய பார்வையில் தீதிருள்ளவர்களென்று காணப்படும்படியாய் "அவனுக்குப்

பிரதியுத்தரமாக: "எங்களுக்கு ஒரு நியாயப் பிரமாணமுண்டு, இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால் அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்டுமென்றார்கள்."

அவர்கள் சொன்னவைகளைக் கேட்டபோது "நாம் செய்ய வேண்டியதைச் சரியாய்ச் செய்யவில்லை" என்று வெளுப்பேறிய சாமுகத்தோடு கிலவுதியோன் சொன்னதையும் கினைவுகூர்ந்து அதிக பயமும் நடுக்கமும் கொண்டவனாய்: அவன் திரும்பி நியாயஸ்தலத்திற்கு நடந்து சேர்ந்து காவலாளிகளை இன்னுமொருமுறை கட்டப்பட்டிருப்பவனைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான்.

அவன் அவனை நோக்கி: "நீ எங்கேயிருந்து வந்தவன்?" என்று கேட்டான்.

அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை என்ன பிரயோஜனம்! அவன் மூன்றுதரம் அவர் குற்றவாளியல்ல என்று தீர்மானமாய்த் தீர்த்தும் அவரை விடுதலையாக்கக் கூடாத பயங்காளியாகிய அதுனிட்டத்திற் பேசவதனாலாகும் பயனென்ன?

அவர் அப்படிப் பேசாமலிருந்தது தன் பயங்காளித்தனத்திற்கு ஒரு சாக்காக வைத்துக் கொண்டு; மூர்க்கமாய்: "நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகார முண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகார முண்டென்றும் உனக்குத் தெரியாதா?" என்றான்.

இயேசு அவனுடைய உள்ளத்திலிருந்த அந்தகாரமுள்ள குழப்பத்தையறிந்து அனுதாபங்கொண்டவராய் அவனை நோக்கி; அதேகமான துக்கமணித்தியாலங்களை மௌனமாய்க் கழித்தவர் நாம் நம்முடைய வாயைத்திறந்து: "பரலோகத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என் மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்."



இதைக்கேட்ட பிலாத்து அவருக்கு முன்பாக பயந்து நடுங்கினான்.

பின்னும் அவன்: மறுபடியும் ஜனங்களிடத்திற் போய் அவனை என்றான், நான் மூன்றுதரம் குற்றமற்றவனென்று தீர்த்தும் இரண்டு தரம் சூக்கினேக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவருமாகிய மனிதனை அவனை விடுதலையாக்கும்படியான விதமான நன்மையான காரியங்களையெல்லாம் அவர்களுக்குச் சொன்னான்.

அவர்களோ அவனையும் அவனுடைய வார்த்தைகளையும் அற்பமாயெண்ணி "இவனை விடுதலைபண்ணினால் நீர் சீசர் என்னும் "இராயனுக்குச் சிநேகிதனல்ல" என்றார்கள்.

சீசர் என்னும் பெயரைக் கேட்டபோது தன்னுள்ளத்திற் கலங்கினான். எனென்றால், பிலாத்து அநேக காரியங்களை நினைவு கூர்ந்து பயந்தான். பின்புஅவன் இயேசுவை நியாயாசனத்துக்கு முன். கொண்டுவரக் கட்டளைகொடுத்து, ஜனங்களை நோக்கி: "இதோ, உங்கள் ராஜா"! என்றான்.

ஜனங்கள் அவர்களோ, "இவனை அகற்றும்! அகற்றும்! சிலுவையில் அறையும்!" என்று சத்தமிட்டார்கள்.

"அதற்குப் பிலாத்து: உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா?" என்றான்.

"பிரதான ஆசாரியர் பிரதியுத்தரமாக:" சீசர் என்னும் "இராயனையல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை என்றார்கள்!"

அவர்கள் அதிகாரத்தோடு சொன்ன அவ்வார்த்தையினால் அவனுடைய பலவீன சித்தமாகிய அசைவைக் கண்டுபிடித்துப் போட்டார்கள்.

அப்பொழுது பிலாத்து தன் அழைத்தொண்டையினால், "இவனைக் கொண்டு போங்கள்! கொண்டுபோய் சிலுவையில் அறையுங்கள். இவனுடைய இரத்தப்பழி உங்கள் மேலே நான் என்றான்."

அதைக்கேட்ட மாத்திரத்தில் அந்த ஜனங்கள் இயேசுவை வெளியே அழைத்துக்கொண்டு போனார்கள்.

அந்த யூதஜனக்கூட்டம், அவர்களையாக சிலுவையில் அறையப்படும்படி ஒப்புக் கொடுக்கப்பட்டபோது, அவர்கள் பயங்கரமான பலத்த சத்தமிட்டார்கள்.

அந்தச் சத்தத்தின் கூக்குரலானது சுற்றமுழுவதிலும் முழங்கினது. அதைக்கேட்டபோது, நகரத்திலிருந்த ஸ்திரீகளும் பிள்ளைகளும் பயத்தினால் அசைக்கப்பட்டார்கள். அது தேவாலயத்தின் பிராகாரமான பிரகாரங்களில் தங்க பேரிடி முழக்கம் போல எதிரொலித்தது. அது அப்படியே மேலுக்கு மேலே உயரக்கிளம்பி தேவனுடைய சிம்மாசனம் சேருமட்டும் ஏங்காமல் ஏண்டொலித்துக்கொண்டே உயர்ந்தது. எப்போதும் அவருடைய சிம்மாசனத்திற்கு முன்பாக நிற்கும் அவரின் தூதர்கள் அவர்களுடைய முகங்களை அதற்கு எதிராக மறைத்துக்கொண்டார்கள்.

இது நிற்க, ஏண்காட்சிக்குப் பெருங்கோடிய மிருகத்தைப் போலிருந்த ஒரு மனிதன் மணிக்கணக்காக வெளியே ஜனக்கூட்டத்தினோடமாக தொங்கலாட்டமாய் நான்றுக்கொண்டிருந்தான். அவன் அப்போதைக்கப்போது தன்னைச் சுற்றித் தொங்கின தன் மயிரையும் வஸ்திரங்களையும் இழித்துக்கொண்டிருந்தான். அவன் பயித்தியங்கொண்டவன்போல் கூச்சலிட்டு, சபித்துக்கொண்டு, சற்களினூற்றன்னை கீறிக்கொண்டுமிருந்தான். ஆனால் ஜனங்கள் அவனைப்பற்றிக் கவனிக்கவில்லை. அவர்கள் அவனுக்குப் பேய் பிடித்திருக்கிறதென்றார்கள். அவனொருவேளை தேசேயனைத் தேடுகிறான் போலும். ஆனால் அவருக்கேதானை இப்போது தேவையாயிருக்கிறது என்றார்கள்.

அந்த மனிதன் அவ்வார்த்தையைக் கேட்டபோது தன் கண்களின்மேற் பின்னிக்கொண்டிருந்த மயிரைத் தள்ளிக்கொண்டு அவரை என்ன செய்யப்போகிறார்கள் என்று கேட்டான்.



அதற்கு அவர்கள் அவனைச் சிலுவையில் அறையக் கூட்டிக்கொண்டு போகிறார்கள் என்றார்கள்.

இதைக்கேட்டதும் அவன் பெரிய கூக்குரலிட்டு தன் விரல்களைக் காதில் வைத்துக்கொண்டு துரிதமாய் ஓடிப்போனான்.

தேவாலயத்துக்குள் வந்தபோதும் ஓடிக் கொண்டிருந்தான். அவனை நிறுத்த ஒருவராலும் கூடாதிருந்தது. பிரதான ஆசாரியர்களும் மூப்பரும் தாங்கள் முடிவிற்குக் கொண்டுவந்த கொலையைக்குறித்து சந்தோஷித்துக்கொண்டிருந்த இடம்வரைக்கும் வந்தான்.

"நான் குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன்." என்று வேகமாயோடி கூக்குரலிட்டு அவர்கள் முன்பாக அந்த மூப்பது வெள்ளிக்காசை யெறிந்துவிட்டான்.

பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவனைப் பார்த்தபோது பயந்தார்கள். அதைப் பற்றி எங்களுக்கானேன்? நீயே அதைப் பார்த்துக்கொள் என்று அலட்சியமாய் சொல்லுற்றார்கள்.

இப்படிச் சொல்லப்பட்டதைக் கேட்டவுடனே அவன் தேவாலயத்தை விட்டோடி, தேவனுடைய குமாரனை முத்தத்தினால் காட்டிக்கொடுத்த கெத்சேமனே தோட்டத்தின் அந்த இடம்வந்து அங்கே அவன் தன்னைத்தானே தூக்குப் போட்டுக்கொண்டான்.

அந்தப் பிரதான ஆசாரியர்கள் அவன் எறிந்த வெள்ளிக்காசுகளை இது இரத்தக் கிரயமானதினால் அதைப் பொக்கிஷப் பெட்டியிற் போடுவது நியாயமல்லவென்று சொல்லிக்கொண்டார்கள். அதைப்பற்றி யோசித்து, அதைக்கொண்டு அந்நியர்களை அடக்கம்பண்ணும்படியான குயவனுடைய நிலம் என்னப்படும் ஒரு நிலத்தை வாங்கினார்கள். ஆகையால் அந்த நிலம் இந்த நாள்வரைக்கும் இரத்த நிலம் என்றழைக்கப்பட்டு வருகிறது.

---



## இருபத்தொன்பதாம் அதிகாரம்.

நிசான் மாதம் 15ஆந்தேதி காலையில் கன்ற சவலைக் கொண்ட இருதயத்தோடு தித்து விழித்தெழுந்தான். இந்த நாள் அந்த நாள் தானே! என்ற தானிருந்த அவ்விருட்டறையின் சுவற்றை விரைத்துப்பார்த்து: இதுவே அந்த நாள்! இதுவே அந்த நாள்! அதுவே அந்த நாள்! என்று திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டான்.

தகுமணமே, இப்போதும் அவனைக் கொண்டுபோக வந்திருக்கிறார்களா! என்ற ஒரு சப்தம் அவனுக்குக் கேட்டது. அதைக் கேட்டதும் அவன் எழுந்து அவ்வறையின் ஒரு மூலைற்



போய் ஒளிந்துக்கொண்டான். அது அவன் பயப்படும்படியான தொன்றும் அல்லவே. மற்ற சிறைச்சாலைக்காரன் தன்னுடைய முரட்டுக் கைகளினால் தப்பமுந் தண்ணீரும் கொண்டு அவனுக்கு அவனிருந்த இருட்டறையினுள் செலுத்தினான். அவன் அப்போது அந்தத் தண்ணீரை ஆவலாக வாங்கி உட்கொண்டான், ஆனால் அந்த ஆகாரத்தைப் பார்த்தபோது, அது அவனை வியாதிப்படுத்தத் தக்கதாயிருந்தது.

பின்பு அவன் தன்னிற்றானே வேதனைக் கொண்டவனாய் நேள்விகளுக்குத்தன் செவியைச் சாய்த்தவனாயிருந்தான். கலகமுண்டான காளில் அவன் அறியாமலே அவனுக்குத் தலையிற் பட்டகாயத்தைக் கவனியாததினால் சீழ்பிடித்துக்கொண்டிருந்தது. அவனுடைய சரம்புகள் ஜுரத்தினால் சுடாயிருந்தன். அதனால் அவன் கேட்டவைகளிற் பாதி மரந்துவிட்டான். மணித்தியாலங்கள் மெதுவாக சமீபித்துவிட்டது. கடைசியாக, பொய்ய தாழ்ப்பாள்கள் அதன் சொறைகளில் திருப்பிடித்தாற்போல கதவு திறந்து விடப்பட்டபோது, அவன் தன் சிவந்த பிரகாசமுள்ள கண்களோடும், உதிர்க்கட்டிகளோடும், சிரித்துக் கொண்டுப் புறப்பட்டான்.

கடைசியாக நீயே வந்துவிட்டாய்! என்று உல்லாசமாக சொன்னான்.

நூற்றுக்கதிபதியவனை முறைத்துப் பார்த்து, சீக்கிரமாய் அவனை வெளியே கொண்டுவா! இந்தச் சிலுவையை இவன் பேரில் வைத்துக்கட்டு என்று உத்திரவு பண்ணினான்.

போர்ச் சேவகர்களில் ஒருவன் முதலாவது அவனை நாம் அடிக்க வேண்டியதில்லையா? என்ன! என்க.

இல்லை, அப்படியாக நமக்குக் கட்டளையிடப் படவில்லை. அன்றி, நாம் தரிக்கப்படவேண்டும். சூரியன் அஸ்தமனத்திற்கெல்லாம் அவர்களெல்லாரும் மரிக்கவேண்டும். முன்னமே நேரஞ்சென்று விட்டது; கிட்டக்கட்ட ஆறுவது மணி நேரமாகிருக்கிறது என்று அவனுடைய மேல் அதிகாரி சொன்னான்.

உடனே அவர்கள் அவன் முழங்கின்மேல் சிலுவையின் குறுக்குச் சட்டங்களைவைத்துக்கட்டிச் சிறைச்சாலையின் வாசலிலிருந்து வெளியே தரதரப்படுத்திக்கொண்டு வந்தார்கள். அப்பொழுது அவனுடைய மங்கின அறிவு நல்ல காற்று வீச சற்று தெளிவடைந்தது. அவன் அதே சமயத்தில் அந்த அமங்கலக் குரியான மரக்கட்டைகளைத் தூக்கலையும் தன்னைப்போலவே சுமந்து முற்றத்திற் கீர்த்துக்கொண்டிருக்கிறதைக் கண்டான். அமக்கல் போட்டிருந்த வஸ்திரம் யாவும் இரத்தத்தினால் கறைப்பட்டிருந்து கொண்டு முன்னமே சவுக்கடிபட்டிருந்தான் என்று ரூபகரித்தது. அதோடு அவன் தான் விம்மிவிம்மி நேவனுஷணம் சொல்லி மூச்சு விடுகிறவனுமிருந்தான்.

அப்போது அவன் பார்வை நீத்துவின் பாரிசமாய் சென்ற போது அமக்கல் அவனை நோ: யூதனே! இப்போது நீ நிஜமாய் பிரதான ஆசாரியனுடைய குமாரனைப் போலிருக்கிறாயென்று அவன் தன் அழித்தொண்டையினால் ஏளனமிட்டான்.

ஆனால் அவன் பண்ணின சூத்தத்தைக் கேட்ட தூற்றுக்கதி பதி அவனுடைய வாயின்பேரில் அடித்து மௌனமாயிருக்கக் கட்டளையிட்டான்.

சிலுவைகளோடு சுமந்து போன அவர்களிருவரையும் அதேகமான பல்லற்ற காலாட்படைகள் சூழ்ந்து வெகு துரிதமாய் வழி நடத்தப்பட்டு முன்னுக்குப் போனார்கள். அவர்கள் சிறைச்சாலை வாசலிட்டுச் சேரா முன்னம் நின்று விட்டார்கள்.

அவனை என் அத்தோனியாவுக்குக் கொண்டுவரவில்லை? என்று போர் சேவகர்களிலொருவன் தாழ்ந்த குரலோடு சொன்னான்.

அதற்கு வேறொருவன், அவன் இப்போது தான் ஆக்கினைத்

* மரணதீர்ப்பிடும் இடத்தில் முன்னாகவே வைக்கப்பட்டிருக்கும் ஒழுங்கான நேர்தூலங்கள், ஒன்றோடொன்று குறுக்கு நெடுக்காக இசைக்கப்படுவது.



தீர்ப்பிடப்பட்டான். நேரமில்லாதிருந்தது. அவர்கள் இப்போ தம்மோடு வந்து சேருவார்கள்.

கேள்! அவர்கள் இப்போது வீருகிறார்கள். அந்த ஜனக்கூட்டத்தினுடைய கர்ச்சனையைக் கேட்கிறாயா வென்றான்.

அப்போது ஐந்தாறு போர்சேவகர்கள், சில கம்பீரமான உத்தரவுகளோடு மெதுவாக வந்தார்கள். திரும்ப அவர்கள் முன்னுக்குப்போகப் புறப்பட்டார்கள்.

அவர்கள் நகரவாசலைக் கிட்டிச்சேர்ந்து உள்ளுக்குப்போக போனபோது எற்கும்படியாக கட்டளை வந்தது.

நீத்துவைக் காவற் பண்ணிக்கொண்டு போன சேவகர்களில் ஒருவன் அத்தக் கட்டளை யென்ன? என்று கேட்டான்

உயர உட்கார்ந்திருந்த ஒருவன் அந்த வாலிபன் தான் கீழேயும் சிலுவை மேலேயுமாக விழுந்தான் என்றான். அவர்களோ அப்போது தான் நாட்டுப்புறத்திருந்து வந்த ஒரு பருத்த மனிதனைப் பிடித்து அந்தச் சிலுவையை அவன்மேல் வைத்துக் கட்டினார்கள். நீ அவன் முகத்தை சற்றே பார்க்க வேண்டுமென்று சொல்லி பெருஞ் சிரிப்பு சிரித்தார்கள்.

வாசலுக்குப் புறம்பே கொருவி இருந்த மானுஷிகக் கூட்டமானது சாலையின் இருபக்கங்களிலும் வளைந்து நெருங்கி நின்றுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கூரைகளின் மேலும் சுவர்களின் மேலும் மரங்களின் மேலும் கொருவி யிருந்த ஜனக்கூட்டத்தையவன் பார்த்தான். அவன் புத்தி கலங்கினது. மூன்று பிரமாதமான பிரபலத் திருடர்கள் விம்மலையைப் பார்க்கவா இவர்களெல்லாரும் வந்திருக்கிறார்கள்! அவன் திருடனென்று அவனுடைய மார்பின் மேலே பெரும் அட்சரத்தினு லெழுதப்பட்டிருந்தது.

அந்தமுரட்டுத்தனமுள்ள ஓயாத கூச்சலின் மத்தியில் ஸ்திரிகள் கீச்சிடும் அழுகுரல்களும் அவன் கேட்கக்கூடிய அவ்வளவாக கேட்டது. வேறொரு சப்தமும் அவன் காதில் விழுந்தது. அது

அவன் இனி ஒருக்காலமும் கேட்கப்போகிறதில்லை யென்றெண்ணிய சத்தமே. அந்தச் சத்தமாவது:—

"தந்தையே! நித்துவே! இயேசுவே! என்று கீச்சிட்ட சத்தம் ஒரு வெண்மையான முகத்தினின்று அவன் கேட்டான். அந்த முகம் திரும்ப வுனக்கூட்டத்திற்குள்ளே மறைந்துபோனது.

முதலாவது, அவன் தன் கட்டுகளினின்று அவிழ்க்கப்படும்படி பயத்தோடு போராடினான். என்னைப் போகவிடுங்கள் என்று நித்து கதறியழுதான்.

அதைக் கேட்ட நூற்றுக்கதிபதி முரட்டுத்தனமாய் நித்துவைப் பார்த்து: பேசாதிரு! சிலுவையின் மேல் அழும்படி உன் அழுகையைப் பத்திரப்படுத்திக் கொள்! என்று சொல்லி அவன் தான் பிடித்திருந்த பட்டயத்தின் பிடியால் அவன் தலையின்மேல் அடித்தான்.

வாரங்கள் கணக்காய் ஸ்தேவான் நித்துவை தேடிதிரிந்து பயனற்றவனும், ஆதரவற்றவனுமாய் முடிவாக எருசலேமுக்கு வந்துசேர்ந்தான். அவன் தன் தாய் மரணத்தருவாயிற்கொடுத்த நித்துவின் தாயுடைய கையிற் கொடுக்கச் சொன்ன அந்தப் பின்னிய சரிகை மேற்சட்டையைக் காய்பாவினிடம் கொடுத்து நித்து வைப்பற்றின சங்கதிகளெல்லாவற்றையும் அவனிடம் சொல்லும் படியாக நிர்மானம் செய்துக் கொண்டான். அவ்வாறுசெய்தே அவன் தன் கத்தை வஸ்திரங்களோடும், பதியோடும், கால் தோவோடும் அரண்மனையின் பிரதான வாசலைக் கிட்டி அதைத் தட்டினான். வாசற் காத்திருந்தவள் அவனுக்குத் திறக்கமாட்டேனென்று மறுத்தாள்.

ஓ, பிரதான ஆசாரியனைப் பார்க்கப் போகிறாய், மெய்யா! என்று பரியாசமாகச்சொல்லி, போ பிச்சைக்காரா, நீ வந்த வழியாக போய் விடு என்றாள்!

ஆனால் ஸ்தேவான் பிடிவாதமாய், மெய்யாகவே நான் அவனைப் பார்க்க வேண்டும் மிகவும் அவசரமாக நான் ஒரு பெருத்த அவசியமான காரியமாக அவனைப் பார்க்கவேண்டு மென்றான்.

நல்லது, அப்படியெல்லாமிருந்தாலும் நீ உள்ளே வரக்



கூடாது. நீ உன் அவசரமானக் காரியத்திற்காக சட்டமாய்க் காத்திருக்கலாம்! என்று பரிகாசமாய் உரக்கச் சிரித்தாள் அவளுடைய முகத்தில் அந்தக் கனத்தகி நகரை படாரென்று சாத்தினாள்.

பிறகு எழை ஸ்தேவான் தான் தேடிய மனிதனைக் காணக் கிடைக்காதிருல், தன்னுடைய விருதுவான சோக்கத்தோடு நித்து தேவாலயத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

அங்கே இருந்த ஒரு ஆலயத்தின் காவற் சேவகனிடம் களங்கமற்றவனும் பிரதான ஆசாரியன் எங்கே இருக்கிறானென்று விசாரித்தான்.

நான் அவரைப் பார்த்து அவரோடு பேசவேண்டும் என்று போனபோது அவருடைய வீட்டில் அவரைப்பார்க்க உள்ளே என்னைப் போக விட்டாளில்லை என்றான்.

அதற்கந்த காவற் சேவகன் பரிகாசமாய்: உன்னை உள்ளே விடவில்லையா! அது ஒரு ஆச்சரியமான விஷயம்! அவர்கள் உள்ளே வரவழைத்து, உனக்கொரு சோர்ந்துபோன வீட்டின் அறையில் இடங்கொடுத்திருக்க வேண்டுமென்றான்!

அப்போது ஸ்தேவான் சோர்வும் கவலையும் அந்த மனிதனைப் பார்க்கையில் தன் முகத்தில் முரக்களையுண்டாயிற்று. நான் ஒரு பிச்சைக்காரன் அல்ல. நான் இந்த நிலைமையிற் காணப்படினும் நான் அம்மாதிரியானவனல்ல ஆனால் நான் பிரதான ஆசாரியனைப் பார்த்து, அவருக்கு அவருடைய குமாரனைப்பற்றிச் சொல்லவேண்டுமென்றான்.

அதற்கந்த சேவகன்: நீ பயித்தியக்காரன்! அவருடைய குமாரன் என்கிறாயே, அவனுக்குக் குமாரன் இல்லையே! நீபோ நீ பிரதான ஆசாரியனைக் காணக்கூடாது. காயபாவுக்கு இது ஒரு விசேஷித்தினம் நம்மெல்லாருக்குங்கூட இத்தினம் விசேஷித்ததே. இன்றிரவு பாஸ்காவை அநுசரிப்போம். இன்றைக்கு சிலுவையில் நசரேயனை அறைப்போகிறார்கள் என்றான்.

அதைக் கேட்ட ஸ்தேவான் கோபங்கொண்டு, நசரேயனையா?

சிலுவையில் அறையப்பட்டாரா? அப்படி இருக்கக்கூடாதே என்றான்.

அப்போது அந்த சேவகன்: போடா குறும்பனை பிச்சைக் காரப்பையா, நகரமுழுதும் அங்கே கூடிவரும் காணுக் கூடப் போகப்போகிறேன் என்றான்.

அவன் அதைச்சொல்லி முடிப்பதற்குள்ளாக ஸ்தேவான் போய் விட்டான். தான் எங்கே போகிறானென்றும், என் போகிறானென்றும் அறியாதவனும், தான் இருக்குமிடமெதி வென்று மதியாமலே எரிச்சல் கொண்டவனும் ஓடினான். அந் தச்சமயத்தில் தன்னைப் போல அவ்வளவு அவசரமாக புரண் டடித்தோடும் பெருங்கூட்டத்தின் மத்தியில் தான் இருப்பதாகத் கண்டான்.

நாம் இங்கே நிற்போமா! இக்கேயிருந்து நாம் நடக்கும் யாவற்றையும் வெகு சௌகரியமாய்ப் பார்ப்போமென்று அக்கூட் டத்திலிருந்த ஒருவன் தன் தோழர்களைப் பார்த்து சத்தமிட்டான்.

அதைக் கேட்ட ஸ்தேவான் அவனிடம் ஏதோ கேட்கிற வனைப்போல அவனைப் பார்த்தான். பார்த்த அவனையே ஸ்தே வான் அது மெய்தானா? என்று வினவினான்.

ஆனால் அந்த மனிதன் ஸ்தேவானுக்குப் பதில் யாதொன்றும் சொல்லாமல், நான் இதின மேலேறிப் போவேன்! என்று சொல் லிக்கொண்டே அந்தச் சாலையினோரமாய் வளர்ந்திருந்த ஆறு கிடந்த மரத்தின் மீது தொற்றிப் பற்றி ஏறினான்.

நகரத்தினின்று ஜனக் கூட்டம் கணக்கற்ற ஆயிரமாயிர மாய் அனந்தம் பேர் வந்துகொண்டிருந்தார்கள். அந்த ஜனத் திரளுக்குள் வந்தகப்பட்டுக்கொண்ட ஸ்தேவான் அக்கூட்டத் தில் அலைச்சற் பட்டு சாலையின் சமீபமாயிருந்த ஒரு சிறிய மேட் டினோரமாய்த்தானிருக்கத் தன்னைத் தானே கண்டான். அங்கே போர் சேவகர்கள் முமமடங்கிகமானவர்களாய் சட்டிலிபோற் கோர்வையாய் நின்ற ஜனங்கள் அதற்கப்புறம் போகாதப டிதடுத்துக்கொண்டிருந்தார்கள்.



அந்தக் கூட்டத்திலும் ஸ்தேவான்: நன் பக்கமாய் நின்றுக் கொண்டிருந்த விசாலமுள்ள முகத்தினையுடைய ஒரு ஸ்திரியை நோக்கி இந்தக் கூட்டம் எதற்காக வென்று எனக்குச் சொல்லு வாயா வென்று கேட்டான். "அது மெய்தானு அந்த—" என்று தேம்பியழுந்து சத்தத்தோடே சேசேயை அவர்கள் கொலை செய்யப் போகிறார்களா? என்று கேட்டான்.

அந்தச்செய்தி, கும்! அது மெய்தான். ஆ, கோரம்! வெட் கமாயிருக்கிறது! அது அற்பப்பிரானை தூசியர்களானவை. அவர்கள் எப்போதும் அவரைப் பகைத்து வந்தார்கள். நேற்று இராத்திரி தான் அவர்கள் அவரை கெத்சேமெனே தோட்டத் தில் அகப்படுத்திக் கொண்டுவந்து விட்டார்கள். அதிகாலையில் அவரை அவர்கள் பிலாத்துவினிடம் ஒப்புக்கொடுத்தார்கள். இப் பொழுது என்று சொல்லி அவள் தன்னுடைய கீண்ட முக்காடி னுல் தன் முகத்தை மறைத்துக் கொண்டாள்.

கெத்சேமெனே தோட்டத்திலுள்ளே யிருக்கும் ஒலிவ விருக்ஷ தனிவுக்குத் தோட்டத்திலோ? என்று ஸ்தேவான் கேட் டான்.

அழுகுரலோடே அத்ஸ்திரி, அவர் நிஸ்லஸ்த மாயிருக்கவும், நெடிக்கவும் படியாக அங்கே போவது அவருக்கு வழக்கம் என்று சொல்லி அபரிமிதமாய் அவள் கண்களிலிருந்து பாய்ந்தக் கண்ணீரினுல் மிஞ்சியொன்றுஞ் சொல்லக் கூடாதவளாய் நின்று போனுள்.

நான் அங்கே இருந்தேன். சத்தங்கூட எனக்குக் கேட் டது. இதுல் அது என்ன என்று எனக்குத்தெரியாமற் போ யிற்று. நான் நித்தினை செய்துக் கொண்டிருந்தேன் என்று ஸ்தேவான் சொன்னான்.

அப்பொழுது, அந்த ஸ்திரியானவள், கேள்! அதோ அவர் கள் வருகிறார்கள் என்றுள். அந்த ஜனக்கூட்டத்தின் இறைச்சலு க்கு மேலாக போர் வீரர்கள் நடந்து வரும் காலடி சத்தம் ஒலி தன்றது. அங்ஙனமே அந்த ஊர்க்கோலத்தின் முன் தண்டு வந்

தது. உரோமத்திருப்புகளும் காணப்பட்டது. அவர்கள் தரித்திருந்த யுத்த வர்க்கங்கள் சூரிய வெளிச்சத்திற் பிரகாசித்தது. அதற்குப்பின் நான்கு போர்வீரர்களால் ஒவ்வொருவரும் காவற் பண்ணப்பட்டவர்களாய் மூன்று பேர் சிலுவைகளைச் சுமந்தவர்களாயும், அவர்கள் மார்புகளின்மேல் வெள்ளைச்சாயமேற்றப்பட்ட பலகைகளிற் கறுப்பு அட்சரங்களால் அவர்கள் செய்தக் குற்றத்தைக்காட்டும் வாசகங்கள் எழுதப்பட்டவர்களாயுப் வந்தார்கள். ஆனால் நசரேயருக் கெழுதப் பட்டிருந்த வாசகமோ வித்தியாசமாக வரையப்பட்டிருந்தது. அவர் குற்றமற்றவராதலால், "நசரேயனாகிய இயேசு, யூதருடைய இராஜா" என்றெழுதியிருந்தது.

ஸ்தேவான் அதை உற்றுப்பார்த்து, வெடிவெடித்தாற்போல அவனுடைய உதடுகளிலிருந்து "தந்தையே!" "நீத்துவே!" "இயேசுவே!" "என்று பைத்தியங்கொண்டவனைப்போல் அழுது செத்தவனைப்போல மல்லாக்க விழுந்தான்."

அவன் பக்கமாய் நின்றுகொண்டிருந்த ஸ்திரி தன் மெதுவான அழுகையை நிறுத்தி அவன் பக்கமாய் முழந்தாள் ஊன்றிக்கொண்டு, நல்ல ஜனங்களே கொஞ்சம் பின்னுலே நில்லுங்கள். இந்தப் பாலன் மயக்கங்கொண்டிருக்கிறான். அவனுக்குக் காற்று வேண்டியதாயிருக்கிறது என்றாள்.

அப்போது அங்கே நின்ற ஒருவன் அவமதிப்பாக: அவன் ஒரு பிச்சைக்காரனே யல்லாமல் வேறேயாருமல்ல என்று சொல்லி, தன் காலாலே அவனை யொருதள்ளு தள்ளினான். அவனை அப்படியே இருக்க விடு, நீ இங்கே நடக்கும் காட்சியை யெல்லாம் இழந்து விடுவாய். அவர்கள் முதலாவது நசரேயனை கொண்டு வரப் போகிறார்கள் என்றான்.

விரைவாக அந்த ஸ்திரி தன்னுடை கொண்டுவந்த மூட்டையிலிருந்து ஒரு கூஜாவை எடுத்து அதிலிருந்து கொஞ்சம் தண்ணீரை ஸ்மரணையற்றிருந்த பையனுடைய முகத்திற் தெளித்தாள். பின்பு அந்த பெண்பிள்ளை எதிர்க்க முடியாத தெருக்கத்தினால்



தெருக்கப்பட்டு எழுந்து நின்று தனக்கு முன்னிருந்த பயங்கரமான காட்சியைக் காண தன் கண்களை ஏறெடுத்தாள்.

போர்வீரர்கள் வெகு தரிசனமாய் வேலைசெய்தார்கள், முன்னதாகவே, நசரேயரின் மேலிருந்த அங்கியைக் கழற்றி விட்டிருந்தார்கள். அவரை அங்கே தரையின் மேற் போட்டுக் கிடந்த சிலுவையின் பேரிற் கிடத்தினார்கள். இப்போது சில பலத்த அடிகளினால் அவரை அடித்து, நீட்டியிருந்த அவருடைய உள்ளங்கைகளில் பெரிய ஆணிகளைக் கடாவினார்கள்; அதற்குப் பின்பு அவருடைய கால்களிலும் ஒரு பாதத்தை இன்னொன்றின் மேல் வைத்து, ஆணிகளைக் கடாவினார்கள்.

அவர்கள் யாவையும் முடித்தபின் அவர் அறையப்பட்ட அந்தச் சிலுவையை பலத்த பன்னிரண்டு ஆட்கள் தூக்கியெடுத்து முன்னமே தோண்டி வைத்திருந்த பள்ளத்தினிடத்தைக் கொண்டுவந்து அதிலிறக்கி கூவிக் கொக்கரித்து அதனை நாட்டினார்கள்.

இயேசுவானவருடைய நிஜ சரீரம் அவர்களடித்த அடிகளின் அதிர்ச்சியினால் மிகவும் துன்புறுத்தப்பட்டதாய் அங்கே யாவருடைய கண்களும் காண நிலைத்தது. அவர் அங்கே சொன்னவைகளை?

அவர் சிலுவையின் பேரில் சொன்ன முதல் வாசகம்: "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; இவர்கள் செய்கிறது இன்னது என்று அறியாதிருக்கிறார்கள்" என்பதே.

இந்தருணத்தின் நிருபர்களைப்பற்றிய வரலாறு: அவர்கள் அதிகமான நிராட்சரத்தன்மையினால் மயக்க வஸ்துக்களினால் சாரமேற்றப்பட்ட மதுபானத்தை பூராவாய்ச் சாப்பிட்டிருந்தார்கள். அது அவர்களுக்கு அந்தரைத் தனத்தால் கொடுக்கப்பட்ட கொடையாகும். நசரேயருக்கு அந்தப்பானம் கொடுக்கப்பட்ட போது அவர் அது தமக்கு வேண்டாம் என்று மறுத்து தடுத்துப் போட்டார். அந்தமுதிர் பிராயமுடையோனாகிய கள்ளருக்குத்தலை வனே அவன் முறை வந்தபோது போர் வீரர்களோடு வெகு

மூர்க்கமாய் சச்சரவு பண்ணினான். ஆனால் தங்களாற்கூடிய சேனாதிபதியில் அவனே மேற்கொண்டு இழே தள்ளினார்கள். அவனே அறைந்தச் சிலுவையை தூக்கி சிறுத்தும்போது செய்கப்பிரதிக்கினைகளும், அலறிய அலறுதல்களும், கொஞ்சமானதல்ல.

இந்த இரண்டாம் வேலை முடிந்ததும், பாலியனுடைய முறையாகும் என்று ஒரு ஸ்திரி தன்னுடைய உதடுகள் பதற பயங்கரத்துடன் சொன்னாள். அவள் தன்னுடைய பரிதபிக்கப்படத்தக்க மனவேதனையாவையும் அடக்கிக்கொண்டு, கசரேயரைப் போல மௌனமாயிருந்தான்.

ஆனால் இப்பொழுது தன்னுடைய காலண்டையில் ஏதோ எழுந்ததுபோலிருந்தது. அவன் திரும்பார்த்து, குனிந்து, ஸ்தேவானுடைய தலையை தூக்கி தன்னுடைய பாத்திரத்திலிருந்து தண்ணீர் குடிக்கக் கொடுத்தான்.

அவன் தாகத்துக்குச் சாப்பிட்டபின் மேலுக்குத் தன் கண்களை எறிட்டு அந்த மூன்று சிலுவைகளைப் பார்த்தபோது "தேவனே!" "என் இயேசுவே! என் சகோதரனே! என் தந்தையே!" என்று தன் வாயோடே சொல்லிக்கொண்டான்.

இவன் இவ்வாறு சொல்லியதும் திரும்ப பின்புறமாய் விழுவதுபோலச் சாணப்பட்டான். ஆனால் இதென்று மேலே குறித்து எழுந்தபோது அவனுடைய கண்களில் பயங்கரமான தெருப்புப் பறந்தது. அப்போதவன் கோபத்தோடு அந்தப் பிரதான ஆசாரியன் எங்கே இருக்கிறான்? என்று சொல்லி; அந்த ஆலிபன் அவனுடைய குமாரன், இப்போதுங்கூட அவன் அவனை மீட்டுக்கொள்ளக்கூடுமே என்றான்.

ஐயோ! உன் வேதனை உன்னைப் பைத்தியங் கொண்டவனாக்கிற்று; இப்போது அவனை இரட்சிக்கக்கூடியது ஒன்றுமில்லை என்று அந்த ஸ்திரியானவள் பரிதாபத்தோடு சொன்னாள்.

பலனைத்தோலி அந்தப்பாலியன் திரும்ப சாய்ந்துபடுத்துக் கொண்டான். அவன் மணிக்கணக்காக வெகுநேரமாய் ஒன்றுஞ்



சாப்பிட்டிருந்தான். அவன் மண்டைத்தடுமாறி எல்லாம் மந்தமும் விபரீதமுமாய்க் காணப்பட்டது.

அவன் எனக்கு பயித்தியம் பிடிக்கத்தான் வேண்டும் என்று பலத்த சத்தமாய் சொன்னான்! பின்பு அமைதியாய் இருந்தான். மத்தியில் சிலுவையிற்றொங்கினவனோ வீரதாவாய் நிந்தித்து எழும்பிய ஜனங்களின் பயனற்ற சந்தடியைக் கேட்டான். அந்தக் கூச்சல்: "தேவாலயத்தை இடித்துபோட்டு அதை மூன்று நாளைக்குள்ளே கட்டிவிடுவேன் என்றாயே; நீ உன்னைத்தானே இரட்சித்துக்கொள்! நீ தேவனுடைய குமாரனேயானால் சிலுவையிலிருந்திறங்கிவா" என்பதே.

அவன் பின்னும் சிறப்பாயுடைத்து கீண்ட அங்கியை யுடுத்தி சிலுவையினருகில் நின்று நம்மை ஏகனாகீட்டி சக்கரமான ஜனக்கூட்டத்தோடு இருந்த பெருங்கூட்டமான மனிதர்களைக் கண்டான். அவர்கள் "இவன் மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ள திராணியற்றவனாயிருக்கிறான். இவன் இஸ்ரவேலின் ராஜாவானால், சிலுவையிலிருந்திறங்கி வரட்டும், அப்பொழுது அவனை நாங்கள் நம்புவோம். இவன் தேவனை நம்பியிருந்தானே; அவர் இவனுக்கு இருந்தால் அவர் இவனை இரட்சிக்கட்டும். ஏனென்றால் இவன் தான் தேவனுடைய குமாரன் என்று சொல்லிக்கொண்டானே" என்றார்கள்.

ஸ்தேவானுக்கருகாமல் செய்து அருகில் நின்றுகொண்டிருந்த அந்த ஸ்திரீ: அவர்கள் தான் பிரதான ஆசாரியர்கள் என்று அவனுக்குச் சொன்னாள்.

ஆனால் அவனோ பதில் ஒன்றுஞ் சொல்லவில்லை.

சூரியனானது கிட்டத்தட்ட உச்சிக்குமேல் வந்துவிட்டது. உக்கிரமான உஷ்ணங்காட்டி அது பிரகாசித்தது. ஆனால் அந்தப் பிரகாசமான ஒளி படிப்படியாய் மங்கிக்கொண்டுபோனது. ஆகாயத்தில் அதியற்புதமான அமைதியுண்டாயிற்று. ஜனங்கள் யாவரும் பயித்தியங்கொண்டவர்களைப்போல வியப்படைந்திருந்தபடியினால் முதலில் கோத்த இந்த மாறுதல்களைக்

குறித்துக் கவனியாமற்போனார்கள். பின் எல்லாரும் ஆறுதலற்ற வர்களாய் மேலே அண்ணாந்துப்பார்க்க ஆரம்பித்தார்கள். மேலே ஆகாயத்தில் மேக எழுச்சியையும், பலத்த மழைக்குரிய யாதொரு அடையாளத்தையும் காணோம். ஆனால் நிமிஷத்திற்கு நிமிஷம் வானஜோதிகளின் ஒளி மங்கிப்போகிறதாயிருந்தது. கொஞ்சம் பொறுத்து யாவும் பிரகாசமான மஞ்சள் நிறமாயிற்று. அப்புறம் சற்றுநேரத்திற்கெல்லாம் அதுவும் மங்கி இருண்டு எங்கும் அந்த கார முண்டாயிற்று.

அந்த ஜனங்கள் நடுக்கம் வெள்ளை முகங்களோடு ஒருவரை யொருவர் பார்த்து; இது என்ன? என்று மெதுவாய் சொல்லிக் கொண்டார்கள். பின்பு எல்லாரும் நடுச்சிலுவையின் மேற் றொங்குபவரை பயத்தோடு நோக்கிப் பார்த்தார்கள். அங்கே அவர் அசைவற்று தொங்குகிறவராகவும், அவர் சிரசு ஆவாது திருமார்பின் மீது சாய்ந்து இருப்பதாகவும், அவர் அவர்களுக்குக் காணப்பட்டார்.

அவருடைய இடது பாரிசத்திற் சிலுவையிலறையப்பட்டிருந்த மனிதன் தேவதூஷணமான பயங்கரமாய்ச் சொல்லிக் குமுரியழுதுக்கொண்டு மிருந்தான். யாவரும் பயத்தினால் அமர்ந்திருந்தபடியால் அவன் சொல்லிய வார்த்தைகள் மிகத்தெளிவாய்க் கேட்டன. அவன் பக்கமாய் மத்தியில் அறையப்பட்டிருப்பவரை பயங்கரமான விதமாய் கூச்சலிட்டுக் கொக்கரித்து, கீர் கிறிஸ்து வானால் உம்மையும் எங்களையும் இரட்சித்துக்கொள்ளும் என்று சாபமிட்டு அலறிக்கொண்டிருந்தான்.

நசரேயரின் மறுபக்கத்திற்றொங்குண்டிருந்தவனோ பரிதாபமுள்ள தன்னுடைய பெருமூச்சு தவிர மற்றபடி இதுவரைக்கும் மௌனமாயிருந்துக்கொண்டிருந்தான். கடைசியாக பயங்கரமான அவனுடைய வேதனையினால் அவன் புத்தித் தெளிந்து பின் வருமாறு பேசப்படியாரம்பித்தான்:—

"நீ பேசாமலிருக்கமாட்டாயா? நீ இந்த தூக்கினைக்குட் பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?



நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், நாம் செய்கிறதற்கு தகுந்த பலனை அடைகிறோம்; இவரோ தகாத தொன்றையும் செய்கவில்லையே" என்று சொல்லியதை ஸ்தேவான் தான்றிருந்த விடத்தினின்று மூக்கிடாமல் கேட்டுக்கொண்டிருந்தான்.

அதற்குப் பின்பு அவன் தன்னுடைய சாகுங்கண்களை இயேசுவின் பக்கமாய்த் திருப்பி பயத்தோடு "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று மன்றாடினான்.

இயேசுவினுடைய நிந்திய திருமுகத்தில் இரத்தமும் அந்தப் படைஞர் செய்த பலவித கோரணிகளால் படிந்த அகத்தமான குறிப்புகளுமிருந்து, மரணத்தருவாயில் காணும் அறிகுறிகளுங் காணப்படினும் தெய்வீக சந்தோஷம் அவர் முகத்தில் வீசிக் கொண்டிருந்ததை ஸ்தேவான் பார்த்தபோது அவனுடைய இருதயம் சந்தோஷத்தினால் நிரம்பிற்று.

அவருடைய தெளிவுள்ள குரல் அவ்வளவு அழகுவாய்ந்த இன்பமான தொனியாயிருந்தபோலவுமிருந்தது: "நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன்" என்று நமது இரட்சகர் அலறிக்கொண்டிருந்தவனுக்குச் சொன்னார்.

இதைக் கேட்டவுடனே மிக ஆனந்தமாய் புன்சிரிப்புக் கொண்டான். ஆகாதே "பரதீசில்" இருப்பதைவிட வேறு என்ன மேலானது! இப்போது அவனுக்கிருந்த வேதனையைப் பற்றியாவது, வெட்கத்தைப்பற்றியாவது, சாகிறதைப்பற்றியாவது, அவனுக்கு என்ன கவலை! யாதொரு கவலையும் இல்லை போலும்!

ஸ்தேவான் இருந்தாபோலிருந்து வாஞ்சையோடுகூடிய சத்தத்தோடு முன்னுக்குவந்து "என்னையுங்கூட எற்றுக்கொள்ளும்!" என்றான்.

நற்செயலாய் தனக்குச் சமீபமாய் இயேசுவின் தாயாகிய

மரியாளும் அவர்களோடுகூட வேறு இரண்டு ஸ்திரீகளும் அன்பான சீஷனாகிய யோவானும் நின்றிருப்பதை ஸ்தேவான் கண்டான். அவர்கள் அந்த இருட்டில் அவன் வெகுதெளிவாய் பார்க்கக்கூடியவிதமாய் இருந்தார்கள். எனென்றால் ஜனங்கள் பயத்தினால் எல்லாரும் ஒடிப்போய் விட்டார்கள். உரோமைபோர்ச் சேவகர்களைத் தவிர வேறே யாரும் அங்கே இல்லை. இவர்கள் மட்டிலும் சிலுவையினண்டையில் நின்றார்கள். ஸ்தேவான்மெதுவாய் நகர்ந்து மரியம்மாளுடைய வஸ்திர தொங்கலைத் தொடுமட்டும்போனான். ஆனால் அவன் அவர்களோடு பேசவில்லை. அப்படிச் செய்ய அவன் துணிவில்லை.

அந்தம்மாள், "என் மகனே! என் ராஜனே!" என்று புலம்பி அழுதார்கள். அந்த அழுகையைக் கேட்டபோது மங்கிப்போன அந்தச் சாகப்போகிறவரின் கண்கள் திரும்பப் பிரகாசித்தது.

அப்போது அவர் தம்முடைய் அளவற்ற இரக்கத்தோடு தமது தாயாரை நோக்கி விடாய்ப்புற்றவராய்: "ஸ்திரியே! அதோ உன் மகன்!" என்றும், அந்தச் சமயத்தில் பாதி மூர்ச்சித்து இருந்த அந்தம்மாளோத் தாங்கிக்கொண்டிருந்த யோவானின் பக்கமாய் தமது கண்களைத் திருப்பி அவனைப் பார்த்து: "அதோ உன் தாய்!" என்றும் சொன்னார்.

மணிநேரங்கள் கடந்து போகப்போக இருளும் அதிகமாகிக்கொண்டே போனது. அந்த-அந்தகாரம் இரவின் சரியான இருட்டு போலிருந்தது. அதுவும் ஜோதிகளிராத இராத்திரி போலிருந்தது. ஆயிரமாயிரமான பேர்கள், சிலுவையில் அறையப்படுதலின் அகோரத்தைப் பார்க்க வந்தவர்களெல்லாரும் அப்போது உடுத்திவந்த உடைகளோடு அதின் முடிவைக் கவனிக்கும்படியாக தாங்கமுடியாத பயத்தோடு காத்துக்கொண்டிருந்தார்கள். அந்த மகா இருட்டில் அந்தப்புறம் அல்லது இந்தப்புறம் அவர்கள் போகக் கூடாதவர்களாயிருந்தார்கள். சாகப்போகிறவர்களில் ஒரே ஒரு மனிதனின் சத்தமேதவிர மற்றதெல்லாம் அடங்கிப்போயிற்று.



ஒன்பதாம் மணிநேரத்தில் இயேசு வேகமாய் நிறைந்த தமது தொனியை உயர்த்தி: "எலி! எலி! லாமாசபக்தானி என்றார்." அவரால் சொல்லப்பட்ட மற்றெல்லா வார்த்தைகளிலும் மிகவும் உயர்தரமான சனத்தைக்காட்டிலும் அதிக இலேசான கலிலேயருடையதும் அவர் சிறு பிராயந்தில் வழங்கிய பாஷைபுமாயிருந்தது: "அதற்கு என் தேவனே! என் தேவனே! என்னை ஏனைக் கைவிட்டீர் என்பது அர்த்தமாம்."

ஆனால் அங்கே அவரைக் காத்துக்கொண்டிருந்தவர்களில் சிலர் அவர் முதலில் சொன்ன "எலி! எலி!" என்ற வார்த்தை மாத்திரம் கேட்டு சரியாய் உணராமல் "இந்த மனிதன் எலியாவைக் கூப்பிடுகிறான்" என்றார்கள்.

பின்னும் அவர் தாகமுங் கொண்டு முடிவாய்: "தாகமாயிருக்கிறேன்" என்றார்.

அப்போது, போர்சேவகர்கள் ஒடித் தங்களை இளைப்பாற்றிக் கொள்ளும்படியாக கொண்டுவந்து அங்கேவைத்திருந்த புளிப்பேறிய சாதாரண திராட்சரசத்தில் கடற்காளான் என்றழைக்கும் பஞ்சியைத் தொய்த்து, அங்கே அருகேயிருந்த நாசோப்பு செடிகளிலொன்றைப் பிடுங்கி அதின் நுனியில் மாட்டி, விடாய்த்து வரண்டுப்போயிருந்த அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்தார்கள்.

வேறொருவன், "பொறுங்கள், எலியா இவனை இரட்சிக்க வருவானோ பார்ப்போம்" என்றான்.

இன்னமும் அங்கே மௌனம் இருந்தபடியே இருந்தது. ஒரு விநாடியில் எல்லாம் முடிவிற்கு வந்தது. எல்லாவற்றிற்கும் மேலான அதிஉன்னத சந்தோஷமும் ஜெயமும் ஜீவனை விடப்போகிறவரின் திரு முகத்தில் ஜொலித்தது. அப்பொழுது அவர் "முடிந்தது!" என்றார். பின்பு அவர் தமது தாழ்மையுள்ள கடையான ஜெபவார்த்தையாக:—"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்!" என்ற மரணத்தைத் தேவான

வேதனையோடு தமது திருசிரசை தமது மார்பின்மீது சாய்த்தார். அப்போது அவர் மரித்தார்.

அதற்குப்பினபு கன்மலைகள் பிளந்து மடமடவென்ற சப்தமும், பூமி அசைந்து அவ்வதிர்ச்சியின் கோஷடங்களும் உண்டாயின. ஜனங்களெல்லாரும் மிகவும் சத்தமிட்டு பயந்தினுல் பைத்தியங்கொண்டவர்களாய் செய்தலேப ஓசைகளும் மேலிட்டன.

அவர்களெல்லாரும் தங்கள் மார்புகளில் அடித்துக்கொண்டு, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, "நாம் செய்யவேண்டியதைச் சரியாய்ச் செய்யாதவர்களாயினேம்." நாமெல்லாரும் தப்பிதமாய்க் காரியங்களை நடத்தியவர்களாயிருக்கிறோம் என்று புலம்பி அழுதார்கள்.

உரோமை நூற்றுக்கதிபதியும் அவனோடு இருந்தப் போர்ச் சேவகர்களும் பயங்கொண்டவர்களாய் நடுநடுங்கி விழுந்தார்கள்.

அவர்களெல்லாரும், "இவர் மெய்யாகவே, தேவனுடைய குமாரன்!" என்று சொல்லிக்கொண்டார்கள்.

இதெல்லாம் நடந்தேறிய பின்னர் உண்டாயிருந்த அந்தக் கடினமான அந்தகாரம் எப்படி வந்ததோ அது போலவே திடீரென்று மாய்ந்துபோயிற்று. மகிமையாக சூரியனுடைய தன் கிரணங்களை வீசிப் பிரகாசித்தது. ஜனசமூகங்களோ தத்தம் மார்புகளின் மேல் அடித்துக்கொண்டு இன்னும் அழுதுக்கொண்டு நகரத்திற்குள் திரும்பிப்போனர்கள். அப்போது அவர்கள் "அவருடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும்" என்று முன் சொல்லிக்கொண்டார்களே அதை இப்போது நினைவு கூர்ந்தார்கள்.

---



# பதினாறாம் அதிகாரம்.

மத்தியிற் சிலுவையில் அறையப்பட்டிருந்தவர் மரணம் அடைந்தும், அவரோடு சிலுவையில் அறையப்பட்டவர்களிருவரும் இன்னும் உயிரோடிருந்தார்கள். அவ்விருவரில் இடதுபுறமானவன் பிரக்ஞைதப்பினவன் போல் இருந்தான். எப்படியெனில் அவனுடைய தலை அவனுடைய மார்பின் மேல் தொங்கினது. அவன் அசையவுமில்லை. உயிர்கொண்டவனுயிருந்த குறிகாட்டப்படவுமில்லை. ஆனல் மற்றவனோ தன்னுடைய பெரிய தலையை இப்பக்கமும் அப்பக்கமுமாய் ஆட்டியசைத்துக்கொண்டிருந்தான். மூர்க்கமானவார்த்தைகளை சொல்லிக்கொண்டிருந்தான்.

அவன் சொல்லியதிற் சில: அவன் பிரதான ஆசாரியனை என்னண்டை யனுப்புங்கள்; நான் சாகப்போகிறவனுயிருக்கிறேன்; என் மூச்சொடுங்கும் முன்னே நான் அவனிடத்திற் சில சங்கதிகளைச் சொல்லவேண்டுமே என்றான்.

காலையிலிருந்து சிலுவைகளினருகே நின்றுக்கொண்டிருந்த பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனுகிய மல்கூஸ் என்பவனுடைய காதில் அந்த இடதுபாரிசத்து கள்ளனுடைய வார்த்தைகள் விழுந்தன. அப்போது அவன் நான் அவருடைய வேலைக்காரன் பிரதான ஆசாரியனை நீ பார்க்க விரும்புகிற தேதுக்கு? அவரிடம் உனக்குக் கவலையென்ன உண்டு என்றான்.

அப்பொழுது அவன் நான் தாகத்தினுல் மிகவும் வேதனைப் படுகிறேன். குடிக்கிறதற்கு ஏதாவது எனக்குக் கொடு என்று புலம்பினன்.

உடனே மல்கூஸ் பஞ்சியையல்லது கடற்காளானை அந்தப் புளிப்பேறிய திராட்சாரசத்திற் ரேய்த்து அந்தக் கெட்ட மனிதனுக்குத் திரும்பத் திரும்பக் கொடுத்தான்.

அதினால் அவன் சுவீனக்கொண்டவனைப் பார்த்து அந்தப் பிரதான ஆசாரியன் எங்கே? என்றுக் கேட்டான்.

அதற்கு மல்கூஸ்: அவர் நகரத்திற்குத் திரும்பிப் போய்விட்டார். நீ அவரிடம் சொல்லவேண்டிய தெதுவோ அதை என்னிடம் சொல்லு. நான் அவருடைய நம்பிக்கைக்குரிய வேலைக்காரன். நான் அதை அவருக்குக் கொண்டுபோய்ச் சொல்லுவேன் என்றான்.

அவனுக்கு நான் சொல்லக் கூடாதிருக்கிறபடியினாலும், காலமும் கொஞ்சமாயிருக்கிறபடியினாலும் உனக்கு நான் சொல்லுகிறேன் என்று கொஞ்சநேரம் வேதனையினால் அழுது, பின்பு முயற்சிபண்ணி "அதோ அங்கே சிலுவையின் மேலிருக்கும் அந்த இளைஞன் பிரதான ஆசாரியனுடைய காய்பாவினுடைய மகன்," என்று சொன்னான்.

அதைக் கேட்ட மல்கூஸ் பயத்தோடு பின்னுக்குப் போய்ஐயா, திருடா! நீ பொய்சொல்லுகிறாய் என்றான்.

அதற்குத் தூக்கேயஸ்: நானே பொய் சொல்லவில்லை. நான் சாகப்போகிறவனைச் சுற்றி. நான் அந்த யூதாலியனை அவன் குழந்தையாயிருந்தபோது அவனுடைய நாதியாகிய பிரிஸ்காளுடன் திருடிக்கொண்டுபோனேன். அந்தப் பிரிஸ்காள் என்னும் பெண்ணை நான் நேசித்ததினாலும். இந்தப் பையனை, காய்பாவின் கைகளினால் அடிப்பட்டதினாலும் வேதனைப்பட்டதினாலும் அவனுக்குப் பதிற் செய்யவேண்டுமென்றும் திருடிக்கொண்டுபோய்விட்டேன். நான் அப்படிச் செய்ய தகுதியானவனல்ல. அந்தத் தினைகள் நான் இப்போது நான் இருக்கிற நிலைமையில் என்னைப் பிசாசுக்குப் போட்டது.

மல்கூஸ் பிரிஸ்காளென்ற பெயரைக் கேட்டபோது பயங்கொண்டு நடுங்கினான். அந்தப் பெண்பிள்ளை எங்கே என்று கேட்டான்.

அதற்கு அந்த கள்ளன்: வெகு பிரயாசத்தோடு அவள் எங்கே இருக்கிறாள் என்று எனக்கு இப்போது தெரியாது. அவள்



கப்பர்நாகூமில் இருந்தாள். அவளிடத்தில் எனக்குப் பிறந்த பிள்ளை, ஸ்தேவான் என்ற ஒரு ஆண்மகனிருந்தான். அவன் இப்போது எங்கே இருக்கிறானென்று தெரியவில்லை. ஆனால் நீ இவைகளைக் காய்பாவுக்குச் சொல்லவேனென்று எனக்குப் பிரதிக்ஞை செய்! அப்போது அவன் இந்தப் பாம்பினையும், என்னை வாளால் அடித்த கையையும் நீனுவகூருவான் என்று தன்னுடைய கடைசி நாக்கினால் நக்கினான்.

இப்பால் மல்கூஸ் சிலுவையினண்டையோடி சிலுவையின் மேற்நோக்கிய அந்த முகத்தை வெகு கூர்மையாய்ப் பார்த்தபோது கள்ளன் சொல்லியது உண்மைதானென்று அறிந்துக் கொண்டான். அப்போதவன் மரத்தின்மீதேறி அந்தப் பாம்பினுடைய தெஞ்சினின்மேல் தன்னுடைய கையை வைத்துப்பார்த்தான். அவன் ஜீவன் போகவில்லையென்று அவன் மூச்சு இன்னும் அடித்துக்கொண்டிருப்பதை ஒருவாறு கண்டுகொண்டான். ஆனால் அவன்தாடி அவ்வளவு பெலனாயிருப்பதையும் உணர்ந்துக்கொண்டான். அவன் கொஞ்சநேரமாய போனவன் என்று யோசித்து தன் கொறுக்கிய இருதயத்தின் பெருமூச்சோடு முணுமுணுத்திரும்ப இறங்கிவிட்டான்.

சிலுவையின் அண்டை காவற்காத்துக்கொண்டிப்படி வைக்கப்பட்டிருந்த போர்ச்சேவகர்களில் ஒருவனுடைய கைக்குள் பொன்காசு ஒன்றை தழுகவிட்டு இந்த வாலிபனுடைய சரீரம் எனக்கு வேண்டியது. இவைகளெல்லாம் முடிந்தபின்னர் நான் வந்து இறக்கிக்கொள்ளுகிறேன். எனக்காகவேண்டி பத்திரமாயிருக்க ஏற்பாடுசெய். மறுபடியும் இதற்கு மும்மடங்கு உனக்குத் தருவேன் என்றான்.

அந்தப் போர்ச்சேவகன் சம்மதித்து, நீ அந்தப் பிரேதத்தை எக்கேவைத்துவைக்கச் சொல்லுகிறாய் என்று கேட்டான்.

அதற்கவன்: அவனை இறக்கும்படி இதோவந்து விட்டேன். நான் திரும்பிவருமட்டும், அவர்கள் அவனைக்கீழே இறக்கவிடாதே என்றான்.

தன் கையிலிருந்தக் காசைப் பார்த்துக்கொண்டு, நான் அதைப்பற்றிக் கவனித்துக்கொள்ளுவேனென்று அந்தப் போர்ச் சேவகன் பிரதிப்பலித்தான்.

பிறகு மல்கூஸ் துரிதமாய் ஒடினான். அவன் அரண்மனை முண்டையில் வந்தபோது, அவனது எஜமானுடைய தனி அறைக்குள் நேராய்ப் போனான்.

காய்பா அந்த அறையில் தனிமையாயிருந்தான். அவன் அந்த அறையில் தன்னுடைய பெரிய நாற்காலியில் அசைவற்றிருந்தான். அவன் தன் கண்களை ஒரு நிலையில் நிறுத்திப் பார்த்துக்கொண்டிருந்தான்.

மல்கூஸ் அந்தக் கற்போன்ற கடினமுகத்திற்கு முன்பாக பயந்து நடுங்கி: எஜமானே! நான் கொஞ்சம் சங்கதி தங்கள் குமாரனைப்பற்றி தங்களிடஞ்சொல்லவேண்டும் என்று அந்தப் பயங்கரமான செய்தியை அதிதாபத்தோடு சொல்லும்படி கூடிய மட்டும் பிரயாசப்பட்டான். ஆனால் பிரயாசங்கள் யாவும் அந்த சுயநயம், கடின சித்தங்கொண்ட காய்பாவினிடத்தில் வீணாகு மென்பதை யவன் அறியாமற்போனான்.

அவ்வாறுகவே அந்தக் காய்பாவானவன் தன் வேலைக்காரன் மல்கூஸ் சொல்லியவற்றிற்கு பதிலுரைக்காமலிருந்தான். அதைச் செவிக்கொடித்துக் கேட்டவனுக்கூட அவன் காணப்படவில்லை.

அப்போது மல்கூஸ் கிட்டே நெருங்கி நாற்காலியின் மீது சாய்ந்தவனுக: சத்தமிட்டு: நான் தங்களுடைய குமாரனைக் கண்டு பிடித்தேன். தங்கள் குமாரனை மரிக்கிறவனுக சொல்லவேண்டு மானால் மரித்தவனைக் கண்டுபிடித்தேன் என்றான்.

அதைக்கேட்டு காய்பா: சற்று செவிகொடித்தவன் போல் அவனுடைய பயங்கரமான பார்வையை தன் வேலைக்காரன்மேல் திருப்பி; நீ சொல்லுகிறதெல்லா மென்ன! இதெல்லாமென்ன வென்றான்.

அப்போது மல்கூஸ் துணிந்து அந்தப் பயங்கரமான கதை முழுவதையும் அவனுக்குத் தெரியப்படச் சொன்னான்.



அதினாலும் அந்தக் காய்பாவானவன் சற்றேனும் அசைக்கப் படவில்லை. அவன் நசரேயரோடு சிலுவையிலறையப்பட்டா னென்று நீ சொல்லுகிறாய் என்று இன்னும் தன்னுடைய மந்திரி குரோடு என் குமாரனும், தேவனுடைய குமாரனும் ஒன்றாய்க் குருசிலறையப்பட்டார்கள்! என்று சொல்லுகிறாய் என்றான்.

அப்போது காய்பாவின் முகம் பயங்கரமான விதமாய் மாறிற்று. அவன் எழுந்திருந்தான். அவனுடையக் கண்களில் நெருப்புப் பறந்தது. நீ பொய் சொல்லுகிறாய் என்று கூறிட் டான். நான் செய்ததைப்பற்றி நீ என்னைப் பயமுறுத்தும்படி பிரயாசப்படுகிறாய்! ஆனால் நானோ பயப்படுவதில்லை. நான் அதைப்பற்றிச் சந்தோஷம் — சந்தோஷமா யிருக்கிறேன். நீ நான் சொன்னதைக் கேட்கிறாயா? என் சமுகத்தைவிட்டு அப் புறம் போ, திரும்ப இதற்குள் பிரவேசிக்க ஒருபோதுந் துணி யாதே! நீ இவ்விடம் விட்டோடிபோ. இல்லையானால் உன்னைக் கொன்றுப்போடுவேன் என்று பேய்பிடித்தவன்போல் ஊளையிட் டுக்கொண்டு உள்ளிப்போனான்.

ஆனால் மல்கூஸ் வெளியே போய் விட்டான். அவன் தெரு வில் வந்தபோது கொஞ்சநேரம் ஒரு கல்லின்மேற் சாய்ந்துக் கிடந்து, நடுக்கங்கொண்ட தன் கரங்களை அழுத்தி தெரித்துக் கொண்டு: "என்தேவனே! என் ஆண்டவரே! அவனுக்கு இரங் கும். உமக்குச் சித்தமானால் அவனுக்கு மன்னியும் என்றும்மை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று புலம்பி யழுதான்.

அதற்குப் பின்பு மல்கூஸ் எழுந்து பிரேத அலங்காரத்துக் கான வாசனைத்திரவியங்களும் வஸ்திரமும் மாந்திரம் வாங்கித் தொண்டு கல்வாரிக்கு நேராக துரிதமாய்ப் போனான்.

அப்போது அவன் ஒரு ஒடுங்கிய தெருவின் வழியாக இருந்த மூலைத் திரும்பியதும் இரண்டு பேரைச் சந்தித்தான். அவர்க ளில் ஒருவன் அவனையவன் பேர் சொல்லி யழைத்தான். அவன் ஒரு நிமிஷநேரம் நின்று, அதென்னவென்று கவனித்தான்.

தன்னை அழைத்தவன் நசரேயருடைய இயேசுவாகிய யோவான் என்பதைக் கண்டுகொண்டான்.

உன்னுடைய எஜமானனுக்குச் செய்திக் கொண்டு வந்து வெகு நாட்களாய் அவனைத் தேடித்தேடி விடாய்த்துப் போயிருக்கும் பால்யனொருவன் என்னோடு கூட இருக்கிறான். அவனைத் தனிமையாய் உள்ளே வீடமாட்டோமென்று தடைப்பண்ணுகிறார்களாம், என்று யோவான் மல்கூஸினிடம் சொன்னான்.

அவன் முன்னே அதற்காகப் பிரயாசப்பட்டானா? என்று மல்கூஸ் கேட்டான்.

பால்யன் தானே, ஆம், நேற்று அநேக முறை பிரயாசப் பட்டேன் என்று சொன்னான்.

மல்கூஸ் சத்தமாய் அழுது, நீங்கள் என் எஜமானிடம் சொல்லப்போகிற செய்திகளெல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் அவனைப் பார்க்கப்போகிற பிரயாசை யெல்லாம் வீணுப்தான் போகும். அம்மனிதனைப் பார்த்தது செய்தியை சொல்லலாமென்றாலோ, இல் காலத்திற்கு அவள் இந்தச்சங்கதிகளை யறியாதிருத்தல் அவசியம். அவள் பொறுமையோடு சகிக்கவேண்டியது போதுமானதாயிருக்கிறது என்று சாய்பாவுக்கும் அவ்வம்மாளுக்கும் நடந்தேறியவைகளைக் கொஞ்சம் சுருக்கமாய்ச் சொன்னான்.

முடிவாக, மல்கூஸ் என் இளைஞனை எஜமானின் சரீரத்தை அடக்கம்பண்ணப் போகிறேன், இப்போது இதுதான் நான் அவனுக்குச் செய்யக்கூடியதாகும். அவனுக்காக என் இரத்தத்தையுங்கூடச் சிந்தியிருந்திருப்பேன் என்பது என் இருதயத்தின் வாஞ்சையாம்.

அதைக் கேட்ட ஸ்தேவான் சபட்றவனைப் போலுங்கூட அவனை நேசிக்கிறேன். ஆனால் அவன் தூண்டவரோடுகூட இருக்க, இதைவிட மேலான இடத்திற்கு அவன் போயிருக்கிறபடியால் அவனைக்குறித்து நான் அதிக சந்தோஷப்படுகிறவனுமிருக்கிறேன் என்றான்.



பிறகு அவர்கள் மூவருமாக, சிலுவைக்கு இருக்கிடத்திற்கு வந்து சேருமட்டும் மௌனத்தோடு வழி நடத்தார்கள்.

அவர்கள் அந்த இடம் வந்து சேர்ந்தபோது, இயேசுவான வருடைய சரீரமானது மரியாளையோடி யுடிய பயபக்தியோடு சிலுவையில் இருந்து கீழே இறக்கப்பட்டது. அதே வேளை மனுஷர் அதற்கு உதவிசெய்கிறவர்களா யிருந்தார்கள். அவர்களில் இரண்டுபேர் சனகெரிம் சங்கத்தின் அங்கத்தினரா யிருந்தார்கள். அவர்களுடைய நாமதேயங்கள்: அரிமத்தியா ஊரானாகிய இயோசேப்பு, நீக்கோதேமு என்னப்பட்டவர்களாம். இதை மல்கூஸ் அறிந்துகொண்டான்.

இவைகள் கண்ட யோவான்: அவர்கள் கடைசியாகக் கூர் போலில் விசுவாசமாயிருந்தார்களா? என்று விசாரத்தோடு கேட்டான்.

அவர்கள் அவர் பேரில் விசுவாசம் வைத்து வாழ்கையோடி இருந்தார்கள். ஆனால் அவர்கள் தங்கள் விசுவாசத்தை வெளிப்படையாய் அறிக்கையிட ஏனோ தரிக்கவில்லை. காரணங்கூட இருந்திருக்கலாம் என்று மல்கூஸ் தாழ்மையாய்ச் சொன்னான்.

அந்தப் பொன்காலை தன் கையில் பெற்ற போர்வீரனான் மல்கூஸினிடம் திட்டிச்சொன்னது: வாலிபன் இறக்கப்போனான். மற்றவர்களும் இறக்கப்போகிறார்கள். நீ சேர்ந்துகொண்டபடி செய்துகொள்ளலாம். நாங்கள் உதவி செய்வோம். காரியம் எப்படி இருந்தாலும் சரியே நாங்கள் எடுத்து விடவேண்டும். இதுதான் நாங்கள் அப்படிச் செய்யவேண்டும் எனென்றால் ரோமன் அரசாங்கத்தின் நேரமாயிற்று என்று மெதுவாய்ச் சொன்னான்.

அதற்கு மல்கூஸ், ஆம், எனக்கு உதவி செய்யுங்கள். இதோ பிரதிபலனும் பெற்றுக்கொள் என்று தீர்மிய நாலாக் சொன்னான்.

இரண்டாவது நாள் பாஸ்கா பண்டிகைக்குப் பின் போய் பொழுது சாய்ந்து அஸ்தமனமாகிற நேரமாயிருந்தது.

சிலுவைகளில் அறையப்பட்டிருந்த மூவரும் சமாதானத்தோடி மரணமடைந்திருந்தார்கள். இயேசுவானவர் மற்ற இருவருக்கும் தூரமாயல்ல, அவர் மாண்ட அந்த அழகான தோட்டத்தினருகே அரிமத்தியா ஊராகிய இயோசேப்பினுடைய, வெட்டப்பட்டிருந்தக் கல்லறையில் வைக்கப்பட்டார். ஸ்தேவானே மல்கூஸினிடம் கண்ணீரோடு, தன் நேசப்பணியுடைய சரீரம் துஷ்டத்தனமுள்ள போர்ச் சேவகருடைய கைகளில் விடப்படாதபடி வேண்டிக்கொண்டான். அந்த மாலை மசுக்கும் நேரத்திற் போய்க்கொண்டிருந்த அவர்களில் ஸ்தேவானே மல்கூஸ் பார்த்து: இப்பொழுது நீ எங்கே போவாய்? என்றுக் கேட்டான்.

அதற்கு ஸ்தேவானுடைய பால்டன், எங்கே போவதென்றெனக்குத் தெரியவில்லை. இப்போது நான் போய் அடைக்கலம் பெறக்கூடியவர் ஒருவருமில்லை. தாபரிக்கஸ்தலமும் கிடையாது! என்று ஆதரவற்றவனைப்போல் தேம்பித் தேம்பிச் சத்தமிட்டழுதான்.

அப்பொழுது மல்கூஸ்: நீ என்னோடு நம்மியிருக்கக் கடவாய் என்று அன்போடு சொன்னான்.

ஆனால் போவான் அவர்களோடு சேர்ந்திருந்தபடியால், பால்டனைத் தன் பாரிசமாய்ப் பிடித்திழுத்து, ஆண்டவருடைய தாயார் இப்போது என் தாயார், அவர்கள் உனக்கும் தாயாராயிருப்பார்கள். நீ என் சகோதரனுமிருப்பாய் என்று சொன்னான்.

இயேசுவானவர் நேசித்த சீஷனுடைய முகத்தை ஸ்தேவான் பார்த்து தன் மனசை அவனிடமாய்ச் சாய்த்து அவனோடு சென்று தன் அந்தத்தில் ஆறுதல் அடைய அடைக்கலம் பெற்றான். அடுத்த நாள் ஓய்வு நாளானபடியால் அது முடியும் மட்டும் பெத்தானியாவுக்குப் போய் அங்கே தங்கியிருந்தார்கள்.

---

## முப்பத்தோராம் அதிகாரம்.

அருணோதயக் காலத்திற்கு முற்பட்ட மணிநேரத்தில் மங்கின போலிருக்க நேற்பகலை வெளிச்சத்திற் குருசறையுண்டவரின் பிரேதம் அடக்கம் பண்ணப்பட்டிருந்த தோட்டத்திற்குப் போகும் மார்க்கமாய் ஒரு ஸ்திரி தனிமையாய் விரைந்து செல்லுகிறாள். அந்த ஸ்திரி மக்தலாவூர் மரியாளேயாம். அவள் மரித்த அந்த அருமையானவருக்கு வாசனைத்திரவியங்களை எடுத்துச் செல்லுகிறாள்.

அவள் பயத்துடனே கல்லறைக்குள்ளே அடர்ந்து தொங்கி மூடியிருந்த செடி செட்டைகளின் வழியாய் அஞ்சியஞ்சிப்

போனான். அவ்விடம் அதிக இருட்டாயும், தன் மார்பில்படிக்கும் சத்தம் தனக்குக் கேட்கக்கூடிய அவ்வளவு அமைதியாயும் இருந்தது. உடனே அவன் தரை காது கொடுத்து கேட்கும்படியாய் கையாலும் நின்றுகொண்டான். அப்பொழுது அவன் இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றறியாதபடி மிகமாய மெல்லிய தூக்கீடகமாய், கலகலவென்னும் சப்தம் அவருக்குக் கேட்டது. அது மாக்டோனலின் வழியாய் மிகவருவதாலே குருங்காற்றிலிருந்தது. ஆனால் அவன் அதைக் கேட்டபோது தேவதூதர்களின் இசைக்குரலின் எழுச்சியாக்கு மென்றெண்ணினான். வானலோகத்தின் பரிசுத்தக் காற்றைப் போல் அக்கே இருந்த மிலி டயுப்பல்களின் சுவர்கம் அவனை ஆவிடத்தைப் பரிமளிக்கப் பண்ணிற்று. இப்படியெல்லாம் இருந்தது கொண்டு அவன் சுவாசிக்க வேண்டிய விதமாய் சுவாசிக்கவும் கூட தனியாமல் அதிக சோர்வுற்று கவனித்து நின்றான்.

அச்சோதனில் நானிக்கென அங்கு இருந்த இருபது நிமிஷ நேரமும் பலபடியும் வாய்த்து மெல்லிய இசைகள் விசிறின. அதற்கு மேலே உயரத்திலிருந்த வாசம்பாடிகளின் இராகக்கள் தனியின் சத்தமாக தொனித்தது.

அப்போது அவன் கொஞ்சம் பிரயாசத்தோடு கல்லறையின் படியாய் முன்னுக்குச் சென்றான். கல்லறையின் மேலிருந்த கல் மாறனது இரண்டு புறமும் தள்ளப்பட்டிருப்பதைக் கண்டான். அதைக் கண்ட அவன் பயத்தோடு அச்சத்தோடு பார்த்து திரும்பி பெத்தானியாவுக்குச் சரியாய் நடந்தான்.

கல்லறையானது வேறையாயிருந்தது!

இதற்கிடை, கல்லறையின்மேலே வைக்கப்பட்டிருக்கும் கல்லை கல்லறையின் வாயிலிருந்தபடியால் உள்ளிருந்து புறப்படித் தள்ளுவார்களை பயத்துடன் கூடிய ஆச்சரியத்தோடு ஒருவரோடொருவர் பார்த்து பெண்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அப்பெண்கள் கலிலேயாவிலிருந்தார்கள். அவர்கள் பெரோ வெள்ளுலோக்கேயின் தாயாகிய மரியாள்; இவரோப்பாவின் மனைவி



போவன்னா, சலோமி என்பவர்களேயாம். அவர்கள் கூட அந்தப் பரிசுத்தமான தோட்டத்திற்குப் போகும் வழியில் அந்த காலிலிருட்டில் வழி நடத்தக்கொண்டிருந்தார்கள்.

அந்தக்கல் மிகப் பெரிதாகப்படியினால் காமே அதைப் புரட்டித் தள்ளுவது நம்மாலாகா, தென்பது நிச்சயம் என்று சலோமி சொன்னாள்.

ஆனால் கல்லறையண்டை நெஷர்களுக் கூடவா இருக்கமாட்டார்கள்? அவர்களுக்கு நம்மூடைய காரியம் தெரியும். நாகே பலசாலியாயிருக்கிறான். நாம் போவோமாக வென்று யோவன்னா சொன்னாள்.

இவ்வாறு அவர்கள் வார்த்தையாடிக்காலத்தில் நித்திரையாய் ஆருணோதயம் தன்றாய் பிரகாசித்துக்கொண்டுவந்தது. ஆகாயத்தின் அதிகோதங்களும், வடல்களின் விசேஷத்தளும், விருக்ஷங்களினின்று கோன்றிய காகுகளும், புஷ்பராசிகளின் சுகந்தங்களும், பறவைகளின் பாடல்களும் அச்சாலையில் விசேஷமாகக் காணப்பட்டன. வானலோகங்களின் விசேஷ இரகசியங்களும் எனக்கு அரிதியிட்டுக்காண்பிப்போதும் நினைகூரும்படியான காலமாயிற்று.

பூமியும் அற்பமான நினைத்திற்குரிய வெற்றியடைத்த சந்தோஷமானது அச்சீஷர்களுடைய இருதயங்களுக்குள் பிரவேசிக்க மார்க்கம் எற்படாதகாணும். மரியாள் தன்னுடைய கண்களை உயர எறெடித்து, அதிகமாய் அழுது பாதி மனச்சாந்தவளாய்: ஆவியே காணுற்றிருக்கும்போது அவர் சேஷித்த பிறகுகள் எப்படிப்பாடலாம், புஷ்பங்கள் எப்படி புஷ்பித்தலாம் என்று சொல்லுகையில் அவள் சத்தத்தைத் தேம்பினாள்.

மற்றவர்கள் மௌனமாய் இருந்தார்கள். அவர்களின் கண்ணீர் கண்களிலிருந்தும்படி குருடரைப் போலத் தங்களுக்குள்ளாகவாய் நிரிந்தாய் முன்னேறிச் சென்றார்கள்.

இப்படியாக அவர்கள் கடி நடந்து தோட்டத்தினிடமாய் வந்தார்கள். தோட்டத்திற்குள் பிரவேசித்தவுடனே பயப்பட்டு

கள் புஷ்பமரக்கள் வழியாகச்சென்று போனார்கள். கல்லறையி னருகே போனபோது அதின் பேரில் வைத்துப்பட்டிருந்த அக் நப் பெரிய கல்லானது புரட்டப்பட்டிருந்து திறக்கப்பட்ட வாயிலின் பக்கமாய் வைக்கப்பட்டிருந்தது.

இருவரும் சோர்வுற்றவர்களாய் கல்லறைக்குள் சென்று ஒரு வரையொருவர் அச்சமுள்ளவர்களாய் ஆச்சரியத்தோடு பார்த்தார் கள். இயேசுவின் சரீரத்தை வைத்த இடம் வெறுமையாயிருந் தது. அவர்கள் திடீரென்று வலது புறமாய் ஒரு வாலிபனை ஒருவன்கொண்டவன் உட்கார்ந்திருந்ததைக் கண்டார்கள். அவ் இடையவஸ்திரங்கள் அதிசயிக்கத் தகுந்த வண்ணம் வெண்மை யாய்ப் பிரகாசித்தது. அந்தப் பிரகாசமானது அவர்கள் நின்றிரு ந்த இடத்தினின்ற இருள்மய பிரகாசித்தது. அந்தத் தூதன் அவர்களுக்குச் சொன்னானவன் :—

"பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேய ருடைய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை; இதோ, அவனை வைத்த இடம். நீங்கள் அவருடைய சீஷர்களிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய்; உங்களுக்குமுன்னே கலிலேயாவுக்குப் போகிறார். அவர் சொன் னபடியே அங்கே அவரைக் காண்பீர்கள் என்று, அவர்களுக்குச் சொல்லுங்கள் என்றான்." "மனுஷகுமாரன் பாவிகளான மனு ஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப் படவும், மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள்." என்பவைகளே.

இதைக்கேட்ட அவர்கள் பயந்து நடுக்கமுள்ளவர்களாய் கல்லறையை விட்டு வெளியே ஓடினார்கள். அவர்கள் கொஞ்ச நேரம் இவைகளில் ஒன்றையும் ஒருவருக்கும் சொல்லவில்லை; ஏனென்றால் அவர்கள் பயந்திருந்தார்கள்.

இந்த விபரீதமான இந்தச் செய்திகள் எல்லாம் என்ன என்று நீ நினைக்கிறாய்? அவருடைய சரீரத்தை யார் எடுத்துக்கொண்டு போனார்களோ! ஒருவேளை அவனைக் கொலை செய்த அவருடைய



நண்பர்களே அவனுடலை எடுத்துப்போயிருப்பார்களா. அவர்கள் இவ் வாறு பலவித யோசனைகளால் இன்னும் அவருடைய மரணத் தினாலும் அவரை இழந்ததினாலும் கலங்கிப்போனார்கள்.

இதற்கு, மேலும் அந்த ஸ்திரீகளின் அபரிமிதமான புத்தி பிசகு தப்பிதமாகச் செல்லியிருக்கலாம். நாம் இப்படி நினைப்போமோ என்னவோ!

பின்பு அவளுக்கு ஒரு ஆச்சரியமான எண்ணம் உண்டானது. அதேநாட்களுக்கு முன்னே அவனால் சொல்லப்பட்டதும் அவ் வருடம் உபயோகத்திலுமான "மூன்றாம் நாள்!" என்ற வார்த்தை அவள் மனதில் உதித்தது. அவ்வாசகத்தை முழுமுனைப்பாய் சொல்லிக்கொண்டே அவள் நடந்தாள். பேதுருவும் பிரசோபனா னான். இடியோடி கல்லறைத் தோட்டத்திற்குள் வந்தான். வந்து போது கல்லறையின் மேலிருந்த கல் புரட்டிப் போடப்பட் டிருந்ததையும், கல்லறைக்குள் குவிந்து பிரேதத்தின் மேல் போட்டிருந்த வஸ்திரங்கள் சுருட்டி வைக்கப்பட்டிருந்ததையும் அந்த ஸ்திரீ சொன்னபடியே கண்டான். அவன் ஆச்சரியத் துடன் உள்ளே போகாதமையால் பார்த்துக்கொண்டிருக்கை யில், பேதுருவும் வந்து சேர்ந்தான். அவனும் அவருடைய பிரதானசீஷர்களுள்ளே வஸ்திரங்களையும் அவருடைய முகத் தின் மேல் போடப்பட்டிருந்த வஸ்திரங்களையும் சுருட்டி வைக்கப்பட்டிருந்தபடியே பார்த்தான்.

பின்பு யோவானுங்கூட கல்லறைக்குள் வந்தான். அங்கே வந்தபோது அவனுக்கு ஒரு பெரிய விஷயம் நினைவுக்கு வந்தது. அது தேவதூதன் சொன்ன அதேவார்த்தைகளேயாம். "அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்!" என்று சத்தமாய்ச் சொன்னான்.

ஆனால் பேதுரு அக்கம்பக்கம்வண்டவனும் மௌனமாக இருந் தான். அதற்குப் பின்பு அவர்கள் இருவரும் திரும்ப அவர்க ளுடைய சொந்த வீடுகளுக்குப் போய்விட்டார்கள்.

அப்பொழுது மகதலாவூர் மரியாள் அவர்களுக்கு வெகு தூரத்தில் அழுதுக்கொண்டு பின் சென்று வந்தாள். சீஷர்கள் போய்விட்டபோது, அவள் தனிமையாய் கல்லறையின் கதவண்டையில்வந்து நின்று அழுதுக்கொண்டிருந்தாள். "அப்படி அழுதுக்கொண்டிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து, இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள். அவர்கள் அவளை நோக்கி: ஸ்திரியே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லையே என்றாள்."

பின்பு அவள் தன் கண்ணீர் தளும்பி பார்வைமட்டாகிய தோடு அருகே நிற்கும் ஒரு மனிதனுடைய உருவத்தைக் கண்டாள். அவர் அவளோடு பேசினார்; அவருடைய வார்த்தைகள் கல்லறைக்குள்ளிருந்த தூதர்களுடைய வார்த்தைகள் போலிருந்தது. அவ்வார்த்தைகளாவன:—

"ஸ்திரியே என் அழுகிறாய்? யாரைத்தேடுகிறாய் என்றார்?" இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அவள் தனக்குள்ளே "அவளைத் தோட்டக்காரனென்றும்" மெய்யாகவே இவர் நமக்கு சொல்லக் கூடும் எனறும் எண்ணித் தன் கைகளைத் தட்டிக்கொண்டு: "ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரைவைத்த இடத்தை எனக்குச்சொல்லும். நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள்."

இயேசு தாமே அவளோடு பேசினவராகையால், அவர் "அவளை நோக்கி: மரியாளே, என்றார்."

அவள் அவருடைய சத்தத்தை அறிந்திருந்தாள். சந்தோஷத்தினால் பிரமித்தவளாய்: "ரபூனி!" என்று சத்தமிட்டுத் தன்னுடைய [illegible] மதியறிக்கத்தினால் மொழிபெயர்க்கப்பட்டுப்



போகாமல் நிச்சயமாய் அறிந்துக்கொள்ளுமாறு அவரைத் தொட்டுப்பார்க்கப் போனாள்.

ஆனால் அவர் "அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என்பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப்போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்." இதைச் சொன்னபின் பின்பு அவர் அவளுடைய கண்களுக்கு மறைந்துபோனார்.

அவள் அதிசந்தோஷமாயும் சந்தோஷமாயும் ஓடிவந்து அவைகளையெல்லாம் சீஷர்களிடம் சொல்லி: "நான் கர்த்தரைக் கண்டேன்!" என்றாள்.

"அன்றையத்தினமே அவர்களில் இரண்டுபேர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டுமைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குப்போனார்கள். போகையில் இந்த வர்த்தமானங்கள் யாவையும் குறித்து அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். இப்படி அவர்கள் பேசி, சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், இயேசு தாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்துபோனார். ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது.

அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நீங்கள் நடக்கும்போது வழிநடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று கேட்டார்.

அவர்களில் ஒருவனுடைய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக: இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்.

அவர்: எவைகள் என்றார். அதற்கு அவர்கள்: நசரேயனுடைய இயேசுவைக் குறித்தவைகளே; அவர் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார். நம்முடைய

பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் அவரை பிடிக்கும்படி ஏவினர்கள். அவரோ இஸ்ரவேலை மீட்டு ரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்றாவதாகிறது. ஆனாலும் எங்கள் கூட்டத்தைச்சேர்ந்த சில ஸ்திரீகள் அதிகாலமே கல்லறையினிடத்திற்குப் போய், அவருடைய சரீரத்தைக்காணாமல், திரும்பி வந்து, அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்ன தேவதூதரைத் தரிசித்தோம் என்று சொல்லி, எங்களைப் பிரமிக்கப்பண்ணினார்கள். அப்பொழுது எங்களிலே சிலர் கல்லறையினிடத்திற்குப்போய், ஸ்திரீகள் சொன்னபடியே கண்டார்கள்; அவரையோ காணவில்லை என்றார்கள்.

அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி, மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லிய வசனங்களை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். அத்தருணத்தில் தாங்கள் போகிற கிராமத்துக்குச் சமீபமானார்கள். அப்பொழுது அவர் அப்புறம் போகிறவர்போலக் காண்பித்தார். அவர்கள் அவரை நோக்கி: நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று பொழுதும் போயிற்று, என்று அவரை வருந்திக்கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார்.

அவர்களோடே அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து; ஸ்தோத்தரித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். அப்பொழுதே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்து போனார். அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: வழியிலே அவர் நம்மோடே பேசி, வேதவாக்கியங்களை நமக்கு



விளங்கக்காட்டினபொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா என்றுசொல்லிக்கொண்டார்கள்.

"அந்நேரமே" அவர்கள் "எழுந்திருந்து, எருசலேமுக்குத் திரும்பிப்போய், பதினொருவரும் அவர்களோடிருந்தவர்களும் கூடியிருக்கக் கண்டு: கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார் என்று அவர்கள் சொல்லக்கேட்டு, வழியில் நடந்தவைகளையும், அவர் அப்பத்தைப் பிட்கையில் தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும் விவரித்துச் சொன்னார்கள்."

இப்படியாக நடந்த சம்பவங்கள் யாவைகுறித்து அவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து பேசிக்கொண்டிருக்கையில் அவர்களில் சிலர் அவர்களுக்குண்டாயிருந்த அவ்வளவு பெரிய சந்தோஷத்தையும் ஆச்சரியத்தையும் இன்னமும் நம்பக்கூடிய அளவில்லாதவர்களாயிருந்தபோது "இயேசுதாமே அவர்கள் மத்தியிலேவந்து நின்று: உங்களுக்கு சமாதானம் என்றார்!"

அதைக் கேட்டபோது அவர்கள் பயந்தார்கள்; எனென்றால் அவர்கள் கதவுகள்யாவும் சாத்தப்பட்டிருந்த படியால், யாதோ ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள்."

அப்போது ஆண்டவர் அவர்களோடு: "நீங்கள் ஏன்கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? நான் தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி, தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்.

அவர்களுடைய முகங்கள் உண்மையாக பெருஞ்சந்தோஷம் உடையதாகவிளங்கியும்பயங்கலந்ததாயிருக்கக் கண்டார். அவர்களுடைய இருதயங்கள் அவரை நேசிக்கும் நேசத்தால் நிறைந்திருந்தும், அவர் மாம்சத்திலிருந்த படியால் அவருடைய உயிர்த்தெழுதலின் இரகசியம் அவர்கள் அறிந்துகொள்ளுகிறதற்கு அதி இரகசியமாயிருந்தது.

நாவினால் சொல்லவரிய அன்போடு அவர் அவர்களைப் பார்த்து, அவர்கள் தம்மை அணுகக் கூடாதபடியான ஒரு அளவற்ற தூரமாக விலகி யேறெறித்துக்கொள்ளப்படாமல் இன்னும் தாம் அவர்களுடைய சொந்தமானவராக அவர்களை நேசித்தவரும், அவர்களுக்காகக் கவலைப்பட்டவரும், அவர்களுக்காக மரித்தவருமாகிய இயேசு தாமே என்று அவர்களுக்குக் காட்டும்படியாக: "புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா?" என்று அவர்களிடத்தில் வெகு சாந்தமாய்க் கேட்டார்.

அப்போது அவர்கள் அவர்களுடைய வீட்டில் வழக்கமாய் அவர் அடிக்கடி சாப்பிட்டிருந்த ஆகாரமாகிய "பொரித்தமீன் கண்டத்தையும் தேன் கூட்டித்தினைக்கையையும் அவருக்கு" வணக்கத்தோடும் சந்தோஷத்தோடும் "கொடுத்தார்கள். அவைகளை அவர்வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்தார்."

அதைக் கண்டபோது அங்கிருந்த ஜனக்கூட்டம் அவரைச் சூழ்ந்துக்கொண்டு அவருடைய பாதத்தில் உட்கார்ந்து ஆனந்த பாஷ்பம் தூவினார்கள். அவர் அவர்களோடு வெகு நேரமாக அவர்களுடைய அறிவுக்குத்தக அளவு தெளிவாய்ப் பேசி எல்லா விஷயங்களையும் பயன் படுத்தினார்.

பின்னும் அவர்: "எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந் தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப் படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்." என்று சொன்னார்.



# முப்பத்திரண்டாம் அதிகாரம்.

இயேசுவானவருடைய தாயாராகிய மரியாள் தன்னுடைய கறை விழிகளமைந்த கண்களால் அடிவானத்தை உற்றுப்பார்க்கிற வளாய்த் தன் வீட்டின் ஜன்னலண்டையில் அசைவற்று உட்கார்ந்துக்கொண்டிருந்தாள். மனுஷீகம் சகிக்கக்கூடிய அளவுக்கு மிஞ்சி பாடுபட்டு சகித்தவளாயும், அப்படிப்பட்ட அவருக்கு வானலோகத்தினின்று சர்வசுகம் வந்ததையும், அதின் சமாதானம் வானலோகத்தின் சமாதானமுமாயிருந்ததையுமே நிதர்சிக்கிறவளாக யிருந்தாளென்று அவள் முகத்திற் காணப்பட்டது.

அப்படி அவள் உட்கார்ந்து தனக்குள்ளே இவைகளைத் தியானித்துக் கொண்டிருக்கையில், யாரோ ஒருவன் தான் இருந்த அறைக்குள் பிரவேசித்து தன்னை யணுகி வந்தான். அவன ஸ்தேவானே. அவன் மெதுவாய் முழந்தாளில் உட்கார்ந்து தன் மடியின்மேல் வைத்துக்கொண்டிருந்த அவளுடைய அழகிய விரற்களை எடுத்து முத்தஞ்செய்து: "என்னுடைய இயேசுவின் தாயாரே!" "நான் நித்தலைத் தேடிக்கொண்டு எருசலேமுக்கு வந்து எப்படி யென்பதையும்; அவன் வருகாலத்தில் பரதீசுக்குள் பிரவேசிப்பதெவ்வாறென்பதையும்; அங்கே அவன் நாம நேசிக்கிறவரோடு என்றென்றைக்கும் இருப்பானென்பதையும்; நாங்கள் அறிந்திருக்கிறோம். ஆனால் அவனுடைய தாயார் ஒன்றையும் அறியாமலிருக்கிறானே என்றான்.

பின்னும் அவன் தனக்கு நேர்ந்த எல்லாவற்றையும், மல்கூஸ் தனக்கு "நித்தலின் தாயார் சகிக்கவேண்டியவை போதுமானவையா யிருக்கிறபடியால், இந்தச் சங்கதியை அவன் தாயார் அறியாதிருக்கட்டும்" என்று சொன்னதையும் மரியம்மாளுக்குச் சொன்னான்.

அதைக்கேட்ட மரியம்மாள் தன்னுடைய பக்கத்திலுள்ள பாய் வைக்கொண்ட கன்னத்தால் அவனை சேர்த்து, தன் பக்கத்தில்

முடிந்தாலன்றி அவனின் உத்திரவுக்காக காத்திருப்பதைப் பார்த்தாள்.

கடைசியாக அவள் அவனுக்கு "அவள் இனிமேல் அவைகளை அறியாமலிருக்க வேண்டியதில்லை, என் மகனே, நீ போய் வேறொன்றையும் கவனியாமல் அவைகளை அவளுக்குச் சொல்ல வேண்டும்" என்று சொன்னாள்.

அம்மாள் சொல்லியபடியே பால்யன் ஸ்தேவான், நீத்துவின் தாயைப்பார்க்க புறப்பட்டுப் போனபோது, காய்பாவின் மனைவி தன் வீட்டின் அறைகளொன்றில் உட்கார்ந்து வீட்டின் மேற்புறமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள். எக்காலமுமிராத வகையாய் சுவர்களின்மீது அவ்வளவு உஷ்ணமாயும் காந்தியாயும் சூரியன் பிரகாசிக்க ஊர்முகலெல்லாம் நன்றாய்ப் பாய்ந்தோட, பக்ஷிகள் சந்தோஷமாய்ப்பாட, வீசியகாற்றுகளோடு சேர்ந்து லீலீ புஷ்பங்கள் தம் சுகந்தங்களை வீசிக்கொண்டிருந்தன. ஆயினும்பெருமாட்டியின் முகமோ துக்கம் நிறைந்திருந்தது. அவளின் சோர்வுற்ற விரல்களினின்று அவள் செய்துகொண்டிருந்த வேலையானது நழுவிவிட்டது. கண்ணீரானது கண்களிலிருந்து சிந்தப்படாமல் அவளுடைய கன்னங்களில் கனத்து நின்றது. இவ்வாறிருந்துகொண்டிருக்கையில் தாதிமார்களில் ஒருத்தி உள்ளே வந்து தன் முன் விழுந்து வணக்கம் செய்கிறதாக பார்த்தாள்.

அப்பொழுது அவள் தன் தாதியினிடம் ஆயாசத்தோடு போய் நீ, உனக்கு என்னவேண்டும்? என்று கேட்டாள்.

அதற்கு தாதி: மகா பெருமைதங்கிய பெருமாட்டி! வீட்டின் முற்றத்தில் ஒரு பால்யன் காத்துக் கொண்டிருக்கிறான். அவன் தங்களைப் பார்க்கவேண்டும், தங்களோடு பேசவேண்டுமென்று விரும்புகிறான். நான் தங்களை அவன் பார்க்கமுடியாதென்று சொன்னேன். ஆனால் அவன் வருத்தப்படுத்திக்கொண்டு ஒரே பிடியாய்த் தங்களைப்பார்க்கும் வரைக்கும் போகமாட்டேனென்று நிற்கிறான் என்றாள்.

அப்படியா, நீ என்னிடத்தில் வந்து தெரிவித்து என் பிரியத்தை தெரிந்துக்கொள்ளும்மட்டும் அவன் என்னைப் பார்க்க



முடியாதென்று அவனுக்கு சொல்லியிருக்கிறாயா? அந்த பால்யனை என் முன் கொண்டுவா என்று அவளுடைய குரலில் காண்பிக்கப்பட்டபடியே கொஞ்சகோபத்தோடு அன்னாள் தன் தாதியிடம் சொல்லலுற்றாள்.

பெருமாட்டியின் கட்டளையை தன் சிரமேற்கொண்டு தாதியானவள் வணங்கிக்கொண்டு புறப்பட்டாள். உடனே அவள் திரும்பியபோது பையனைக் கண்டு:

மகா மேன்மைதங்கிய பெருமாட்டி! இதோ அந்தப்பால்யன் என்று சொல்லியதும் தன் எஜமாட்டியின் கை ஜாடைக்குக்கீழ்ப்படிந்து பால்யனைப் பெருமாட்டியினிடம் விட்டு வெளியேபோய் விட்டாள்.

அந்தப்பால்யனாகிய ஸ்தேவான், பெருமாட்டியைக்கண்டு மரியாதை செய்துக் கொண்டு; அந்த அவனுடைய நீத்துவின் தாயாருக்கு முன், எவ்விதமாக சங்கதியை சொல்லுவதென்றும், எப்படி அதைத் தொடங்க வேண்டுமென்றும் அறியாமல் பயந்திருந்தான்.

அன்னாள் அவனுடைய நியக்தன்தைக் கண்டபோது அவள் மனம் பால்யனைப்பற்றிய சிந்தனையிலிருந்து விலகத்தது. அவனுடைய கண்களிற் காணப்பட்ட ஏக்கமும் அன்புமுள்ள சன்மானம் அச்சரியமாக அவளை மெழுப்பிவிட்டது.

அப்போது அவள் தன்னுடைய அபூர்வமான புன்னகைப் போடி வெகு சாந்தமாய், அவனைப் பார்த்து உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டாள்.

ஸ்தேவான் அந்த கதைப்பை அறிந்திருந்தான். அது நீத்தி சிரிப்பது போலவே காணப் படுவதாயிருந்தது. அவன் தன் கினவின் துடிதிறனும் அசைந்து நடுங்கி அவன் அருகே தெருங்கி கீழ்ந்த சப்தத்தோடு:

"தாங்கள் நீத்துவின் தாயார். அவனைப்பற்றித் தங்களுக்கு அறிவிக்கும் பொருட்டு நான் வந்திருக்கிறேன் என்றான்."

அதைக் கேட்ட அத்தம்மாள்: இல்லே, நீ சொல்லுவது இன்ன தென்றெனக்குத் தெரியவில்லே, உன் தீத்து என்பவன் யார்? என்று அவளுங்கூட நடுக்கமும் பயமுங் கொண்டவளாய்க் கேட்டாள்.

அதற்கு "அவன் உங்களுடைய மகன். அவன் பெயர் ஸ்நீது என்றும் வழங்கப்பட்டிருந்தது" என்று ஸ்தேவான் சொன்னான்.

அப்போது அந்த அம்மாள்: "தாவீது" என்ற பேரைக் கேட்ட உடனே மிகவும் சந்தோஷமாய் அழுதாள்.

பின்னும் அவள்: சொல்லு, எனக்கு நீ சொல்லவேண்டிய தெல்லாவற்றையுஞ் சொல்லு என்று விசனத்தோடு சொன்னாள்.

அப்போது ஸ்தேவான், தன்னுடைய எளிய நடையில் தீத்துவைப்பற்றிய விசனிக்கத் தகுந்த கதையை யெல்லாம் சுருக்கமாய்ச் சொன்னான்.

பின்னும் ஸ்தேவான், பொறுங்கள் எனது தீத்துவின் தாயாரே, அழாதேயுங்கள் என்று முன்னுரை முடித்தபோது பின்வருமாறு உணர்த்தினான்:— "அதெல்லாம் அவனுக்கு நன்மையான வைகளாயின அல்லவா? எப்போதும் தவறிப்போகக் கூடாத தூண்டவருடைய வாக்குத்தத்தம் அவனுக்குக் கிடைத்ததல்லவா? அவன் பத்திரமாயிருப்பானல்லவா? அவன் மிகவும் பாக்கியமுள்ளவனும் ஆசீர்வதிக்கப்பட்டவனுமாயிருப்பான் அன்றோ என்றான்.

அதற்கு அத்தம்மாள்: எப்போதாவது நான் அவனோடுகூட அங்கே இருப்பேனே இருக்கமாட்டேனே எனக்குத் தெரியவில்லே என்று அழுகையோடு கூறி குரலாய்ச் சொன்னாள்.

அப்போது ஸ்தேவான்: பக்தி வினயத்தோடு நமக்காக மானமடைந்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவராகிய இயேசுவை விசுவாசிப்பீர்களானால், ஒரு சமயத்தில் தாங்களும் அவனோடுகூட அங்கே இருப்பீர்கள என்று சொன்னான்.

அதைக்கேட்ட அன்னாள் தன் தலையை உயர்த்தி, நீ என்ன சொல்லுகிறாய்? என்று மெதுவாய்க் கேட்டாள்.



அதற்கு அவன் நெய்கபீர சந்தோஷத்தினால்: இயேசு வானவர் நாம் மானமடைந்த பின்னர் அவரைக் கொண்டுபோய், குளிர்ந்த பிரேதமாக வைத்த அந்த இடமாகிய கல்லறைக்குள் திரும்பி உயிர்த்து எழுந்து வெளியே வந்துவிட்டார். "அவர் உயிரோடு இருக்கிறார்!" நானே என் சொந்த கண்களால் அவரைப் பார்த்தும், அவருடைய சத்தத்தைக் கேட்டுயிருக்கிறேன். ஆகவே அவர் உயிரோடிருக்கிறாரால், நாமும்கூட உயிரோடிருப்போம். மேலும் அவர்தாமே, "அவர் எங்கே இருக்கிறாரோ அங்கே நாமும் அவரோடுகூட இருப்பது அவருடைய சித்தமாயிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் உங்கள் குமாரனை மறுபடியும் பார்ப்பீர்கள். பிதாவானவர் இரக்கமுள்ளவராயிருக்கிறார் என்று சொன்னான்.

அவன் சொன்னதையெல்லாம் கேட்ட அன்னாள் பதில் ஒன்றுஞ் சொல்லாமல், எழுந்திருந்து தெரு அவசரமாய் தனக்கு சமீபமாய் இருந்த ஒரு மீண்ட ஆசனத்தின் பேரில் கிடந்த ஒரு அங்கியையும் தலை தொங்கலையும் எடுத்து தரித்துக்கொண்டு தன்னோடு நான் இயேசுவின் தாயாரைப் பார்க்கவேண்டும் என்னை அவளண்டைக்கு அழைத்துக்கொண்டுபோ என்று சொன்னாள். ஆக அவர்கள் இரண்டு பேருமாக வெளியே தெருவிற்குவந்து அந்த நிலம் நிறைந்த அம்மாள் தான் பார்க்கவேண்டுமென்று எண்ணங்கொண்ட மரியம்மாள் வாசஞ்செய்யும் ஸ்தலம் சேரும் வரைக்கும் உள்ள வழியெல்லாம் தாழ்மையாக ஸ்தேவானே பின் சென்றார்கள்.

இப்படியாக வழிநடந்து மரியம்மாள் வாசஞ்செய்யும் இடத்திற்கு வந்தார்கள். தீத்துவின் தாயார் அத்தம்மாளைப் பார்த்தபோது, அதிக துக்கம்நிறைந்தவர்களாய் பெரிய சத்தத்தோட முறுகொண்டுபோய்க் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதனர்கள்.

அப்போது ஸ்தேவான் அந்த இரண்டு ஸ்திரீகளையும் விட்டு மெதுவாய் வெளியே போய்விட்டான்.

கொஞ்சநேரஞ் சென்ற தருவாயில் தன்னைத் தேடிக்கூப்பிட்

டார்கள். அவனே பயந்து நடுங்கிக்கொண்டு உள்ளே அவர்கள் சமுகத்தில் வந்து நின்றான். மழைபெய்ய கனத்த மேகம் வந்து மூடிக்கொள்ளும்போது அதினூடே சூரியனுடைய தனது பல்லத்தக் கிரணங்களே வீசுவதுபோல, சந்தோஷம் வெளிப்பட அவளின் கண்ணீரினூடே அன்னளின் முகம் அவ்வளவாய்ப் பிரகாசித்தது கண்டான். அப்போது அவன் கொண்டிருந்த இருதயத்தின் கவலையும் அச்சமும் குறைந்துபோயிற்று.

"என்மகனே, இங்கேவா," என்று அவனைச் சாந்தமாய் மரியம்மாள் அழைத்தார்கள்.

அப்போது அவன் அவர்களருகே சென்றான்; நித்தவின் தாயார் வாஞ்சையோடும் ஊக்கத்தோடும் அவனைப் பார்த்தாள்.

கடைசியாக அந்தம்மாள்: "அவன் பூமியின்பேரில் இருந்தபோது நீ அவனுக்கு அதிநெருங்கியவனும் மிக அருமைமானவனுமாயிருந்தாய். நீ என்னோடுகூட எப்போது மிருப்பது எனக்கு விருப்பமாயிருக்கிறது. ஆனபோதிலும் அது அவ்வாறு வாய்க்குமோ" என்று சொல்லி; அவள் மரியம்மாளிடம் திரும்பி இளகியப் புன்சிரிப்போடு சொன்னது:—

"நான் உன்னை அந்தம்மாளிடமிருந்து அழைத்துக்கொண்டு போக எனக்குப் பிரியமில்லையாகலின் நீ எனக்குங்கூட மகனுயிருக்கிறாய். எனென்றால், நீ அவனுடைய சகோதரனுயிருந்திருக்கிறாய் என்பதே. இதைச் சொல்லிவிட்டு எழுந்திருந்து அந்தப் பால்யனைத் தன் பூரிசமாய் இழுத்து பயபக்தியோடு அவனுடைய நெற்றியின்மேல் முத்தமிட்டான்.

இவைகளெல்லாம் நடந்தேறியதினால் ஸ்தேவான் தன்னைத் தன் ஜீவியகாலமெல்லாம் நேசித்தவராகிய இன்னும் வேறொருசிநேகிதனைக் கண்டுபிடித்தான். எப்படியென்றால், அதற்குப்பின் அவனுடைய ஜீவியம் அதிககால மிராமற்போயினும், அது பூமியின்மேல், ஜெயம், சந்தோஷம் உபயோகமுள்ளதாயிருந்தது. இவ்வுலகம் அவனுக்கேற்றதாயிருந்ததில்லை.

---

# முப்பத்துமூன்றும் அதிகாரம்.

வரஞ்சையினால் நிஷ்டைத்து பேதுருவானவன் "அவர் முன்னே இருந்ததுபோலவே இன்னுமொரு முறைமாத்திரம் நான் அவரைப் பார்த்திருக்கக் கூடுமானால்!" தர்வீஸே என்றான்.

கப்பர்நாகூமில் அவன் தனனுடைய தோட்டத்தில் யோவானோடு உலாத்திக்கொண்டும், மற்றுஞ் சில சீஷர்கள் தண்ணீரினோரமாய் சுவற்றினண்டையில் உட்கார்ந்துகொண்டும் மெல்லிய ஒக்சயாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். கர்த்தர் தாம் அவர்களுக்குக் கற்பித்தபடியே அவர்கள் கலிலேயாவுக்குவந்து நிர்ணான சீஷர்களோடு கூடிக்கலந்து அவர்களுக்கு தூண்டவர் எல்லிதமாய் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்தார் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். உஷ்ணகால வாரம்பத்தின் ஒரு நாளாகிய இன்றைய அமைதலும் சமாதானமுமுள்ள சாயங்கால வேளையில் ஐந்நூறு பேருக்குமதிகமான சீஷர்கள் அவர் மலையின் பேரில் காணப்பட்ட அந்த ஆச்சரியகரமான தோற்றத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது யோவான் "நீயும் அந்தச் சந்தேகங்கொண்டவர்களிலொருவன் அல்லவா?" என்று விசனத்தோடு பேதுருவைக் கேட்டான்.

அதற்குப் பேதுரு: "இல்லை, நான் அவர்களைப்போல சந்தேகிக்கவில்லை. எல்லாரையும் விட நான் அவருடைய இரக்கத்தைப் பற்றிச் சந்தேகங்கொள்ளுவது எனக்குத் தகாது. ஆனால்" என்று சொல்லிக்கொண்டே அவன் தன்னுடைய குரலைத் தாழ்த்தி "அது வானலோகத்திலிருந்து வந்த தரிசனம்போலிருந்தது என்பது உனக்கே தெரியும். அதைப் பார்த்த நிஷ்வளவுபேர்கள் வந்திருந்தார்கள். நான் இன்னுமொரு முறை அவரையே நேருக்கு நேராய்ப் பார்த்துப் பேசி மாத்திரம் இருந்தேனால் அவர் என்னுடைய கேவலம் பயங்காளித்தனத்தை எனக்கு

மன்னித்திருப்பாரென்று நான் அதிர்ஷ்டக்கொண்டிருந்தாலோ!" என்று அவன் தன் கண்களிலிருந்து ஸ்படிகம் போன்ற தெளிவுள்ள கண்ணீர் துளிகளை புரித்தான்.

உடனே அவன் திரும்பி ஆபிரக்கணக்காய் மாறி மாறி கடிதாணப்படும் குரியாஸ்தமன திருவுளைப் பார்த்து தன்னுடைய பலமுடவயிலோடிருந்தான் இன்றிரவு மீன் பிடிக்க போக விரும்புகிறேன்" என்று ஆச்சரியமாயச் சொன்னன்.

அதைக் கேட்ட யோவான் அவனைக் கொஞ்சம் ஆச்சரியத்தோடு பார்த்து, மற்றவர்களும் உன்னோடு கூடப் போவது உனக்கு இஷ்டந்தானே? என்று மாத்திரம் கேட்டான்.

அதற்குப் பேதுரு: "உண்மையாகவே," மற்றவர்கள் என்னோடு வருவதெனக்கு இஷ்டந்தான். நீ போய் அவர்களுக்குச் சொல்லு, நான் போய்ப் படகுகளைச் சரிப்படுத்திவிட்டு வலைகளோப் போய்க் கொண்டுவருவேன் என்று மறு உத்திரவு சொன்னான்.

அதேவே அவர்களெல்லாரும் உடனே அந்த மித்தேரியாண சாயங்கால நிழலில், அவர்கள் வழக்கத்தின்படியே புறப்பட்டுப் போனார்கள். வானலோகங்களுக்கு மத்தியிலே பறந்திருபோல் பாடகானது ஜலத்தில் மீது மிதந்து மெதுவாய்ச்சென்றது; ஸுகாயமானது ஜலத்தின் பேரில் வெகு விமரிசையாய் அழகோடு கூட பிரதிபிம்பித்த ஆச்சர்யமான அந்த மகிமையைப் பார்த்து "கண்ணுடிக் கடலோடு தெருப்புக் கலந்திருக்கிறது" என்று யோவான் முணுமுணென்று சொல்லிக்கொண்டான்.

அவர்கள் அன்றிராமுழுதும் பாடுபட்டும் ஒன்றும் அகப்படவில்லை பொழுது விடிந்து காலையான பொழுது கரைக்கு வந்தச் சேர பிரயத்தனித்தார்கள். எனெனில், அந்த வெடிய இராக்காலமெல்லாம் பட்ட பாட்டினால் துயரமுங் களைப்பும் கொண்டவர்களாயிருந்தார்கள்.

அவர்கள் கரையருகிட்டி வருகையில், தாலேபனி மூடியிருந்த கையில் ஜாதபடியில் ஜலத்திலிருமாய் நின்றுகொண்டிருந்த ஒரு மனிதருடைய உருவத்தை மங்கலாய்க் கண்டார்கள்.



அவர்களுக்கண்ட ஜலத்திலிருமாய் நின்ற அவர் அவர்களோக் கூப்பிட்டு "பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாவிலும் உங்களிடத்தில் உண்டா?" என்றுக் கேட்டார்.

அவருக்கு உத்திரவாத அவர்கள் எதிரிட்டத்தில் "ஒன்றுமில்லை" என்றார்கள்."

"அப்படியானால் அவர் நீங்கள் படவுக்கு வலது புறமாகவே போடுங்கள், அப்போது உங்களுக்கு அகப்படும் என்றார்."

அவர்களுக்குச் சொல்லப்பட்டதின்படியே அவர்கள் செய்தார்கள், எனென்றால், அந்த விடத்திற்கு அறிந்தவர்கள் மீன்களின் கூட்டத்தை ஜலத்தில் சிலவான பாரிசமாய் வேறு பார்ப்பதினால் அறிந்துக்கொள்ளுவார்களாகையால் அவரும் அப்படிப் பார்த்திருப்பார் என்று எண்ணினார்கள். அவர்கள் வலையை வீசி, அதில் மீன் திரளாயப் பட்டதினால், அதைக் கரைக்கு இழுக்கக் கூடாதவர்களாயிருந்தார்கள்.

நபபொழுது, யோவான் அதிகமாய் சென்ற கதருவிய மீனால் உல்காசமாய் அதிக தேரம், கையில் கம்பொண்டு மீன் அவரை, படிந்த வலையின்மேல் நின்று பார்த்து அதிக்கொண்டிருந்தான். அப்போது அவன் பேதுரு சொல்லுவதைக் கேட்டான்.

"ஆண்டவரே, அவர்!"

அவர் அப்படி பேதுரு சொல்லுவதைக் கேட்டபோது, தன் மீதிலும் மீன் பிடிக்கும் வேலையிலும் வைத்திருந்த ஏகாக்கிரையைத் தளர்த்திவிட்டு தலையிலே தரித்திருந்த கோட்டை கழற்றிவிட்டு, தான் மறுதலித்த ஆண்டவரின் பரிசுத்தமான சமுகத்தைக் காண்பதற்கு ஆசையினால் நிறைந்திருந்த வேகத்தை இழுத்துக்கொண்டு, ஜலத்தில் குதித்து, மற்றவர்களுக்கு முன்னே கரைக்கு நீந்தினான். அவர்கள் மீன் நிறைந்த வலையை இழுத்துக்கொண்டு, ஜலத்தில் நின்றபோல் வரிசையாய் நடந்து, அதில் மீன்களையும், அப்பங்கள் சுடப்பட்டிருந்த நெருப்பையும் கண்டார்கள்.

வேண்டுமென்று அவர் எண்ணினாரென்பதாக அவர்கள் நினைத்துக்கொண்டார்கள்.

"இயேசு அவர்களை நோக்கி, நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களில் சிலவற்றைக் கொண்டுவாருங்கள் என்றார்."

"சீமோன் பேதுரு படகில் ஏறி, நூற்றைம்பத்து மூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான். இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை."

பின்பு இயேசு அவர்களை நோக்கி: "வாருங்கள், போஜனம் பண்ணுங்கள்" என்றார்.

அப்பொழுது அவர் தாமே அப்பத்தையும் மீனையும் எடுத்து அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்.

அவர்கள் சாப்பிட்டு முடிந்தபிறகு, இயேசு தம்முடைய கண்களை பேதுருவின்மேற் செலுத்தி: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" என்றார்.

அப்பொழுது பேதுரு ஆவலோடு: "ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்று மறுமொழி கூறினான்.

"என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக," என்று அவனுடைய எஜமான்ன அமைதலாகச் சொன்னார்.

பின்னும் அவர் இரண்டாந்தரம் அவனை நோக்கி: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" என்றார்.

அதற்குப் பேதுரு மறுபடியும்; "ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்," என்றான்.

"என் ஆடுகளை மேய்ப்பாயாக," என்று முன்போல இயேசு அமைதலாகச் சொன்னார்.



பின்பு மூன்றாந்தரம் அவர்: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா?" என்றார்.

"என்னை நேசிக்கிறாயா?" என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டான். ஆகிலும் அவைதலெல்லாவற்றின் அர்த்தத்தையும் அவன் தன் இருதயத்திலே உணர்ந்தான். அவன் முன்பிகடவை மறுதலித்திருக்கவில்லையா, ஆகையினால் அவன் மூன்றுவிசை அறிக்கையிடுவது நியாயமல்லவா?

அவன் இயேசுவுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு, "ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்; நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்" என்றான்.

இயேசு தமது கண்களில் ஆழ்ந்த உருக்கமுள்ளவராய் அவனை நோக்கிப் பார்த்தார், அதினால் பேதுருவின் நம்பிக்கை யடைந்தது. தனக்கு மனனிப்புக் கொடுக்கப்பட்டதென்று அவன் அறிந்துக்கொண்டான்.

மறுபடியும் அவர் தமனோக்கி: "என் ஆடுகளை மேய்ப்பாயாக," என்றார்.

பின்பு கொஞ்சநேரம் அமைதலாயிருந்து அவர், "நீ இளவயதாயிருந்தபோது உன்னை நீயே அலங்கரித்துக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்துகொண்டாய்; நீ முதிர்வயதாகும்போது உன் கைகளை நீட்டுவாய், வேறொருவன் உன்னை அலங்கரித்து, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று, மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்," என்றார்.

சில நாள்களுக்குப் பின்னர், இயேசுவின் சீஷர்கள் பேதுருவைக்கண்டு, இரத்தச் சாட்சியாக மரிக்கும்படி அழைத்துக்கொண்டு போனபோது இவ்வார்த்தைகள் நிறைவேறின் என்று போதிப்பை அப்போஸ்தல ஞானவரும் எழுதுவாருமானவருடைய

அனபிருலே முடிவுபெற்ற பின்பு, வானத்துதித்தியுள்ளவரு நிருந்
தனர்.

இப்பால் இரதிகளுக்குரிய பிரதானவரு டைய வாக்குத்தத்தம் நிறைவேறும் வண்ணம் இயேசுவானவருடைய வார்த்தைபின்படியே சீஷர்கள் எல்லாரும் அங்கே காத்திருந்து முப்பது நாளுக்குப் பிறகு மறுபடியும் எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள். இயேசுவானவர் அவர்களோடும் அவர்களைச் சந்தித்து மறுபடியும் அவர்களோடு பேசினார். அப்போது அவர்கள், "ஆண்டவரே இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலருக்குத் திரும்பக் கொடுப்பீரென்று கேட்டார்கள்."

"அதற்கு அவர், பிதாவானவர் தம்முடைய அதிகாரத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்." "இதினால் புறப்பட்டுப் போய், சகல தேசத்தாரையும் சீஷராக்கி, பிதாவுடைய பரிசுத்தஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டவைகளையும் அவர்களுக்குப் போதிக்கக் கடவீர்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல காலங்களிலும் நான் உங்களோடே கூட இருப்பேன்" என்றார்.

"பின்பு, ஆவி யோவானிடமாய் வரைந்தும் அனுப்பின கொல்லோசாய், பிரசுரமான வாசகமுடைய புஸ்தகத்தை நீ புசி; அது உன் வயிற்றைக் கசக்கும், ஆனாலும் உன் வாயிலே தேனைப்போல் மதுரமாயிருக்கும் என்று சொல்லி, அவர் சொன்னபடியே அதை வாங்கி விழுங்கினேன். அது என் வாயிலே தேனைப்போல் மதுரமாயிருந்தது. நான் விழுங்கினபின் என் வயிறு கசந்தது. அப்பொழுது அவர் என்னை நோக்கி, நீ திரும்பவும் அநேக ஜனங்களையும் தேசங்களையும் பாஷைகளையும் ராஜாக்களையும் குறித்து தீர்க்கதரிசனஞ் சொல்லவேண்டும் என்றார்."



ணைரூபமாய்த் தோன்றுகிறீர்கள்? உங்களிடத்திலிருந்து வானத்
துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்
படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்
போனீர்களோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்."

அந்தச் சமயத்தில் அவர்கள் யாவரும் கொல்லாபிள் ஆனந்த
மும் பெருத்த சந்தோஷமும் நிறைந்தவர்களாய் தேவாலயத்தில் எப்பொழு
தும் ஸ்துதித்து ஸ்தோத்திரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்
களில் ஆதேர், "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல காட்ச
தினும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்று அவர்
சொன்ன வசனத்தில் களிகூர்ந்தார்கள்.

"ஆவர் இன்றைக்கும் நம்மோடிருக்கிறார். எப்படியெனில்
அவர் சரீரகாலத்துக்கும் ஜீவித்திருப்பவர்" "அவர் சேமமும்,
நலனும், என்றும் மாறுதலாயிருக்கிறார்" அவர் நாம் வேட்டிச
சென்ற பாதை நாம் அறுக்கவேண்டாத மலைமேல் இருக்கும்
ஆனால் இயேசு அல்ல; ஆனால் அவர் எப்போதும் இருக்கிற
வர், எப்போதும் நேசிக்கிறவரும்! புனிதஸ்தலத்தில் அவர்
கண்டடையப்பட்டவைகளுக்கு, வெகுதாரம் அலைகளை
அடக்கி செய்பவருமாயிய இயேசு வாயிருக்கிறார்.

அவர் இந்த நேரத்தில்மட்டும் பக்கத்தில் இருக்கிறார்; பேதுரு
வின் பாதை, அவருடைய பாதத்தில் விழுந்து "ஆண்டவரே, உம
தில்லாமற் தெரியும்; நான் நேசிக்கிறேன் எனபதையுமீ நீர்
அறிந்திருக்கிறீர்" என்று சத்தமிட்டு சொல்லமாட்டாமல் அப்பொழுது
அவர் உன்னை உடனே உன் பலவீனத்திலிருந்து விலக்கி
வும் தூக்கி எடுத்து நிலைப்படுத்துவார். நீயும் அவருடைய அன்பின்
நிலைமையினில் மகிமையாக ஜெபஞ்செய்வாய் என்னருமை
ஜனமே, தாழும் தித்தோடு பரிசுத்தன் இருப்போம்.
நேரே "நாம் அவரைப்போல இருப்போம்; எனெனில் அவர்
இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைப் பார்ப்போம்"

"அடக்கப்பட்ட ஆவிக்குட்படுவதாயிருந்தாலும்" என்று, தாவிதுக்குட்படுவதாயிருந்தாலும் அவரு
டைய விசுவாசத்திற்கு முன்பாகவும், என் அன்பிற்கு முன்பாகவும் சோல